ஸுதர்சனர் பதில்—பதினோராவது சதகம்

ஆசிரியரின் முன்னுரை

''ஸுதர்சனர் பதில்'' தொடங்கி சுமார் பதினேழு வருடங்கள் ஆகின்றன. இதுவரை பதினொரு சதகங்களில் ஆயிரத்து நூறு கேள்விகளுக்குப் பதில்கள் வெளிவந்துள்ளன. இப்பதில்களில் பெரும்பகுதி ''ப்ரதிபக்ஷ நிராஸநம்'' என்னும் ஸுதர்சனமங்களாசாஸந ஶ்லோகத்தின்படி ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்திற்குத் தீங்கு புரிபவர்களுக்கு மறுப்பாகவே அமைந்துள்ளது. மறுப்புரைக்கும்போது ப்ரமாணங்களைக் காட்டி அவர்களுடைய வாதங்களின் பொருந்தாமையையும் தவறையும் எடுத்துக்காட்டுகிறோமே யொழிய எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்குவது கிடையாது. அப்படியிருந்தும் நூறாவது ஆண்டை எட்டிப் பிடிக்கவிருக்கும் காமகோடி பெரியபீடாதிபதிகளின் உரைகளுக்கு நாம் மறுப்பெழுதுவதுபற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள். இந்த சதகத்திலும் கல்கி, கலைமகள் போன்ற பொதுஜனப் பத்திரிகைகளில் வெளிவந்த அவருடைய தவறான வாதங்களுக்கு பதிலுரைக்கப்பட்டுள்ளது. கல்கியும், கலைமகளும் இந்தத் தவறான உரைகளை வெளியிடாமல் இருந்திருந்தால் நாம்மறுப்புரைக்க வேண்டிய அவசியம் நேர்ந்திராது. இந்தசதகத்தின் முதல்கேள்வி-பதிலில்-ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள சந்திரபுஷ்கரிணியின் மேல்புறம் படிக்கட்டு வடபுறம் சுவரில் உள்ள சில புடைப்புச் சிற்பங்களைப் புகைப்படம் எடுத்து ஸ்ரீரங்கநாதருக்குப் பக்கத்தில் ஆதி சங்கரர் உள்ளதாக ஒரு குறிப்பெழுதி பீடாதிபதி அனைவருக்கும் அளித்து வந்தது ஆதார பூர்வமாக மறுக்கப் பட்டது. இரண்டாவது கேள்வி பதிலில் — காமகோடி பக்தர் ஒருவரால் காஞ்சிவரதராஜப் பெருமாள் ஸந்நிதி பெருந்தேவித்தாயார் ஸந்நிதியில் வேதவ்யாஸரின் புடைப்புச் சிற்பமொன்று ஒரு விரலைத் தூக்கி நின்று காட்டுவது அத்வைதத்தைக் குறிப்பதாக '' ஹிந்து ''

http://acharya.org
http://acharya.org

பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டதற்குத் தக்க பதிலு ரைக்கப்பட்டது. இத்தகைய பொய்ப்பிரசாரங்களைப்பற்றி வைஷ்ணவர்கள் உண்மையை அறிய வேண்டுமென்பதற் காக நாம் ஆதாரத்தோடு மறுப்புரைக்க வேண்டியிருக் கிறது. நம்முடைய மறுப்புகளுக்கு இன்று வரையில் எவரும் ஸமாதானம் உரைக்கவும் முன்வரவில்லை. மேலும் "மேலும் இத்தகைய பொய்ப் பிரசாரங்களையே விடாமல் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இந்த சதகத்தின் 98 வது கேள்வியின் பதிலில் ''அத்வைத வித்வான்களைக் கொண்டு, 'சிவன்தான் நிர்க்குணப்ரஹ்மம். அம்பாள்தான் மாயை' என்னும் காமகோடிப் பெரியவரின் பேச்சு பழைய அத்வைத வேதாந்த நூல்களில் உள்ளது என்று 'கல்கி' நிரூபித்து விட்டால் நாம் ஸுதர்சனர் பதில் எழுது வதையே நிறுத்திவிடுகிறோம்'' என்று ப்ரதிஜ்ஞை செய் திருக்கிறோம். கல்கியால் முடியாவிட்டாலும் காமகோடி பக்தர் எவராவது இதை நிறைவேற்றி நம்மை ஸுதர்சனர்பதில் எழுதமுடியாதபடி செய்யலாமே. இதை விட்டு 'பெரியவரைக் கண்டிக்கிறீர்களே?' என்று குற்றம் சாட்டிப் பயனில்லை. பொதுஜனப்பத்திரிகைகளில் வைஷ் ணவத்தைப்பற்றிய துஷ்பிரசாரங்கள் வெளிவந்து கொண் டிருக்கும் வரையில், ஸுதர்சனர் பதிலும் என்றும் வீறு பெற்று மேலும் பல சதகங்களில் வெற்றிக் கொடி நாட்டுமென்றே தோன்றுகிறது.

ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

20—1—1993. ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,

[ஸுதர்சனர்]

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில் — பதினோராவது சதகம்

ஸ்ரீதரன், மதுரை, மற்றும் பலர்.

1. காமகோடிப்பெரியபீடாதிபதி ஸ்ரீரங்கம் கோவிலில் சந்த்ரபுஷ்கரிணியின் மேல்புறப்படிக்கட்டுகளின் வடபுறமுள்ள சுவரில் ஸ்ரீரங்கநாதர் உத்ஸவ மூர்த்தியும் அதன் பக்கத்தில் ஆதிசங்கரரும் சிற்பவடிவிலுள்ளதாக ஓர் பிரசாரத்தைச் சமீபத்தில் கிளப்பியிருக்கிறார். இச்சிற்பங்களின் புகைப்படத்தையும், அதன் கீழ் இவ்வண்ணம் குறிப்பெழுதி அச்சிட்டுத் தன்னைக்காணவரும் பலருக்கு விநியோகித்து வருகிறார். தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் இப்புகைப்படத்தை விமர்சிக்கவேண்டுகிறோம்.

பல வருஷங்களுக்கு முன் "கோயில்களில் ஆதிசங்கரருக்குச் சிலைகளே கிடையாது." என்று எழுதியிருந்த இவர் விஷ்ணு கோயில்களில் தண்டமேந்தி இருக்கும் ஸந்யாஸிகளின் புடைப்புச் சிற்பங்களெல்லாம் ஆதிசங்கரரின் சிற்பங்களே என்னும் பிரசாரத்தைச் சிலவருடங்களாகத் தொடங்கியிருக்கிறார். முழுவடிவமான சிலைகளில் இந்தப் பிரசாரத்தைச் செய்தால் அவர்களுடைய சிகாயஜ்ஞோபவீதங்களே அவர்கள் வைஷ்ணவ ஜீயர்களே என்பதைக் காட்டிக் கொடுத்து விடுமாகையால், சிகாயஜ்ஞோபவீதங்கள் தெளிவாகத் தெரியாத சிறிய புடைப்புச் சிற்பங்களைத் தேர்ந்தெடுத்து இந்தப்பொய்ப் பிரசாரத்தைச் செய்து வருகிறார். சந்திரபுஷ்கரிணியின் திருப்புன்னையின் கீழே உள்ள பிரக்ருதமான சிற்பத்தின் அருகில் திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும், மதுரகவியாழ்வாரும் புடைப்புச் சிற்பங்களாக எழுந்தருளியிருக்கிறார்கள். ஈடு முதலான வியாக்கியானங்களில் "திருப்புன்னையின் கீழே எம்பெருமானார் முதலான நம் பூர்வாசார்யர்கள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றிய விசாரங்களைச் செய்து கொண்டிருப்பார்கள்" என்று அருளியிருப்பதற்குப் பொருத்தமாக இந்தப் புடைப்புச்சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளனவாகையால், த்ரிதண்டத்தோடு கைகூப்பிக்கொண்டுவீற்றிருக்கும் இந்தச்சிற்பம் எம்பெருமானாருடையதே என்பது வெளிப்படை.

http://acharya.org

ஸ்ரீரங்கம் உடையவர் ஸந்நிதியிலும் எம்பெருமானுர் இப்படியே எழுந்தருளியிருக்கிறுர். ஆழ்வார்களின் புடைப்புச் சிற்பங்களை விலக்கிவிட்டு உடையவருடைய சிற்பத்தை மாத்திரம் புகைப்படமெடுத்து 'ஆதிசங்கரருடையது' என்று பொய்ப்பிரசாரம் செய்வது பீடாதிபதியின் ஆக்ரமிப்பு மனப்பான்மையையே காட்டுகிறது. சில வருஷங்களுக்கு முன் திருவானைக்கா கோயிலில் ஆதிசங்கரர் சிலையொன்றைத் தன் ஆட்களைக்கொண்டு இவர் வைக்கச் செய்ததும், அதை ஸைவர்கள் வெளியில் தூக்கி எறிந்துவிட்டதும் அனைவரும் அறிந்தது. அதைப் போன்றதொரு முயற்சியை ஸ்ரீரங்கம் கோயிலில் இவர் செய்ய முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வைஷ்ணவர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

S. திருவேங்கடாசாரியர், ஸ்ரீரங்கம்.

2. ஸமீபத்தில் 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. அதில் "காஞ்சீ வரதராஜப்பெருமாள் கோயிலில் பெருந்தேவித்தாயார் ஸந்நிதியில் வேத வ்யாசர் சிலை ஒன்று 'ஒன்றே தத்துவம்' என்று ஒருவிரலைத் தூக்கி நின்று காட்டுவதாக உள்ளது. இது வேதவியாஸர் அத்வைத மதத்தையே தழுவியவர் எனக்காட்டுகிறது" என்று காமகோடி பக்தர் ஒருவர் எழுதியிருந்தார். இதுபற்றிய உண்மையை விளக்கவேண்டுகிறேன்.

வேதவ்யாஸர் இயற்றியது என்று அனைவரும் இசைந்த மஹாபாரதத்தில் லக்ஷம் சுலோகங்களுக்கு மேலுள்ளன. அவற்றில் ஒரு சுலோகத்தில்கூட "உலகம்பொய்: ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றே" என்னும் மாயாவாதத்தை வேத₃வ்யாஸர் ஆதரிக்கவில்லை. வேத₃வ்யாஸருடைய ப்₃ரஹ்மஸூத்ரத்தைப் பற்றி ஆராய்ந்த 'தீபா' என்னும் ஜெர்மானிய அறிஞர் "அந்த ஸூத்ரங்கள் ராமானுஜருடைய விசிஷ்டாத்வைதத்துக்கே பொருந்தியவை; சங்கரருடைய அத்வைதத்துக்குப் பொருந்தியவையல்ல" என்று முடிவுகட்டியிருக்கிறுர். 'ப்₃ரஹ்மம் சேதனுசேதனங்களைக் காட்டிலும் உயர்ந்தது' என்று முதல் அத்தியாயத்திலும், 'வேத₃பா₃ஹ்யகுத்₃ருஷ்டிமதங்களால் அதை அசைக்கமுடியாது' என்று இரண்டாம் அத்தியாயத்திலும், 'அது பக்தியினுல் அடையத்தக்கது' என்று மூன்ரும் அத்தியாயத்திலும், "அர்ச்சிராதி₃க₃திவழியில் செல்லும்

http://acharya.org

முக்தாத்மா பரமபத₃த்தை அடைந்து அங்கு ப்₃ரஹ்மத்தோடு ஜக₃த்₃வ்யாபாரம் முதலானவற்றில் பங்கு கொள்ளாமல், போ₄க₃மாத்திரத்தில் ஸாம்யம் பெற்று, திரும்பிவராமல் வாழ்கிறன்" என்று நாலாமத்தியாயத்திலும் வேத₃வ்யாஸர் ப்₃ரஹ்மஸூத்ரத்தில் முடிவுகட்டியிருப்பதைக் காணும் நடுநிலையாளர் எவர்க்கும் அவர் மாயாவாதத்தைக் கனவிலும் கருதாதவர் என விளங்கும். இப்படியிருக்கும்போது 'ஒன்று' எனக்காட்டும் சிற்பத்தைக்கொண்டு அவரை மாயாவாதியாக்கப் பார்ப்பது விலவுறச்சிரிக்கத்தக்கது. "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்₃த்₄ருத்ய பு₄ஜமுச்யதே | வேத₃ாத் ஶாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தை₃வம் கேஶவாத் பரம் ||" [மூன்று முறை ஸத்யம் செய்து கைதூக்கி நின்று கூறுகிறேன். வேதத்தைக் காட்டிலும் மேலான சாஸ்திரமில்லை; கேசவனைக்காட்டிலும் மேலான தெய்வமில்லை] என்று வேத₃வ்யாஸர் முழங்கியதாகப் புராணங்களில் ஒரு வரனொறு பிரசித்தமாயுள்ளது—"ஒருவனே தேவன்" என்னும் இக்கொள்கையையே வேதவ்யாஸர் ஒருவிரலால் காட்டுகிறர் என்று கொள்வது பொருத்தம். மஹாபாரதத்திலும், ப்ரஹ்மஸூத்ரத்திலும் இக்கொள்கையைப் பல இடங்களில் ஆதரித்திருக்கிறர் வேத₃வ்யாஸர்.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

3. 14—1—90 கல்கியில் காமகோடி பெரியபீடாதிபதி "நமது மதம் நானாவிதமான லௌகிக ருசியிலேயே ஸந்தோஷிக்கிற மனஸை நாநாவிதமான தெய்வீக ருசிகளைக் காட்டி ஸந்தோஷப்படுத்தி அந்த மனஸின் அழுக்கையெடுத்துப் பக்குவப்பட்ட அப்புறம் முடிவில் 'நானாதினுஸ்' என்கிற த்வைத அநுப₄வங்களைவிட்டு ஒன்றேயான அத்₃வைதத்துக்குக் கொண்டு போவதற்காக பிள்ளையார், சுப்ரமணியஸ்வாமி, அம்பாள், சிவன், விஷ்ணு ராமன், கிருஷ்ணன், நவக்ரஹம், ஐயனர் என்று எல்லாவற்றையும் வைத்துக்கொண்டே விதவிதமான அலங்காரம் பண்ணி ருசிபே₄த₃த்திலேயே நிறைவு காண்கிறமனஸுக்கு ஸந்தோஷம் கொடுத்துக் கொடுத்து ...... அதைக் கொஞ்சம் கொஞ்சமாகமேலே உசத்திக்கொண்டு போகிறது" என்று எழுதியிருக்கிறர். இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

http://acharya.org

இந்தக் கட்டுரை ஆதிசங்கரரின் கொள்கைக்கு முரணானது. இவ்விஷயத்தை நாம் நமது ஸுதர்சனர் பதில்களில் பல முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். சென்றமாதம் வெளியிடப்பட்ட பத்தாவது சதகத்தின் 49-வது கேள்வியின் பதிலிலும் ஆதிசங்கரர் தமது பாஷ்யங்களில் "நாராயணனே பரமாத்மா; அவனை ஆராதித்தால்தான் மோக்ஷம் கிடைக்கும், உருத்திரன், ஆதித்யன், விநாயகர் முதலானவர்கள் ஜீவர்களே. அவர்களை ஆராதித்தால் அற்பபலன்களே கிடைக்கும்" என்று எழுதியிருப்பதை எடுத்துக்காட்டியிருக்கிறோம். இவற்றுக்கு எந்த பதிலையும் சொல்லாமல் பொதுஜனப் பத்திரிகைகளில் பொய்யையே திருப்பித்திருப்பி எழுதிவருவது ஒரு பீடாதிபதிக்கு அழகல்ல.

T. A. பாஷ்யம், சென்னை-81. (4, 5 கேள்விகள்)

4. சமீபத்தில் திரையிடப்பட்ட "ராமாநுஜர்" படம் பற்றி தேவரீரது அபிப்ராயம் என்ன?

எனது கருத்தை ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகம் 78-வது கேள்வியின் பதிலில் தெளிவாகவும் விரிவாகவும் தெரிவித்திருக்கிறேன். 'கீதாசார்ய'னில் அதன் ஆசிரியர் வெளியிட்ட கருத்துக்களையும் முழுமையாக அங்கீகரிக்கிறேன்.

5. TVயில் சமீபத்தில் "ஆழ்வார்கள் அமுதம்" என்ற ஒரு பட்டிமண்டபத் தொகுப்பு ஒளிபரப்பப்பட்டது. அதில் பேசிய நமது அன்பர் திருவாளர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் திருமால் சிவனின் அடி முடி தேடிய கதையை வில்லிபுத்தூரார் பாரதம் பகர்வதாகக் குறிப்பிட்டார். (அதாவது ஸ்ரீவைஷ்ணவர்கள் பொறுமைமிக்கவர்கள்; மற்ற தெய்வத்தை இகழ்வதில்லை என்று குறிப்பிடும் சமயத்தில்.) இது உண்மையா?

பல இடங்களில் சிவனைக்காட்டிலும் திருமாலின் பரத்துவத்தைப் பேசியிருக்கும் வில்லிபுத்தூரார், திருமாலைச் சிவனைக் காட்டிலும் தாழ்த்திப்பேசும் ஒரு சில பாடல்களைப் பாடியிருக்க மாட்டார் என்பது வெளிப்படை. அவை இடைச்செருகற் பாடல்களே என்று வி. பூதூர் வித்வான் வேங்கடசாமி ரெட்டியார் "வில்லிபாரதத்தில் விநோதத் திருத்தங்கள்" எனும் நூலில் நிலைநாட்டியுள்ளார். நண்பர் ஞானசுந்தரம் இதை அறியார்போலும்!

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம் (6, 7 கேள்விகள்)

6. பிப்ரவரி '90 'கலைமக'ளில், காமகோடி ஜயேந்திர ஸரஸ்வதியின் அருளுரையில் "சிவப்பான பிரமனின் சகோதரி சிவப்பான லக்ஷ்மி; இருவரும் ரஜோகுண முடையவர்கள். சிருஷ்டி செய்பவர்கள் (உயிர், செல்வம்) வெளுப்பான சிவனின் சகோதரி வெளுப்பான சரஸ்வதி; இருவரும் வெளுப்புக்குரிய சத்துவ குணமுடையவர்கள்; சத்துவகுண அம்சமான ஞானத்தை வழங்குகிறார்கள். கறுப்பான திருமாலும் மலைமகளும் சத்துவ தமோகுணச் செயல்களான காத்தலையும் ஸம்ஹாரத்தையும் செய்கிறார்கள்" என்று தொடங்கிப் பல குழப்ப வாதங்களைச் செய்கிறார். இவற்றுக்கு சாஸ்திரங்களில் ஏதேனும் ஆதாரமுண்டோ?

இவருடைய ஆசாரியருடைய கூற்றுகள் தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது. இவற்றை நாம் பலமுறை ஸுதர்சனர் பதில்களில் கண்டித்திருக்கிறோம். இங்கும் சுருக்கமாகக் கூறுகிறோம். "திருமகளைப் பிரம்மாவின் சகோதரி என்பதற்குச் சான்றுகள் இல்லை" என்று இவரே ஒப்புக்கொள்ளுகிறார். "சிவனுக்கு சரசுவதி சகோதரி என்பதற்கும் சான்றுகள் இல்லை" என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகிறார். உண்மையில் சாஸ்திரங்களாலும் கவிஞர்களாலும் லக்ஷ்மீ நாராயணர்களின் பிள்ளையாகவே பிரமன் ஆயிரக்கணக்கான இடங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறான். சதபத ப்ராம்மணம் முதலான வேத பாகங்களிலும், மகாபாரதம், விஷ்ணு புராணம் முதலான சாஸ்திரங்களிலும் சிவன் சரஸ்வதி காந்தனை பிரமனின் பிள்ளையாகவே அறுதியிடப்பட்டிருக்கிறான். ஆகையால் பிரமனுக்கு லக்ஷ்மியும், சிவனுக்கு சரஸ்வதியும் தாய்மார் என்பதற்கே சாஸ்திராதாரமுள்ளது. ஆகையால் இவருடைய பேச்சு சாஸ்திரவிருத்தமான பேச்சேயாகும். மலைமகளை 'மாதவ சகோதரி' என்று கூறுவதைச் சான்றாகக் காட்டுகிறார். இது கிருஷ்ணாவதாரத்தையிட்டு ஏற்பட்டது என்பது சாஸ்த்ர ப்ரஸித்தம். மூலமூர்த்தியான நாராயணனும் துர்க்கையும் சகோதர சகோதரிகள் என்பதற்கு எந்த ப்ரமாணமுமில்லை. தாம் கற்பித்திருக்கும் இந்த மூன்று

http://acharya.org

ஜோடி சகோதர சகோதரிகளுக்குப் பெற்றோர் யார் என்பதை இவரால் விளக்கமுடியாமையாலும் இது ஆகாசத் தாண்டவமே. ஒரே நிறமுடையவர்கள் என்னும் காரணத்தால் சிலரைச் சகோதரர்கள் என்று அறிவுடைய எவனும் கூறமாட்டான். வெளுப்பாயிருப்பவர்கள் எல்லாம் சத்துவ குணமுடையவர்கள், கறுப்பாயிருப்பவர்களெல்லாம் தமோ குணமுடையவர்கள் என்றும் கூறமுடியாது. வெளுப்பாயிருக்கும் வெள்ளைக்காரர்களிலும் கொலைகாரர்களா யிருக்கும் பல கொடியவர்களைக் காண்கிறோம். கறுப்பா யிருக்கும் இந்தியர்களிலும் நீக்ரோக்களிலும் கூடப் பல நல்லவர்களைக் காண்கிறோம். ஆகையால், வெள்ளையாயிருப் பவர்கள் எல்லாம் சத்துவகுணமுடையவர்கள், ரக்ஷிப்பவர்கள் என்றும், கறுப்பாயிருப்பவர்களெல்லாம் தமோ குணமுடை யவர்கள், அழிப்பவர்கள் என்றும் பொருள்பட இவர் எழுதுவது சிறுவர்களும் கைகொட்டிச் சிரிக்க வேண்டியதா யுள்ளது. 'ஸாத்விக விஜய'த்தில் நூற்றுக்கணக்கான சாஸ்திர ஆதாரங்களைக் காட்டி நாம் பின்வருமாறு நிர்ணயித்திருக்கிறோம் :— "பரமாத்மாவான நாராயணனின் ஸ்வரூபத்திலோ, பிரமன், சிவன் முதலான ஜீவர்களின் ஸ்வரூபத்திலோ ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களும் சிறிதும் கிடையாது. ரஜஸ் தமோ குணங்கள் சிறிதுமற்ற சுத்தஸத்வத் திருமேனியை உடையவனா யிருக்கையாலும், ஜீவர்களுக்கு ஸத்வகுணத்தை வளரச் செய்கையாலும் திருமால் ஸத்வ குணமுடையவன் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறான். ரஜோ குணம் அதிக மாகவும் ஸத்வதமோ குணங்கள் குறைவாகவும் கொண்ட பிராக்ருத உடலைப் பெற்றிருக்கையாலும், ஜீவர்களுக்கு ரஜோ குணத்தை வளரச் செய்கையாலும் பிரமன் ரஜோ குணமுடையவனாகச் சொல்லப்படுகிறான். தமோ குணம் மிகுதியாகவும் ஸத்வ ரஜோ குணங்கள் குறைவாகவும் கொண்ட பிராக்ருத உடலைப் பெற்றிருக்கையாலும், ஜீவர்களுக்குத் தமோ குணத்தை வளரச் செய்கையாலும் சிவன் சாஸ்திரங்களில் தமோ குணமுடையவனாகச் சொல்லப்படுகிறான். ஸத்வ குணத்தை வெள்ளையாகவும், ரஜோ குணத்தைச் சிவப்பாகவும், தமோ குணத்தைக் கறுப்பாகவும், சில சாஸ்திர வசனங்கள் உருவகப்

http://acharya.org

படுத்தியதால் வெளுத்ததெல்லாம் ஸத்வ குணமுடையதென்றோ, சிவந்ததெல்லாம் ரஜோ குணமுடையது என்றோ, கறுத்ததெல்லாம் தமோ குணமுடையது என்றோ ஆகிவிடாது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் சிவனைத் தீயைப் போல் சிவந்தவனாகப் பாடுகிறார்களே தவிர வெளுத்தவனாகப் பாடவில்லை. ஆகையால் காமகோடிப் பெரியவர் சொல்லுவது முழுவதும் பொருந்ாது'' என்னும் நம்முடைய நிர்ணயத்துக்கு முப்பது வருடங்களுக்கு மேலாகியும் அந்தக் காமகோடிப் பெரியவரோ, சாஸ்திர விற்பன்னர்களான அவரது சீடர்களில் எவருமோ இன்று வரை பதில் சொல்லவில்லை. என்றும் பதில் சொல்லவும் முடியாது. அவருடைய அபத்த வாதங்களைக் கிளிப்பிள்ளைபோலே இவர் திருப்பிச் சொல்லுவது கைகொட்டிச் சிரிக்கத்தக்கது.

7. பிப்ரவரி '90 'கலைமக'ளில்' இராமாயணக்கதையை எழுதிவரும்போது கிருபானந்தவாரி "தாணு ஆசிரமம்" என்னும் தலைப்பில் விசுவாமித்ரர் இராம இலட்சுமணரைப் பார்த்து 'இது மூவரும் தேவரும் யாவரும் போற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் யோகம் செய்த ஆசிரமமாகும்' என்று கூறியதாகவும் "அன்று அங்குச் சிவசிந்தையுடன் தங்கினார்கள்" என்றும் எழுதியிருக்கிறார். எந்த ராமாயணத்திலாவது இப்படியுள்ளதா?

எந்த ராமாயணத்திலும் இப்படியில்லை. வால்மீகியும் கம்பனும் திருமாலையே முழுமுதற்கடவுளாக முழங்கியிருக்கிறார்கள். சிவனைத் திருமாலுக்கு அடங்கிய சக்திமிக்க ஒரு ஜீவனாகவே கூறியிருக்கிறார்கள். வால்மீகி பாலகாண்டம் முப்பத்தேழாவது ஸர்க்கத்தில் சிவன் பார்வதியோடு நூறு தேவ வருஷ காலம் புணர்ச்சி செய்ததாகவும், மேலும் புணர்ச்சி தொடர்ந்தால் அந்த வீர்யத்தால் உலகம் அழிந்துவிடும் என்று பயந்த தேவர்கள் சிவனைப் பிரார்த்தித்து அந்தப் புணர்ச்சியைப் பாதியில் நிறுத்தியதாகவும், அதனால் சினமடைந்த பார்வதி தேவர்களைச் சபித்ததாகவும், பாதிப்புணர்ச்சியினால் வீழ்ந்த வீர்யத்திலிருந்து ஸ்கந்தன் தோன்றினான் என்றும் விரிவாக வர்ணித்திருக்கிறார். ஆகையால் கிருபானந்தவாரி எழுதுவது அவரது கற்பனை ராமாயணமே.

http://acharya.org

A. N. பாரதியார், திருக்குடந்தை.

8. ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிய உபதேச ரத்தின மாலையில்

"அஞ்சுகுடிக்கு ஒருசந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து". என்ற பாசுரத்தின் பொருளை, கேள்வி பதில் பகுதியில் பிரசுரிக்குமாறு மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்பாசுரம் மாமுனிகள் ஆண்டாளின் பெருமையை அநுஸந்திப்பதாய் அமைந்திருக்கிறது. நம்முடைய பூர்வாசார்யர்கள் ஆண்டாளை ஆழ்வார்கள் அனைவர்க்கும் திருமகளாகவும், ஆழ்வார்களை இவளுக்குத் தகப்பன்மாராகவும் அநுஸந்திப்பர். ஆழ்வார்கள் அனைவருடைய ஜ்ஞாந பக்தி வைராக்யங்களும் ஆண்டாளிடம் ஒன்று சேர்ந்து நிறைந்து காணப்படுவதே இதற்குக் காரணமாகும். ஆழ்வார்கள் எம்பெருமானுடைய ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம் (மென்மை) முதலான குணங்களைக்கண்டு "இவனுக்கு என் வருகிறதோ?" என்றஞ்சி அவனுக்குப் பல்லாண்டு பாடும் தன்மையுடையவர்களாயிருப்பர்கள்; அஸ்தானே பய ஶங்கை (அஞ்சத் தகாத விடத்தில் அஞ்சுகை) என்னும் இந்தத் தன்மையைப் பெற்றிருக்கையாலே ஆழ்வார்கள் "அஞ்சு குடி" என்று இப்பாசுரத்தில் அழைக்கப் படுகின்றார்கள். அவர்களுடைய பெருமைகளனைத்தையும் பெற்றிருந்த ஒரே பெண் பிள்ளையாயிருந்தமையாலே இவள் 'அஞ்சு குடிக்கொரு சந்ததி' எனப்படுகிறாள். "ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்" என்னும் தொடராலே ஜ்ஞாந பக்தி வைராக்யங்களிலும் பல்லாண்டு பாடுவதிலும் அவர்களையும் விஞ்சி நிற்பவள் ஆண்டாள் என்று சொல்லப்படுகிறது. அவர்களைப் போலல்லாமல் திருத்துழாய் முளை விடும் போதே மணத்துடன் முளை விடுவது போலே மிகச்சிறிய வயதிலேயே எம்பெருமானை நாயகனாக வரித்து திவ்ய ப்ரபந்தங்கள் பாடியமையாலே ஆண்டாளைப் "பிஞ்சாய்ப் பழுத்தாள்" என்கிறார் மாமுனிகள். ஆண்களாய்ப்பிறந்து பெண்ணுடையுடுத்து நாயகீ பாவத்தை ஏறிட்டுக் கொண்ட அவர்களைப் போலல்லாமல் பெண்ணாய்ப் பிறந்த இவளுடைய நாயகீ பாவம் இயல்வாயமைந்தது. 'அப்படிப்பட்ட ஆண்டாளை எப்பொழுதும் பக்தியோடு துதிப்பாயாக' என்று தம் நெஞ்சைப் பார்த்துக் கூறுகிறார் மாமுனிகள் இப்பாட்டில்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

9. மார்ச் '90 'கலைமகள்'ளில் வாரியார் "சீதையின் பிறப்பு" என்னும் தலைப்பில் ஓர் கதையை எழுதியிருக்கிறார். விச்வாமித்ரரும், இராமலக்ஷ்மணர்களும் முருகனை வணங்கியதாக எழுதியிருக்கிறார். எந்த ராமாயணத்திலாவது இப்படி உள்ளதா?

பிரசித்தமான ராமாயணம் எதிலும் சீதையின் பிறப்பு பற்றிய இக்கதையும், இராமன் முதலானோர் முருகனை வணங்கியதாகவும் இல்லை. மனம்போனபடியெல்லாம் வாரியார் எழுதுகிறார் என்றே விளங்குகிறது. இத்தகைய பொய்க் கதைகளை இராமகதையாக வெளியிடுவதன் மூலம் "கலைமகள்" தன் தரத்தை மிகவும் தாழ்த்திக்கொள்கிறது.

S. முரளி, அந்தணல்லூர் (10, 11, 12 கேள்விகள்)

10. நவம்பர் '89 சப்தகிரியில் அல்லூர் திரு. டி. கேசவய்யங்கார் எழுதிய கட்டுரையில் பிராட்டி வாழித் திருநாமத்தில் "இருபத்தஞ்சுட்பொருள் மால் இயம்புமவள் வாழியே" என்றுள்ள ஆறும் அடிக்கு "25-வது தத்துவத்தை (அதாவது ஆத்மாவை) குறிக்கும் எழுத்தான 'ம' காரம், ஆத்மாவாகவும், ஆத்மாக்களுக்கெல்லாம் ஆத்மாவாக இருக்கும் பிராட்டியையும் குறித்து, பெருமாளை விட்டுப்பிரியாமல் இருந்துகொண்டு சேதனர்களை உஜ்ஜீவித்துக் கொண்டிருக்கிறாள்" என்று பொருள் எழுதப்பட்டுள்ளது. ஆறும் அடிக்கு இது எப்படிப் பொருளாகும் என்பது அடியேனுக்கு விளங்கவில்லை. அதன் உண்மைப் பொருள் என்ன?

ஆறும் அடிக்கு இவர் எழுதியிருக்கும் பொருள் சிறிதும் பொருந்தாது. "இருபத்தஞ்சு" என்பது இருபத்தைந்து எழுத்துக்களைக் கொண்ட த்வயமஹாமந்திரத்தைக் குறிக்கிறது. "அதன் உட்பொருளை எம்பெருமான் பெரிய பிராட்டியாருக்கு விஷ்ணு லோகத்தில் உபதேசித்தான்"

http://acharya.org

என்பது சம்பிரதாயம். "இருபத்தைந்து அக்ஷரங்கள் கொண்ட த்வயத்தின் உட்பொருளைத் திருமாலால் உபதேசிக்கப்பெற்ற பெரிய பிராட்டியார் வாழ்க" என்பதே ஆருவது அடிக்குப் பொருள். அவ்வடியின் பதங்களுக்கும், இவர் எழுதியிருக்கும் பொருளுக்கும் தொடர்பேயில்லை.

11. டிசம்பர் '89 சப்தகிரியில் "திருப்பாவையும் திருவெம்பாவையும்" என்னும் கட்டுரையில் அல்லூர் டி. கேசவ அய்யங்கார் "திருப்பாவையும் திருவெம் பாவையும் மார்கழி மாதத்தில் மட்டுமின்றி எல்லா நாட்களிலும் நாம் எல்லோரும் பாவைப்பாட்டுக்களைப் பாடி இறைவன் அருளுக்குப் பாத்திரமாவோமாக" என்று எழுதுகிருர். இது சரியா?

மாணிக்கவாசகர் வெம்பாவையில் "மாலறியா நான் முகனும் காணுமலை" "மால் நான்முகனும் காணுத புண்ட ரிகம்" "செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால் எங்குமிலாததோர் இன்பம் நம் பாலதாக" என்று மூன்று இடங்களில் திருமால் சிவனைவிடத் தாழ்ந்தவன் என்று கூறியிருக்கிருர். இதை மனச்சாட்சியுள்ள திருமாலடியார்கள் எப்படிப்பாட முடியும் என்று நமக்கு விளங்கவில்லை. அல்லூர் கேசவய்யங்கார் இந்த மூன்று தொடர்களுக்கும் பொருளை அறியாதவராகவாவது இருக்கவேண்டும். அல்லது மனச்சாட்சி சிறிதும் இல்லாதவராகவாவது இருக்கவேண்டும். 'திருப்பாவை பிரபலமாவதற்குக் காமகோடி பீடாதிபதியே காரணம்" என்று இவர் எழுதுவது இவர் மனச்சாட்சியே இல்லாதவர் என்று காட்டுகிறது.

12. நவம்பர் '89 சப்தகிரியில் "திரு. எம். என். பிச்சு மணி, பூவிருந்தவல்லி" என்பவர் "அரன் நாரணன்" என்னும் பாட்டிலும், "பொன் திகழும்" என்னும் பாட்டிலும் சிவ விஷ்ணுக்களை ஒன்ருக இணைத்து சைவ வைணவ ஒற்றுமையைக் காட்டியிருக்கிருர் பொய்கையாழ்வார் என எழுதியுள்ளார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

http://acharya.org

"அரன் நாரணன்" என்னும் பாட்டில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் வேற்றுமைகளையே திருப்பித் திருப்பிக் காட்டுகிறார் பொய்கையாழ்வார். "உரை நூல் மறை" என்றதால் சிவனைப் பரம்பொருளாகக் கூறுவது மனிதனால் நூற்கப்பட்ட நூல் என்றும், திருமாலைப் பரம்பொருளாகக் கூறுவது எவராலும் இயற்றப்படாத வேதம் என்றும் கூறுவதன் மூலம் ஆழ்வார் விஷ்ணுபரத்வநிர்ணயத்தையே செய்கிறார். "மேனி ஒன்று" என்றதால் "சிவன் சரீரமாயிருக்கிறான், திருமால் அவனுக்கு ஆத்மாவாக உள்ளான்" என்று கூறுவதன் மூலமும் இதையே செய்கிறார். "பொன் திகழும்" பாட்டில் பரதத்துவ நிர்ணயமே செய்யப்படுகிறது என்பது பத்தாவது சதகம் 66, 74 கேள்விகளின் பதில்களில் பிறர் வாய்திறக்கவொண்ணாதபடி நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மனச்சாட்சியில்லாதவர்கள் பொய்யைத் திருப்பித்திருப்பிக் கூறுவதால் பொய் உண்மையாகிவிடாது. சப்தகிரி இத்தகைய பொய்ப் பிரசாரத்தில் முழுமூச்சுடன் இறங்கியிருப்பது அருவருக்கத்தக்கது; நல்லோர்களால் கண்டிக்கத் தக்கது.

R. சுந்தரராஜகண்ணன், வேலூர்.
ராஜகோபாலராமாநுஜதாஸர், காட்டேரி.

13. 6—2—90 தினமணியில் 8—ம் பக்கத்தில் 'ஆன்மிகம்' பகுதியில் "உலகமே மாயை" என்னும் தலைப்பில் காமகோடி பீடாதிபதியின் "தெய்வத்தின் குரல்" நூலிலிருந்து மாயாவாதம் செய்யும் ஒரு பகுதி பிரசுரிக்கப்பட்டுள்ளது- அதுதான் ஆதிசங்கரரின் அத்வைதமா?

பீடாதிபதி எழுதியிருப்பது சங்கரரின் அத்வைதமல்ல. ஆதிசங்கரர் உலகம் உண்மையில் அடியோடு இல்லாத பொருள் என்றே கூறுகிறார். ஆனால் பீடாதிபதி "மாயை என்பது அடியோடு இல்லாத பொருள் அல்ல. முயல் கொம்பும் மலடிமகனும் போல் இல்லாதபொருள் அல்ல. உலகம் மாயை என்பது இல்லாத பொருள் என்னும் அர்த்தத்தில் அல்ல. ஒரே சர்க்கரையினால் பல பொம்மைகள் செய்திருக்கிறது போல ஒரே பிரம்மம் இத்தனையும் ஆகியிருக்கிறது"

http://acharya.org

என்று கூறுகிறார். இது சங்கரரின் அத்வைதமல்ல. "ஒரே சர்க்கரையினால் பல பொம்மைகள் செய்திருக்கிறதுபோல் ஒரே பிரம்மம் இத்தனையும் ஆகியிருக்கிறது" என்று கூறுவது யாதவப்ரகாசமதம்; சங்கரரின் அத்வைதமல்ல. மேலும், "மாயை என்று ஒன்று ப்3ரஹ்மத்தை மறைக்கிறது; அதனால் உலகமாகிற பொய்த்தோற்றம் உண்டாகிறது" என்கிறார் சங்கரர். இதை உணராமல் "உலகமே மாயை" என்று பாமரர்களைப்போல் இவர் எழுதுவது இவர் சங்கரரின் மாயாவாதத்தைச் சரியாக உணராதவர் என உணர்த்துகிறது.

திருவேங்கட ராமாநுஜம், மேட்டுப்பாளையம்.

14. 21—5—90 தினமணியில் 'ஆன்மீகம்' பகுதியில் பகவத்கீதையைப் பற்றி மனம்போனபடி எழுதிவிட்டு, "யாவரும் ஒருநாள் எமனைச் சந்திக்கவேண்டும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. விமர்சிக்கவேண்டுகிறேன்.

இன்று தினமணி போன்ற பத்திரிகைகளில் 'ஆன்மீகம்' என்ற பெயரில் அவரவர் மனம்போனபடி எழுதுவதெல்லாம் அச்சிடப்படுகிறது. இத்தகையவர்கள் இறந்தபின் யமனைச் சந்தித்தே ஆகவேண்டும். இதையே அவர் எழுதியிருக்கிறார் என்று கொள்ளலாம். "ந க2லு ப4ாக3வதா யமவிஷயம் க3ச்ச2ந்தி!" [ப4க3வத்3ப4க்தர்கள் யமனிருக்குமிடம் செல்வதில்லை] என்னும் ஶ்ருதிப்ரமாணம் பூர்வாசார்யர்களால் எடுக்கப்படுகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் யமகீ3தையில் யமன் "நான் வைஷ்ணவர்களுக்கு அருகிலும் செல்லமாட்டேன். நீயும் அவர்களுக்கு அருகில் செல்லாதே" என்று தன் தூதனைப்பார்த்துக் கூறுவதாக உள்ளது. இதையே

"திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்,
மறந்தும் புறந்தொழா மாந்தர் — இறைஞ்சியும்,
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும்தன்,
தூதுவரைக் கூவிச்செவிக்கு" [நான்-திருவ 68]

என்று திருமழிசையாழ்வார் அருளிச்செய்தார்.

http://acharya.org

(வானமாமலை) N. S. பத்மநாபன், சென்னை -48.

15. 30–4–90 "மங்களம்" இதழில் "டெல்லியில் திருப்பதி" என்னும் தலைப்பில் டில்லி ஸ்ரீராமர் கோயிலைப் பற்றிய கட்டுரையில், அந்தக்கோயில் நிர்வாஹியான திரு. ராமஸ்வாமி அய்யங்கார் அக்கோயிலில் விநாயகரும் நவக்கிரகங்களும் அமைத்ததற்குக் காரணம் கூறுகையில், "பாஞ்சராத்ராகமத்தில் விநாயகரை விஷ்ணுவின் துணை தெய்வங்களுள் ஒன்றான 'விஷ்வக்ஸேனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நவக்கிரகங்களும் கூட பெருமாளின் அவதாரங்கள்தான் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது" என்று கூறியதாக உள்ளது. இது சரியா?

இது சரியல்ல; பாஞ்சராத்ராகமத்தில் விஷ்ணுவின் சேனைத்தலைவராகக் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்வக்ஸேனருக்கு விநாயகர் என்று பெயர் கிடையாது. அவருக்கு யானைமுகமும் கிடையாது. விஷ்வக்ஸேனரின் படைத்தலைவர்களில் யானைமுகமுள்ள கஜானனர். சிங்கமுகம் கொண்ட ஸிம்ஹானனர் முதலானவர்கள் உண்டு. அந்த கஜானனரே பல விஷ்ணுகோயில்களில் பரிவார தெய்வமாகக் காணப் படுகிறார். அவரை சிவபார்வதிகளின் பிள்ளையான விநாயகராக நினைப்பது தவறு. உண்மையில் சைவத்தில் ஏழாவது நூற்றாண்டிலேயே விநாயகர் புகுத்தப்பட்டார் என்று ஆராய்ச்சியாளர் அனைவரும் கூறுகின்றார்கள். முருகனைச் சிவனின் பிள்ளையாகக்கூறும் சங்கநூல்களும், சிலப்பதிகாரம் முதலானவையும், ஆழ்வார்களின் அருளிச்செயலும் விநாயகரைப் பற்றி ஓரிடத்திலும் சொல்லவில்லை. இவற்றிலிருந்து விஷ்ணுகோயிலிலிருந்த கஜானனரே சிவனின் பிள்ளையாக்கப்பட்டு, ஏழாம் நூற்றாண்டிலிருந்து சிவன்கோயில்களிலும், அரசமரத்தடிகளிலும், நதிக்கரைகளிலும், குளக்கரைகளிலும் வைத்துச்சைவர்களால் வழிபடப்பட்டார் என விளங்குகிறது, இப்படி விநாயகர் வழிபாடு பிரபலமாகிவிட்டபடியாலே, விஷ்ணுகோயில்களில் இருக்கும் கஜானனரைப் பலர் விநாயகர் என்று நினைக்கும் நிலை வந்துவிட்டது. நவக்கிரகங்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று பாஞ்சராத்ராகமத்திலும்

ஸ—4

http://acharya.org

மற்ற எந்த சாஸ்திரத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஸ்ரீராமாயணம் முதலான நூல்களில் நவக்கிரகங்கள் முதலான தேவர்கள் ராவணன் முதலானோரிடம் படாதபாடு பட்ட ஜீவர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். ஸ்ரீ. ராமஸ்வாமி அய்யங்கார் இப்படியெல்லாம் கூறியிருப்பார் என்று நமக்குத்தோன்றவில்லை; பத்திரிகைக்காரர்களே மனம் போனபடி எழுதியிருக்கக் கூடும்.

R. V. ஸ்ரீதரராமாநுஜதாஸர், மதுரை.
R. ராஜகோபால ராமாநுஜதாஸர், காட்டேரி.

16. 6–4–90 "தினமணி" "ஆன்மிகம்" பகுதியில் புலவர். சிதம்பரம் சாமிநாதன் என்பவர் "கம்பன் சமரசவாதி" என்றும், "அஷ்டாக்ஷரமும் பஞ்சாக்ஷரமும் சேர்ந்தே ராமநாமம் உண்டாயிற்று என்று தியாகபிரம்மம் கூறியிருக்கிறார்" என்றும், ஆகையால் 'சிவனும் விஷ்ணுவும் ஒன்றே' என்றும் பேசிய பேச்சின் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளது. 28—3—90 'ஆன்மிகம்' பகுதியில் "மாதவனும் உமாதவனும்" என்னும் தலைப்பில் நாகை முகுந்தன் என்பவர் "வில்லிபுத்தூரார் தம் பாரதத்தில் மாதவனையும் உமாதவனையும் பாடியிருப்பதால் இருவரும் ஒன்றே" என்றும், "இருவரும் வேறென்று கூறுவது மடத்தனம்" என்றும் பேசிய பேச்சு வெளியிடப்பட்டுளது. இவ்விரண்டையும் விமர்சிக்கவேண்டுகிறோம்.

"சங்ககாலத்தமிழர் சமயமே கம்பனின் சமயம்" என்னும் நமது நூலில் கம்பன் சமரசவாதி என்னும் வாதம் தலையெடுக்க முடியாதபடி தள்ளப்பட்டுள்ளது. வி. பூதூர் வேங்கடசாமி ரெட்டியார் எழுதிய "வில்லிபாரதத்தில் விநோதத் திருத்தங்கள்" என்னும் நூலில் வில்லிபுத்தூரார் சமரசவாதி என்னும் வாதமும் அடியறுக்கப்பட்டுள்ளது. "வில்லிபுத்தூரார் பாரதத்தில் மாதவன் சரிதமும் உமாதவன் (சிவன்) சரிதமும் வருவதாகக் கூறியதால் இருவரும் ஒன்று என்று தேறும்" என்று கூறுவது மடத்தனமா? "கண்ணன் தாளிலிட்ட மலரைச் சிவன் தலையில் தாங்கினான் என்று அவர் கூறுவதால் 'திருமாலே பரம்பொருள்'

http://acharya.org

என்பது அவர் கொள்கை" என்று கூறுவது மடத்தனமா? என்பதை ஆராய்ந்தால் நாகை முகுந்தன் கூறுவதே மடத்தனம் என்பதை எவரும் எளிதில் உணரலாம். பாமரர்களான சைவர்கள் வைணவர்களாகிய இருவரையும் ஏமாற்றி, ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலிய சமயக் குரவர்கள் அனைவரையும் மடையர்களாக்கி, அனைவருடைய பணத்தையும் பறிப்பதற்காகச் செய்யப்படும் இத்தகைய சொற்பொழிவுகளை வெளியிடுவதால், "தினமணி" வீணாக மதச்சண்டைகளைக் கிளப்பிவிடுகிறது. நமது ஞானபுத்திரரான மதுரை ஸ்ரீதர ராமாநுஜதாஸர் இந்த வாதங்களை ஏற்கனவே நமது நூல்களில் கண்டித்திருப்பதின் சாரத்தை எடுத்து எழுதி, தினமணிக்கு அனுப்பி நேர்மையிருந்தால் அதைப்பிரசுரிக்கும்படி அறைகூவியிருக்கிறார். தினமணி போன்ற பத்திரிகைகள் சைவர்களையும் வைஷ்ணவர்களையும் ஒன்றுக்குவதாக நினைத்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மையோடு ஒற்றுமையாயிருக்கும் அவர்களிடையே சண்டையை வளர்ப்பது மிகவும் அருவருக்கத்தக்கது. இத்தகைய போலிச் சமரசச் சொற்பொழிவுகளை 'ஆன்மிகம்' பகுதியில் வெளியிடாதிருக்கும்படி அன்பர்கள் பலரும் 'தினமணி' ஆசிரியருக்குக் கடிதம் எழுதினால் விமோசனம் பிறக்கலாம்.

S. கோவிந்தராஜன், சென்னை–94.

17. "திருமால்" பத்திரிகையில் தாங்கள் சைவ ஸ்மார்த்தர்களுக்கும் வைஷ்ணவர்களுக்குமிடையே பகை உணர்ச்சியை வளர்த்து வருவதாக அதன் ஆசிரியர் கூறியிருக்கிறார். இந்தவாதத்தின் பொய்ம்மையை ஸுதர்சனத்தில் விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வாதத்தின் பொய்ம்மை "கீதாசார்யன்" 138 139 இருமாத இதழில் வெளிவந்த (பன்னிரண்டாவது சதகம்) ஸுதர்சனர் பதிலில் நம்மால் விரிவாக நிருபிக்கப்பட்டுள்ளது. இங்கு சுருக்கமாகக் கூறுகிறோம். 'தினமணி' 'கலைமகள்' 'கல்கி' போன்ற பத்திரிகைகளில் காமகோடி

http://acharya.org

பீடாதிபதி, வாரியார்போன்ற பிரபலமான வைணவவிரோதப்ர சாரகர்களும் நாவலர் முகுந்தனை, சிதம்பரசாமிநாதன் போன்ற பலைத்தூக்காகப் பேசும் உபந்யாஸகர்களும் விஷ்ணு வையும் வைஷ்ணவத்தையும் தாழ்த்தியும், வைஷ்ணவர்கள் மடையர்கள் என்றும், அவர்களுக்கு ப்பரகதி கிடையாதென் றும் பேசும் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் கடந்த பல வருடங்களாக இடைவிடாமல் வெளியிடப்படுகின்றன. இவற்றை நமது ஸுதர்சனர் பதில்களில் தகுந்த ஆதா ரத்துடன் நாம் இடைவிடாமல் மறுத்துவருகிறோம். நம்முடைய மறுப்புகளுக்கு எந்த பதிலையும் கூறாமல், திருப்பித்திருப்பிப் போலிச் சமரசவாதத்தையும் சைவ வைஷ் ணவ நிந்தைகளையும் வெளியிட்டுவரும் இந்தப்பத்திரிகை களே உண்மையில் ஸ்மார்த்தர்களுக்கும் சைவவைஷ்ணவர் களுக்குமிடையே பகையை வளர்த்துவருகின்றன. சைவர்கள், வைஷ்ணவர்கள், அத்வைதிகள் ஆகிய அனைவரும் ஒருவரோடொருவர் சகிப்புத்தன்மை யுடன் பொது மேடைகளிலும் பொது ஜனப்பத்தி ரிகைகளிலும் ஒருவரையொருவர் தாக்காமல், தம்தம் மதக்கூட்டங்களிலும், தம்தம் பத்திரிகைகளிலும், தம்தம் மதத்தைப் பிரசாரம் செய்துகொண்டு உறுதியான மதநம்பிக்கையுடன், பொது வாழ்வில் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்னும் உண்மையான சமரசத்தைப் பரப்புவதன் மூலம் பொதுஜனப் பத்திரிகைகள் உண்டாக்கும் பகையுணர்ச்சியைப் போக்குவதற்கே நாம் பாடுபடுகிறோம். இவ்வுண்மை பொறாமை உணர்ச்சியுடைய சிலருக்குப் புலப் படாவிட்டாலும், நடுநிலையாளர்களான பல சைவர்களுக்கும் ஸ்மார்த்தர்களுக்கும் நன்கு விளங்கியுள்ளது என்பதை அவர்கள் பல முறை நமக்குத் தெரிவித்துள்ளார்கள். மற்றோர்கள் மாச்சரியத்தால் இகழில் நமக்கென்ன?

S. கோவிந்தராஜன, சென்னை-94.

18. சென்ற மாதங்களில் கீதாசார்யனிலும், ஸுதர்சனத்திலும் தேவரீர் எழுதிய நேர்மையான ஸுதர்சனர் பதில்களுக்கு என்ன பதில் சொல்லுகிறார் என்று அறிவதற்காக 8—6—90 வெள்ளியன்று இரவு சுமார் 8 மணிக்கு அடியேன் 'திருமால்' ஆசிரியரின் கிருஹத்திற்குச் சென்றிருந்தேன். [ஸுதர்சனம் உதவி ஆசிரியரும் அடியேனுடைய சிறிய மாமாவுமான ஸ்ரீ S. ராமய்யங்கார் ஸ்வாமியே அடியேனைக் குமாரவாடிஸ்வாமியின் க்ருஹத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார்.] சுமார் ஒன்றரைமணி அவகாசம் அடியேனுக்கும் அவருக்கும் பலத்த சர்ச்சை நடந்தது. "கீதாசார்யனிலும், ஸுதர்சனத்திலும் உம் பெயரில் வெளிவந்த கேள்விகளை நீர் கேட்கவில்லை என்று எனக்கு எழுதிக்கொடுக்கவேண்டும்" என்று குமாரவாடி ஸ்வாமி கேட்டார். நான் அப்படிப் பொய்யாக எழுதிக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டேன். இதனாலும், அடியேன் கேட்ட பல கேள்விகளாலும் மிகவும் கோபங்கொண்ட குமாரவாடி ஸ்வாமி தம் உட்கருத்துக்களைப் பின்வருமாறு தெரிவித்தார்:—

1. ஆழ்வார்களும், ஆசாரியர்களும் சைவர்கள் தம்மைத் தாக்கியபடியாலே பரதத்துவ நிர்ணயம் செய்தார்கள். நாம் இக்காலத்தில் அதைச் செய்வது ஒவ்வாது.

2. தர்க்கம் மீமாம்ஸை முதலான சாஸ்திரங்களிலும் ஸ்ரீபாஷ்யம் பகவத் விஷயம் முதலானவற்றிலும் எனக்கு இணையான வித்வானே இன்று ஸ்ரீவைஷ்ணவவுலகில் இல்லை.

3. கீதாசார்யனிலும், ஸுதர்சனத்திலும் உம் பெரிய மாமா (ஸுதர்சனம் ஆசிரியர்) என்னைப்பற்றி விடாமல் எழுதுவதால் நான் அவரைப் பற்றிய நிந்தை நூல்களைப் பாடல்களாகவும், உரைநடையிலும் எழுதப்போகிறேன். நீர் தொடர்ந்து கேள்வி கேட்டால் உம் பேரிலும் நிந்தை நூல்கள் வெளிவரும். கீதாசார்யன் ஆசிரியர் பற்றியும், அவரது ஆசாரியரான (காஞ்சீ மஹாவித்வான்)

http://acharya.org

அண்ணங்கராசாரியர் பற்றியும் பல உண்மைகளை எழுதப் போகிறேன். [இக்கருத்துக்களைக் கோபத்துடன் சொல்லும் போது தேவரீரைப் பற்றியும், இன்றுள்ள (காரப்பங்காடு ஸ்வாமி சிஷ்யர்களான) பிரபல வித்வான்களைப் பற்றியும் திருப்பிச் சொல்லவும் தகாத பல வசைமாரிகளைப் பொழிந்துகொண்டேயிருந்தார்.]

4. திருமண்காப்பு ஆதிகாலத்தில் கிடையாது. ஆகையால், அதைப் பத்திரிகையில் அச்சிட வேண்டியதில்லை. [குருபரம்பரை நூல்களில் திருமழிசையாழ்வார் ப்ரபாவத்தில் திருமண்காப்பு பற்றி வருகிறதே என்று அடியேன் கேட்டதற்கு குருபரம்பரைகளை நம்பமுடியாது என்றார்]

5. ஸுதர்சனம் ஆசிரியர் அக்நிஹோத்ரியைக் கண்டித்ததால் அக்நிஹோத்ரிக்குக் காமகோடி சங்கராசாரியரிடமிருந்து லக்ஷக்கணக்கான ரூபாய் கிடைத்தது. என்னை அவர் தென்கலை அக்னிஹோத்ரி என்று பிரசாரம் செய்தால், எனக்கும் பெருத்த லாபமே.

6. "சுராஜ்" செய்யும் பிரசாரம் அனைத்தும் நியாயமே. திருவல்லிக்கேணியில் திருமண்காப்பு அணிந்து கொண்டு வரும் 'ஸ்வாமி'களைக் காட்டிலும் பாமர மனிதர்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்களைவிட இவர்களை வணங்கலாம்.

7. சூலாயுதம், மண்டையோடு முதலானவற்றை தரித்திருக்கையால் மற்ற தெய்வங்களை வணங்கலாகாது என்று நீங்கள் (வைஷ்ணவர்கள்) கூறுகிறீர்கள். ரத்தம் தோய்ந்த கொலையாழியாக ஆழ்வார்களால் வர்ணிக்கப்படும் ஸுதர்சனத்தை தரித்திருக்கும் தெய்வத்தை நீங்கள் எப்படி வணங்கலாம்? [ஐயோ! பாவம்! அசுரராக்கரைக் கொல்வது லோக க்ஷேமமாகையாலே நல்லது என்பதைக் கூட இவர் உணரவில்லையே; மற்ற தெய்வங்களின் ஆயுதங்கள் நல்லவர்களை அழிக்கவும் பயன்பட்டனவே]

இது போன்று அவர் கோபத்தோடு பொழிந்து கொண்டிருந்த வசைமாரிகள் அனைத்துக்கும் விஷ்ணுசித்த

http://acharya.org

விஜயம், சாதிமத ஆராய்ச்சி முதலானவற்றிலிருந்து அடியேன் பதில் சொல்லிக்கொண்டே இருந்தேன். ஆனால், எதையும் அவர் ஒப்புக்கொள்வதாயில்லை. ஆகையால், பயனற்ற இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகிறேன்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் 'திருமால்' ஆசிரியரின் உண்மை ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி அவர்களை விழிப்புடனிருக்கச் செய்யவேண்டும் என்னும் ஒரே பயனைக்கருதியே, நாம் இவர் செய்துவரும் தகாத செயல்களை ஸுதர்சனத்திலும், கீதாசார்யனிலும் சுமார் இரண்டு வருடகாலமாக எடுத்துக்காட்டினோம், அப்பயன் பரிபூர்ணமாக நிறைவேறி விட்டது. இவர் திருந்துவார் என்று நாம் எப்போதும் எதிர்பார்க்கவில்லை. அதனால் இவ்விவாதம் இத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. வரம்புமீறி வசவுச்சுவடிகளை இவர் வெளியிட்டால், வசவுக்கு பதில் வசவு நம்மிடமிருந்து வராது; இவர் ஆத்மநாசம் அடையாமலிருப்பதற்காக நீதி மன்றங்களில் அதற்குப் பரிஹாரம் தேடப்படும்.

S. வேங்கடம், சமயபுரம்.

19. சமீபத்தில் நடந்த விஷ்ணுகோயில் ஸம்ப்ரோக்ஷணம் ஒன்றில், அக்கோயிலுக்குப் பணம் நிறைய வருவதற்காகக் காமகோடி பீடாதிபதியிடமிருந்து தநாகர்ஷணயந்திரம் வந்ததாகக் கேள்விப்பட்டேன். இது நியாயமா? இதை வைத்தால் கோயிலுக்குப் பணம் வந்து விடுமா?

தநாகர்ஷணயந்திரம் என்பது சக்தி உபாஸகர்களால் பயன்படுத்தப்படும் ஒரு யந்திரம். விஷ்ணுகோயில்களில் இதற்கு இடமில்லை. மிகவும் தரித்திர நிலையிலிருக்கும் சிவன் கோயில்களில் இதை ஸ்தாபித்து அவற்றைச் செல்வச்செழிப்புடையதாகக் காமகோடிமடம் செய்யலாமே; அதைச் செய்யாததிலிருந்து இந்த யந்திரத்திற்கு எந்தச்சக்தியும் இல்லை என விளங்குகிறது. காமகோடி சிஷ்யர்கள் நீண்டநாளாக "ஆதி சங்கரர் ஸ்ரீரங்கங்கோயிலில் ஜநாகர்ஷணயந்திரத்தை ஸ்தா

http://acharya.org

பித்தார்; திருப்பதி சிவ கோயிலில் த₄நாகர்ஷண யந்திரத்தை ஸ்தாபித்தார்" என்று கூறிவரும் பொய்ப்பிரசாரத்தை 'உண்மை' யாக்குவதற்காகவும், விஷ்ணுகோயில்களை மாற்றுவதற்காகவும் செய்யப்படும் இம்முயற்சிக்கு வைஷ்ணவர்கள் இடம் கொடுக்கக்கூடாது.

V. ஸ்ரீதரன், மதுரை.

20. "எந்த த₄ர்மம் எல்லா த₄ர்மங்களிலும் சிறந்தது?" என்று கேள்விகேட்ட த₄ர்மபுத்திரர்க்கு பீஷ்மாசார்யர் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தைச் சொன்னதாக மஹாபா₄ரதத்தில் வருகிறது. வேறு தேவதைகளுக்கு இப்போது காணப்படும் ஸஹஸ்ரநாமங்கள் எக்காலத்தில் யாரால் செய்யப்பட்டன?

மஹாபாரதத்தில் பீஷ்மரால் யுதி₄ஷ்டி₂ரர்க்குச் சொல்லப்பட்ட ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமமே ஆதியானது பண்டைச் சான்றோர்கள் பலராலும் கையாளப்பட்டது. வடமொழியில் மாத்திரம் இதற்குப் பண்டைக்காலத்திலிருந்து சுமார் நாற்பது பா₄ஷ்யங்கள் அமைந்தன. ஆதிசங்கரரின் பா₄ஷ்யம் இவற்றில் பழமையானது. விசிஷ்டாத்வைதபரமாக ப₄ட்டர் அருளிய பா₄ஷ்யம் சுமார் 800 வருடங்களுக்கு முன் ஏற்பட்டது. "தே₃வோ நாமஸஹஸ்ரவாந்" என்று இதிஹாஸபுராணங்களிலும், 'பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்" "பேருமோராயிரம் பிற பல உடைய எம்பெருமான்" "பேராயிரமுடையான் என்றாள்" என்று ஆழ்வார்களாலும் கொண்டாடப்பட்டவன் விஷ்ணு ஒருவனே. சரகஸம்ஹிதை எனும் பழைய வைத்யநூலிலும் ப₄ட்டபா₃ணன் இயற்றிய காத₃ம்ப₃ரீ எனும் ஸுப்ரஸித்₃த₄க₃த்₃யகாவியத்திலும் இந்த ஸஹஸ்ரநாமம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பெருமைகள் வேறு எந்த ஸஹஸ்ரநாமத்திற்கும் கிடையாது. மஹாபா₄ரதத்தில் உபமந்யூபாக்₂யானம் எனும் பகுதி சைவர்களால் செருகப்பட்டது. அதில் சிவஸஹஸ்ரநாமமும் சேர்க்கப்பட்டது. மற்ற தெய்வங்களுக்குப் பிற்காலத்தில் பலரால் ஸஹஸ்ரநாமங்கள் புனையப்பட்டன. ஆனால், இன்றளவும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்திற்குப்போல் அவற்றுக்கு பா₄ஷ்யங்களோ, புகழோ, பிரசாரமோ ஏற்படவில்லை.

http://acharya.org

N. S. பத்மநாபன், சென்னை-43

21. 31—5-90 குமுதம் இதழில் அரசு பதிலில் "கையார் சக்கரத்து" எனும் திருவாய்மொழிப் பாட்டுக்குப் பொருள் எழுதப்புகுந்து, "ஐயோ கண்ணபிரான் அறையோ இனிப் போனாலே" என்னும் பகுதியில் "'ஐயோ' என்று வருத்தப் படுகையாலே, 'ஆழ்வார் எம்பெருமானை நோக்கி அறை கூவு கிறார்' என்று உரையாசிரியர்கள் பொருளுரைத்திருப்பது சரியல்ல" என்றும், "ஆணையிட்டு வேண்டிக்கொள்கிறார் என்றே கொள்ளவேண்டும்" என்றும் எழுதப்பட்டுள்ளது. இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

குமுதம் ஆசிரியருக்கு இது விஷயமாகப் பின்வரும் கடிதம் நம்மால் அனுப்பப்பட்டது.

கடிதம்

31—5—90 குமுதத்தில் திருவாய்மொழி (5-1-1) பாட்டிற்கு அரசு பதிலில் கொடுத்திருக்கும் விளக்கம் சரியல்ல. 'அறையோ' எனும் சொல் 'ஆணை' என்னும் பொருளில் இலக்கியங்களில் வழங்கப்படுவதில்லை. மேலும் 'காப்பார் ஆர்' என்று 'உன் அருளை யாரால் தடுக்க முடியும்?' என்று கேட்கும் ஆழ்வார் 'உன்னால் தான் தடுக்க முடியுமோ?' என்று தோள் தட்டி அறைகூவுவதே பொருந்தும். பலவீனத்துடன் ஆணையிடுவது பொருந்தாது. அதனாலேயே திருவாய்மொழி உரைகாரர்கள் அனைவரும் அச்சொல்லில் ஆழ்வார் வெற்றிமுழக்கம் செய்வதாகவே பொருள் கொண்டார்கள். 'ஐயோ' என்னும் சொல் ஆனந்தமிகுதியையும் காட்டும். திருப்பாணாழ்வார் அமலனாதி பிரானில் அரங்கன் திருமேனியைக் கண்டு இன்புறும்போது

"ஆலமாமரத்தினிலை மேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே"

என்று பாடியிருக்குமிடத்திலும், கம்பன் அயோத்தியா காண்டம் கங்கைப் படலம் முதற் பாட்டில், ஸ்ரீ ராமபிரான்

சீதாபிராட்டியோடும் இளைய பெருமாளோடும் நடந்து செல்லும் அழகைப் பேரானந்தத்துடன் வர்ணிக்கும்போது

"வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை முகிலோ!
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்"

என்று பாடியிருக்குமிடத்திலும் 'ஐயோ' என்னும் சொல் பேரானந்தத்தையே காட்டுவது போலே, இத்திருவாய்மொழிப் பாசுரத்திலும் அச்சொல் பேரானந்தத்தையே காட்டுகிறது. இக்காலத்திலும் சங்கீத வித்வான்கள் அருமையாய்ப் பாடும் போது சங்கீத ரசிகர்கள் "ஐயோ ஐயோ" என்று தலையசைத்து ஆனந்தப் படுவதைக் காணலாம்.

20—7—90 வரையில் குமுதத்தில் இக்கடிதம் வெளியிடப் படவில்லை.

V. ஸ்ரீதரன், மதுரை. (22 முதல் 25 கேள்விகள்)

22. ரிஷிகள் என்றாலே விபூதி (நீறு) அணிந்தவர்கள் என்கிற தவறான கருத்து இப்போது நிலவுகிறது. சமீபத்தில் T. V. மகாபாரதத் தொடரில் வியாச பகவானைத் திரிபுண்ட்ரம் தரித்தவராகக் காட்டினார்கள். ஊர்த்வ புண்ட்ரம் தரித்த முக்யமான ரிஷிகளின் திருநாமங்களைக் கொடுக்க முடியுமா?

விஷ்ணுவின் அம்சாவதாரமும், விஷ்ணு பரத்வம் செய்தவர்களில் தலையானவருமான வியாஸரைத் திரிபுண்ட்₃ரம் த₄ரித்தவராகக் காட்டியது பெரிய மோசடி. பெரும்பான்மையினரான சைவர்களை த்ருப்தி செய்வதற்காக அப்படிக் காட்டினார்கள் போலும்! வைஷ்ணவர்களாகப் பிரசித்தி பெற்ற வால்மீகி, வியாஸர், மனு, ஹாரீதர், பிருகு, நாரதர், பராசரர், வஸிஷ்டர், ஶுகர், ஶௌனகர் முதலானோர் ஊர்த்₄வ புண்ட்₃ரமே த₄ரித்திருக்க வேண்டும். திரிபுண்ட்₃ரம் த₄ரித்திருக்க இடமில்லை. நமது விஷ்ணு சித்த விஜயத்தில் ஸ்ம்ருதி ப₄ாக₃த்தில் முமுக்ஷுக்கள் திரிபுண்ட்₃ரம் தரிக்கலாகாது, ஊர்த்₄வபுண்ட்₃ரமே த₄ரிக்க வேண்டுமென்று விதிக்கும் ஸ்ம்ருதி வசனங்களைக் காட்டியிருக்கிறோம்.

http://acharya.org

23. ஸ்ரீராமாவதாரத்தில் சக்ரவர்த்தித் திருமகனும், கிருஷ்ணாவதாரத்தில் நம்பி மூத்த பிரான் ஸ்ரீபலராமனும் மது மாம்ஸத்தை உபயோகித்ததாகத் தெரிகிறது. எனவே அவை அவர்களுக்கு ப்ரியமானவை எனவும் தெரிகிறது. அவ்வாறிருக்கையில் நம் ஆசார்யர்கள் இந்த த்₃வய வஸ்துவைத் திருவாராதனத்துக்கு அநர்ஹம் என ஒதுக்குவது ஏன்?

ஸ்ரீராமனும் ப₃லராமனும் க்ஷத்ரியர்களாகையாலே அவர்களுக்கு மது மாம்ஸங்கள் சாஸ்திரத்தில் விதி₄க்கப்பட்டிருக்கையால் அவர்கள் அதைக் கைக்கொண்டார்கள். பரமைகாந்திகளுக்கு வைஷ்ணவத₄ர்ம ஶாஸ்த்ரங்களில் அவை விலக்கப்பட்டிருக்கின்றன. "யத₃ந்ந: புருஷோப₄வதி தத₃ந்நாஸ்தஸ்ய தே₃வதா: [ரா-அ 102-30] [மனிதன் எந்த உணவினை உட்கொள்கிறானோ, அவ்வுணவையே அவன் தன் தெய்வங்களுக்குப் படைக்கவேண்டும்] என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லியபடி, பரமைகாந்திகளால் ஆராதி₄க்கப்படும் அர்ச்சாவதாரத்தில் ஶாஸ்த்ரம் அவர்களுக்கு விலக்கப்பட்ட மது₄ மாம்ஸங்களை எம்பெருமானுக்கும் விலக்கிற்று.

24. கண்ணனையடைவதற்கு கோ₃பிகைகள் காத்யாயநீ விரதத்தையும், ஆண்டாள் காம ஸமாஶ்ரயணத்தையும் செய்ததாகத் தெரிகிறது. இதிலிருந்து கண்ணனையடைவதற்கு தே₃வி வழிபாடு சிறந்தது என்று ராமகிருஷ்ண தபோவன வெளியீடான ஸ்ரீமத் ப₄ாக₃வத ஸாரத்தில் திரு. அண்ணா ஸுப்₃ரஹ்மண்யம் கூறுகிறார். இதற்குத் தங்கள் ஸமாதா₄நம் என்ன?

கோபிகளும் ஆண்டாளும் கண்ணனையல்லாது வேறு தெய்வமறியாதவர்கள் என்பது பிரசித்தம். கண்ணனை அடையமுடியாமல் தவிக்கும்போது அறிவு கலங்கி, அவனை எந்தவழியிலாவது அடைந்துவிடவேண்டும் என்று உறுதி கொண்டு, தே₃வதாந்தர ஸமாஶ்ரயணம், மடலெடுத்தல், நோன்பு நோற்றல் போன்ற வழியில்லா வழிகளிலே இவர்கள் இறங்குகிறார்கள் என்று கொண்டால்தான் அவர்களின் பரம

http://acharya.org

க்ருஷ்ண ப்ரேம நிலையோடு முரண்படாதிருக்கும். "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்" (திருக்குறள் 55) என்று திருவள்ளுவரும் கற்புடைய மகளிர் தம் கணவனைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழமாட்டார்கள் என்று காட்டினார். அதனாலேயே நம்பூர்வாசார்யர்கள் ஆண்டாள் ஆழ்வார் முதலானவர்கள் மற்ற தெய்வங்களைப் பற்றியது எம்பெருமானை அடையவேண்டும் என்னும் த்வரையாலே (வேகத்தாலே) அறிவு கலங்கிச் செய்ததே என்று நிர்ணயித்தார்கள்.

25. மூவுலகிலும் திரிந்து பிச்சை எடுத்த உமாபதியை வணங்குபவர்கள் பெரும்பாலும் செல்வம் மிக்கவர்களாகவும், லக்ஷ்மீநாதனான ரமாபதியைத் தொழுமவர்கள் அவ்வாறில்லாமலுமிருக்கிறார்களே. ஏன்?

வீதியில் பிச்சை எடுப்பவர்களில் பெரும்பான்மையினர் சைவர்களாக இருப்பதையும், வைஷ்ணவர்களிலும் பலர் செல்வம் மிக்கவர்களாக இருப்பதையும் காணலாம். நம் நாட்டில் சைவர்கள் அதிகமாக இருப்பதாலே அவர்களில் செல்வம் மிக்கவர்களும் அதிகமாகக் காணப்படுகிறார்கள். இக்கேள்விக்கு ஸ்ரீமத்பாகவதத்தில் வேறொரு விதமாகவும் ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஸாத்விக விஜயத்தில் நம்மாலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 'சிவன் தன்னைக்குறித்துத் தவம்புரிபவர்களிடம் விரைவில் மனமிரங்கி, அதனால் நன்மை விளையுமா விளையாதா என்பதை ஆராயாமல் அவர்கள் வேண்டியதைக் கொடுத்து விடுகிறான். ஸர்வாந்தர்யாமியான எம்பெருமான் நன்மை விளைவதாக இருந்தால்தான் வரத்தைக்கொடுப்பான்'' என்று பதில் கூறி, அதற்கு உதாஹரணமாக பாகவதத்தில் பஸ்மாஸுர வ்ருத்தாந்தம் எடுக்கப்பட்டுள்ளது. இதிஹாஸ புராணங்களில் ராவணன், ஹிரண்யன் முதலான அசுரர்களுக்கும், அரக்கர்களுக்கும், பிரமனும் சிவனுமே வரங்கொடுக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதும் இதையே வலியுறுத்துகிறது. அசுரர்களில் ப்ரஹ்லாதனும் அரக்கர்களில் விபீஷணனும் விஷ்ணுபக்தர்களாகையாலே அசுரத்தன்மையும், அரக்கத்தன்மையும் இல்லாமல் செல்வத்தில் பற்றற்றவர்களாய் வாழ்ந்தனர். எம்பெருமானுடைய உகப்பைத் தவிர மற்றவற்றைப் புல்லென மதிக்கும் வைஷ்ணவர்கள் இருக்கவேண்டிய நிலை இதுவேயாகும்.

http://acharya.org

S. வேங்கடம்—சமயபுரம்.

26. *சினிமா நடிகர் பாக்யராஜ் நடத்தும் "பாக்யா" பத்திரிகையில் 10—8—90 இதழில் கேள்வி பதில் பகுதியில் நமது இதிஹாஸ புராணங்களிலுள்ள இரு வரலாறுகள் திரித்துக் கூறப்பட்டுள்ளன. (1) சிவன் பிரமனின் தலையைக்கிள்ளி, பிரமனின் சாபம் பெற்று உலகெங்கும் பிச்சை எடுத்தபோது, ஆதிபராசக்தியே அவனுக்கு அன்னபூரணியாக வந்து பிச்சையிட்டு மண்டையோட்டை நிறையச்செய்து சாபத்தைப் போக்கினாள் என்று எழுதப்பட்டுள்ளது (2) ராவணனை ராமன் அழித்தபின்பு சீதை அசோகவனத்திலிருந்த ஓர் அம்மிக்கல்லை (அதில் எதை அரைத்தாலும் அதன் மணத்தை இரட்டிப்பாக்குமாகையாலே) எடுத்துப்போக ஆசைப்பட்டு அதை எடுத்துச் செல்ல அனுமனுக்கு உத்தரவிட்டாள் என்று எழுதப்பட்டுள்ளது. இக்கதைகளுக்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?*

சினிமா நடிகரின் கற்பனையைத்தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது. உண்மையான ஆதாரங்களுக்கு இக்கதைகள் முரண்பட்டவையுமாகும். புராணங்களில் சிவனுக்குப் பிச்சையிட்டுச் சாபத்தை நீக்கினவன் திருமாலே என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கபால நன்மோக்கத்துக்கண்டு கொண்மின்' என்று நம்மாழ்வாரும், "பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ணும் உண்டியான் சாபம் தீர்த்த ஒருவனூர் உலகமேத்தும் கண்டியூர்" என்று திருமங்கையாழ்வாரும், "கண்ட கடலும் மலையும் உலகேழும் முண்டத்துக்காற்றா முகில்வண்ணா! ஓவென்று இரந்தானைச் சடைமுடி ஈசன் இரக்கொள்ள மண்டை நிறைத்தானே அச்சோ அச்சோ" என்று பெரியாழ்வாரும், 'துண்டவெண்பிறையன் துயர் தீர்த்தவன்" என்று திருப்பாணாழ்வாரும், "மேல் நான்முகன் அரனையிட்ட விடுசாபம் தான்காரணன்ஒழித்தான் தாரகையுள்" "வேறிசைந்த செக்கர்மேனி நீறணிந்தபுன்சடை, கீறு திங்கள் வைத்தவன் கைவைத்தவன் கபால்மிசை, ஊறு செங்குருதியால் நிறைத்த" "சலங்கலந்த செஞ்சடைக் கறுத்த கண்டன் வெண்தலை, புலன்கலங்க உண்ட பாதகத்தன் வன்துயர்கெட, அலங்கல் மார்வில் வாச நீர் கொடுத்தவன்" என்று திருமழிசையாழ்வாரும் இச்செய்தியைப் பாடியுள்ளனர். சைவர்களும் இச்செய்தியை இப்படியே ஏற்றுக்கொண்டு ஹரசாப விமோசனப் பெருமாள் கோயில்

http://acharya.org

கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கண்டியூரில் 'ப்₃ரஹ்ம சிரக் கண்டீச்வரர்' ஆலயத்தைக்கட்டி வழிபடுகிருர்கள். பூர்ண வல்லித் தாயாரோடு புருஷோத்தமன் எழுந்தருளியிருக்கும் உத்தமர் கோவிலில் 'பிக்ஷாண்டார்' என்று சிவனுக்குக் கோயிலமைத்து வழிபடுகிருர்கள். சென்னையிலுள்ள மயிலைக் கபாலி கோயிலிலும் இக்கதையே வழங்குகிறது. அன்ன பூரணி சிவனுக்குப் பிச்சையிட்டு மண்டை ஓட்டைப் போக்கினுள் என்று எந்தக் கோயிலிலும் இல்லை. நாயன்மார்கள் பாடலிலும் இல்லை. பிரசித்தமான புராணங்களிலும் இல்லை. இனி, இரண்டாவது கதைக்கு வருவோம். எந்த ராமாயணத்திலும் இந்த அபத்தக்கதை இல்லை. ராவணனுடைய செல்வத்தையெல்லாம் துரும்பாக நினைத்த சீதை ஓர் அம்மிக்கல்லுக்கு ஆசைப்பட்டாள் என்று எழுதுவது பெருத்த மோசடியாகும். சினிமாநடிகர்களும் அரசியல்வாதிகளும் பத்திரிகைகளில் மனம்போனபடி எழுதி இதிஹாஸபுராணங்களைப் படுகொலை செய்து வருவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

கபிஸ்தலம் தி. அ. கி. ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீரங்கம்.

27. பொள்ளாச்சி தொழிலதிபர் Dr. திரு. நா. மகாலிங்கம் அவர்கள் இராமலிங்கர் பணிமன்றத்தின் ஆதரவில் திருச்சி தில்லைநகர் மக்கள் மன்றத்தில் நடத்திய இசைக் கலை விழாவில் முதல் நாள் "ராமாநுஜர் விழா"வாக நடந்த போது 1—8—90 அன்று மாலை தேவரீர் பேருரை ஆற்றியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அதில் தேவரீர் கலந்துகொண்ட காரணத்தையும் பேருரையின் சாரத்தையும் வெளியிட வேண்டுகிறேன்.

சென்ற இரண்டு வருடங்களாகத் திருச்சியில் தேவாரம் பாடிய மூவர்க்கே இசைக்கலைவிழா நடத்திவந்த Dr. நா. மகாலிங்கம் இம்முறை இராமானுஜருக்கும் முதல்நாள் விழாக் கொண்டாட நினைத்து, அவரது பத்திரிகையான "ஓம்சக்தி"யின் ஆசிரியர் திரு பகீரதன் அவர்களையும். திருச்சி விசுவ ஹிந்துபரிஷத்தின் தலைவர் திரு கோபாலரத்தினம் முதலான சில நண்பர்களையும் நம்மிடம் அனுப்பி 'முதல்நாள் விழாவில் பங்குகொள்ளவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். "ஓம் சக்தி"யில் வெளிவந்த பலகட்டுரைகளை நான் ஸுதர்சனர் பதில்களில் கண்டித்திருப்பது தெரியுமா? என்று அவர்களைக் கேட்டேன். "தெரியும்" என்ருர்கள். "இப்படி நான் கண்டிப்பதற்கு இடம் கொடுக்கும் விஷயங்களை இனியாவது வெளியிடாமல் இருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

http://acharya.org

அதற்கு அவர்களும் இசைந்தார்கள். திரு. கோபால ரத்தினம் அவர்கள் "பிறமதங்களிடம் சகிப்புத்தன்மையுடன் அவரவர்கள் அவரவர் மதங்களில் உறுதியாக இருக்கவேண்டும்" என்னும் நற்கொள்கையைப் பரிபூர்ணமாக ஏற்றுக்கொண்டார். இந்த அடிப்படையில் சைவ வைஷ்ணவர்களிடையே சகிப்புத் தன்மையை வளர்ப்பதற்காக நடைபெற்ற இவ்விழாவில் நாம் பங்குகொண்டோம். முதல்நாள் விழாவில் காலை நிகழ்ச்சியில் தலைமை வகித்த ஸ்ரீரங்கம் திருமலை அய்யங்கார் ஸ்வாமியும், திண்டுக்கல் தோப்புஸ்வாமி குமாரர் விளாஞ்சோலைப் பிள்ளையும் ஸ்ரீராமானுஜர் செய்த சமுதாயத் தொண்டுகளைப் பேசினார்கள். மாலை நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த நாம் 'சங்ககாலத் தமிழர் பரம்பரையிலே வந்த ஆழ்வார்கள் பரம்பரையிலே வந்த ஸ்ரீராமானுஜர் எல்லா ஸ்ருதிகளுக்கும் பொருந்தும்படியான சங்ககாலத்தமிழர்கண்ட வேத சமயமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை நிலைநாட்டினார்' என்றும், 'அந்தப்பரம்பரையில் வந்த ஆழ்வார்களோடு தொடர்பு இல்லாமையாலே சங்கரர் எல்லா ஸ்ருதிகளுக்கும் பொருந்தும் இந்த மதத்தைக் காணத்தவறி, "உலகம்பொய், ஜீவனே பரம்பொருள்" என்னும் அத்வைத மதத்தைப் பரப்பினார்' என்றும் பல வேதவாக்யங்களையும், சங்கநூல்களிலிருந்து பலமேற்கோள்களையும் காட்டி உரையாற்றினோம். மாலை நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு (கம்பராமன்) S. K. ராமராஜன், தமிழாசிரியர் திருவேங்கடாச்சாரி, E. R. High School தலைமையாசிரியர் திரு T. M ஸ்ரீநிவாஸன் ஆகியவர்களும், விழாவை நடத்திய Dr. நா. மகாலிங்கம் அவர்களும் விழாவில் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான அறிஞர்களும்பெருமக்களும் விழாநிகழ்ச்சிகளை கவனமாகக்கேட்டுப் பாராட்டினர்.

அப்பன் தேவராஜ ராமானுஜதாஸர், செயலர், தமிழ்நாடு எம்பெருமானார் தர்சன சபை, வரதைக்கெரம்பு, பொள்ளாச்சி.

28. P. கோமதிநாயகம், M. A. அவர்கள் தம் "தென்னிந்திய வரலாறு" என்னும் நூலில் பக்தி இயக்கத்தைப்பற்றி எழுதும்போது ஆழ்வார்களைப் பலவாறு தாழ்த்திப் பேசியிருக்கிறார். அந்நூலில் 91 வது பக்கத்தை நகல் எடுத்து அனுப்பியிருக்கிறேன். விமர்சிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் அவர்கள் பிறந்தஜாதியைக்காட்டிப்பலவாறு தாழ்த்திப்பேசியிருக்கிறார் இவர். 'நின்பால் பொறுப்பரியனகள் பேசில் கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பதே கருமங்கண்டாய்" என்னும் பாசுரத்தில்'கூடுமேல்'

http://acharya.org

என்று எழுதியிருப்பதைக் கவனிக்காமல் "சமண புத்த மதங்களைச் சேர்ந்தவர்களின் தலைகளை வெட்டி எறிவதே தனது தலையாய பணி" எனத் தொண்டரடிப்பொடியாழ்வார் குறிப்பிடுகிறார் என்று திரித்துக் கூறுகிறார் இவர். 'திருமங்கையாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆண்டாள்" என்று எழுதியிருப்பதிலிருந்து இவருடைய வரலாற்று அறிவு மிகவும் மோசமானது என்று விளங்குகிறது. நம் நாட்டில் வரலாற்று ஆசிரியர்கள் நடுநிலைமையோடு செயல்படுவதில்லை என்பதையே இந்நூல் காட்டுகிறது.

S. முரளி, அந்தணல்லூர்.

29. சென்னைத் தொலைக்காட்சியில் (முதல் அலைவரிசையில்) ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் இரவு 7 மணிக்கு 'காவேரியின் கதை' ஒளிபரப்பப்படுகிறது. அதில் 7-8-90 அன்று காட்டப்பட்ட ஸ்ரீராமானுஜரின் வரலாற்றுப் பகுதியில், சோழராஜாவின் மகளைப் பிடித்திருந்த ப்ரஹ்மராக்ஷஸனை ஸ்ரீராமானுஜர் ஓட்டியபோது, ஸ்ரீராமானுஜர் சைவனை ப்₃ரஹ்மராக்ஷஸனை வைஷ்ணவத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்டதாகவும், ப்₃ரஹ்மராக்ஷஸன் ஸ்ரீராமானுஜரை சைவத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்டதாகவும், தமது பதில்களில் ப்₃ரஹ்மராக்ஷஸன் வைணவத்தின் பெருமையையும், ஸ்ரீராமானுஜர் சைவத்தின் பெருமையையும் கூறினார்கள் என்றும் காட்டப்பட்டது. இதற்கு வரலாற்று நூல்களில் ஏதேனும் ஆதாரமுண்டா?

கு₃ருபரம்பராப்ரபா₄வம், ப்ரபந்நாம்ருதம், ராமானுஜார்ய தி₃வ்யசரிதை முதலான ராமானுஜசரித்திரத்தைக் கூறும் எந்த நூலிலும், மற்றும் ஸ்ரீராமானுஜருடைய வரலாற்றுப் பகுதிகளைக் கூறும் தி₃வ்யப்ரப₃ந்த₄வ்யாக்₂யான ரஹஸ்ய நூல்களிலும் இதற்கு எந்த ஆத₄ாரமுமில்லை. சைவமதம் ப்ரமாணங்களுக்கு முரண்பட்டது என்றே ஸ்ரீராமானுஜர் தமது ஸ்ரீபா₄ஷ்யம், வேதா₃ர்த்த₂ஸங்க்₃ரஹம் முதலான கிரந்தங்களில் நிலைநாட்டியுள்ளார். அப்படியிருக்கும்போது, சைவ வைஷ்ணவர்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதாக நினைத்துக்கொண்டு இத்தகைய பொய்க்காட்சிகளை அரசின் ஆதரவுபெற்ற தொலைக்காட்சி ஒளிபரப்புவது மிகவும் அருவருக்கத்தக்கதும், கண்டிக்கத்தக்கதுமாகும். ஏராளமான அன்பர்கள் இதைக்கண்டித்துச் சென்னைத் தொலைக்காட்சிக்குக் கடிதம் எழுதினால், இத்தகைய வரலாற்று மோசடிகளைத் தொலைக்காட்சி இனியாவது ஒளிபரப்பாதபடி தடுக்கலாம்.

http://acharya.org

வானமாமலை N. S. பத்மநாபன் C. A, சென்னை 43.

30. சென்னை தேனும்பேட்டையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பெங்களூர் ராமகிருஷ்ண ஆச்ர மத்தார் வெளியிட்ட "SRIVAISHNAVISM THROUGH THE AGES" என்னும் ஆங்கிலநூல் ஒன்றை வாங்கினேன். அதை அனுப்பியிருக்கிறேன், அது நல்லநோக்கத்துடன் வெளியிடப்பட்டிருந்த போதிலும், உண்மைக்குப் புறம் பான பல செய்திகள் அதில் உள்ளன. அதை வாங்கி யிருப்பவர்களுக்குத் தவறான கருத்துக்கள் ஏற்படா மலிருக்க அதிலுள்ள முக்கியமான தவறுகளை எடுத்துக் காட்ட வேண்டுகிறேன்.

இதிலுள்ள முக்கியமான தவறுகள் பின்வருமாறு:- (1) பக்கம் 10ல் நாதமுனிகள் ஸ்ரீரங்கம் கோயிலை நிர் வஹித்ததாகக் கூறியிருப்பது சரியல்ல. (2) பக்கம் 16ல் ஸ்ரீ ராமானுஜர் பரமபதம் அடைந்தவுடன் வைஷ்ணவம் இரண்டு ஸம்ப்ரதாயங்களாகப் பிரிந்தது என்று எழுதியி ருப்பதும் சரியல்ல; ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமக்கு முன்னி ருந்த பல ஆசாரியர்களுடைய ரஹஸ்யநூற் கருத்துக்களோடு தமக்குள்ள கருத்துவேற்றுமைகளைத் தம் நூல்களில் தெரி வித்தார். அவர்காலத்திலிருந்து அவரைவிட மூத்தவர்களான பிள்ளைலோகாசாரியர், அழகியமணவாளப்பெருமாள் நாயனார், நாயனாராச்சான் பிள்ளை ஆகிய ஆசாரியர்களும், அவருக்குப் பின் அவதரித்த மணவாள மாமுனிகளும் அந்த ஆசார்யர் களுடைய கருத்துக்களே சரியானவை என்று தம் நூல்களில் நிர்ணயித்தனர். இப்படிக் கருத்து வேற்றுமைகளைத் தம் நூல்களில் தெரிவிப்பதிலேயே இவ்வேற்றுமைகள் காணப் படுகின்றனவேயொழிய, மாமுனிகள் காலத்திற்கு 2 அல்லது 3 நூற்றாண்டுகளுக்குப் பின்வரையில் இப்போது காண்பது போல் தென்கலை வடகலை என்னும் பிரிவுகள் இருந்ததாகத் தெரியவில்லை. 17வது நூற்றாண்டிலிருந்தே திருமண்காப்பை அடிப்படையாகக் கொண்ட தென்கலை, வடகலை என்ற

http://acharya.org

பிரிவுகள் உருவானதாகத் தெரிகிறது. (3) பக்கம் 24ல் பிள்ளைலோகாசாரியர் 16 க்ரந்தங்கள் இயற்றியதாகவும், "நிகமனப்படி" அவற்றில் ஒன்று என்றும் எழுதியிருப்பது சரியல்ல, அஷ்டாதஶ ரஹஸ்யங்கள் என்னும் பதினெட்டு ரஹஸ்ய நூல்கள் அவருடையவையாக ப்ரஸித்தி பெற்றுள்ளன; அச்சிடப்பட்டும் உள்ளன. இவைதவிர அவர் தனிஶ்லோகம் முதலான வேறு சில நூல்களும் அருளியதாக மாமுனிகள் தம் வ்யாக்யானங்களில் அருளியிருக்கிறார். "அவருடைய ரஹஸ்ய நூல்கள் பெரும்பாலானவை சிறியவை" என்று எழுதியிருப்பது சரியல்ல. அவற்றில் சிறியவையும் உண்டு; பெரியவையும் உண்டு; "நிகமனப்படி" அவருடையதல்ல. பெரியவாச்சான்பிள்ளை அருளியது. (4) பக்கம் 25-ல் "மணவாளமாமுனிகள் 'திருவாய்மொழி ஈடு ஸ்ரீ பாஷ்யத்திற்கு சமானமானது' என்று அறிவித்தார்" என்று எழுதுவதன் மூலம் அவர் ஸ்ரீபாஷ்யத்தை ஒதுக்கினார் என்று தொனிக்கும்படி எழுதியிருப்பது மிகத் தவறு. அவர் தம் வ்யாக்யானங்களில் ஸ்ரீபாஷ்யத்தை மிகுந்த ஆர்வத்துடன் பலவிடங்களில் மேற்கோளாகக் காட்டியிருப்பதைக் காணலாம். (5) பக்கம் 28 முதல் ஸ்ரீவைஷ்ணவ மடங்களைப் பற்றி எழுதியிருப்பதில் 'அஹோபிலமடம்' 'பரகால மடம்' '19 வது நூற்றாண்டில் தோன்றிய ஆண்டவன் ஆசிரமம்' என்று வடகலை மடங்களை ஒன்று விடாமல் எழுதியவர் தென்கலைமடங்களில் 'யதிகிரிமடம்' 'வானமாமலைமடம்' தவிர வேறு எந்தமடத்தைப் பற்றியும் எழுதவில்லை. ராமானுஜர் காலத்தை ஒட்டித் தோன்றிய ஸ்ரீரங்கநாராயண ஜீயர்மடம், திருப்பதி ஜீயர் மடங்கள், திருக்குறுங்குடி மடம், பிற்காலத்தில் தோன்றிய ஸ்ரீபெரும்பூதூர் யதிராஜ ஜீயர் மடம். எம்பார் ஜீயர்மடம், ஆழ்வார் திருநகரி எம்பெருமானார் ஜீயர் மடம் ஆகியவற்றை இந்நூலை எழுதிய ஹர்ஷானந்தர் அறியவில்லை என்று விளங்குகிறது. (6) பக்கம் 31 ல் நாங்குநேரியை 'நாங்குண்டேரி' என்று எழுதியிருப்பதும் இவரது அறியாமையைத் தெளிவுபடுத்துகிறது. வானமாமலை மடத்திற்கு வடநாட்டில் பல கிளை மடங்களும், பல்லாயிரக்

http://acharya.org

கணக்கான சிஷ்யர்களும் இருப்பதை ஏனோ இவர் அறியவில்லை. (7) பக்கம் 42 ல் அசித் அல்லது ப்ரக்ருதியை விளக்குவதாக ஆரம்பித்து, அது சுத்தஸத்வம் மிஶ்ரஸத்வம் என்று இருவகைப்பட்டதாக எழுதியிருப்பது தவறு. "அசித் என்பது மூன்று வகைப்படும் – 1. ஶுத்₃த₄ஸத்வம் 2. மிஶ்ர ஸத்வம் ஆகிற ப்ரக்ருதி 3. ஸத்வஶூன்யமாகிற காலம்" என்று எழுதியிருக்க வேண்டும். (8) பக்கம் 44 ல் ஹிதத்தை விளக்குவதாகத் தொடங்கி, அது ஐந்துவகைப்பட்டது என்று கூறி, அர்த்தபஞ்சகத்தை விளக்கியிருப்பது அறியாமையால் ஏற்பட்டது. அர்த்தபஞ்சகத்தில் ஒன்றான உபாயஸ்வரூபம் ஒன்றே ஹிதம் எனத்தக்கது. தக்கவர்களின் துணை கொண்டு இந்நூலை எழுதியிருந்தால் இத்தவறுகளைத் தவிர்த்திருக்கலாம்.

ராஜகோபால ராமாநுஜ தாஸர், காட்டேரி.

31. புரட்டாசிமாத "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்" பத்திரிகையில் கேள்வி—பதில் பகுதியில் "தெய்வத்திருமணங்கள் ஏன்" என்னும் கேள்விக்குப்பதிலாக "இந்தத்திருமணங்கள் நமக்கு எடுத்துக்காட்டுவது ஜீவ பிரம்ம ஐக்கியமே. பார்வதி கல்யாணம், சீதாகல்யாணம் முதலானவை இதைத்தான் வலியுறுத்துகின்றன: இறைவன் சிவபிரானும் சக்தியான பார்வதியும் வேறில்லை. சிவசக்தி நாணயத்தின் இருபக்கம் போன்றவர்கள். இறைவனின் அருளாற்றலே சக்தியாகவும் நாராயணனாகவும் வடிவெடுக்கின்றனர். அந்த நாராயணனே சிவபிரானுக்குப் பத்தினியாகவும் லட்சுமிக்குப் பதியாகவும் அமைந்திருக்கிறார் என்று பெரியோர்கள் சொல்வதை நினைவில் கொள்ளவேண்டும்" என்று எழுதியிருப்பதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

"ஜீவ ப்ரஹ்ம ஐக்யம்" என்று எழுதிவிட்டு, 'சிவசக்தி ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்' என்று எழுதுவது முன்னுக்குப் பின் முரணாய் உள்ளது. நாணயத்தின் இரு பக்கங்களும் ஒரு நாணயத்தின் உண்மையான இருஅவயவங்களாக ஆகமுடியுமே தவிர எப்படி ஒன்றாக முடியும்? இவர்களின் கருத்துப்படி ஐக்யம் என்றால் "இரண்டு வஸ்துக்கள் இல்லை. ஒன்றே உள்ளது"

http://acharya.org

என்றல்லவோ பொருள்படும். "இறைவனின் அருளாற்றலே சக்தியாகவும், நாராயணனாகவும் வடிவெடுக்கின்றனர்" என்று எழுதுவதிலிருந்து இறைவன்வேறு, சக்திவேறு, நாராயணன் வேறு என்றல்லவோ பொருள்படுகிறது. புருஷோத்தமனை நாராயணனை லக்ஷ்மீபதிஎன்று ஒப்புக்கொண்டபின் சிவனுக்குப் பத்னியாக எழுதுவது சிரிக்கத்தக்கதாகவில்லையா? புருஷ ஸூக்தம் முதலான வேத₃ ப₄ாக₃ங்கள் அவனை லக்ஷ்மீபதியாக முழங்குவதைக் காண்கிறோம். அவனை சிவனுக்குப் பத்னியாக எந்தவேதவாக்கியத்திலாவது, எந்த ஸ்ம்ருதி இதிஹாஸவாக்யத்திலாவது, சங்க இலக்கியம் முதலான பழைய தமிழ் இலக்கியங்களிலாவது, காளிதாசன் முதலான பல வடமொழிக் கவிஞர்களின் காவியங்களிலாவது எழுதியிருப்பதை இவர்கள் காட்ட முடியுமா? மிகவும் பிற்பட்ட கற்பனைப்புராணமான தேவீபாகவதத்தை வைத்துக் கொண்டு முன்னுக்குப்பின் முரணாக மனம் போனபடி இப்படி எழுதுவது அறிவாளிகள் சிரிக்கத்தக்க செயலேயாகும்.

பிச்சுதோதாத்ரி அய்யங்கார், வானமாமலைமடம், நாங்குனேரி.

32. திருவாய்மொழி (10-6-1) "இருள்தருமாஞாலம்" எனும் தொடரின் ஈட்டில் "ப்ரஹ்லாதாழ்வானையும் எம்பெருமானை எதிரிடச்செய்தது ஸம்ஸாரம்" என்று உரையிடப் பட்டுள்ளது. இச்செய்தி எந்தப்புராணத்தில் உள்ளது?

காளிதாஸன் இயற்றிய ரகுவம்சத்தில் ஏழாவது ஸர்க்க₃ம், 35வது ஸ்லோகத்தில் உலகளந்த திரிவிக்கிரமனின் திருவடியை இந்த்₃ரஶத்ரு (ப்ரஹ்லாத₃ன்) தடுத்ததாக உள்ளது. அவ்விடத்திற்கு உரையிட்ட மல்லிநாதனால் "இந்த்₃ரஶத்ரு" என்றதற்கு 'ப்ரஹ்லாத₃ன்' என்று பொருள் எழுதப்பெற்று, "விரோசநவிரோதே₄Sபி ப்ரஹ்லாத₃: ப்ராக்தநம் ஸ்மரந் | விஷ்ணோஸ்து க்ரமமாணஸ்ய பாத₃ாம்போ₄ஜம் ருரோத₄ ஹ ||" என்னும் ப்₃ரஹ்மாண்ட₃ புராணவசனம் ப்ரமாணமாகக் காட்டப்பட்டுள்ளது. "ப்ரஹ்லாத₃ன் உலகளந்த திருவடியைத் தடுத்தான்" என்று இதில் தெளிவாக உள்ளது. அப்புராணத்தில் எவ்விடத்தில் இந்த ஸ்லோகம் உள்ளது என்பதை ஆராய ...டும். எவராவது தெரிவித்தால் வெளியிடுவோம்.

http://acharya.org

வேதப்பிரான்பட்டர் ஸ்ரீநிவாஸய்யங்காரர் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர். அலங்காரம் தேவராஜய்யங்காரர் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

33. 16—9—90 "தாய்" பத்திரிகையில் 'ஆண்டாள் திருக்கல்யாணம்' என்ற தலைப்பில் "லாங்ஷாட்" என்னும் புனைபெயருடைய ஒருபேர்வழி எழுதிய கட்டுரை வெளிவந்துள்ளது. அதில் அவர் ஆண்டாளைப்பற்றி மிகத் தரக்குறைவாக எழுதியுள்ளார். கருடாழ்வார் ஆண்டாளிடம் காமுற்றதாகவும், பெருமாளோடு போட்டியில் தோற்றதாகவும், கருடாழ்வாருக்கு ஆண்டாள் ஒரு நாள் மனைவியாயிருக்கப் பெருமாள் வரம் தந்ததாகவும் ஓர் ஆதாரமுமில்லாமல் எழுதப்பட்ட பொய்க்கதையையும் மற்றும் மனம் போனபடிஎழுதப்பட்ட பலபிதற்றல்களையும் தன்னுட்கொண்டு துர்நாற்றம் வீசுகிறது அக்கட்டுரை. அதன் நகலை அனுப்பியிருக்கிறோம். இந்த அக்ரமத்தை வைணவ உலகிற்கு எடுத்துக்காட்டி பதிலடிகொடுக்க வேண்டுகிறேன்.

இந்த நாட்டில் வைணவர்களைத் தவிர வேறு எந்த மதத்தவர்களையும் தாக்கி எதுவும் எழுதிவிட முடியாது என்று உணர்ந்த பல பொதுஜனப்பத்திரிகைகள் வைணவத்தையும், விஷ்ணுவையும், ஆழ்வார்களையும், ஆண்டாளையும் தாக்கி எழுதுவதையே தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே சில வருடங்களுக்கு முன் இந்தப் பத்திரிகை விஷ்ணுவைத் தரக்குறைவாகத் தாக்கி எழுதி, நம்மிடமிருந்து தக்க பதிலைப் பெற்று அடங்கிற்று. அப்போது ஆசிரியராயிருந்த வலம்புரி ஜானும் பத்திரிகையிலிருந்து விரட்டப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் (M P) பதவியையும் இழந்தார், ஆசிரியர் மாறியும் 'தாய்' பத்திரிகை "நாய்" பத்திரிகையாகவே செயல்படுவது வருந்தத் தக்கது. இவர் ஆண்டாளைப்பற்றி எழுதியிருப்பதுபோல் ஒரு கிருஸ்துவ மாதாவையோ, இஸ்லாமியப் பாத்திமாவையோ அல்லது மதுரை மீனாக்ஷியையோ எழுதியிருந்தால் இந்நேரம் அப்பத்திரிகைக் காரியாலயம் தரைமட்டமாயிருக்கும். இந்தப் பத்திரிகையைக் காமகோடி ஜயேந்திரர் விரும்பிப்படிப்பது போல் ஓர் இதழில் சிலவருடங்களுக்குமுன் அட்டைப்படம் வெளிவந்துள்ளது. இவ்விதழிலும் அவருடைய அருள்வாக்கு இக்கட்டுரைக்கு அடுத்த பக்கத்தில் வெளிவந்துள்ளது. இதிலிருந்து காமகோடி அபிமானிகளால் வைணவத்தைத் தரக்குறைவாகத் தாக்குவதற்கே இப்பத்திரிகை நடத்தப்படுகிறது

http://acharya.org

எனத் தெரிகிறது. இப்பத்திரிகைக்காரியாலயத்தின் முன்பு சென்னையிலுள்ள வைஷ்ணவர்கள் சிலராவது கூடி, இப்பத்திரிகையின் பிரதிகளை எரித்துத் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டால் இனியாவது இத்தகைய கட்டுரைகள் வெளிவராமல் இருக்கலாம்.

ராஜகோபால ராமாநுஜதாஸர், காட்டேரி.

34. 27-9-90 "தினமணி" இதழ் நாடோடியின் ஆன்மிகப் பகுதியில் ஸ்ரீ ராமபிரான் வனவாசம் போகும் போது, ஸ்ரீ கௌசலை தேவியார் தன் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டி முருகனில் தொடங்கி, "என் இஷ்ட தெய்வமான பரமசிவன் மகாவிஷ்ணுவான உன்னைக் காப்பாற்றட்டும்" என்று பரமசிவனில் முடித்ததிலிருந்து 'சிவ விஷ்ணு' அபேதத்தை வால்மீகி தம் ராமாயணத்தில் அழகாக விளக்கியதாக ராமதீக்ஷிதர் பேசியிருப்பதாக வெளியிட்டிருப்பதை விமர்சிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராமாயணம் அயோத்யா காண்டம் 25 வது ஸர்க்கத்தில் கோசலையின் மங்களாசாஸனம் வருகிறது. அதில் "என் இஷ்டதெய்வமான பரமசிவன் மஹாவிஷ்ணுவான உன்னைக் காப்பாற்றட்டும்" எனும் வார்த்தையே இல்லை. "மலைகள், மரங்கள், குளங்கள், பறவைகள், பாம்புகள், சிங்கங்கள் ஆகியவை உன்னைக்காப்பாற்றட்டும்" என்று தொடங்குகிறாள் கோசலை. நடுவில் பலதேவர்களை எடுத்து "அவர்கள் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கூறுகிறாள். அவர்களில் கந்தன் ஒருவன். இதிலிருந்து கோசலை ராமனை மஹாவிஷ்ணுவென்று புரிந்துகொண்டவளல்லள் என்று விளங்குகிறது. அவள் ராமன் மேலுள்ள பரிவாலே கலங்கி, எல்லா தேவர்களையும் மரங்கள் விலங்குகள் பறவைகளையுங்கூட அவனுக்கு ரக்ஷகர்களாக வேண்டுகிறாள் என்றே இதிலிருந்து தேறும்; ராமதீக்ஷிதர் சொல்லுவதுபோல் இதிலிருந்து சிவ விஷ்ணு அபேதம் தேறுவதாக இருந்தால் மரங்கள் பறவைகள் விலங்குகள் முதலானவற்றுக்கும் விஷ்ணுவோடு அபேதம் தேற வேண்டுமே. உண்மையில், ரக்ஷகர்களுக்கும், ரக்ஷிக்கப்படுகிறவனுக்கும் பேதம் தேறுமேயொழிய அபேதம் எப்படித் தேறும்? இவற்றையெல்லாம் ஆராயாமல் ஒருவர் பேசியதைச் சிறிதும் ஆராயாமல் வெளியிடுவது நம்நாட்டுப் பத்திரிகைகளிலேயே காணக்கூடிய அதிசயமாகும். பத்திரிகைகளின் மிகத் தாழ்ந்த தரத்தையே இத்தகைய கட்டுரைகள் காட்டுகின்றன.

http://acharya.org

S. முரளி, அந்தணல்லூர்.

35. செப்டம்பர் '90 சப்தகிரியில் 'வடகலையும் தென் கலையும்' என்னும் தலைப்பில் "திரு. நாராயணசுவாமி, திருவிடைமருதூர்" என்பவரால் ஒரு கட்டுரை எழுதப் பட்டுள்ளது. அதில் பல தவறுகள் உள்ளன. வாசகர் களுக்குத் தவறான கருத்துக்கள் பதிந்துவிடாதபடி அவற்றை விளக்க வேண்டுகிறேன்.

வைணவ சம்பந்தமான கட்டுரைகளை வைணவத்தில் தேர்ச்சியுள்ள அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து வெளி யிடவேண்டியது பத்திரிகை ஆசிரியரின் கடமை; ஆனால் சப்தகிரியின் ஆசிரியர்களுக்கு வைணவத்தைப்பற்றி நல்ல ஞானமில்லாமையால் யார் எதை எழுதினாலும் அப்பத்திரி கையில் வெளியிட்டுவிடுகிறார்கள். வாசகர்கள் அறிவதற் காக அத்தவறுகளை எடுத்துக்காட்டுகிறோம். (1) "25 வது தத்துவமாக இருப்பவன் விஷ்ணு ஆவார்" என்று எழுதி யிருப்பது தவறு. '25 வது தத்துவம் ஜீவன்; 26 வது தத்துவமே விஷ்ணு' என்பதே உண்மை. (2) புண்ட்ரம் என்னும் தலைப்பில் "நெற்றியிலும், நெஞ்சிலும்,......நாம மிட்டுக் கொள்ளவேண்டும்" என்று எழுதியிருப்பது தவறு. "நெற்றி முதலான 12 இடங்களிலும் இட்டுக்கொள்ள வேண்டும்" என்றிருக்கவேண்டும். (3) "நாமம்—இது வைணவ சமயத்தின் அடியாரென்பதனை மற்றவர்களுக்குக் காட்டும் திருநோக்கமாகும்" என்றது தவறு. கடைசிப் பதம் "திருப்பெயரைத் தரித்தல் ஆகும்" என்றிருக்க வேண்டும். (4) "யாகம்" என்பதை 'யோகம்' என்று எழுதியிருப்பது தவறு. (5) "வைகானச ஆகமத்தினைப் பின் பற்றுவோர் வடகலையினர் என்பார்கள். மேலும் இதனை மார்கடமார்க்கம் (குரங்கும் அதன் குட்டியும் போல) என்றும் கூறுவர்." என்று வடகலைக்கும் வைகானசத்திற்கும் முடிச்சுப்போட்டிருப்பது அபத்தம். "வேதாந்த தேசிகரை(ரே?) இவ்வாகமத்தினை விளக்கியவர் ஆவார்" என்றது அச்சுப் பிழையாகவும் அபத்தமாகவும் இருக்கிறது. (6) 'பாஞ்சராத் திரம்' என்னும் தலைப்பில் ஸ்ரீப்ரஶ்நஸம்ஹிதையை "பிர சன்ன சம்ஹிதை' என எழுதியிருப்பது தவறு. "இந்த ஆகமத்தினைப் பின்பற்றுவோர் தென்கலையினர் என்பார்கள் இதன் மார்க்கம் மார்ஜார மார்க்கம் (பூனையும் அதன் குட்டியும்) ஆகும்" என்று பாஞ்சாரத்ரத்திற்கும் தென்கலைக்கும் முடிச்சுப் போட்டிருப்பதும் அபத்தம். "பிள்ளைலோகாசாரியர் இவ்வாகமத்தினை மக்கள் மத்தியில் புகட்டியவர் ஆவர்'

http://acharya.org

என்பதும் அபத்தம். இந்த அபத்தங்களுக்கெல்லாம் தலையானதாயிருக்கிறது வடகலைக்கும் தென்கலைக்கும் காட்டியுள்ள பின்வரும் வேற்றுமைகள்:— (1) இருபிறப்பாளருக்கே உரியது வடகலை. வைணவர்க்கான ஐம்பெரும் கடன்களை அறிதலும் வாழ்க்கையில் கடைப்பிடித்தலும் தென்கலை (2) விஷ்ணுவை சூரியனோடு தொடர்புபடுத்தும் 'சௌரம்' வடகலை. அக்னியோடு தொடர்புபடுத்தும் 'அக்னேயம்' தென்கலை. (3) விஷ்ணுவே முதல்வன். சத்தியன் அச்சுதன், அநிருத்தன் அவன் வடிவங்கள் – இது வடகலை. வாசுதேவன் முதல்வன். சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் அவன் வடிவங்கள் — இது தென்கலை. (4) திருமாலின் திருக்கோயில்கள் இந்தியாவின் பல பகுதிகளில் பரவலாக அமைந்திருக்கின்றன— இது வடகலை. தென்கலை சம்ப்ரதாயத்திலுள்ள கோயில்கள் மலைகளிலும் ஏனைய இடங்களிலும் (தமிழ்நாட்டிலும்) அமைந்து விளங்குகின்றன — இது தென்கலை. (5) இம்மைப்பலனையும் மறுமை நலனையும் சிறப்பித்துக் கூறுகின்றது வடகலை. வீடுபேற்றினை மட்டும் (பரமபதம்) சிறப்பித்துக் கூறுகின்றது தென்கலை. (6) ஞானநெறி, பக்திநெறி போன்றே ப்ரபத்தியையும் ஒரு நெறியே என்பது வடகலை. குரங்குக்குட்டி தாவும் தாயைப் பிடித்துக்கொள்வதுபோல் திருமாலைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பது வடகலைக் கொள்கை. பூனை தனது குட்டியினைப் பேணிப் பாதுகாக்கத்தானே கவ்விக்கொண்டுபோவது போல் திருமால் ஒவ்வொரு ஆன்மாவையும் நல்வழிப்படுத்துகின்றான். எல்லாம் அவனது கருணைதான் என்று அவன் திருவடிகளை நினைந்து உருகும் நிலையே ப்ரபத்தி மார்க்கம் என்பது தென்கலை. (7) திருமாலானவர் உயிர்களை ஆட்கொள்ளும்போது அவைகளின் குற்றங்களைத் தான் ஏற்பதில்லை என்பது வடகலை. உயிர்களின் குற்றங்களைப் பொறுத்து அநுக்ரகிக்கிறான் என்பது தென்கலை. (8) திருமாலையும் திருமகளையும் போற்றுவது வடகலை. அரசு அணைசை என்ற நிலையில் திருமாலையும் திருமகளையும்போற்றுவது தென்கலை. (9) தாம் தனித்து நின்றும் உயிர்களை நன்னெறிப்படுத்துவதாக உலகத்தையும் உயிர்களையும் குறிப்பதற்கு 'U' என்றவடிவில் நாமம் இட்டும், நடுவில் விளங்கும் செந்நிறக்கோடு (திருச்சூரணம்) தாமாகவும் நிற்றல் —இது வடகலை. திருமாலின் திருவடிகள் தாமரையில் விளங்குவதாக திருமண் இடும்போது பாதம் வைத்து நாமம் இட்டுக் கொள்ளுதல் ஆகும்.—இது தென்கலை.

இத்தகைய பிதற்றல்களைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று நமக்கு விளங்கவில்லை. 'சப்தகிரி' ஆசிரியருக்குப் பலர் கடிதம் எழுதித் தக்கவர்களைக் கொண்டு திருத்திக் கட்டுரைகளை வெளியிடும்படி கேட்டுக்கொண்டால் பயன் விளையலாம்.

http://acharya.org

த. கு. கோவிந்தசுவாமி, கும்பகோணம் (36, 37, 38 கேள்விகள்)

36. "பழநடை விளக்கம்" என்னும் நூலைப்பற்றி விவரம் வேண்டுகிறேன்.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பு திருமழிசையில் எழுந்தருளியிருந்தவர் சதுர்ஶாஸ்த்ர வித்₃வான் அண்ணாவப்பங்கார் ஸ்வாமி என்று ப்ரஸித்₃தி₄ பெற்ற வீரராக₄வாசாரியர் ஸ்வாமி. இவர் ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்₂யானத்திற்கு அத்யாஶ்சர்யமான ஓர் அரும்பதவுரை ஸாதித்துள்ளார். (அதன் ஒரு பகுதியை நாம் அச்சிட்டுள்ளோம்). மற்றும் பல நூல்களையும் இவர் இயற்றியிருக்கிறார். அவற்றில் கு₃ருபரம்பரையைப்பற்றித் தம் காலத்தில் வழங்கி வந்த பல செய்திகளை விளக்கும் நூல் "பழநடை விளக்கம்" என்பது. இது 'கீ₃தாசார்யன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப் பெற்று வருகிறது.

37. திருமலை எம்பெருமான் திருக்கைகளில் திருவாழி திருச்சங்குகளை ஏந்தியிருந்ததாகச் சிலப்பதிகாரத்திலும் ஆழ்வார்களுடைய பாசுரங்களிலும் தெளிவாகத் தெரிகிறது. ஸ்ரீராமானுஜர் தம் காலத்தில் சைவர்களை வாதத்தில் வென்று அப்பனுக்குச் சங்காழி அளித்தருளினார் என்று ராமானுஜ வைப₄வத்தில் காணப்படுகிறது. ராமானுஜர் காலத்தில் திருவேங்கடவனுக்கு ஆழிசங்கு இல்லாமல் இருந்ததற்குக் காரணம் என்ன?

பெரிய திருமொழியில் "துளங்கு நீண்முடி அரசர்தம் குரிசில்" [5-8-9] என்னும் பாட்டில் எடுக்கப்பட்ட தன் ப₄க்தனான தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ரக்ஷகமாக எம்பெருமான் திருவாழி திருச்சங்குகளை அளித்திருந்தான் என்றும், அதுமுதல் திருமலை எம்பெருமானிடம் திருவாழி திருச்சங்குகள் இல்லாமலிருந்தன என்றும், அதனால் எம்பெருமானார் அப்பனுக்குத் திருவாழி திருச்சங்குகளை அளித்தார் என்றும் வரலாறு கூறுகிறது.

http://acharya.org

38. திருக்கச்சி நம்பிகள் ஆளவந்தாரால் பஞ்சஸம்ஸ்காரம் செய்யப்பெற்ற சீடராயிருந்தும், காஞ்சி வரதர் 'ப4ாக3வதாபி4மானம் பெற்றால் தான் உமக்கு மோக்ஷம்'' என்று கூறியதாகவும், அதுபோலவே திருக்கச்சிநம்பிகள் பெரியநம்பிகளின் அபி4மானத்தைப் பெற்றார் என்றும் சில கு3ருபரம்பரை நூல்களில் காணப்படுகிறது. பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டவர்களுக்கு மோக்ஷம் நிச்சயம் என்பது இல்லையா?

நம்முடைய ஸம்ப்ரதா3யத்தில் எம்பெருமானுடைய க்ருபை மோக்ஷோபாயமேயொழிய, சரணாகதி முதலான எதுவும் மோக்ஷோபாயமல்ல. பஞ்சஸம்ஸ்காரம் முதலான சடங்குகளைச்செய்து கொண்டு இஷ்டப்படி ஒருவன் வாழ்ந்தானாகில் அவன் பக்கல் எம்பெருமானுடைய க்ருபை எப்படி உண்டாகும்? மோக்ஷம்தான் அவனுக்கு எப்படிக் கிடைக்கும்? குற்றமற்ற ப4ாக3வதன் ஒருவனுடைய அபி4மானத்துக்குப் பாத்திரமானால் அவன்மேல் எம்பெருமானுடைய க்ருபை வெள்ளமிடும் என்பது ஸகல ஶாஸ்த்ர ஸாரம். அதனாலேயே பேரருளாளன் திருக்கச்சிநம்பிகளை ப4ாக3வதாபி4மானம் பெறும்படி நியமித்தான் என்று கொள்ளவேண்டும்.

கோதை வேங்கடபதி, சென்னை—20.

39. மஹாபாரத யுத்தத்தில் த்3ரோணர் முடிவதற்காக பீ4மனைக்கொண்டு அசுவத்தாமா என்னும் ஒரு யானையை அழிக்கச் செய்து, ''அஶ்வத்த2ாமா ஹத:'' [அசுவத்தாமா இறந்தான்] என்று பொய் சொல்லும்படி கண்ணன் த4ர்மபுத்திரரைத் தூண்டியதாகவும், த4ர்மபுத்திரர் முதலில் மறுத்து பிறகு அரைமனத்தோடு ''அஶ்வத்த2ாமா ஹத: குஞ்ஜர:'' [அசுவத்தாமா ஆகிற யானை இறந்தது] என்னும் வாக்யத்தைச் சொன்னதாகவும் அதில் ''குஞ்ஜர:'' [யானை] என்னும் ஶப்3த3ம் துரோணர் காதில் விழாதிருக்கக் கண்ணன் சங்கநாத3ம் செய்த

http://acharya.org

தாகவும், த$_4$ர்மபுத்திரர் வார்த்தையை நம்பி துரோணர் புத்ரஶோகத்தால் சண்டையிடுவதை நிறுத்தியதால் கொல்லப்பட்டதாகவும், மஹாபாரதம் துரோண பர்வத்திலிருப்பதாக உபந்யாஸகர்கள் கூறுகிறார்கள். இப்படிப் பொய் சொன்னதாலேயே த$_4$ர்மபுத்திரர் மோக்ஷம் போவதற்கு முன் நரகத்தைக் காணும் துன்பம் ஏற்பட்டது என்றும் மஹாப$_4$ாரதத்தில் வருவதாகவும் கூறுகிறார்கள். கண்ணனைப் பானைக்குள் ஒளித்து வைத்த த$_3$தி$_4$ப$_4$ாண்ட$_3$ன் கண்ணன் சொல்லியபடி "கண்ணன் அங்கு வரவில்லை" என்று பொய் சொன்னதற்கு மோக்ஷமே கிடைத்திருக்க, இங்கு கண்ணன் சொல்லியபடி பொய்சொன்ன த$_4$ர்மபுத்திரர்க்கு எப்படி நரகதரிசனம் ஏற்படமுடியும்? ஆகையால், கண்ணன் சொன்னதை முழுமனத்துடன் ஏற்காமல் அரைமனத்துடன் த$_4$ர்மபுத்திரர் பொய் சொன்னதாலேயே அவருக்கு நரகதரிசனம் ஏற்பட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. தங்கள் கருத்தை விளக்க வேண்டுகிறேன்.

இக்கேள்வியில் மஹாப$_4$ாரதத்திற்கு மாறுகச் சில விஷயங்கள் இருக்கின்றன. அவையாவன :— (1) த$_4$ர்மபுத்திரர் முதலான பாண்ட$_3$வர்கள் இந்த்$_3$ரலோகமாகிற சொர்க்கத்திற்குச் சென்றார்களேயொழிய மோக்ஷத்திற்கல்ல என்று ஸ்வர்க்க$_3$ாரோஹண பர்வத்தில் தெளிவாக உள்ளது. (2) "குஞ்ஜர:" என்றபோது கண்ணன் சங்கநாதம் செய்தான் என்று மஹாபாரதத்தில் இல்லை. தர்மபுத்திரர் "அஶ்வத்தாமா ஹத:" என்பதை உரத்த குரலிலும், 'குஞ்ஜர:" என்பதை துரோணர் காதில் விழாதபடி மெதுவாகவும் சொன்னார் என்றே உள்ளது. "தமதத்$_2$யப$_4$யே மக்$_3$நோ ஜயே ஸக்தோ யுதி$_4$ஷ்டி$_2$ர: | 'அஶ்வத்த$_2$ாமா ஹத' இதி ஶப்$_3$த$_3$ முச்சைஶ்சகார ஹ | அவ்யக்தமப்$_3$ரவீத்$_3$ ராஜந் 'ஹத: குஞ்ஜர' இத்யுத ||" [பொய் சொல்லுகிறோமே என்ற பயத்தில் ஆழ்ந்தவராயினும், த$_4$ர்மபுத்திரர் வெற்றியை விரும்பி 'அஸ்வத்தாமா இறந்தான்' என்ற சொற்களை உரக்கக் கூறினார். 'யானை' என்னும் பத$_3$த்தை, (காதில் விழாதபடி) தெளிவில்லா

http://acharya.org

மல் கூறினுர்.] என்று உள்ளது காண்க. பொய் சொல்லா தவராகையாலே பூமிக்கு நான்கு அங்குலம் மேலே ஸஞ்சரித்துக் கொண்டிருந்த அவரது ரதமும் இதைச் சொன்ன பிறகு பூமியைத் தொட்டுவிட்டது என்றும் அந்த ப்ரகரணத் தில் உள்ளது. (3) ஸ்வர்க்காரோஹண பர்வத்தில் இந்திரன் யுதிஷ்டிரரைப் பார்த்து, "வ்யாஜேந ஹி த்வயா த்ரோண உபசீர்ணஸ்ஸுதம் ப்ரதி | வ்யாஜேநைவ ததோ ராஜந் தர்ஶிதோ நரகஸ்தவ ||" [அரசனே! நீர் துரோணரை அவர் பிள்ளை விஷயமாக ஒரு யானையைக் கொல்லும் வியாஜத் தாலே பொய் சொல்லி ஏமாற்றினீர். அதனுலேயே ஒரு வியா ஜத்தாலே நரகம் உமக்குக் காட்டப்பட்டது] என்று கூறிய தாக உள்ளதால், துரோணரைப் பொய் சொல்லி ஏமாற்றி யதற்காகவே தர்மபுத்திரர்க்கு நரகதரிசனம் விளைந்தது என்று தெளிவாக விளங்குகிறது. கண்ணன் பொய் சொல்லச் சொன் னதை முழு மனத்துடன் ஏற்காமையாலே தர்மபுத்திரருக்கு நரக தரிசனம் விளைந்தது என்று கூறுவது மஹாபாரதத் திற்கு முரண்பட்டது. துதிஷ்பாண்டன் மோக்ஷத்தை விரும்பிக் கண்ணன் சொல்லிபடி பொய் சொன்னதால் அவனுக்கு மோக்ஷம் கிடைத்தது. தர்மபுத்திரர் வெற்றியை விரும்பிக் கண்ணன் சொன்னபடி பொய் சொன்னதால் அவருக்கு வெற்றி கிடைத்தது. கண்ணன் சொன்னதையே வேதவாக்காகக் கொண்டு, யானை என்னும் வியாஜத்தை இடாமல், "அச்வத்தமா இறந்தான்" என்று அவர் துரோண ருக்குமுன் உரத்தகுரலில் அப்பட்டமான பொய்யைச் சொல்லி யிருந்தால், பொறுப்பு கண்ணனுடையதாகியிருக்குமாகை யாலே அவருக்கு நரகதரிசனம் விளைந்திருக்காது; யானையைக் கொல்லச் செய்து அதர்ம பயத்தோடேயே "அச்வத்தாமா ஹத:" என்று உரக்கவும், "குஞ்ஜர:" என்பதைத் தெளி வில்லாமலும் சொல்லி துரோணரை ஏமாற்றினுராகையாலே அவருக்கு நரக தரிசனம் விளைந்தது என்று கொள்வதே எல்லா ப்ரமாணங்களுக்கும் பொருந்தியதாகும்.

http://acharya.org

S. C. ஸௌந்தரராஜன், பம்பாய்; N. S. பத்மநாபன், பல்லாவரம், சென்னை-43; மற்றும் பலர்.

40. 2—12—90 "கல்கி"யில் "ஒளியேற்றும் விழா" என்னும் தலைப்பில் உள்ள கட்டுரையில் திருவண்ணாமலைத் தலபுராணத்தில் உள்ள அடிமுடி தேடிய கட்டுக்கதையை வெளியிட்டு விஷ்ணுவை இழிவுபடுத்தியுள்ளது. தொலைக் காட்சியில் செவ்வாய் இரவு 7 மணியளவில் காட்டப்பெறும் "ஸ்வரபூஷணி" என்னும் நிகழ்ச்சியிலும் அடிமுடிதேடிய கதை முதலான பல புளுகுமூட்டைத் தலபுராணக் கதைகளை ஒளிபரப்பி விஷ்ணு இழிவுபடுத்தப்படுகிறார். இவற்றைத் தடுக்க வழியுண்டா?

நம் நாட்டில் வைஷ்ணவர்களே உண்மையான சிறுபான்மையினர். நாத்திகர்கள், கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லாமல், இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அத்₃வைதிகளும், சைவர்களும் பொதுஜனப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய எல்லாப் பொதுஜனப் பிரசார சாதனங்களையும் ஆக்ரமித்துக்கொண்டு வேத₃ விருத்₃த₄மான விஷ்ணு வைஷ்ணவத்₃வேஷ ப்ரசாரத்தைப் பல வருடங்களாகச் செய்துவருகின்றனர். எவ்வளவோ முறை இவற்றைப் பொய்யானவை என்று தக்க ஆதாரங்களோடு நிரூபித்து நாம் கண்டித்த பின்பும் இவை தொடர்ந்து வருகின்றன. வைஷ்ணவர்களிடம் இவற்றை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யுமளவுக்கு வலிமையுமில்லை. சிறுபான்மையினரின் மத விஷயங்களைப் புண்படுத்துகையாலே, இவற்றைப் பொதுஜனப் பிரசார சாதனங்களின்மூலம் பிரசாரம் செய்வதைத் தடைசெய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் அல்லது டில்லி உச்ச நீதிமன்றத்தில் ஓர் வழக்குத் தொடுக்கலாம். இதுதவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

வேத₃ஶாஸ்த்ர வித்வான் N. S. தேவநாதாசார்ய ஸ்வாமி,
நாவல்பாக்கம்.

41. நமது அரசாங்கம் மதச்சார்பற்றது என்று பறை சாற்றப்படுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகள் பரி

ஸா—10

போகாமல் காப்பாற்றப்படுவதாகவும்கூடச் சொல்லப்படு கிறது. கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் அரசாங்கத்தின் பார்வையில் "சிறுபான்மையினர்". மற்றவர்களனைவரும் "ஹிந்துக்கள்" என்னும் ஒரே இனத்தில் எண்ணப்பட்டு, பெரும்பான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த இனம் பற்பல காரணங்களால் நூற்றுக்கணக்கான உட் பிரிவுகளால் சிதறிப்போயிருப்பதும், பலத்த நெருக்கடி யிலும் இந்த வேற்றுமைகள் குன்றாமல் ஓங்கிவளர்வதும் கண்கூடு. "சிறுபான்மையின"ரின் உரிமைகள் யாவை? என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. கிறிஸ்துவர் களும் முஸ்லிம்களும் இடையறாது தத்தம் மதக் கொள்கை களைப் பிரசாரம் செய்துவருகின்றனர். மற்ற மக்களைத் தம் மதத்திற்கு மாற்றுவதற்காகவே இது நடைபெறு கிறது. ஒன்றும் தெரியாத "அப்பாவி" மக்கள் பலவாறான ஆசைமொழிகளால் ஏமாற்றப்பட்டு மதம் மாற்றப்படுகின் றனர். இது "சிறுபான்மையின"ரின் உரிமையா? இதற்கு உபயோகமாக இந்தியத் தெய்வங்கள் பலவாறாகவும் இழித் துக் கூறப்படுகின்றன. இதுவும் அவர்களது உரிமையா? இந்தச் "சிறுபான்மைய"ரிடம் வெளிநாட்டுப் பணம் ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது. அது இதற்குத் தங்கு தடையின்றி உபயோகிக்கப்படுகிறது. அரசாங்கமும் இவர் களுக்குப் பல செல்வாக்குகளை அளிக்கிறது. இதெல்லாம் இந்திய மதங்களைத் திட்டமிட்டு அழிப்பதற்கே உபயோக மாகின்றன. "மதச்சார்பற்றது" என்பதற்கு "இந்திய மதங்களை ஆதரிக்காதது" என்ற பொருளும்—"இதர மதங் களை அணைத்துக் காப்பது" என்ற பொருளுமே தேறு கிறது. இந்த அதிக்கிரமங்களை அரசாங்கம், கண்ணிருந் தும் பாராமல் அனுமதித்து வருவது நம் நாட்டுக்கு இழைக்கப்படும் பெரிய அநீதியல்லவா? "மதம் மாற்றுதல் குற்றம்" என்று அறிவிப்பதன்மூலம் அரசாங்கம் இதைத் தடைசெய்து நீதியை ஸ்தாபிக்கவேண்டாமா? "சிறுபான் மையின"ருடைய முக்கியமான கொள்கை, நம் புனிதமான பாரதபூமியில் இந்தியக் கலாசாரத்தை அழிப்பதே என்பதை யுணர்ந்தும் — அதைக் கைதூக்கிவிடுவது — சிறுபான்மை

http://acharya.org

யினரின் நலத்தைக் காப்பதாகுமா? எங்கள் ஊர் சிறிய குக்ராமம். பெரும்பாலோர் பிழைக்கும் வழியைத் தேடி வெளியூர் சென்றுவிட்டனர். இங்கு எல்லோரும் வைஷ்ணவர்களே; பெருமாள் கோவில் ஒன்றுளது. கிராம தேவதையின் கோவில் மற்றொன்று. வேறு மதத்தார்கள் யாருமே இங்கு கிடையாது. கிறிஸ்துவர்கள் அடிக்கடி இங்கு வருகிறார்கள். இந்திய தெய்வங்கள் — விபசாரி—பொய் சொல்லும் — நம்பிக்கை துரோகம் செய்யும் — திருடும். இயேசு ஒருவர்தான் இப்படியெல்லாம் செய்யாதவர். இவரையே கும்பிடுங்கள் — என்று பிரசாரம் செய்கிறார்கள். பலவாறாக ஆசைகாட்டுகிறார்கள். கூடியசீக்கிரம் ஒரு கிறிஸ்தவாலயமும் கட்டப்படக்கூடும் என்றஞ்சுகிறேன். இவற்றை எப்படித் தடைசெய்வது?

"இந்துக்கள்" என்று அழைக்கப்படும் சமூகத்திலுள்ள பலரின் மனக்குமுறல்களை ஸ்வாமி இக்கேள்வியில் வெளியிட்டிருக்கிறார். இந்த இந்துக்களிலும் பெரும்பான்மையினராயிருக்கும் சைவசாக்தர்களாகிவிட்ட அத்₃வைதிகளும், சைவர்களும் பொதுஜனப் பிரசார சாதனங்களில் விஷ்ணுவையும், ஆழ்வார்கள், ஆண்டாள் முதலான வைஷ்ணவ ஞானிகளையும், வைணவத்தையும் இடைவிடாமல் இழித்துரைத்தும், பழித்தும் வருவதை நாம் பலவருடங்களாகக் காட்டிக் கண்டித்து வருகிறோம். இதைத் தடைசெய்ய உள்ள ஒரே வழியைச் சென்ற கேள்வியின் பதிலில் காட்டியுமிருக்கிறோம். நமது அரசியல் சட்டத்தில் மதப்பிரசார சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகையால் ஆலயங் கட்டுவதையும், தங்கள் தங்கள் பத்திரிகைகளிலும், கூட்டங்களிலும் மதப்பிரசாரம் செய்வதையும் தடை செய்ய முடியாது. ஆனாலும், பொதுஜனப் பிரசார சாதனங்களில், விஷ்ணுவையும், வைஷ்ணவத்தையும் தாக்கும் சைவாத்₃வைதிகளின் முயற்சியையும், நடுவீதிகளில் இந்து தெய்வங்களைத் தாக்கும் கிறிஸ்தவர்கள் திராவிடக்கழகக்காரர்களின் முயற்சியையும் தடைசெய்யக் கோரி, சென்னை உயர்நீதி மன்றத்திலோ, டில்லி உச்சநீதிமன்றத்திலோ வழக்குத்தொடுக்கலாம். இதுதவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

http://acharya.org

V. ஸ்ரீதரராமாநுஜதாஸர், மதுரை.

42. சுக்கிரீவனிடம் நட்புக்கொண்டவுடன், வாலிக்குத் தனது வரவை அறிவித்து இருவரையும் ஒன்றுசேர்க்க முயன்று அது முடியாதுபோனபின்பல்லவோ ராமபிரான் வாலியைக் கொன்றிருக்கவேண்டும். கண்ணனும் பஞ்ச வர்க்காகத் தூது சென்று, அது பலிக்காமற்போனபின் பல்லவோ பாரதம் கையறைந்தான். ராமபிரான் சமாதான வழியைக் கைக்கொள்ளாததற்குக் காரணம் என்ன?

ராவணவதத்திற்கு உதவிசெய்வதாக எம்பெருமானிடம் ஒப்புக்கொண்டு இந்திரனின் அம்சமாகப் பிறந்த வாலி இராவணனிடம் அக்னிசாக்ஷியாக நட்புக்கொண்டான். இது நம்பிக்கைத் துரோகம். இதற்குப் பரிஹாரம் மரண தண்டனையே. ராமன் நேரில் வாலியைச் சந்தித்துத் தம்பியோடு சமாதானப்படுத்த முயன்றால் வாலிக்கு இந்தத் தண்டனையை வழங்கமுடியாமற் போய்விடும். அதனாலேயே ராமபிரான் கண்ணனைப்போலே சமாதான முயற்சியில் இறங்கவில்லை. மேலும், சுக்கிரீவன் உயிருடனிருக்கும்போது அவனது மனைவியை வாலி அபஹரித்தான். இதுவும் தண்டனைக்குரிய குற்றம். [வாலி இறந்தபின்பு வாலியின் மனைவி தாரை சுக்கிரீவனுக்கு மனைவியானது விலங்கின வழக்கப்படி குற்றமாகாது] நேரில் வாலியைச் சந்தித்துச் சமாதானம் பேசினால் இதற்குரிய தண்டனையையும் வாலிக்கு அளிக்கமுடியாமற் போய்விடும். ராமபிரான் தனது பார்யாபஹாரியான ராவணனோடு போரிட மற்றொருவனுடைய பார்யாபஹாரியின் உதவியை நாடுவதும் தவறாகிவிடும். இக்காரணங்களாலேயே ராமபிரான் வாலியோடு சமாதான முயற்சியைச் செய்யவில்லை. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய ராமன் மரணப்படுக்கையிற்கிடந்த வாலிக்குக் கூறும் பதிலில் "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம" [குரங்கரசனே! நல்லோர்களின் அறம் மிக நுண்மையானது; மிகவும் அறிதற்கரியது] என்று அருளிச்செய்தான் என்பது தெளிவு.

http://acharya.org

V. செல்வநாராயண ராமானுஜ தாஸர், C. A. கோட்டூர், சென்னை–85.

43. ஏப்ரல் '91 "திருமால்" இதழை ஒருவர் என்னிடம் கொடுத்தார். அதில் இரண்டாம் பக்கத்தில் "திருமால்" ஆசிரியர் உங்கள் பெயரைக் குறிப்பிடாமல், நீங்கள் புத்தக வியாபாரி என்றும், முன்னோர் வைத்த நிதியை வீணடிப்பதாகவும், வசைமொழிகளாலேயே வாதாடிக்கொண்டிருப்பதாகவும், மற்ற சமயத்தவர்களைத் திட்டித் தீர்ப்பதே வைணவ வளர்ச்சி என்று எண்ணிச் செயல்படுவதாகவும் எழுதியிருக்கிறார். இக்குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று விளக்கி அடியேன் அவருக்கு விரிவான கடிதம் ஒன்று எழுதியிருக்கிறேன். "திருமால்" ஏப்ரல் '91 இதழையும், எனது கடிதத்தின் நகலையும் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். ஆவன செய்யப் பிரார்த்திக்கிறேன்.

"திருமால்" இதழின் தலையங்கத்தில் "எம்பெருமானாருக்கே விஷம் வைத்தவர்களும், கூரத்தாழ்வானைக் காட்டிக் கொடுத்த நாலூரானும், உத்தமர் பெரியநம்பியைச் சாதிக் கட்டுப்பாடு செய்து துன்புறுத்தியவர்களும் தமிழ்நாட்டு வைணவக்கும்பல்தான்" என்று எழுதி, இன்று வைணவத்துக்கு ஒப்பற்ற தொண்டு புரிந்துவரும் ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசாரிய ஸ்வாமியையும், டாக்டர் எம். ஏ. வேங்கடகிருஷ்ணனையும், நம்மையும் பெயர்சொல்லாமல் குறிப்பிட்டு, பொய்யான அவதூறுகளை அள்ளி வீசியிருக்கிறார். பெயரைச்சொல்லி எழுதினால் நீதிமன்றத்தில் மானநஷ்ட வழக்கைச் சந்திக்க நேரிடும் என்று பயந்து மறைமுகமாக எழுதுகிறார் போலும்! நிற்க. அன்று ராமானுஜருக்கும், கூரத்தாழ்வானுக்கும், பெரியநம்பிக்கும் தீங்குசெய்த தமிழ்நாட்டு வைணவக் கும்பலோடு தாம் பெயர்சொல்லாமல் குறிப்பிடும் மூவரையும் ஒப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் வைணவர்கள் எம்பெருமானார், கூரத்தாழ்வான், பெரியநம்பி திறத்தில் அபசாரப்பட்டதுபோல் நாங்கள் மூவரும் ஸ்ரீவைஷ்ணவ

http://acharya.org

பூர்வாசார்யர்கள் திறத்தில் என்ன அபசாரப்பட்டோம் என்பதை இவர் ஆதாரம் காட்டி விளக்க முன்வரவேண்டும். அது இவரால் இயலாது. நாங்கள் செய்திருப்பதெல்லாம் இதுதான். ஆழ்வார்களைத் திட்டியும், பூர்வாசார்ய வ்யாக்யான விருத்தமாகவும் இவர் "சுராஜ்" என்பவர் எழுதிய கட்டுரைகளைத் திருமாலில் வெளியிட்டார். ஆதாரத்தோடு அக்கட்டுரைகளை நாம் மறுத்தோம். "சுராஜ்" செய்வது நியாயமானதே என்றும், ஆழ்வார்களும், எம்பெருமானார் முதலான ஆசார்யர்களும் செய்த பரதத்துவநிர்ணயம் இக்காலத்தில் செய்யத்தகாதது என்றும், ஸ்ரீராமானுஜர் சங்கரரது அத்வைதக் கொள்கைகள் பலவற்றை ஏற்றுக்கொண்டார் என்று வாசுதேவர்ஷி ஸ்வாமி கூறினார் என்றும் எழுதி எம்பெருமானார் தரிசனத்தையே தகர்க்க முற்பட்ட இவரது அடாதசெயலை ஆதாரங்காட்டி நாம் கண்டித்தோம். எம்பெருமானார், கூரத்தாழ்வான், பெரியநம்பி ஆகியவர்களிடம் அபசாரப்பட்ட தமிழ்நாட்டு வைணவர்களைக் காட்டிலும், அவரது தர்சனத்தையே தகர்ப்பதற்குப் பத்திரிகை நடத்திக்கொண்டு, ஆங்காங்கு கூட்டம் போட்டுவரும் இவரே மிகக் கொடியவர் என்பதை வைணவவுலகம் நன்கு அறிந்தேயிருக்கிறது. தம் ஸ்வபாவத்தைப் பிறர்மீது ஏறிடுகிறார் என்பதும் தெளிவாகிறது. நிற்க, நாம் ஆதாரம்காட்டி இவரது த₃ர்ஶன விரோத₄ச் செயல்களுக்கு மறுப்பு எழுதியதற்கு இவர் இன்று வரையில் பதில் கூறவில்லை. வெறும் வசவுமொழிகளையே வாரியிறைத்து வருகிறார். வசவுக்கு பதில் வசவு எழுதுவது என்றும் நமக்கு வழக்கமில்லை. 'Avery' (ஆவரி) கம்பெனியில் மிகப் பொறுப்பான பதவி வகிப்பவரும், நமது ஞானபுத்திரர்களில் ஒருவருமான செல்வநாராயண ராமானுஜ தாஸரின் கடிதத்தில் முக்கியமான பகுதிகளைக் கீழே அச்சிடுகிறோம். அதுகொண்டு நல்லோர்கள் இவரது தன்மையை நன்கு உணர்ந்து, 'நீ அவர்பால் சென்றணுகக் கூசித்திரி' என்னும் மாமுனிகளின் திருவாக்கை இவர் திறத்துக் கடைப்பிடிப்பார்களாக.

http://acharya.org

செல்வநாரணரின் கடிதப் பகுதிகள்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸகுரவே நம:

ஸ்ரீ உ. வே. குமாரவாடி ஸ்வாமி திருவடிகளில் அடியேன் அநேக தண்டன் ஸமர்ப்பித்து விஞ்ஞாபனம். உபய குசலம்.

ஸ்ரீ உ. வே. அண்ணாவியார் ஸ்வாமி நேற்றைய முன்தினம் ஏப்ரல் மாதத்திய "திருமால்" இதழை அடியேனிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார். வாசித்துப் பார்த்ததில் ஸ்ரீ உ. வே காரப் பங்காட்டு ஸ்வாமியின் சிஷ்யர் இவ்வளவு தாழ்ந்து விட்டதில் மிக்க மனவருத்தத்தை அடைந்தேன்.

தேவரீருக்கும் ஸ்ரீ ஸுதர்சனர் ஸ்வாமிக்கும் உள்ள சர்ச்சை ஸம்ப்ரதாய விஷயமானது. ஸம்ப்ரதாயத்தில் நம்பிக்கை, மற்றும் நேர்புத்தி இல்லாதவரான ஸ்ரீ சுராஜ் என்பவர் ஆழ்வார்களைத் தாக்கியும், ஆழ்வார் ஆசார்யர் ஸ்ரீ ஸூக்திகளை வசை பாடியும் எழுதினதைத் தாங்கள் திருமாலில் வெளியிட்டீர்கள். அப்போது தான் ஸுதர்சனர் ஸ்வாமி அதை எதிர்த்துக் குரல்கொடுக்க ஆரம்பித்தார். தேவரீரும் ஸ்ரீசுராஜ் செய்தது தவறு என்றே கொண்டு இருக்கிறீர்கள். இல்லையென்றால் அவரை 'திருமால்' உதவி ஆசிரியர் பதவியில் இருந்தும், திருமால் அடியார் குழாமின் பதவியில் இருந்தும் நீக்கி இருக்க மாட்டீர்கள். அப்படி தங்களுக்கே தவறு எனப்பட்டதை, வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு சர்ச்சைக்கு முடிவு கட்டாமல், தேவரீரே அதை Personal ஆகக்கொண்டு சென்றீர்கள். ராமாநுஜர் பட ஸம்பந்தமாகத் தேவையில்லாத, சர்ச்சைக்கு சம்பந்தமில்லாத விஷயங்களை இழுத்தீர்கள். இப்போது ஸ்ரீ ஸுதர்சனரை ஒரு புத்தக வியாபாரி என்றும், முன்னோர் வைத்த நிதியை விணடித்து வசை மொழிகளாலே வாதாடிக்கொண்டு இருக்கிறார் என்றும் எழுதி உள்ளீர்கள். தாங்கள் எழுதியது உண்மைதானா என்பதை உள்ளுவார் உள்ளத்து உடனிருந்து அறியும் எம்பெருமான் அறிவான். ஸ்ரீ ஸுதர்சனர் ஸ்வாமி ஒரு புத்தக வியாபாரி என்று சாமான்யமாகக் கூறிவிட்டீர்கள். நாமெல்லாம் வயிற்றுக்காக, "உனக்குப்பணி செய்திருக்கும் தவமுடையேன்" என்பதை விட்டு, மற்றொருவன் தன் கடைத்தலை

http://acharya.org

நின்று பணி செய்து ஜீவனம் செய்தபோது அவர் ஒருவர் தன்னையே ஸ்ரீவைஷ்ணவத்திற்கு அர்ப்பணம் செய்து, பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்களும் அவற்றிற்கு எளிய நடை விவரணமும் வெளியிட்டு (incidentally எளிய நடையில் தத்துவங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் தேவரீருக்கும் விருப்பம்) செய்யவில்லை என்றால், ஆற்றில் கரைத்த புளியாகவல்லவோ ஆகியிருக்கும் தமிழ் வேதம். அமெரிக்காவில் வெளிவரும் புத்தகங்களை விட மிகநல்ல முறையில் சிறு குறையுமில்லாமல் நல்லகாகிதத்தில் வெளிவரும் ஒரே ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகை—ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம். அவற்றிற்கெல்லாம் காரணம்—தேவரீரை அடிக்கடி உறுத்தும் அவர் முன்னோர் வைத்த நிதி தான். அவர்கள் ஸ்ரீஸுதர்சனரிடம் ஞானச் செல்வத்தை மட்டுமல்லாமல் லௌகிகச் செல்வமும் விட்டுச்சென்றது இந்த மாதிரி கைங்கர்யத்துக்காகத்தான். ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் முதல் இதழில் ஸுதர்சன ஸ்தாபக ஸ்வாமி எழுதி வெளிவந்த பாஞ்சஜன்ய கோஷத்தில் இருந்து, அந்தப்பத்திரிகை ஆரம்பிப்பதற்குக் காரணம் என்ன என்பதைக்கூறும் சில பகுதிகளைக் கீழே தந்திருக்கிறேன்:–

பாஞ்சஜன்ய கோஷப் பகுதிகள்

"*வேதாந்த க்ரந்தங்களும், ரஹஸ்ய க்ரந்தங்களும், ஆசார்யர் மூலமாக அறிய வேண்டும் என்கிற அனுஷ்டானத்திற்கும் நியமத்திற்கும் அனுகூலமாகவும் அவைகளில் ஆசையை உண்டுபண்ணுவதற்கும் விஷயங்கள் விவரிக்கப்படும்....*

ஊருறங்குகிறது. உலகமும் துயின்றது. நன்னுதார் நாரணனை அறைகூவி முறுவலித்து, கெக்கொலி கொட்டுகிறார்கள். முகாரவிந்தங்களில் சோகக்குறி படர்ந்து நல்லோர் கரைந்தேங்குகிறார்கள். என்னே உலகியற்கை!...

இன்று திமிர்பிடித்த தரணியில் உள்ளோர் தெய்வம் ஒன்றுளதோ என்று மார்புதட்டுகிறார்கள். கண்டதே காட்சி; உண்டதே போகம் என்னும் லோகாயதிக மதம் உலகமெல்லாம் பரவி இருக்கிறது; 'தேகத்தைக் காட்டிலும் வேறு ஒரு அறிவுள்ள ஆத்மா இருக்கிறது; அதைக்காட்டிலும் வேறு ஒரு பரமாத்மாவும் உண்டு' என்று ஒப்புக்

http://acharya.org

கொள்ளாதவர்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள். வெள்ளியார், பிண்டியார், போதியார் கள்ள நூல்களையே வேதவாக்காகக் கொள்ளுகிறார்கள....

பிறர் ஆக்ரமிக்கும் காலத்தில் ஆதாரம் அனுபோகம் முதலிய ப்ரமாணங்களைக் காட்ட வேண்டிய அவசியமே இப்பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணமாகும்....

கலியின் கோலாஹலத்தினால் ஸர்வஸமய ஸமரஸக் கொள்கைகள் தலைவிரித்துத் தாண்டவ நர்த்தனம் புரிகின்றன. பாமர ஜனங்கள் பீதகவாடைப் பிரானார் பெருமையைப் பகுத்து உணரவில்லை. மஹான்களும் மயங்கி, நாராயண பரத்வத்தை நினைக்கவும் நடுங்கி, சொல்லவும் தயங்கி, ப்ரஸங்கிக்கவும் பயப்படுகிறார்கள்....

இப்படி நிர்ணயம் செய்வதனால் மதச்சண்டை ஏற்படாதா என்று பலர் நினைக்கலாம். அவரவர் தம்தம் மதத்தை அனுஷ்டிப்பதில் நமக்கு யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தங்கள் தங்கள் தெய்வங்களே உயர்ந்தவை என்று சொல்லிக்கொள்வதிலும் நமக்கு எதிர்வாதமே கிடையாது....

வைஷ்ணவ மதத்தில் பிறந்து வைஷ்ணவன் என்று பெயர் பூண்டு தங்கள் ஸித்தாந்தத்தின் கொள்கைகளை அறியாமல் தயங்கித் திரிபவர்களைத் திருத்திப் பணி கொள்வதே இதன் நோக்கமாகும்.

பரமபதநாதனின் பரத்வத்தைப் பேசிப்பேசிப் பொழுது போக்கினால் கனல்பொறிபட்ட பஞ்சுப்பொறிபோல் பகல் இரவு செய்யும் பாவக்காடு பற்றி எரிந்து பஸ்மமாகும். இதுவே அவனுகந்த கைங்கர்யம்.''

மேலே கண்ட ஶ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஸ்தாபகர் ஸ்வாமியின் நியமனங்களில் எதை ஶ்ரீ ஸுதர்சனர் ஸ்வாமி நிறைவேற்றவில்லை? விஷ்ணுசித்த விஜயமும், ஶ்ரீவைஷ்ணவ மத விஜயமும், சாதிமத ஆராய்ச்சியும் வீணா?

எம்பெருமானின் கல்யாண குணங்களைக் கபளீகரம் செய்யத் துணிந்த சங்கராசார்யருக்கு பதிலடியாகஅமைந்த ஸாத்விக விஜயம் என்னும் க்ரந்தமும், அக்நிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியர் செய்த பகவதபசாரத்திற்கு பதிலாக எழுந்த ''அக்நிஹோத்திரியும் வைணவமும்'' போன்ற

http://acharya.org

ஸ்வமத ஸ்தாபனமும் வீணு? தேவரீர் அப்படிச் சொல்ல மாட்டீர்கள். ஏனென்ருல், அக்நிஹோத்ரம் செய்த அப சாரத்தை எதிர்த்து தேவரும் குரல் கொடுத்துள்ளீர்கள். இவையிலிருந்து முன்ஞேர் வைத்த நிதியை விஊடிக்கிருர் என்று தேவர் ஸாதித்திருப்பது சரியல்ல என்று தேறு கிறது. அவருக்கு எம்பெருமான் விதித்திருக்கிருன். அதைப் பற்றி அழுக்காறு கொள்வது ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு அழ கல்ல. அதுவும் ஒரு ஞானம் அனுட்டானம் இவை உடைய ஒரு ஆசார்யனை அடைந்தவர் கொள்ளக்கூடாது. ஸம்ப்ர தாய விஷயங்களில் சர்ச்சை கொள்வது சரியே. அதை Personal ஆகக் கொள்வதுதான் தவறு. தேவரீரும் அடியே னிடமே ஸ்ரீ ஸுதர்சனர் நடக்கும் விதம், நிற்கும் விதம் இவற்றைக் கிண்டல் செய்துகொண்டு இருந்து இருக்கிறீர் கள். இவை எல்லாம் பாகவத அபசாரக் கோடியிலே சேரும். தேவரீர் தங்களுக்குத் தெரிந்த வழியில் கைங்கர்யம் செய்கி றீர்கள். ஸ்ரீஸுதர்சனர் தம் ஸ்வாமியும் தகப்பனுரும் நியமித்த வழியில் கைங்கர்யம் செய்கிருர். ஆகையால் போட்டியோ பொருமையோ கொள்ளத் தேவையில்லை.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

44. காரைக்குடி கம்பன் விழா வானொலித் தொகுப் பினைக் கேட்டேன். பேச்சாளர்கள் பலர் கம்பன் வைணவன் என்பதை மறைத்து ஓரிரு பாடல்களையே கூறி அவன் சமயங்கடந்தவன் எனப் பேசிஞர்கள். விமர்சிக்க வேண்டு கிறேன்.

யானும் கேட்டேன். "அரனதிகன்" "சிவனே அல்லன்" போன்ற ஒரு சில பாடல்களையே திருப்பித் திருப்பிச் சொல்லி, ஆயிரக்கணக்கான பாடல்களில் அவன் விஷ்ணுபரத்துவம் செய்திருப்பதையும், 'திருமாலே இராமன்' என்று முழங்கியிருப் பதையும் மறைத்து 'அவன் சமயங்கடந்தவன்' என்று கூறும் இவர்களுக்கு மனச்சான்று என்று ஒன்று இருக்கிறதா என் னும் ஐயம் நமக்கு வருகின்றது. ஒருவர் மட்டும் கம்பன் வைணவனே என்று அழுத்திச் சொன்னது நமக்கு ஆறுதலை அளித்தது. "சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்" என்னும் நமது நூலை முன்னமே காரைக்குடிக் கம்பன் கழகச் செயலருக்கு அனுப்பியுள்ளோம்.

http://acharya.org

தி அ.கி. (கபிஸ்தலம்) ஸ்ரீ நிவாஸாசாரியர், ஸ்ரீரங்கம்.

45. 'திருமால்' மே இதழில் 20ம் பக்கத்தில் 'அன்பர் கடிதம்' எனும் தலைப்பில் பி. எல். ராமராமாநுஜதாஸர் (திண்டுக்கல் தோப்புஸ்வாமி) எழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது ஏப்ரல் திருமாலில் தேவரீரையும் மற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரேஷ்டர்களையும் தாறுமாறாகத் தாக்கியிருக்கும் தலையங்கக் கட்டுரை அக்கடிதத்தில் பாராட்டப்பட்டுள்ளது. இது உண்மையான கடிதம்தானா என்பதை விசாரித்து ஆவனசெய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்தின் நகல் திண்டுக்கல் தோப்புஸ்வாமிக்கு அனுப்பப் பெற்று, விளக்கம் கோரப்பட்டது. அவர் 'திருமால்' ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதி அதன் நகலை நமக்கு அனுப்பியிருக்கிறார். திருமாலில் இக்கடிதம் வெளியிடப்படுமா என்பது சந்தேகம். அதன் முக்கியமான பகுதிகளைக் கீழே கொடுக்கிறோம். அதிலிருந்து வாசகர்கள் உண்மையை உணரலாம்.

கடிதத்தின் முக்கியப் பகுதிகள்

[கடிதத்திலுள்ள எழுத்துப் பிழைகள் திருத்தப்பட்டுள்ளன]

சுவாமிகள் ஏப்ரல் மாதம் திருமாலில் முதற்பக்கத்தில் "கூரத்தாழ்வான் எம்பெருமானார் பெரியநம்பிகள் ஆக இம்மூவர்களிடத்தில் அபசாரப்பட்டவர்கள் வைஷ்ணவர்கள். ஆழ்வானின் கண்ணைப்பறிக்கச்செய்த நாலூரானும் வைஷ்ணவரில் ஒருவன்தான். ஸ்ரீவைஷ்ணவத்திற்காகத் தன்உயிரையே பணயம் வைத்த உத்தமர் பெரியநம்பிகளுக்குச் சாதிக்கட்டுப்பாடுசெய்து துன்புறுத்தியதும் ஒருவைஷ்ணவக் கும்பல்தான்" என்றும், ஆசார்யஅபசாரம் பாகவத அபசாரம் முதலிய தோஷத்தைப் பற்றியும் வைஷ்ணவ-அவைஷ்ணவ உயர்வு தாழ்வுகளைப்பற்றியும் சாதித்திருந்தது பற்றிமகிழ்வடைந்தேன். ஆனால் அடுத்தபக்கம் படிப்பதற்குள் ஒரு அசந்தர்ப்பம். பத்திரிகையைக் கீழே வைத்துக் காரியம் பார்த்தேன், அதற்குள் ஒரு பாகவதர் வந்தவர் பத்திரிகையை அடியேன் படித்து முடித்துவிட்டதாய் நினைத்துக்

http://acharya.org

கொண்டுபோய் விட்டார். அடியேன் அடுத்தபக்கம் படிக்க வில்லை. சுவாமிகளுக்கு "திருமாலில் இப்படி உபதேசங்களும் சீர்திருத்தங்களும் அவச்யமானதே" என்று திருமாலுக்கு வாழ்த்துக்கூறி எழுதினேன். சுவாமிகள் அடியேன் விண்ணப் பித்ததை மே மாதம் திருமாலில் பதிந்துள்ளதாகக் கேள்வி யுற்றேன். அடியேனுக்கு இன்னும் (15—5—91 வரை) மே மாத பத்திரிகை வரவில்லை. 5 நாள் கழித்து ஏப்ரல் பத்திரி கையை வாங்கிவந்து படித்தேன், அதில் மூன்று திரு நாமங்களைச் சொல்லி மிகவும் வசைபாடியுள்ளீர்கள். அதிலும் 'சூட்டுக்கோல்' என்று ஸ்ரீஸுதர்சன பாஞ்சசன்னியத்திற்கு அழகிய "புதுத்திருநாமம்" சூட்டியதும், அவர்களுக்குக் கழு வாய் தேடினும், இந்தப்பிறவியில் பாபம் தீராதென்றும், அடுத்து கூழுக்கு ஆட்பட்டவர் என்றும் தில்லுமுல்லு செய் பவர் என்றும், அடுத்து மற்றொரு சீடர் புத்தக வியாபாரி என்று ஏகவசனமாய், வசைமொழிகளிலேயே வாதாடுபவர் என்றும் மற்ற சமயத்தவரைத் திட்டுபவர் என்றும் சுவாமிகள் சாடியுள்ள வசைமொழிகள்பற்றிப் பிறகு படித்துப் பார்த்து மனம் கலங்கினேன். இப்படிப்பட்ட உத் தமர்கள் எல்லாம் இப்படி சாதிக்கிறார்களே, இவை நமது பாவம்தான் (என்று) தேறினேன். நமது சமயப்பத்திரிகை 3, 4 தான் வெளிவருகிறது. இதைக் கொண்டுதான் வைணவ உலகம் திருந்தவேணும். இதிலே ஒருவருக்கொருவர் வசை பாடுதல் விவாதம் நடந்துகொள்வதைப் பார்த்தால் வாசகர் கள் "ஆஹா! வைணவப் பெரியோர்களே இப்படித்தான் கூறுகிறார்கள்" என்று தாங்களும் வசைபாடக் கற்றுக்கொள் வார்கள். சுவாமிகள் திருவடி இணைகளைப்பிடித்து அடியேனின் சென்னியில் தரித்து விண்ணப்பிக்கிறேன். ஸுதர்சனம் ஆசி ரியர் வைஷ்ணவத்திற்கு நிரந்தரம் பாடுபடுகிறார்கள் என்று தேவரீரே சாதித்திருக்கிறீர்கள். காரப்பங்காட்டு ஸ்வாமி அந் தரங்க சிஷ்யர்ஸ்வாமி; அவரே நேரே கடாக்ஷிக்கப்பெற்றவர்கள்; பாகவதாபசாரம் பற்றியும் ஸ்ரீவசநபூஷணம் இரண்டாம் ப்ர கரணம் 204, 205, 206 சூர்ணைகளும் 222 "வேதகப் பொன் போலே இவர்களோட்டை ஸம்பந்தம்; இவர்கள் பக்கல் ஸாம்யபுத்தியும் ஆதிக்யபுத்தியும் நடக்கவேணும்" 223 "அதாவது ஆசார்யதுல்யர் என்றும் அதிகர் என்றும் நினைக்க வேண்டும்" என்றும், வார்த்தாமாலையில் 219ம் வார்த்தையில்

http://acharya.org

கூரத்தாண்டான் சாதித்தருளியது "ஆசாரியன் விஷயத்தில் அபசாரப்பட்ட நாலூரானும் கடைத்தேறினான்; பகவத்விஷயத்தில் அபசாரம் பண்ணின சிசுபாலனும் கடைத்தேறினான்; பாகவதவிஷயத்தில் அபசாரப்பட்டார் இன்னார் கடைத்தேறினார் என்று இதற்கு முன்பும் கேட்டறியாதில்லை,' என்றும் கூறியுள்ளார்கள். இவைகளெல்லாம் காரப்பங்காடு ஸ்வாமிகள் சாதித்திருக்க மாட்டார்களா. தேவரீர்தான் செவிசாய்த்திருக்கமாட்டீர்களா என்று அடியேன் வருந்துகிறேன். நாடு திருந்தி நற்பயன் பெறும் பத்திரிகையிலேயே இப்படி விஷயங்கள் இருந்தால் யார் திருந்துவார்கள் வருந்துவார்கள்? மேலும் ஓர் விண்ணப்பம்: ஸ்ரீரங்கம் மணவாள மாமுனிகள் சந்நிதியில் முன்பு மார்கழி மாதம் நடந்த வைஷ்ணவ மாநாட்டில் தேவரீர் "திருமண் இட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஆதாரம் இல்லை" என்றும், "ஆழ்வார்களுக்கே சிலருக்குத் திருமண் இல்லை" "வடநாட்டில் திவ்ய தேசங்களிலும் திருமண் இல்லை" என்றும் சாதித்தீர்கள். ஸ்வாமிகளின் திருவாக்கிலேயே இப்படி "அமுதமொழி" வந்தால் திருமண்ணைக்கண்டு நாசிக்கும் உலகம் என்ன சொல்லும்? ஒருவர் திருமண் இட்டுக்கொள்வதற்கு எத்தனை உபதேசம் எப்படிக் கஷ்டப்படுகிறோம் நாங்கள் ஊர் ஊராய்ச் சென்று. தேவரீர் சாதித்ததை அப்போதே ஒருவர், "பார்த்தீர்களா! பத்திரிகையாளரே எப்படிச் சொல்லுகிறார்; அப்படி ப்ரமாணம் இருந்தால் அவர் எழுதும் திருமால் பத்திரிகையில் திருமண் அச்சிட்டிருக்கமாட்டாரா" என்றும் கேட்டார். உடன் நாதெள்ள (ஆதி) கேசவலு (குப்தா) செட்டியாரிடம் அப்பொழுதே சொன்னேன். அடியேனும் தேவரீர் மேடையில் பேசும்போது கேட்டேன் — "எந்த ஆழ்வாருக்குத் திருமண் இல்லை" என்று. தேவரீர் "ஒரு சில ஆழ்வார்களுக்கு" என்று மழுப்பியபடி திருவுள்ளம் பற்றினீர்கள்.

ஸுதர்சனம் ஆசிரியர் குறிப்பு

இக்கடிதத்தின் இறுதிப்பகுதியில் திருமாலாசிரியரும் யானும் கூடிப்பேசி அபிப்ராயபேதங்களைத் தீர்த்துக்கொண்டு ஒருங்கிணைந்து பத்திரிகைகள் மூலம் வைணவ உலகம் திருந்தப்பாடுபடவேண்டும் என்னும் பிரார்த்தனை வெளியிடப்பட்டுள்ளது. இதுபற்றி நமது நிலையைப் பலமுறை விளக்கி

http://acharya.org

யிருக்கிறோம். மறுபடியும் விளக்குகிறோம். ஆழ்வார்களை வசைபாடியும், "பொன் திகழும் மேனி" [முதல் திருவ 98] என்னும் பாட்டில் பொய்கையாழ்வார் சிவவிஷ்ணு சாம்ய வாதம் செய்கிறார் என்று பூர்வாசார்ய வ்யாக்யான விருத்தமாகக் கூறியும் 'சுராஜ்' என்பவர் திருமாலில் கட்டுரைகள் வெளியிட்டார். அக்கட்டுரைகளை மறுத்து நாம் கட்டுரைகள் எழுதினோம். "திருமால்" ஆசிரியர் 'சுராஜ்' செய்தது தவறு என்று அப்போதே ஒப்புக்கொண்டிருந்தால் சர்ச்சை உடனே முடிந்திருக்கும். அப்படிச் செய்வதை விட்டு 'சுராஜ்' செய்தது விமர்சனமேயாகையால் நியாயமானதே என்று வாதம் செய்தார் அவர். நாம் விஷய விமர்சனம் செய்தோமேயொழிய திருமால் ஆசிரியரையோ, சுராஜையோ வ்யக்தி தூஷணமாக எதுவும் எழுதவில்லை. "திருமால்" ஆசிரியரே நம்மீது புத்தக வியாபாரி என்றும், முன்னோர் வைத்த நிதியை வீணடிப்பதாகவும், வசை மொழிகளாலேயே வாதாடிக் கொண்டிருப்பதாகவும், மற்றச் சமயத்தவர்களைத் திட்டித் தீர்ப்பதே வைணவ வளர்ச்சி என்று எண்ணிச்செயல் படுவதாகவும் பொய்க் குற்றச்சாட்டுகளை எழுதி நம்மையும் ஸுதர்சனத்தையும் தாறுமாறாகத் தாக்கிவருகிறார். அவர் செய்வது நம்முடைய பூர்வாசார்யர்களுடைய திருவுள்ளத்தை மிகவும் புண்படுத்தக் கூடியது என்று நாம் பலமுறை ஆதாரத்தோடு நிரூபித்து வருகிறோமே யொழிய அவரை நாம் இதுவரையில் தனிப்பட்ட முறையில் வசைபாடியதே இல்லை. இப்போதும் "'சுராஜ்' ஆழ்வார்களைச் சண்டைக்காரர்கள் என்றும், வெறியர்கள் என்றும் திருமாலில் தாக்கி எழுதியது தவறு; 'பொன் திகழும்மேனி' பாசுரம் சிவ விஷ்ணு ஸாம்யத்தைச் சொல்லுவதாகப் பூர்வாசார்ய வ்யாக்யான விருத்தமாக எழுதியதும் தவறு" என்று இவர் திருமாலில் வெளியிட்டால் நாம் இவரோடு சமாதானமாகப் போகத் தடையில்லை.

http://acharya.org

46. P. K. கணேசன், பரமக்குடி.

சென்னை மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரின் 'அண்ணா' அவர்கள் உரை எழுதிய "தேவீ உபநிடதம் —பஹ்வ்ருசோபநிஷத்" என்னும் நூலில் "தேவீ மஹா திரிபுரசுந்தரியே ப்ரஹ்மா சிவன் விஷ்ணு ஆகியோரைப் படைத்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படிக் கூறும் அவ்வுபநிஷத் வாக்யங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இது பற்றிய உண்மையை விளக்கவேண்டுகிறேன்.

நமது விஷ்ணுசித்தவிஜயம் இரண்டாம்பாகத்தில் (இரண்டாம் பதிப்பில்) இணைக்கப்பட்டுள்ள "உபநிஷத்துக்கள் நூற்றெட்டா?" என்னும் அநுபந்தத்தில் இத்தகைய கேள்விகளுக்கு விரிவாக பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள இரண்டாவது அநுபந்தத்தில் இவ்விஷயம் மேலும் விளக்கப்பட்டிருக்கிறது. இங்கு சுருக்கமாக பதில் கூறுகிறோம். இந்த "தேவ்யுபநிஷத்" முதலான பல உபநிஷத்துக்கள் பல மதங்களைச் சேர்ந்த பூர்வாசார்யர்கள் எவராலும் கையாளப்படவில்லை. சுமார் 400 வருடங்களுக்குள் இருந்த அப்பய்ய தீக்ஷிதர் கூட இவற்றைக் கையாளவில்லை. ஆகையால் இவை முந்நூறு ஆண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்டவை என்பது தெளிவு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று அனைவரும் இசைந்த சங்கநூல்களில் திருமாலே வேதத்தில் மற்ற அனைவரையும் படைத்த முதல்வனாகக் கூறப்படுவதாக முழங்கப்படுகிறது. அக்காலத்தில் சுடுகாட்டுக்குக் காவல் தெய்வமாய் இருந்தபடியால் "காடுகாள்" என்று பெயர் பெற்றிருந்த தேவிக்கு எந்தச் சங்கநூலிலும் பரம்பொருளுக்குரிய எந்தப் பெருமையும் சொல்லப்படவில்லை. காளிதாஸன் என்னும் பெயர் பெற்றிருக்கும் சிவபக்தனான மஹாகவியும் தனது ரகுவம்சத்தில் திருமாலையே பிரமன் முதலான அனைவரையும் படைத்த முதல்வன் என்று காட்டுகிறான். அவனோ, பனிரண்டாம் நூற்றாண்டுக்குமுற்பட்ட வேறு எந்தவடமொழி தென்மொழிக் கவிஞர்களோ காளியை மும்மூர்த்திகளையும் படைத்தவளாகக் கூறவில்லை. இதிலிருந்தே சைவ சித்தாந்த நூல்கள் தோன்றிய 12-வது நூற்றாண்டுக்குப்பின்பே சாக்தமதம் உருவாகியிருக்கிறது என்று தெரிகிறது. ஆகையால் 'அண்ணா'வின் நூல் நடுநிலையாளரான அறிவாளிகளால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

http://acharya.org

47. வானமாமலை N. S. பத்மநாபன், B.Com., ACA, A. C. S.
சென்னை-43. (47, 48 கேள்விகள்)

தத்வத்ரயம் அசித் ப்ரகரணத்தில் மூன்றாவது ஸூத்ரத்தில் "ஶுத்$_3$த$_4$ஸத்வம் நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சே$_2$தி$_3$க்க அரிதாய் இருக்கும்" என்று அருளியிருப்பதை விளக்கப்பிரார்த்திக்கிறேன்.

எல்லாமறிந்தவனான ஈச்வரனால் சுத்த ஸத்வத்தின் பெருமையைப் பரிச்சே$_2$தி$_3$க்க (அளவிட்டு அறிய) முடியாமல் இருப்பது எப்படி? என்பது கேள்வியின் கருத்து. இங்கு மாமுனிகளின் வ்யாக்யானத்தை எளிய நடையில் விளக்கிக் கூறுகிறேன். ஸர்வேச்வரனாலும் அவன் உள்ளதைத்தான் அறிய முடியுமேயொழிய ஆகாசத்தாமரை, மலடிமகன் போன்ற இல்லாத பொருள்களை அறிய முடியாது. ஸர்வேச்வரனுடைய பெருமையும், பிராட்டியின் பெருமையும், ஶுத்$_3$த$_4$ஸத்வத்தின் பெருமையும் அளவற்றவை. ஆகையால் அளவை இல்லாத இப்பெருமைகளை அளவிட்டறிவதென்பது ஆகாசத்தாமரையை அறிவது போன்றதாகும். இது ஸர்வேச்வரனாலும் இயலாததன்றோ.

48. அந்த அசித் ப்ரகரணத்திலேயே 51, 52 ஸூத்ரங்களில் "'தி$_3$க்' என்று தனியான த்ரவ்யம் இல்லை" என்று அருளியுள்ளார். ஆனால் "லீலாவிபூதிக்கு மேல் எல்லை உண்டு; கீழ் திக்கில் எல்லையில்லை" என்று 47 வது ஸூத்ரத்தில் கூறியிருப்பதால் மேல் திசை, கீழ் திசை உண்டு என்று தோன்றுகிறது. ஆழ்வார்களும், 'திசையும் திசையுறு தெய்வமும்' [முதல் திருவ-7] 'திசைகளையும் படைத்தவனே' [பெருமாள் திரு - 8. 10] முதலான விடங்களில் திசைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மேலெழத்தோன்றும் இந்த முரண்பாட்டை எப்படி நீக்குவது?

திசை என்ற தனித்தத்துவம் இல்லை என்றே 51, 52 ஸூத்ரங்களில் அருளிச்செய்யப்பட்டது. 'திசை என்பதே இல்லை' என்று கூறவில்லை. 52 வது ஸூத்ரத்தில் 'ஆகாசம் அல்லது பூமியில் திசையை அடக்கிவிடலாம்' என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு ஆகாசம் அல்லது பூமி ப்ரதேசமே ஒருவருக்குக் கிழக்காகவும், ஒருவருக்கு மேற்காக

http://acharya.org

வும் இருப்பதால் திசை என்பது தனித்தத்துவம் அல்ல; அந்தந்த ஆகாஶ ப்ரதேசத்தையோ அல்லது பூமிப்ரதேசத்தையோ குறிக்கிறது என்று கருத்து.

49. S. T. ரங்கராஜன், ஸ்ரீரங்கம்.

முதல் திருவந்தாதி 'இமையாத கண்ணால்' [32] என்னும் பாட்டில் "இந்திரியங்களை அடக்காவிடினும் எம்பெருமானைத் தம் நெஞ்சில் வைப்பவர்கள் வைகுண்டம் அடைவர்" என்கிறது. 'வாரிசுருக்கி' [47] என்னும் பாட்டில் "இந்திரியங்களை அடக்கி, சிறந்த ஜ்ஞானம் பெற்றவர்களே எம்பெருமானுடைய திருவடிகளை அடைவர்" என்று கூறுகிறது. இவ்விரு பாட்டுக்களுக்கும் தோன்றும் முரண்பாட்டை எப்படிப் போக்குவது என்று விளக்க வேண்டுகிறேன்.

32 ம் பாட்டு பிரபந்நர்களின் நிலையைச் சொல்லுகிறது. 47 ம் பாட்டு உபாய பக்திநிஷ்டர்களின் நிலையைச் சொல்லுகிறது. ஆகையால் முரண்பாடு இல்லை. தலைசிறந்த ப்ரபந்நர்கள் எம்பெருமானுடைய உகப்பை அபேக்ஷிக்கிறார்களேயொழிய, தங்களுடைய ஆநந்தத்தைத் தமக்குப் பயனாகக் கொள்வதில்லை; எம்பெருமானையே உபாயமாகக் கொள்கிறார்கள். ஆகையால் எம்பெருமானும் தானே உபாயமாய் நின்று காலக்ரமத்தில் அவர்களுக்கு இந்திரியஜயத்தையும் உண்டுபண்ணி அவர்கள் விரும்பும் தனதுகப்புக்கேயான மோக்ஷத்தைத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே கொடுக்கிறான். உபாய பக்தி நிஷ்டர்களோவெனில், தாம் பாடுபட்டு மோக்ஷத்தில் ஆனந்தம் பெற விரும்புகிறார்கள். ஆகையால் அவர்களே முயற்சி செய்து இந்திரியங்களை அடக்கி, பலஜன்மங்கள் பாடுபட்டு பக்தியையும் நிறைவுபடுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது. 37 ம் பாட்டில் "ஆகத்தணைப்பார்" என்றது எம்பெருமானையே பயனாகவும் உபாயமாகவும் கொள்ளும் பிரபந்நர்களைக் குறிக்கிறது. 47 ம் பாட்டில் 'மெய்ஞ்ஞானத்தால் உணர்வார்' என்றது ஞானத்தின் ஒருவகையான பக்தியை உபாயமாகக் கொண்ட ஸாதனபக்தி நிஷ்டர்களைக் குறிக்கிறது. ஆகையால் முரணில்லை.

http://acharya.org

50. S. ஆனந்தன், சென்னை-90

பாண்டவர்களுக்கும், த்ரௌபதிக்கும் அவர்களுடைய 'தேஹயாத்ரை'யில் கண்ணன் பொழிந்த அளவற்ற கருணையைப் பார்க்கும்போது தேகயாத்ரை முற்றிலும் கர்மாதீனமாக நடப்பதில்லை என்று தேறுகிறது. தேகயாத்ரையில் எம்பெருமான் தலையீடு உண்டா? உண்டாயின், அது 'தேகயாத்ரை கர்மாதீனம்' என்ற விதிக்கு முரண்பட்டதாகாதா?

பொதுவாக தேஹயாத்ரை அவனவன் செய்த கர்ம வினைப்படியே நடக்கிறது. ஆனால் ஜீவன் தனது முயற்சிகளால் ஓரளவுக்கு அதைச் சீர்திருத்திக் கொள்ளலாம். அம்முறையிலேயே பாண்டவர்களும் திரௌபதியும் எம்பெருமானையே உபாயமாகக் கொண்டு ராஜ்யத்தை அடைந்தனர்; எதிரிகளையும் அழித்தனர். "பிராயச்சித்தம் முதலானவற்றைச் செய்து பாபங்களைப் போக்கிக் கொள்ளலாம்" என்று சாஸ்திரங்களில் விதித்திருக்கிறபடியாலே தேஹயாத்ரையில் சேதநனுடைய முயற்சிக்கும் பங்கு உண்டு என்பது வெளிப்படை. "விதியை மதியால் வெல்லலாம்" என்னும் பொதுஜன வழக்கும் இதையே உணர்த்துகிறது. ஆனால், தேஹயாத்ரை கர்மத்தால் நடப்பது என்னும் விதியை அடியோடு மாற்றிவிட முடியாது. எம்பெருமானைச் சரணமடைந்து ராஜ்யத்தையடைந்த பாண்டவர்களும் தம் கர்மவினைப்படி அபிமன்யு முதலான தம்புத்திரர்கள் பலரை இழந்து வருந்தியதைக் காண்கிறோம். அப்படியானால், "தேஹயாத்ரை கர்மாதீனம்; ஆத்ம யாத்ரை பகவத்க்ருபாதீனம்" என்று நம்முடைய பூர்வாசார்யர்கள் அருளியிருப்பதற்குக் கருத்து என்ன? என்னும் கேள்வி எழுகிறது. நம்முடைய பூர்வாசார்யர்கள் தலைசிறந்த பிரபந்நர்கள். தேஹயாத்ரையில் தமக்குச்சில நன்மைகளைப் பெறுவதற்கும் பாண்டவர்களைப்போலே எம்பெருமானைச் சரணமடையவும் மாட்டார்கள், தாம் முயற்சி செய்யவும் மாட்டார்கள்; "கர்மப்படி எது நடந்தாலும் நடக்கட்டும்" என்று உறுதியுடன் நடப்பார்கள். அவனையடைவதற்கும் சாதகம் போல் அவனது அருளையே எதிர்பார்த்து நிற்பார்கள். இப்படியிருப்பதையே "தேஹயாத்ரை கர்மாதீ$_4$னம்; ஆத்மயாத்ரை ப$_4$க$_3$வத்க்ருபாதீ$_4$னம்; ஆகையால் இரண்டுக்கும் நாம் கரைய (கவலைப்பட) வேண்டியதில்லை" என்னும் ஆசார்ய ஸ்ரீ ஸூக்தி விளக்குகிறது.

http://acharya.org

தி அ கி. ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீரங்கம்.

51. 7-7-91 விகடனில் இலக்கியப்பக்கத்தில் "சங்க காலச் சிற்பக்கலைச் சிறப்பு" என்னும் தலைப்பில் ஸ்ரீ S. N. ஸ்ரீராமதேசிகன் (கௌரவத் தனி அலுவலர், ஆயுர்வேத மொழிபெயர்ப்புப் பிரிவு, இந்திய மருத்துவத்துறை, தமிழக அரசு) அவர்கள், முருகனைப்பற்றிய 19-ம் பரிபாடலில் (50-53 வரிகளில்) ராமாயணம், பாத்மபுராணம் முதலியவற்றிலுள்ள அகலிகை வரலாற்றைப் பரங்குன்றத்தில் சித்திரமாகத் தீட்டியிருப்பதைப்பற்றி எழுதும்போது, "திருமால் வரலாற்றைத் திருமுருகன் கோயில்களிலே சித்திரமாகப் பொறித்து சைவ வைணவ ஒற்றுமைக்கு சங்ககாலத்திலேயே வித்திட்டிருக்கிறார்கள்.........திருமுருகாற்றுப்படையைப்போல் பக்திக்கென்றே தோன்றிய சங்கநூலாகிய பரிபாடலைப் படிக்கும்போது தேவாரம் திருவாசகம் போன்ற தோத்திர நூல்களைப்படிப்பதுபோன்ற உணர்வுதான் ஏற்படும்" என்று எழுதியிருக்கிறார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

"சங்ககாலத்தில் சைவ வைணவ ஒற்றுமைக்கு வித்திட்டிருக்கிறார்கள்" என்று எழுதியிருப்பதுபற்றிச் சில உண்மைகளை விளக்க விரும்புகிறேன். சங்கநூல்களில், குறிப்பாகப் பரிபாடலில் திருமாலுக்குரிய பாடல்களும் உள்ளன. முருகனுக்குரிய பாடல்களும் உள்ளன. சிவன் முதலான மற்ற தெய்வங்களின் தன்மைகளைக் கூறும் குறிப்புக்களும் உள்ளன. சங்ககாலச் சான்றோர்களில் சிலர் திருமாலையே பாடியிருக்கிறார்கள். சில சான்றோர்கள் முருகனையே பாடியிருக்கிறார்கள். 'கடுவன் இளவெயினனார்' என்பவர் பரிபாடல் 3, 4 ஆகிய இருபாடல்களில் திருமாலையும், 5 வது பரிபாடலில் முருகனையும் பாடியிருக்கிறார். ஆனால் சங்க காலத்திற்குப் பிற்பட்ட ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடல்களுக்கும், இந்தச் சங்ககாலச் சான்றோர்களின் பாடல்களுக்கும் சில முக்கியமான வேற்றுமைகள் சங்கநூல்களைக்

http://acharya.org

கூர்ந்து ஆராய்வோருக்குப் பளிச்செனப் புலப்படுகிறது. அவைகள் பின்வருமாறு:— (1) ஆழ்வார்கள் பரம்பொருளுக்குரிய எல்லாத்தன்மைகளையும் திருமாலுக்கே வைத்து திவ்யப் பிரபந்தங்களில் பாடியிருப்பது போலவே, சங்ககாலச் சான்றோர்களும் திருமாலுக்குரிய (இப்போது கிடைக்கும்) 7 பரிபாடல்களிலும் பரம்பொருளுக்குரிய எல்லாத் தன்மைகளையும் திருமாலுக்கே வைத்துப் பாடுகிறார்கள். (2) தேவாரம், திருவாசகம் முதலானவற்றில நாயன்மார்கள் பரம்பொருளுக்குரிய பெருமைகளைச் சிவனுக்கே வைத்துப் பாடுவதைப்போலே, முருகனையும் சிவனையும் பற்றிப் பாடும் சங்ககாலச் சான்றோர் எவரும் பரம்பொருளுக்குரிய தன்மைகளை அவர்களுக்குப் பாடவில்லை. நேர் மாறாகப் பரம்பொருளுக்குப் பொருந்தாத சில தன்மைகளைச் சொல்லியே அவர்களைப் பாடுகிறார்கள். 5ம் பரிபாடலில் கடுவன் இளவெயினனார் சிவனும் பார்வதியும் புணர்ந்து, அதனால் வீர்யம் வெளிப்பட்டு அதிலிருந்து முருகன் தோன்றினான் என்று பாடியிருப்பதிலிருந்து அவர் சிவனையோ, பார்வதியையோ, முருகனையோ பரம்பொருளாகக் கருதவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. இவரே திருமாலைப்பற்றிய 3, 4வது பரிபாடல்களில் 'திருமால் மறுபிறப்பறுக்கும் மாசற்ற சேவடியையுடையவன்' என்றும், 'எல்லாதேவர்களும் மூவேழ் உலகமும் உலகிலுள்ள ஜீவர்களும் திருமாலிடமிருந்தே தோன்றினர்' என்றும், 'இப்பெருமைகளையும், பரம்பொருளுக்குரிய மற்றும் பல பெருமைகளையும் திருமாலுக்கு வேதமே முழங்குகிறது' என்றும் பாடியிருக்கிறார். பத்துப்பாட்டில் ஒன்றாய் நக்கீரர் பாடியதான திருமுருகாற்றுப்படையிலும், முருகனுடைய உற்பத்தி பரிபாடலில் உள்ளது போலவே காணப்படுகிறது. அதிலும் பரம்பொருளுக்குரிய எந்தப் பெருமையும் முருகனுக்குச் சொல்லப்படவில்லை. (3) திருமாலுக்குத் தாழ்வையும், சிவனுக்கு உயர்வையும் காட்டும் அடிமுடிதேடிய கதை, கண்ணைப்பிடுங்கி அர்ச்சனை செய்த கதை, சிவன் திருமாலின் அவதாரங்களை பங்கம் செய்த கதைகள் ஆகியவை தேவாரம் முதலானவற்றில் நாயன்மார்களால் பாடப்படுவதைப் போலே சங்க நூல்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. சிவபுரா

http://acharya.org

ணம், இலிங்கத்திட்டபுராணம், கந்த புராணம் முதலானவற்றில், சிவனுக்கும் முருகனுக்கும் பெருமையையும், திருமாலுக்குத் தாழ்வையும் கூறும் பற்பல கதைகளில் ஒன்று கூடச் சங்க நூல்களில் முருகனைப்பற்றிய பாடல்களிலோ சிவனைப்பற்றிய குறிப்புகளிலோ காணப்படவில்லை.

இவற்றிலிருந்து சிவனுக்குப் பரத்துவம் கூறும் சைவ மதம் அக்காலத்தில் இல்லையென்றும், சங்ககாலச் சான்றோர் அனைவருமே திருமாலைப் பரம்பொருளாகக் கொண்ட வைஷ்ணவ மதத்தையே தழுவி நின்றூர்கள் என்றும் விளங்குகிறது. சங்ககாலத்தில் சிவபக்தர்களும், முருகபக்தர்களும் இருந்தார்கள். ஆனால் அவர்களும் திருமாலுக்குப் போட்டியாக சிவனையோ முருகனையோ நிறுத்தி அவர்களுக்குப் பரத்துவம் கூற முற்பட்டதில்லை. ஆகையால் "சங்ககாலத்திலேயே சைவ வைஷ்ணவ ஒற்றுமைக்கு வித்திட்டார்கள்" என்று ஸ்ரீராயதேசிகன் எழுதுவது அவரது ஆராய்ச்சி, நுனிப்புல் மேயும் நிலையிலேயே உள்ளது என்று காட்டுகிறது. "திருமாலைப்பற்றிய பரிபாடல்களைப் படிக்கும்போது திவ்யப்பிரபந்தத்தைப் படிப்பது போன்ற உணர்வுதான் ஏற்படும்" என்பதே உண்மை. இவ்வுண்மையை எழுதாமல், "பரிபாடலைப் படிக்கும்போது தேவாரம், திருவாசகம் போன்ற தோத்திர நூல்களைப் படிப்பது போன்ற உணர்வுதான் ஏற்படும்" என்று இவர் எழுதியிருப்பது உண்மையைத் திரித்துக் கூறுவது ஆகும். தேவாரம், திருவாசகம் முதலானவற்றில் பலவிடங்களில் திருமாலைத் தாழ்த்திப் பாடியிருப்பது போலே சங்கநூல்களில் இன்ன இடத்தில் திருமாலைத் தாழ்த்திப் பாடியுள்ளது என்று ஓரிடம் கூட இவரால் காட்ட முடியாது. இயலுமானால் இவரும் காட்டலாம்; எவரும் காட்டலாம். நமது சங்ககாலத்தமிழர் சமயம், சாதிமத ஆராய்ச்சி, ஸ்ரீ வைஷ்ணவமத விஜயம் ஆகிய நூல்களில் இவ்விஷயம் விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

T. S. துளஸீதரன், வேலூர் - 1, (52 முதல் 55 கேள்விகள்)

52. இந்த ப்ரஹ்மாண்டத்தைத் தாண்டி வைகுண்டம் செல்லும் வழியில் உள்ள 7 ஆவரணங்கள் யாவை?

http://acharya.org

(1) ஜலம், (2) அக்னி, (3) காற்று, (4) ஆகாயம், (5) பூதாதி எனப்படும் தாமஸாஹங்காரம், (6) மஹான் என்னும் தத்துவம், (7) கார்யநிலையிலுள்ள ப்ரக்ருதி, இவை முறையே ஒன்றிற்குமேல் ஒன்று பதின்மடங்காயிருக்கும். "த₃ஶோத்தராண்யாவரணநி" [ஸ்தோ-ரத்னம் - 17] என்னும் இடத்தின் வ்யாக்யானத்தில் பெரியவாச்சான் பிள்ளை இப்படி விவரித்திருக்கிறார்.

53. கைவல்ய நிலையைப்பற்றிச் சுருக்கமாக விவரிக்கவும்.

ஶ்ருதிஸ்ம்ருதிகளிலும், புராணங்களிலும், ஆழ்வார்கள் ஆசாரியர்கள் ஸ்ரீஸூக்திகளிலும், விரஜை தாண்டி ஸ்ரீவைகுண்ட நகரத்திற்கு வெளியில், தம் ஆத்மாவைத் தாமே அநுபவிக்கும் ஒரு தாழ்ந்த மோக்ஷமே கைவல்யம் எனப்படுகிறது. இவர்களுக்கு லீலாவிபூதியில் மீண்டும் பிறப்பு இல்லை. வைகுண்ட நகரத்திற்குச் சென்று ப்ரஹ்மாநுபவம் செய்வதும் இல்லை. ஸ்ரீவேதாந்த தேசிகன் "இக்கைவல்யம் இந்த லீலாவிபூதிக்குள்ளிருந்து அநுபவிக்கப்படும் போ₄க₃மே; மோக்ஷமல்ல" என்று கொண்டார். 'இது தாழ்ந்ததொரு மோக்ஷமே' என்னும் மற்ற ஆசார்யர்களின் கருத்து நம்மால் கீ₃தா வ்யாக்₂யானத்தில் 2 வது பாகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் கைவல்ய ஸித்தாஞ்ஜனத்தில் விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

54. ஜீவாத்மாவை யோகிகள் ஞானத்தால் காண்பது போலே பரமாத்மாவையும் காணமுடியுமா? பிற சமயத்தவர்கள் பரமாத்மாவைக் காணமுடியுமா?

ப₄க்தியோகத்தாலே பரமாத்மாவைக் காணமுடியும் என்று வேதாந்தங்கள் கூறுகின்றன. பரமாத்மா யார், எத்தகையவன் என்பதையே அறியாத பிற சமயத்தவர்கள் அவனைக் காணமுடியாது.

55. ஆதி சங்கரர் அவர்மதப்படி மோக்ஷம் யாருக்குக் கிடைக்கும் என்று கூறுகிறார்?

எல்லாக் கர்மங்களையும் விட்ட சந்நியாசிகளுக்கே ப்₃ரஹ்மத்தோடு ஐக்யமடைவதாகிய மோக்ஷம் கிடைக்கும் என்று கூறுகிறார். மற்றவர்கள் ஸகுண ப்ரஹ்மத்தை அடைவதாகிற தாழ்ந்தமோக்ஷத்தையே பெறலாம் என்றும் கூறுகிறார்.

http://acharya.org

S. வேங்கடம், சமயபுரம்.

56. தாங்கள் சமீபத்தில் பெற்றுப்படித்து மிகவும் ரசித்து, நாட்டுக்கு நல்லதைச் சொல்லும் புத்தகமென்று கருதும் புத்தகத்தை வைணவவுலகிற்கு அறிமுகப் படுத்த வேண்டுகிறேன்.

புத்தக அறிமுகம்

கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டியா? ஆசிரியர்:- D. A ஜோசப் M. A., B. G. L. R. B. V.(Ph.D.) கிடைக்குமிடம்:- D,A. ஜோசப், அறிவு பதிப்பகம், 38, ஆரியநாட்டுத் தெரு, பரங்கிப்பேட்டை, தெ. ஆ. மாவட்டம்-608502 விலை ரூ 8-00 பக்கம் 82.

இப் புத்தகத்தோடு, ஓர்கடிதத்தையும் ஆசிரியர் அனுப்பியிருந்தார். அதன் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:—

ஸ்வாமிகளின் திவ்யசமூகத்துக்குத் தெண்டனிட்டு அடியேன் ஜோசப் விக்ஞாபனம்: ஶ்ரீவைஷ்ணவத்தில் வெகுகாலமாக ஈடுபாடுள்ள கிறிஸ்துவன் என்ற முறையில் தங்களுடைய "ஶ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" பத்திரிகையை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நான் படிப்பதுண்டு. அதில் தாங்கள் எழுதும் தலையங்கங்கள் நம் தேசத்திற்கும், ஆன்மீகப் பாரம்பரியத்திற்கும் மிகவும் தக்கவை என்பது அடியேன் கருத்து. இன்று நம் தமிழ் நாட்டில் திராவிடக் கழகத்தினர் கிளப்பிவிட்ட நாத்திகத்தினாலும், பார்ப்பனத்வேஷத்தினாலும் தமிழினம் அடைந்துள்ள சீரழிவைக் கண்டு மனம் கொதித்துப்போயிருப்பவர்களில் அடியேனும் ஒருவன். இந்தத் தவறான எண்ண ஓட்டம் மாறி நாடு திருந்த வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அந்த நோக்கத்தில் நான் எழுதி என் சொந்தச் செலவில் வெளியிட்டிருக்கிற "கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டியா" என்ற நூலின் ஒரு பிரதியை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். அருள்கூர்ந்து ஒரு அரைமணிநேரம் ஒதுக்கி அதைப் படித்துப் பாருங்கள். இந்நூலைத் தமிழ் மக்கள் படித்தால் நாட்டுக்கு நல்லது என்று தங்கள் திருவுள்ளம் நினைக்குமாகில் தங்களுடைய "ஸுதர்சனம்" பத்திரிகை மூலம் இதைப்பற்றி மக்கள் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள்.

http://acharya.org

ஆசிரியரின் விருப்பப்படி அதைப் படித்துப் பார்த்து நாம் மிகவும் வியப்பும் பெருமிதமும் அடைந்தோம். இந்நூலில் ஆசிரியர்—நம் நாட்டில் திராவிடக் கழகத்தினரும், மற்றும் பல அரசியல்வாதிகளும், கடவுளை நம்புவதாலும், நமது வேதசாத்திரங்களை நம்புவதாலும் நம் நாட்டில் விளைந்துவிட்டதாகக் கூறும் பல கொடுமைகளுக்கு உண்மையில் அந்தக்கடவுள் நம்பிக்கையோ, அந்த வேதசாத்திர நம்பிக்கையோ காரணமல்ல என்றும், இவர்களுடைய கடவுள்—சாத்திர—மறுப்புப்பிரசாரத்தினாலேயே பல கொடுமைகள் நாட்டில் நிகழ்ந்து வருகின்றன என்றும் ஆணித்தரமான தர்க்கமுறை பிறழாத வாதங்களாலே நிலைநாட்டியிருக்கிறார். இவரால் மறுக்கப்பட்டுள்ள நாத்திக வாதங்களாவன:— "(1) கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி (2) புராணங்கள் சுயநலக்காரர்களால் ஊரை ஏமாற்ற எழுதப்பட்டவை. (3) சாதிவெறி, பொருளாதாரச் சீர்கேடுகள், பெண்கொடுமை, விஞ்ஞானத்துறையில் பின்னடைவு, பாமரர்களின் பெருக்கம் ஆகியவை மதங்களாலேயே வளர்க்கப்பட்டவை; மதங்கள் ஒழிந்தால்தான் இவை நீங்கும். (4) ஆரிய திராவிட இன வேறுபாடு; பிராமணன் ஆரிய இனத்தான். மற்றவர்கள் திராவிடர்கள். (5) பார்ப்பனர்கள் தம் சுயநலத்துக்காக வருணாசிரம தர்மத்தை உண்டாக்கினார்கள். (6) ஏராளமான பணத்தைக் கோயில் கட்டுவதற்கும், விழாக்கள் நடத்துவதற்கும் செலவிடுவது வீண்விரயம்" ஆகியவை. இத்துடன், பண்டைக் காலத்தில்கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஆசாரங்கள், ஆகாரநியமம், பாசப்பிணைப்புடையகூட்டுக்குடும்பம், புலனடக்கம், கடவுள்நம்பிக்கை, சாத்திர நம்பிக்கை, பெண்களின் கற்புநெறி முதலானவற்றின் பெருமையும் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. "நான் காட்டியிருக்கும் சான்றுகளுக்குப் புறம்பாக யாராவது எதிர்ச்சான்று காட்டமுடியுமானால் நான் என் மதநம்பிக்கையை விட்டு விடுகிறேன். தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்" என்று நாத்திகர்களுக்கு ஆசிரியர் சவால் விட்டிருக்கிறார். ஒவ்வொரு ஆத்திகரும் தாமும் தமரும் படித்துவிட்டு, தமக்குத்தெரிந்த நாத்திக அன்பர்களிடமும் கொடுத்துப் படிக்கச் செய்யவேண்டிய நூல் இது.

http://acharya.org

S. முரளி, அந்தணல்லூர், சௌந்தரராஜன் 'ஹிந்து' பம்பாய்—20.

57. "கலைமகள்" "கல்கி' இரு பத்திரிகைகளிலும் காமகோடி பெரிய பீடாதிபதியின் சிவவிஷ்ணு ஐக்ய வாதங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகின்றன. இவற்றை மறுத்து நாங்கள் கடிதம் எழுதினாலும் அவை அவற்றை வெளியிடுவதுமில்லை. பதிலுக்கு ஒருகடிதமும் எழுதுவதில்லை. இவற்றை விமர்சிக்கவேண்டுகிறோம்.

ஜூலை 28 "கல்கி"யிலும், சிலமாதங்களாகக் கலைமகளில் வெளிவரும் சங்கரவிஜயக் கட்டுரைகளிலும் பெரிய பீடாதிபதியின் சிவவிஷ்ணுஸாம்ய வாதங்களும், சிவபரத்துவவாதங்களும் வெளியிடப்படுகின்றன. "சங்கர விஜயம்" என்னும் பெயரில் நாட்டில் உலவிவரும் நூல்கள் ப்₃ரஹ்மாண்ட₃ப் புளுகுகள் நிறைந்தவை என்னும் விஷயம் நமது "சங்கரரும் வைணவமும்" முதலான நூல்களில் ஆதாரங்காட்டி நிரூபிக்கப்பட்டுள்ளன. இதுபற்றிச் சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் அந்த ப்₃ரஹ்மாண்ட₃ப் புளுகுகளையே பீடாதிபதி மறுபடியும் எழுதிவருகிறார். பொய்யைத் திருப்பித்திருப்பிக் கூறினால் அது உண்மையாகி விடும் என்று கருதுகிறார் போலும்! இது பற்றி நமக்குக் கவலையில்லை. ஸுதர்சனர் பதில்களிலும், "சங்கரரும் வைணவமும்" "விஷ்ணுசித்த விஜயம்" முதலான நூல்களிலும் ஆயிரக்கணக்கான பக்கங்களில் நாம் நிலைநாட்டியிருக்கும் விஷ்ணு பரத்வ ப்ரமாணங்களைத் தொடாமல், ஜூலை 28 கல்கியிலும், ஆகஸ்டு 91 கலைமகளிலும் எழுதப் பட்டிருக்கும் சிவ விஷ்ணு ஸாம்யவாதங்களையும், சிவபரத்துவ வாத₃ங்களையும் இங்கு சுருக்கமாக ஆராய்வோம். ஆகஸ்ட் 91 'கலைமகள்' வாதங்களில் 'கல்கி' வாதங்களும் அடங்கியிருப்பதால் கலைமகள் சங்கரவிஜயக் கட்டுரை வாதங்களையே விமர்சிப்போம்.

"பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவருபதரிசனம் காட்டியதாக வருகிறது. அந்த விசுவருபம் ஈஶ்வர உருவந்தான் 'திவ்யம் த₃தா₃மி தே சக்ஷு: பஶ்ய மே யோக₃மைஶ்வரம்' என்று கிருஷ்ணன் கூறுகிறார். என்னுடைய ஈஶ்வர ஸ்வருபத்தை உனக்குக் காட்டுகிறேன் என்றே அர்ஜுனனிடம் பகவான் சொல்லுகிறார். ஈச்வரன் என்ற தொனிக்கு பரமசிவன் என்பதே அர்த்தம்"

என்று தொடங்கிப் பீடாதி4பதி எழுதியிருப்பது — ஆதி3 சங்கரரின் ப4ாஷ்யங்களைப் பாராமையாலோ, அல்லது அதைப் பார்த்தும் மறந்துவிட்டதாலோ, அல்லது பிறரை வஞ்சிக்க வேண்டும் என்னும் எண்ணத்தாலேயோதான் இருக்க வேண்டும். ஆதிசங்கரர் தம்ப்3ருஹதா3ரண்யக ப4ாஷ்யத்தில் (3-7-3) ''ய ஈத்3ருக்3ஸ்வரோ நாராயணக்2ய:'' என்று நாராயணன் என்னும் பெயரையுடையவனையே ஈஸ்வரனென்றதையும், அவ்விடத்தில் வார்த்திக டீகாகாரர்கள் (மற்ற தெய்வங்களைப்போலே) நாராயணன் புராணாக3மங்களால் மாத்திரம் பரம்பொருளாகக் கூறப்படுபவனல்லன் என்றும், ஸ்ருதியினாலும் பரமாத்மாவாக முழங்கப் பட்டவன் என்றும் உத்3கோ4ஷித்திருப்பதையும் காணலாம். மாண்டூ3க்யோபநிஷத்காரிகைகளில் முதல் காரிகைக்கு ப4ாஷ்ய மிடும்போது, 'ஈஸ்வரோ யோ நாராயணாக்2ய:'' என்று, நாராயணனையே ஈஸ்வரனென்றார். ப்3ரஹ்மஸூத்ர ப4ாஷ்யத்தில் பாஞ்சராத்ராதி4கரணத்தில் நாராயணஸப்3த3த்தால் முதல் வாக்கியத்தில் பரமாத்மாவைக் குறித்துவிட்டு, ''ஸ்ருதிஸ்ம்ருத்யோரீஸ்வரப்ரணிதா4நஸ்ய ப்ரஸித்3த4த்வாத்'' என்னும் அடுத்த வாக்யத்தில் அவனையே ஈஸ்வர பத3த்தால் குறிக்கிறார். மேலும், கீ3தாப4ாஷ்யத்தில் (3—30)ல் ''மயி தே3வே பரமேஸ்வரே ஸர்வஜ்ஞே ஸர்வாத்மநி வாஸுதே3வே'' என்றும்,(8—5)ல் ''பரமேஸ்வரம் விஷ்ணும்'' என்றும், (4—35)ல் ''மயி—வாஸுதே3வே பரமேஸ்வரே'' என்றும், (7—14)ல் ''ஈஸ்வரஸ்ய விஷ்ணோ:'' என்றும், (7—15)ல் ''பரமேஸ்வரம் நாராயணம்'' என்றும், (11—3)ல் ''(ரூபம் ஐஸ்வரம்)—வைஷ்ணவம் ரூபம்'' என்றும்,(12—20)ல் ''விஷ்ணோ: பரமேஸ்வரஸ்ய'' என்றும் (13—2)ல் ''ஈஸ்வரஸ்ய விஷ்ணோ:'' என்றும், (13—18)ல் ''மயி பரமேஸ்வரே ஸர்வஜ்ஞே பரமகு3ரௌ வாஸுதே3வே'' என்றும்,(13—27)ல் ''பரமஸ்சாஸௌ ஈஸ்வரஸ்ச ஈஸநஸீலஸ்ச இதி பரமேஸ்வர:'' என்றும்,(14—26)ல் ''ஈஸ்வரம் நாராயணம்'' என்றும், (15-16)ல் 'ப4க3வத: ஈஸ்வரஸ்ய நாராயணாக்2யஸ்ய'' என்றும், (15-17)ல் ''ஈஸ்வர:—ஸர்வஜ்ஞ: நாராயணாக்2ய: ஈஸநஸீல:'' என்றும், (18—61)ல் ''ஈஸ்வர:—ஈஸநஸீல:'' என்றும், ஸஹஸ்ர

http://acharya.org

நாமபா₄ஷ்யத்தில் ஈஶாந ஈஶ்வர பரமேஶ்வராதி₃நாமங்களை விளக்கும்போதும், ஈஶ்வர மஹேஶ்வர ஈஶாந பரமேஶ்வராதி₃ ஶப்₃த₃ங்களை வ்யுத்பத்தியைக் காட்டிப் பலவிடங்களில் நாரா யணபரமாகக் கொண்டிருப்பதையும், நாராயண ஶப்₃த₃த்தைக் குறிக்கும்போது அது ஸம்ஜ்ஞாவாசகம் என்பது தோற்ற "நாராயணாக்₂ய:" என்று குறிப்பதையும், "வாஸுதே₃வாக்₂ யம் பரப்₃ரஹ்மாபி₄தே₄யபூ₄தம்" என்று முதல் அத்யாயக் கடைசியிலும் (13-12)ல் "வாஸுதே₃வாக்₂யா" என்றும் வாஸு தே₃வஶப்₃த₃த்தையும் ஸம்ஜ்ஞாவாசகமாகக் குறிப்பதையும், இப்படித் தம் நூல்களில் எங்குமே "ஈஶ்வராக்₂ய:" "பரமேஶ் வராக்₂ய:" "ஈஶாநாக்₂ய:" "ஶிவாக்₂ய:" "மஹேஶ்வராக்₂ய:" என்று பரம்பொருளைக் குறிப்பதில்லையென்பதையும் காணலாம். பீடாதி₄பதி எடுத்திருக்கும் விஶ்வரூபத்தைப் பற்றி பா₄ஷ்யமிடும்போது "வைஷ்ணவம் ரூபம்" என்று ஆதிசங்கரர் தெளிவாக எழுதியிருக்கிறார்; இதற்கு முரணாக "அது ஈசுவர உருவம்தான்" என்று பீடாதி₄பதி எழுதுவதைப்பார்க்கும் போது, அவர் இப்படி எழுதிய ஆதி₃ஶங்கரத்₃ரோஹியான அப்பயதீக்ஷிதரின் மதத்தைப் பின்பற்றியவரேயொழிய ஆதி ஶங்கரரின் மதத்தைப் பின்பற்றுபவரல்லர் என விளங்கு கிறது. "ஈஶ்வர: ஶர்வ ஈஶாந:" என்று அமரகோசத்தில் சிவனையே ஈச்வரன் என்று சொல்லியிருப்பதைக் காட்டுகிறார். "ஸ்வாமீ த்வீஶ்வர: பதிரீஶிதா" என்று ஸ்வாமியாயிருப்பவர் அனை வர்க்கும் ஈஶ்வரன் என்னும் பெயர் உண்டு என்று அதே அமரகோசத்தில் காட்டியிருப்பதை மறந்துவிட்டாரா அல்லது மறைக்கவிரும்புகிறாரா என்று நமக்கு விளங்கவில்லை. சாஸ் திரங்களில் நாராயணனைக் குறித்து நூற்றுக் கணக்கான இடங்களில் ஈஶ—ஈஶ்வர—மஹேஶ்வர—பரமேஶ்வர ஶப்₃த₃ங் களை வழங்கியிருப்பதை இவரும் இவர் வழிவந்தவர்களும் காண மறுப்பது சிவபக்ஷபாதத்தாலும் விஷ்ணுத்₃வேஷத்தாலுமே என்பது நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும். "ஆரோக்₃யம் பா₄ஸ்கராதி₃ச்சே₂த் ஶ்ரியமிச்சே₂த் ஹுதாஶநாத் | ஈஶ்வ ராத் ஜ்ஞாநமந்விச்சே₂த் மோக்ஷமிச்சே₂த் ஜநார்த்த₃நாத்" என்பது ஆயிரம் வருடங்களாகப் பல சான்றோர்களால் கையா ளப்பட்டுள்ள புராணவசனம். ஸ்ரீவைஷ்ணவபூர்வாசார்யர்களும் இதைக் கையாண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ப₂லனைப் பெற விரும்புகிறவர்கள் ஒவ்வொரு தேவதையிடமிருந்து

http://acharya.org

அதைப்பெற முயல்வது ஸௌகர்யமாயிருக்கும் என்று கூறுவது இந்த ஶ்லோகம். முதல் பாதத்தில் ஸூர்ய னிடமிருந்து ஆரோக்₃யத்தையும், இரண்டாம் பாதத்தில் அக்₃னியிடமிருந்து செல்வத்தையும், மூன்றும் பாதத்தில் ஈஶ்வரனிடமிருந்து ஞானத்தையும், நாலாம் பாத₃த்தில் ஜநார்த்த₃னனிடமிருந்து மோக்ஷத்தையும் பெறவிரும்ப வேண்டும் என்று விதி₄க்கிறது இந்த ஶ்லோகம். பீடாதி₄பதி இந்த ஶ்லோகத்தின் நாலாவது பாத₃த்தில் "மோக்ஷமிச்சே₂த் ஜநார்த்த₃நாத்" என்று இருப்பதை எடுத்துவிட்டு "ஞான தாதா மஹேஶ்வர:" என்றும் பாட₂த்தைப்புகுத்துவது விஷ்ணு த்₃வேஷத்தினுலேயே என்பது நடுநிலையாளர்க்குநன்கு விளங்கும். மூன்ருவது பாதத்தில் "சிவனிடமிருந்து ஞானத்தை விரும்பவேண்டும்" என்று கூறியபின் நாலாவது பாதத்தி லும் "ஞான தாதா மஹேஶ்வர:" என்று அதையே கூறுவது புநருக்தியாகையாலே இப்பாடம் சிறிதும் பொருந்தாது. இப் படிப் பாடம் எந்த இடத்திலிருக்கிறது என்பதையும் காட் டாமல் எழுதியிருப்பதிலிருந்து பீடாதி₄பதியே உலகை வஞ் சிப்பதற்காக இப்புதுப் பாடத்தைக் கற்பித்துப் புகுத்துகிருர் என்று நாம் கருதவேண்டியுள்ளது. இல்லையேல் "கலைமகள்" நிர்வாகிகள் பீடாதி₄பதியைக் கேட்டு, இப்படி பாடம் எங் குள்ளது? என்பதைக் கலைமகளில் வெளியிடலாம். நிற்க. "ஈஶ்வர: ஸர்வ பூ₄தாநாம்" என்றும், "தமேவ ஶரணம் க₃ச்ச₂" என்றும் கீ₃தையில் [18—61. 62] கண்ணன் பரம் பொருளை ஈஶ்வரன் என்று குறிப்பிடும் இரண்டு ஶ்லோகங்களை எடுத்து, "ஈஶ்வரசப்தத்தைச் சொல்லும் போது 'அவன்' என்கி ருர் பகவான். மற்ற இடங்களில் நான் என்றே கூறுகிருர்" என்று சிவபரத்வவாத₃ம் செய்கிருர் பீடாதி₄பதி. இதுவும் ஆதி₃ஶங்கரப₄ாஷ்யவிருத்₃த₄ம். இவ்விடத்து ப₄ாஷ்யத்தில், 'ஸ்த₂ாநம் ச மம விஷ்ணோ: பரமம் பத₃ம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ் வதம்-நித்யம்" [விஷ்ணுவாகிற என்னுடைய நித்யமான பரமபத₃த்தை நீ அடைவாய்] என்று ஆதி₃ஶங்கரர் எழுது வதற்கு முரணுகப் பீடாதி₄பதி எழுதுவது ஆதி₃ஶங்கர த்₃ரோஹமா அல்லவா என்பதை நடுநிலையாளர்களே நிர்ண யிக்கவேண்டும். இப்போதைக்கு இவ்விமர்சனத்தை இத்துடன் நிறைவுபடுத்துவோம்.

http://acharya.org

K. ராஜகோபாலன், சென்னை-11.

56 "கம்பன் உணர்த்தும் பரம் பொருள் நிலை" என்னும் புத்தகம் (முரு பழ. இரத்தினம் செட்டியார் எழுதியது) அனுப்பியிருக்கிறேன். ஸுதர்சனத்தில் விமர்சனம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பத்தாவது சதகம் 13, 20, 21, 38 கேள்விகளின் பதில்களில் நம்மால் மறுக்கப்பெற்ற வாதங்களையே செட்டியார் சற்று விரிவாக இந்நூலில் எழுதியிருக்கிருர். தமிழில் பெரும் புலவரான கல்விக்கடல் திரு. T. V. கோபாலய்யர் அவர்களை நடுநிலை நின்று இந்நூலை விமர்சனம் செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அவரது மதிப்பீட்டை அடுத்து அச்சிடுகிறேன். இந்நூலை வெளியிட்டிருக்கும் சென்னைக் கம்பன் கழகத்தாரைக் குறித்துச் சி. கேள்விகளைக் கேட்டிருக்கிறேன். அது இந்தப் பதினேராவது சதகத்திற்கு அனுபந்தமாக இணைக்கப்படுகிறது.

கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை — ஒரு மதிப்பீடு

[கல்விக்கடல் திரு தி. வே. கோபாலய்யர், பாண்டிச்சேரி]

திருவாளர் முரு. பழ இரத்தினம் செட்டியார் என் இனிய நண்பர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அவரை அடிக்கடிப் புதுக்கோட்டையில் சந்தித்து அவரோடு அளவளாவும் வாய்ப்புப் பெற்றுள்ளேன். அவருக்கு அவதாரப் பெருமானும் பரமபதப்பெருமானும் வேருனவர் என்ற எண்ணம் அப்பொழுதே உண்டு. மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவபெருமானும் பரசிவமும் வேருனவர்கள் என்று கருதும் சைவப் பெரியாராகிய அவர் இத்தகையதொரு நிலை திருமாலிடத்தும் இருக்கலாம் என்று கருதுகிருர் போலும். தம்முடைய இத்தகைய அபூர்வமான கொள்கைக்கு ஒரு வடிவம் கொடுத்து "அக்கொள்கை கம்பர் பெருமானுடைய கருத்தேயாகும். அக்கருத்து ஆழ்வார்களுக்கும் உகந்ததே. பிற்காலத்தவரான அருளிச்செயல் உரையாசிரியர்கள் இக்கருத்தை மறைத்து விட்டனர்" என்று அவர் வரைந்து விளக்கியுள்ள இந்த அபூர்வநூலினை முழுதும் ஒருமுறை வாசித்தேன். அவர் கூறிய கருத்துக்களின் சுருக்கத்தை வரைந்து, அக்கருத்துக்களை நிறுவுவதன்கண் அவருக்கு ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளை மாத்திரம் சுருக்கமாக வரைந்து காட்டுகிறேன்.

http://acharya.org

பக்கம்-33:- பரநிலை என்பது திருமால் பரமபதத்தில் அதாவது வைகுந்தத்தில் தேவியர் சமேதனாக வீற்றிருக்கும் நிலையாகும். அவன் அங்கிருந்தே படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்வதில்லை. அவதாரம் எடுப்பதில்லை. எல்லா ஆற்றலும் நிறைந்தவனாகக் காலம் இடம் கடந்தவனாக எல்லாக்கடவுளர்க்கும் தலைவனாக நித்தியசூரிகளும் முத்தர்களும் புடைசூழ அவர்களுக்கு அருள்பாலிப்பதே அவன் தொழிலாகும். பாற்கடலில் உள்ள திருமால் தான் அவதாரம் எடுப்பார். பரநிலையில் இருக்கும்போது அவரைப் பரம்பொருள் என்றும் பரந்தாமன் என்றும் வைணவம் சொல்லும். அவரையே வியூகநிலையில் பாற்கடல் பெருமான் என்று சொல்லும். பாற்கடலில் உள்ள திருமால் காலம் இடம் முதலியவற்றைக் கடக்காமல் அவற்றுக்கு உட்பட்டுச் செயலாற்றுவார். இவ்வாறு செயலாற்றினாலும் அவரேதான் தலைவராவார்.

பக்கம்-34:- பரநிலையில் உள்ள பெருமான் தன் ஆற்றலை வேண்டும் என்றே குறைத்துக் கொண்டு பாற்கடல் பெருமானாக விளங்குகிறான். இருவரும் பொருளால் ஒருவரே என்பதை மறக்கக்கூடாது. ஆனால் ஆற்றலில் இருவருக்கும் வேறுபாடுண்டு. பரம்பொருள்பெருமான் வியூகநிலைப் பெருமானைவிட ஆற்றலில் மேம்பட்டவராவர். இராமன் பாற்கடல் பெருமான் நிலையிலிருந்து அவதரித்திருந்தாலும் இராவணனைச் சங்கரிக்கவேண்டும் என்பதற்காகப் பரம்பொருள் பெருமானின் ஆற்றலைத் தன்னுள் வாங்கிப் பிறந்திருக்கிறான். சிவன் பிரமன் ஆகியோர் இராவணனுக்குக் கொடுத்த வரங்களைத் தவிடுபொடி ஆக்குவதற்கே பாற்கடல் பெருமான் பரம்பொருள் பெருமானின் ஆற்றலை மேற்கொண்டு இராமனாக அவதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பக்கம்-35:- பாற்கடல் பெருமானையும் பரம்பொருள் பெருமானையும் வைணவம் வேறுபடுத்திப் பேசுவதில்லை. பொருளால் ஒன்றாக இருப்பதால் இருவரையும் ஒரேவிதமாகவே அவை பெரிதும் பேசும். 'முப்பரம்பொருளிற்குள் முதலை மூலத்தை' (1227) என்னும் பாடலில் திருப்பாற்கடலமுதமாகிய திருமால்தான் மூலப்பரம்

http://acharya.org

பொருள் என்று கம்பன் சொல்லியிருப்பதும் இவ்வொற்றுமை பற்றியேயாகும். வைஷ்ணவ சித்தாந்தத்தின்படி பரநிலைப்பெருமானை வியூகநிலைப் பெருமானை விட மேம்பட்டவனாகச் சொல்லுவதில் தவறில்லை.

பக்கம்-37:- இலக்குமி பரநிலையிலும் வியூக நிலையிலும் ஒரே விதமாகவே இருப்பவள் ஆதலின் சீதாப் பிராட்டியைக் கம்பன் இருவேறு வகைப்படுத்திப் பேசவில்லை.

பக்கம்-38:- வியூகநிலைத்திருமால் சிவனையும் பிரமனையும் தம்முள் ஒடுக்கிக்கொண்டு ஆலிலையில் பள்ளிகொள்ளுகிறார். பரநிலையில் திருமால் சிவனையும் பிரமனையும் தம்முள் இணைத்துக்கொண்டு ஓர் உருவாக என்றும் விளங்குகிறார்.

பக்கம்-39:- 'மூலத்து ஒருவராம் இருவர் தம்மை' (1290)* என்ற தொடர் ஆராய்ச்சிக்குரியது. மூலநிலையில் அதாவது பரம்பொருள் நிலையில் சிவனும் திருமாலும் ஒருவராகவே இணைந்திருக்கின்றனர். வியூகநிலையில் அவர்கள் இருவராகப் பிரிந்திருப்பதனை வைத்து, பிரமன் அவர்களுக்குள் போர் மூட்டிவிட்டான்.

பக்கம்-40:- காலமும் கணக்கும் நீத்தகாரணனாகிய பரம், பொருள் புறத்தே தாங்கிக் கொண்டிருந்த சூலத்தையும் சக்கரத்தையும் கமண்டலத்தையும் விட்டு இங்கு இராமனாக வந்திருக்கின்றான்.

பக்கம்-41:- வைஷ்ணவ சித்தாந்தப்படி கம்பர் மூன்று வகைப்படுத்திப்பேசியிருக்கிறார்.

பக்கம்-42 'சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய, மூலம் வந்துதவிய மூவர்க்காயினும், காலம் என்று ஒருவலை கடக்கலாகுமோ?' (2447)*

மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்திருக்கின்ற மூலப்பொருளாகிய பரம் பொருள் வந்து உதவினாலும் தனித்தனி உள்ள அம்மூன்று மூர்த்திகளும் காலத்தைக் கடக்க முடியாது. வியூகநிலைத்திருமால் தாமே ஸங்கற்பித்துக் கொண்ட நியதி

* கம்பன்கழகப்பதிப்பின்படி எண்கள் தரப்பெற்றுள்ளன.

http://acharya.org

யின்படி காலத்திற்குக் கட்டுப்படவேண்டியவர் ஆகிருர். பரம்பொருள் நிலையிலுள்ள திருமால் காலம கடந்தவர். அவர் வந்து உதவினுலும் நியமித்துக்கொண்ட விதியை யாரும் மீறமுடியாது ஆதலின் காலத்தைக் கடக்கமுடியாது என்று இப்பாடல் கூறுகிறது. மூலப்பொருள் மூவரும் சேர்ந்த நிலையில் இருக்கும் என்பதற்கு இப்பாடல் ஓர் ஆதாரம்.

பக்கம்–43:- 'மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ' (3682) மூளரிமேல்வைகுவான் (3917) மூவரும் இணைந்து ஒன்ருனல்தான் இராமனுகிய உனக்கு ஈடு; தனியே பார்த்தால் திருமால் உள்ளிட்ட மூவரும் உனக்கிணை இல்லை. மூவரும் சேர்ந்தநிலை பரம்பொருள் நிலை ஆதலின் பரம்பொருள் இராமனுகிய உனக்கு அந்நிலைதான் ஈடு.

பக்கம்-46:- சுக்கிரீவனை ஆழ்வார் நிலையில் வைத்து வைணவர் போற்றுகின்றனர். 1. திருமால் இராமன் அவதாரம், 2. இராமன் திருமாலுக்கு மேம்பட்டவன், 3. இராமன் திருமால் உள்ளிட்ட மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவன் 4. இராமன் மும்மூர்த்திகளும் சேர்ந்த பரம் பொருள் வடிவம். பரநிலையில் திருமால்தான் தலைவர். அவர் தன்னில் இருவரையும் இணைத்துக்கொண்டு பரிபூரண சுதந்திரத்தோடு விளங்குகிருர்.

பக்கம்-64:- வேதமதம் திருமாலுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றது. திருமாலுக்கு இரண்டு நிலையை வகுத்தார்கள். இரண்டு நிலையிலும் திருமாலே தலைவன். கீழ்நிலையில் பாற்கடலில் பள்ளி கொண்டு காத்தல் மட்டும் செய்து தன்னிலிருந்து சிவனையும் பிரமனையும் பிரித்துப் படைத்தல் அழித்தல் தொழில்களைப் செய்யுமாறு ஏவுகிருன்.

பக்கம்-65:- பரமபதத்தில் இலக்குமி ஸமேதனுய் இருக்கும் திருமால் சிவனையும் பிரமாவையும் தன்னுள் இணைத்துக்கொண்டு இருக்கும் நிலையில் அவர்களைப் போற்ற வேண்டுமேயன்றித் தாழ்த்தக் கூடாது என்று ஆழ்வார்கள் சொன்ஞர்கள். மூர்த்திகளைப் பொறுத்தவரையில் ஆழ்வார்சித்தாந்தத்திற்கும் ஆசார்யர்கள் சித்தாந்தத்துக்கும் வேறுபாடுஉண்டு.

http://acharya.org

பக்கம்-69:- பரநிலையில் உள்ள திருவுருவையே வேங்கடா சலபதி மீது ஏற்றி ஆழ்வார்கள் பாடியுள்ளார்கள். கங்கையான் நீள்கழலான் காப்பு - இருவரும் சேர்ந்து காக்க வேண்டும் என்பதால் பரநிலையில் உள்ள பரமபதப்பெருமானையே இங்கு ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

பக்கம்-81:- உடம்பு உருவில் மூன்று ஒன்றாய் — திருமால் உடம்பில் மூன்று உருவும் ஒன்றாய் விளங்குகிறது.

பக்கம்-87:- மனப்பட்டது ஒன்றே - மனப்பட்ட ஒன்றே- என்னவில்லை. நீங்கள் மூவரையும் வணங்கினாலும் மூவரும் ஓருருவாய் விளங்குவதால் உங்கள்மனப்பட்டது ஒருவடிவமே என்பது பொருள். மூவராய் இருக்கும் பரநிலைப் பெருமானை இறைஞ்சுமின்.

பக்கம்-88:- இருபசை-அகப்பற்று புறப்பற்றுக்களே.

பக்கம்-92:- சிவனையும் நான்முகனையும் சிறப்பித்துச் சொல்லுகின்ற இடங்களெல்லாம் அந்தர்யாமியாய் நிற்கும் ஒற்றுமைபற்றிக் கூறப்படாமல், பரநிலையில் ஒன்றாய் நிற்கும் நிலைபற்றியே கூறப்பட்டுள்ளது.

பக்கம்-125:- உலகம் யாவையும்—பரநிலைப்பாட்டு
சிற்குணத்தர்—வியூகநிலைப்பாட்டு

இவ்வாறு செட்டியார் அவர்கள் அபூர்வமாக எழுதியுள்ள பல செய்திகளையும் ஒன்றொன்றாக எடுத்து ஆராயப்புகின் அவ்வாராய்ச்சியே ஒரு நூலாக விரியுமாதலின் அபூர்வக் கருத்துக்கள் வலியுடையன அல்ல என்பதனைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.
நற்றிணைக் கடவுள் வாழ்த்துப்பாடல் திருமாலை

'இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப

தீதுஅறவிளங்கிய திகிரியோனே' — எல்லாப் பொருள்களிலும் உடல்மிசை உயிரெனக் கரந்து பரந்திருக்கும் நுண் நிலையையும் எல்லாப்பொருள்களையும் தன்னுள் அடக்கிக்

http://acharya.org

கொண்டிருக்கும் பெருவடிவாகிய பருநிலையையும் ஒரேநேரத் தில் உடையவனாகிய, தீமைகள் கெட ஒளிவடிவாக விளங் கிய சக்கரப்படையை உடையவனே வேதத்தால் முதற் கடவுள் எனப்போற்றப்படுபவன் — என்று குறிப்பிடுகிறது. என்பஎன்பது அசையாகவும் வரும் என்பதைச் சங்க இலக்கியம் பயின்றார் நன்கு அறிவர்.

வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்—பரி-2-24-25

என்பதனால் திருமால் உடல்மிசை உயிரெனக் கரந்து பரந் திருக்கும் செய்தி வேதம் கூறும் செய்தி என்பது புலப் படுகிறது.

தீவளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும் அறனும் ஐவரும்
திதியின் சிறாரும் விதியின் மக்களும்
மாசுஇல் எண்மரும் பதினொரு கபிலரும்
தாம்மா இருவரும் தருமனும் மடங்கலும்
மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும்
மாயோய் நின்வயின் பரந்தவை உரைத்தேம்
மாயா வாய்மொழி உரைதர வலந்து — பரி—3-4...10

என்பதனால் அவன் உயிருடைய பொருள் உயிரற்றபொருள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய பருவடிவினன் என்று வேதம் கூறும் செய்தி புலப்படுகிறது. அப்பெருமான்

நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம் -பரி-15-15, 16

என்பதனாலும் பிறவிப்பிணி அறுத்து வீட்டின்பம் நல்குபவன என்பது பெறப்படுகிறது.

மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மாஅயோன்—பரி—3-2,3

என்பதனாலும்,

அரிதின் பெறு துறக்கம மாலிருங்குன்றம்
எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப-பரி-15-17, 18

http://acharya.org

என்பதனுல் எம்பெருமான் அர்ச்சாவதாரவடிவினனுய் இருக்கும் நிலையில் வீட்டின்பத்தைப் பெற எளிதில் நமக்கு வாய்ப்பளித்திருக்கும் செய்தி புலப்படுகிறது.

தேயா விழுப்புகழ்த்தெய்வம் பரவுதும்—கலி-103-76

தொல்கதிர்த் திகிரியாற் பரவுதும்—கலி-104-78

பாருதமிழ் பரப்பகத்து அரவணை அடைகிய

ஆடு கொள் நேமியாற் பரவுதும்—கலி 105-71, 72

என்பதனுல் தேயாவிழுப்புகழினனுய்த் திகிரி ஏந்திய பெருமானே அராவணை அமலன் என்பது போதருகிறது.

'கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா;
ஆழி முதல்வ! நிற் பேணுதும் தொழுது' பரி-2-16...19

என சக்கரம் ஏந்திய முதற்பொருளாகிய திருமால் பன்றி முதலிய பிறப்புக்கள் எடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

பொருவேம் என்பவர் மதம் தபக் கடந்து
செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்!
இருவர் தாதை! இலங்கு பூண் மா அல்
தெருள நின்வரவு அறிதல்
மருள் அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே பரி-1-29..33

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ;
நலம் முழுதளைஇய புகர்அறு காட்சிப்
புலனும் பூவனும் நாற்றமும் நீ!
வலன் உயர் எழிலியும் மாகவிசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ
அதனுல்
இன்னோனை இனையை யாலென
அன்னோர் யாம் இவண் காணுமையின்
பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை ஆதலின்
நின்னேரனையை நின் புகழொடும் பொலிந்தே
பரி-1-46...57

http://acharya.org

என்பதனுல் எல்லாப் பொருளுள்ளும் உடல்மிசை உயிராகக் கரந்து அவற்றைச் செயற்படுத்தும் நேமியானுக்கு உவமை என்பதேஇல்லை என்பது பெறப்படும்.

இப்பழம் பாடல்களால் வீறு பெறு துறக்கநிலை, பாற் கடலில் பள்ளி கொண்ட நிலை, அவதார நிலை, அர்ச்சை நிலை, அந்தர்யாமி நிலை என்ற எம்பெருமானுடைய ஐவகை நிலை களிலும் ஏற்றத்தாழ்வுற்று இருப்பதாக நம் முன்ஞேர் கருதாமை புலப்படும்.

உலகம் யாவையும் — பரநிலை பற்றிய பாடல் (பக்கம் 125)

பக்கம் 33-ல் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல் களைப் பரநிலைப் பெருமான் செய்வதில்லை என்று கூறும் செட்டியார் முத்தொழில்களை விளையாட்டாகச் செய்பவனே தலைவன் என்ற இப்பாடலைப் பரநிலை பற்றியது என்று கூறுவது யாங்கனம்? பரநிலைப் பெருமான் அவதாரம் எடுப்ப தில்லை என்று கூறும் இவர், சித்தாசிரமத்தில் 'எங்கள் நான் மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண் மால் இருந்து மேல் நாள் தவம் செய்து (408) பின் வாமனனுய் அவதரித்தான்' என்ற கம்பர் கூற்றிற்கு யாது விடை கூறு வாரோ!

எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியாய் எல்லா உயிர் களையும் இயக்கும் பெருமான் ஒரு சிலருக்கு மாத்திரம் பரம பதத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிருன் என்பது அவன் எல்லோருக்கும் இறைவன் என்ற நிலைக்கு இழுக்குத்தாராதா? நித்தர் முத்தர்களுக்குப் பரமபதத்திலும், தேவர்களுக்குப் பாற் கடலிலும் இருந்தும் நிலவுலக உயிர்களுக்கு ஊழி தோறும் அவதாரம் எடுத்தும், அவதார காலத்துக்குப் பிற்பட்டாருக்கும் உதவத் திருப்பதிகளில் திருமேனி தாங்கிய அர்ச்சா மூர்த்தியாய் இருந்தும், எல்லாக் காலத்தும் எல்லாப் பொருள் களிலும் அந்தர்யாமியாய் இருந்தும், உலகை நடத்தும் எம்பெருமானைப் பற்றிப் பூர்வர்கள் கூறிய இச்செய்திகளை விடுத்து அபூர்வமான பரநிலை விளக்கம் செட்டியார் தருவதற்கு உரிய சான்று நூல்கள் யாவை என்பது புலப்படவில்லை.

http://acharya.org

பாம்பணைமேல் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்
காம்பணைதோள் பின்னைக்கா ஏறு உடன் ஏழ்
செற்றதுவும்
தேம்பணைய சோலை மராமரம் ஏழ் எய்ததுவும்
பூம்பிணைய தண் துழாய்ப் பொன்முடியம் போரேறே-
2835

முதலிய 'அந்தாமத்தன்பு' 2-5 என்ற திருவாய்மொழி ஒன்றே பரநிலை எம்பெருமானே வியூக, விபவ நிலைகளிலும் இருப்பவன் என்பதனைப் பெறப்படுத்தும். 'அணைவது அரவணை' என்ற 2-8ஆம் திருவாய் மொழியைக் கூர்ந்து நோக்கினும் பரநிலைப்பெருமானே ஏனைய நிலைகளிலும் உள்ளான் என்பது புலனாகும்.

பக்கம்–34. பாற்கடலிலுள்ள பெருமான் காலத்தைக் கடவாதவர் எனின் அவருக்கு அழிவு உண்டு. இதனை எந்த நூல் சான்று கொண்டு செட்டியார் அபூர்வமாக எடுத்துரைக்கிறாரோ?

'பாற்கடல் பெருமான் ஏனைய சிவன் பிரமன் இவர்களுக்குத் தலைவர். ஆனால் இவர்கள் வழங்கிய வரங்களை அழிப்பதற்குப் போதிய ஆற்றலின்மையின் பரநிலைப் பெருமானிடம் ஆற்றல் கொண்டு அவதரிக்க வேண்டியவரானார்.' தமக்குக் கீழ்ப்பட்டார் வழங்கிய வரங்களைப் போக்கும் ஆற்றலில்லாதவர் தலைவர் என்று சொல்லப்படுவது பொருந்துமா? தமக்குக் கீழ்ப் பட்டார் தரும் வரங்களைப் போக்கும் ஆற்றலற்ற ஒருவரைத் தம்மிலிருந்து தலைவராகப் பரநிலைப் பெருமான் அமைப்பாரா? வரங்களைப் பெற்றதனால் தவறாக நடக்கும் சேதனரைத் திருத்துவதற்குப் போதிய வலிமையற்ற ஒருவரைப் படைப்பது எம்பெருமான் இறைமைக்கு இழுக்குத் தாராதா?

பக்கம்–35. வைணவர் வேறுபடுத்திப் பேசாத, செட்டியார் கற்பனையில் வேறு வேறாயமைந்த பாற்கடல் பெருமான் பரம் பொருள் பெருமான் என்ற அபூர்வ ஆராய்ச்சியின் உட்கிடையும் பயனும் இவை என்பது புலப்படவில்லை.

பக்கம்–38 வியூக நிலையில் திருமால் சிவனையும் பிரமனையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு ஆலிலையில் பள்ளி வளர்கிறான் என்கிறார் செட்டியார். 'உலகு ஏழும் உண்டு பள்ளி ஆலிலையில் துயில்

http://acharya.org

கொள்ளும் வள்ளல்' எனப்படும் திருமால் அவ்விருவரை மாத்திரம் அல்லாமல் எல்லா ஆன்மாக்களையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு துயில் கொள்ளுகிறன். ஆலிலையில் பள்ளி கொள்ளும் நிலைவேறு. அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசைத் துயில் கொண்டு தேவர் முனிவர் ஆகியோர் குறைகேட்டுத் தீர்க்கும் நிலையே எம் பெருமானின் விபவநிலை. இதனை 'என்னனையமுனிவோரும்' (321) என்ற பாடலாலும் உணரலாம். பரநிலையில் திருமால் சிவனையும், பிரமனையும் தன்னுள் இணைத்துக்கொண்டுள்ளான் என்பதற்கு 'மூலமும் நடுவும் ஈறும்' (5884) என்ற பாடலை எடுத்துக்காட்டும் செட்டியார், மும்மூர்த்திகளின் இருப்பிடமாக இப்பாடலில் ஆலம் மலர், வெள்ளிப் பொருப்பு என்பனவற்றைச் சுட்டியிருப்பதனுல் அவர்கள் எம்பெருமானேடு இணைத்துக் கொள்ளப்படவில்லை என்ற தெளிவான செய்தியை உள்ளங்கொள்ளாமை வியப்பாக உள்ளது.

பக்கம்-38 வியூக நிலைத் திருமால் சிவனையும் பிரமனையும் தம்முள் ஒடுக்கிக் கொண்டுள்ளார் என்று கூறும் செட்டியார், வியூக நிலையில் அவர்கள் இருவராகப் பிரிந்திருப்பதனை வைத்துப் பிரமன் அவர்களுக்குள் போர் மூட்டிவிட்டான் என்று கூறுவது மாறு கொளக்கூறலாகாதா? தம்மைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் தலைமையாளனேடு ஒடுக்கப்பட்ட தலைமையில்லாதவர் போர் மூட்டி விடுதலும் போரிடுதலும் தோல்வி நிச்சயம் என்று அறிந்து செய்யும் பொருத்தமற்ற செயல்கள் அல்லவா? மும்மூர்த்திகளுள் சிவபெருமானைப் பரம் பொருளாகவும் திருமாலைப் பரம் பொருளாகவும் கொண்டு வழிபடுவார் பலராதலின் அவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர் அல்லர் என்பதனை உலகுக்கு அறிவிக்கப்பிரமன் விளையாட்டாக ஒரு விற்போரை நிகழ்வித்தான் என்பதே கருத்து அன்றே?

பக்கம்-42. மூலம் வந்து உதவிய மூவர்க்கு—உதவிய என்பதற்கு உதவினுலும் என்று பொருள் செய்வதற்குத் தமிழ் இலக்கணம் இடம் தருமா? உதவிய என்ற பெயரெச்சம் மூவர் என்ற பெயருக்கு அடையாக அமையவில்லையா?

செட்டியார் குறிப்பிடும் கம்பர் பாடல்கள் யாவும் உலகியலை நோக்கிப் பாத்திரங்கள் வழக்கமாகப் பேசக்கூடிய மரபைப் பின்பற்றிக் கூறப்பட்டனவேயாம்.

சீலமும் தருமமும் (2447) என்ற பாடற்செய்தி, வசிட்டர், தந்தையை இழந்த இராமனுக்கு அவனை மனிதனுக வைத்து ஆறுதல் கூறவேண்டிய இடத்தில் வந்துள்ளது.

http://acharya.org

'புறத்து நாம் ஒரு பொருள்' (1349) என்ற பாடற் செய்தி, மகனிடத்து அளவு மீறிய பாசம் கொண்ட தசரதனிடம் இராமன் நல்ல மன்னனாக விளங்குவான் என்பதனை உபசார வழக்கால் வசிட்டர் கூறியது. அநுமனால் இராமன் யாவன் என்பதனை 'சங்கு சக்கரக்குறி' (3859-62) முதலிய பாடற் செய்தி கொண்டு உணர்த் தப்படவேண்டியவனானான்; வைணவர்களால் ஆழ்வார் என்று அழைக் கப்படாமல் மகாராசர் என்ற பெயராலேயே அழைக்கப்படும் சுக்கிரீவன் சீதையின் அணிகலன்களைக் கண்டு வருந்திய இராம னுக்கு ஆறுதல் கூறிய இடத்துக்குறிப்பிடும் 'முளரிமேல்வைகுவான்' (3917) என்ற பாடற் செய்தி முகமனே அன்றிப்பிறிதில்லை.

பிரமனும், சிவனும் தனக்கு வரங்கொடுத்த காரணத்தால் மும் மூர்த்திகளும் தங்கள் வலிமையை வெளிப்படுத்தாது இருந்த நிலையை வரம் பெற்ற செருக்கினால் மறந்து, வீடணன் கூறிய நற்செய்திகளை மனங்கொள்ளாது (6145-6168) 'தேவரில் பெற்ற வரத்தினது' (6175, 83, 86) முதலிய பாடல்களால் தனக்கு வரம் அளித்த சிவபெருமானையும் பலமுறை பொருது துரத்தியதாகக் கூறும் இராவணன் 'சிவனோ அல்லன்' (6837) என்ற பாடலில் திருமால் தன்னை வெல்லும் வலிமையற்றவன் என்று கருதிய தவறான கருத் தினால் தான் திருமாலின் வேறாக வேத முதற்காரணன் ஒருவன் இருக்கிறானோ என்ற ஐயத்தில் பேசுகிறான்.

அனுமன் ஒருகால் இராமனுடைய ஆற்றலைப் பலவகையாகக் கூறினால் இராவணன் திருந்தி இலங்கையை அழியாமல் காத் துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படலாம் என்ற கருணையால் (5878—85) என்ற பாடல்களில் அவன் பேராற்றலைப் பலவா றாக விரித்துக்கூறி, இராவணன் வெல்லுதற்கு வரம் பெறாத மா னுடனாக அவன் அவதரித்துள்ளதைக் காட்டியுள்ள இடத்தில் "மூலமும் நடுவும்" (5884) என்ற பாடலுக்கு முதற்பாடலில் 'போர் அணங்கு இடங்கர் கவ்வப் பொதுநின்று முதலே என்ற வாரணம் காக்கவந்தான் அமரரைக்காக்கவந்தான்' (5883) என்று குறிப்பாக இராமன் கசேந்திரவரதன் என்று குறிப்பிட் டுள்ளதனைச் செட்டியார் உள்ளத்துக் கொண்டால் பரநிலை பற்றிய ஐயத்திற்கே இடம் இராது. கசேந்திரனைக்காத்தவன் வைகுந்தத்தில் தனித்திருக்கும் பெருமான் மூன்றுகவடாய் இருந்த பெருமான் அல்லர். கஜேந்திரனைக் காத்தவர்செயல் தனி அவதாரம் அன்று. கசேந்திரனைப்பற்றிக் கம்பர் பெருமான்

http://acharya.org

குறிப்பிடும் கரமலேய (296) எனக் கவிக்கூற்ருலும், 'மாடுபற்றி' (4051) 'போதகம் ஒன்று கன்றி' (6474) முதலிய இராமன் கூற்ருலும், 'எந்தாய் பண்டு' (6281) என்ற பிரகலாதன் கூற்ருலும்—கசேந்திரனேக் காக்கவந்த வைகுந்தப்பெருமான் தனித்ததோர் உருவினனே என்பது தெரியப்படும்.

சாபவீடு பெற்ற கவந்தன் உவகை மேலீட்டால் முடிவாக ஏதும் உணர இயலாதவனுய் 'மூன்றுகவடாய் முளேத்தெழுந்த மூலமோ?' என்ற ஐயநிலே ஏகாரத்தால் கூறியதனே வைத்துக் கொண்டு ஆராயும் செட்டியார். வீடுபேறடைந்த வாலி, வசிட்டன், வீடணன், சடாயு, பிரகலாதன் ஆகியோர் கருதியவற்றை நோக்கினுல், பரம்பொருளின் அவதாரமாகிய இராமனே நான்கு நிலேகளில் காணவேண்டிய தேவை ஏற்படாது.

யான் தவம் உடைமையில் இவ்விறுதி வந்து இசைந்தது
யார்க்கும்
சான்றென நின்றவீரன் தான் வந்து வீடு தந்தான்
-வாலி (4088)

எங்கள் செய்தவத்தினில் இராமனென வந்தோன்
சங்கினெடு சக்கரம் உடைத்தனி முதற்பேர், அங்கண் அரசு
-வசிட்டன் (1148)

தன்னின் முன்னிய பொருளிலா ஒதனித் தலேவன்
அன்னை மாறுடன் ஆகிவந்து அவதரித் தமைந்தான்—
வீடணன் (6181)

பஞ்சனே பாம்பணேயாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே இராமன் -சடாயு (3457)

தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து அவை
தன்னுள்ளே நின்று தான் அவற்றுள் தங்குவான்
பின் இலன் முன் இலன் ஒருவன் பேர்கிலன்
தொன்னிலே ஒருவரால் துணியற்பாலதோ-பிரகலாதன் (6247)

பக்கம்-87 ஆழ்வார்கள் பாசுரங்களே முன்பின் பாசுரங்களோடு இணேத்து உளம் கொண்டு நோக்கின் அவர்கள் மறந்தும் புறந்தொழார் என்பதும், எம்பெருமானுக்கும் ஏனேயபொருள்களுக்கும் உரிய சரீரி சரீரி பாவமும் தெளிவாகப் புலப்படும்.

பக்கங்கள் பல்குமென அஞ்சிச் சுருக்கிச் சில நோக்கினேன். செட்டியார் அவர்களின் புதுக்கருத்துக்களின் ஒவ்வாமையை அறிஞர் உலகம் உணரும் என நம்புகிறேன்.

http://acharya.org

அர்மாள் S. திருவேங்கடாசாரியர், ஸ்ரீரங்கம்.

57. சென்ற இதழில் வெளிவந்த 56வது கேள்வி பதிலுக்கு அநுபந்தமாக வெளியிடப்பட்ட கேள்விகளுக்குக் கம்பன் கழகம் ஏதேனும் பதில் கூறியுள்ளதா?

சென்ற இதழ்—சென்னை கம்பன் கழகத்தலைவர் திரு மு. மு. இஸ்மாயில் அவர்களுக்கும், கழகக் காரியதரிசி அவர்களுக்கும், புதுக்கோட்டை, காரைக்குடி முதலானவிடங்களிலுள்ள கம்பன் கழகங்களுக்கும், முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களுக்கும், மற்றும் பலருக்கும் அனுப்பப் பெற்றது. கம்பன் கழகங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து யாதொரு பதிலும் இல்லை. முரு. பழ. இரத்தினம் செட்டியார் கம்பன் கழகத்தார் நம் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தொடங்கினால் தமது நூலின் சாயம் வெளுத்து விடுமாகையாலே, குறுக்கு வழியில் வெற்றி பெறலாம் என்று நினைத்து, தமது நண்பர்கள் இருவர் நாம் நமது கேள்விகளை வெளியிடுவதற்கு முன்னமே 1991 செப்டம்பர் 25, 27 தேதிகளில் தமக்கு எழுதிய பாராட்டுக்கடிதங்களைத் தம் நண்பரான ஸ்ரீ சி.இராமநாதப்பச்செட்டியார் (85G-, காமராசர் சாலை மதுரை-9) என்பவருக்கு அனுப்பி, அக்கடிதங்களின் நகல்களை நமக்கு அனுப்பச் செய்து, அவரை ஒரு கடிதம் எழுதவும் செய்திருக்கிறார். "சிவமயம்" என்று தலைப்பிட்டு அவர் எழுதிய கடிதத்தில் செட்டியாருக்கு ஆதரவாகச் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. நிற்க. சென்ற இதழில் நமது கேள்விகளையும், கல்விக்கடல் திரு கோபாலய்யர் அவர்கள் மதிப்பீட்டையும் பார்த்தபின்பு நூற்றுக்கணக்கான ஸுதர்சனம் வாசகர்கள் கடிதம் மூலமாகவும் நேரிலும் அவற்றைப் பாராட்டியுள்ளனர். ஒரு சில கடிதங்களின் சாராம்சத்தை அளிக்கிறேன். சென்னை ஸ்ரீ வைணவ மஹா சங்கம் பொருளாளர் T. பக்தவத்சலம் அவர்கள் "கம்பன் கழகத்தைக் குறித்துச் சில கேள்விகள் கேட்டு எழுதியுள்ளதைப் படித்தேன். ஸ்வாமிகள் இல்லாவிட்டால் வைணவத்தைத் தாக்கி எழுதுபவர்களைக் கேள்விகேட்பவர்கள் இல்லை.

http://acharya.org

இல்லவே இல்லை. தங்களுக்குப் பல்லாண்டு பாடுகிறேன்'' என்று எழுதியுள்ளார். ஸ்ரீரங்கத்திலிருக்கும் கம்பராமாயணச் செம்மல் ஸ்ரீ K. கல்யாணராமன் அவர்கள் "தாங்கள் கம்பன் கழகத்திற்கு எழுதியிருப்பது சரியானதே. கம்பனைச் சைவனுக்க முயற்சித்தது பலிக்காததால் இப்படி எழுதுகிறார்கள்'' என்று எழுதிப் பல கம்பராமாயணப் பாடல்களை ஆதாரமாகக்காட்டு கிறார். இவர் கம்பராமாயணத்தையும், வில்லிபாரதத்தையும் சொற்பொழிவாற்றித் தமிழகம் எங்கும் பிரசாரம் செய்யும் ஸ்மார்த்த உபன்யாசகர். மு. ந. பேரருளாளன் (25-C, பண்ணையார் காம்பவுண்டு, சத்திரம் புதுக்களம், தச்சநல்லூர்.) அவர்கள் "ஸ்வாமியின் இந்த மாதம் (526) பத்திரிகையை அடியேன் படித்துப்பார்த்தேன். ஸ்வாமி எழுதிய பதினான்கு பக்கமும்,பாண்டி திரு. T.V. கோபாலய்யர் எழுதியபன்னிரண்டு பக்கங்களும் படித்து அறிந்தேன். சென்னை கம்பன் கழகத்தார் இவைகளைப் பார்த்தாவது திருந்துவார்களாக'' என்று எழுது கிறார். பள்ளத்தூர் T.ரங்கராமானுஜய்யங்கார்'' சென்னை கம்பன் கழகத்திற்கு விட்டிருக்கும் கேள்விக்கணைகளை முற்றும் படித்துப் பேரின்பம் எய்தினேன். இவ்விடம் இருக்கும் தமிழ் விதவான் திரு. க. வே. ராமநாதனும், அவரது பத்தினி Dr. சரஸ்வதி ராமநாதனும் மிகவும் ரசித்தார்கள்'' என்று எழுதியுள்ளார். Dr. சரஸ்வதி ராமநாதன் தமிழகமெங்கும் கம்பராமாயணத்தைப் பெருங் கூட்டங்களுக்குச் சொற்பொழி வாற்றுபவர் என்பது அனைவரும் அறிந்ததே. இக்கடிதங் களைக்கொண்டு வெற்றி பெறுவதற்காக நாம் இவற்றை வெளியிடவில்லை. மதுரை திரு. நாகப்பச் செட்டியார் தாம் அனுப்பியிருக்கும் கடிதங்களை ஸுதர்சனத்தில் வெளியிட வேண்டும் என்று எழுதியிருப்பது பயனற்றது என்பதை விளக்கவே இவற்றை வெளியிட்டோம். திரு. நாகப்பச் செட்டியாருக்குப் பின்வரும் கடிதத்தையும் எழுதியிருக்கிறோம்.

ஸ்ரீ. சி. இராம. நாகப்பச் செட்டியார்; (மதுரை) அவர்களுக்கு,

அன்புடையீர், 16 — 10 — 1991 தேதியிட்ட தங்கள் கடிதம் கண்டேன். எனது கேள்விகளைப் பாராட்டியும், அக் கேள்விகளுக்கு எவர் பதிலளிக்கத் தொடங்கினாலும் கம்பன் கழக வெளியீட்டின் சாயம் வெளுத்து விடும் என்று கருத்துக்கள்

http://acharya.org

தெரிவித்தும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்துள்ளன. உங்கள் கடிதத்தையோ அல்லது பாராட்டுக் கடிதங்களையோ வெளியிடுவதால் எதையும் சாதித்துவிட முடியாது. கேள்விகள் கம்பன் கழகத்தைக் குறித்துக் கேட்கப்பட்டுள்ளன. கம்பன் கழகத்தைச் சேர்ந்த கம்பராமாயண அறிஞர்களுக்கு அக்கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு உண்டு. அது செய்யாமல் திரு இரத்தினம் செட்டியாருக்கு வேண்டியவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதம் அனுப்பி வெற்றி பெற நினைக்காதீர்கள். கம்பன் கழகத்தலைவர் திரு மு.மு. இஸ்மாயில் அவர்களைக் கொண்டு கேள்விகளுக்கு பதில் எழுதி வெளியிடச் செய்யுங்கள். அப்படிச்செய்தாலொழிய அவ்வெளியீட்டில் கட்டப்பட்டுள்ள கற்பனைக் கோட்டைகள் நிலைநிற்கமாட்டா.

அன்பன்
(ஒ-ம்) கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

இக்கடிதத்தில் கண்டுள்ளபடி சென்னை கம்பன் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நமது கேள்விகளுக்கு பதிலை அச்சிட்டு அனுப்பினுலொழிய வெறும் தனிப்பட்டவர் கருத்துக்களைத் தாங்கி அனுப்பப்படும் கடிதங்கள் பொருட்படுத்தப்படமாட்டா.

R. தேவராஜன், ஈரோடு-1 (திருவல்லிக்கேணி T. ராமசாமி ஐயங்காரும் இதுபற்றிக் கேட்டிருக்கிருர்)

58. 'ஓம்சக்தி' இதழில் ஆதிநாதர்கோயில் ஜைன ஆலயமாக இருந்தது என்று வெளியாகி இருந்தது; அதற்கு நான் எழுதிய மறுப்பு ஆகஸ்ட் 91 இதழ் பக்கம் 47 ல் வெளியாகியிருக்கிறது. இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

'ஓம்சக்தி' இதழ்களை நாம் பார்ப்பதில்லை. திருவல்லிக்கேணி ராமசாமி அய்யங்கார்—வானதி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டதாய், 'பி. ஸ்ரீ' அவர்களால் எழுதப்பட்டதான "நான் அறிந்த தமிழ்மணிகள் (இரண்டாம் பகுதி)" பக்கம் 82 ல் "ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் வழிபட்ட இஷ்ட தெய்வத்திற்கு ஆதிநாதப்பெருமாள் என்று பெயர். ஆதிநாதர் என்பது ஜைனஸம்ப்ரதாயத்தில் வழங்கும் ஒருபெரும்

பெயராகும். நம்மாழ்வார் தம் இஷ்டதெய்வத்தைக் குறித்து 'அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ' என்று பாடியிருக்கிறார். தாமரை மலர்மேல் நிற்பதாகவும், நடப்பதாகவும் தெய்வீகக் கதைகள் சமணர் சமயத்திலும், புத்தர் சமயத்திலுமே காணப்படுகின்றன. அதனால் ஆதிநாதர் ஒருகாலத்தில் ஜைனருக்கு உரிய தெய்வமாக இருந்து பெருமாளாகப் பரிணமித்துவிட்டார்" என்று எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நம்மாழ்வார் பெருமாளை ஆதிப்பிரான் என்றே குறிப்பிட்டிருக்கிறார். ஆதிநாதர் என்று இக்காலத்தில் வழங்குப் பெயரால் குறிப்பிட வில்லை. இதிலேயே 'பி. ஸ்ரீ'யின் வாதம் உடைந்து விடுகிறது. நம்மாழ்வார் தம்முடைய ஒவ்வொரு பாசுரத்திலும் திருமாலைப்பற்றியே பாடியிருக்கும்போது, அவரது பாடல்களை ஆதாரமாகக் காட்டி ஜைனக்கோயிலாக மாற்ற முயல்வது பெருத்தமோசடியாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் தாமரையின்மேல் எம்பெருமானின் இருதிருவடிகள் நிற்பதாக அமைத்தே தங்கள் நெற்றியில் திருமண்காப்பை இட்டுக்கொள்கிறார்கள். இதை "நெற்றியில் நின்றென்னையாளும், நிரைமலர்ப்பாதங்கள் சூடி" [திருவாய் 1-9-10] என்று நம்மாழ்வாரும் உணர்த்தியிருக்கிறார். இப்படி எம்பெருமான் திருவடிகள் தாமரையில் நிற்கின்றன என்பதற்கு ப்ரமாணம் இருக்கும் போது சமண சமயத்திலும், புத்தசமயத்திலும் தாமரைமேல் நிற்பதாகக் கூறும் பொய்க்கதைகளை இங்கு எதற்காக இழுக்கவேண்டும்? அதற்கு நம்மாழ்வார் பாசுரம் எப்படி ப்ரமாணமாகும்? "உளனெனில் உளன்" [திருவாய் 1-1-9] முதலான பல பாட்டுகளில் பௌத்தஜைன சமயங்களைக் கண்டித்திருக்கும் நம்மாழ்வார் அச்சமயத்தொடர்புள்ளவர்களை நினைக்கவும் இடமுண்டோ? ஆனந்தவிகடனில் சம்பளம் வாங்கும் எழுத்தாளராக இருந்தபோது அவர்களைத் திருத்திபடுத்துவதற்காக 'பி. ஸ்ரீ' இப்படிப்பட்ட பல அபத்த ஆராய்ச்சிகளை வெளியிட்டு ஸுதர்சனத்தின் கண்டனத்தைப் பெற்று வாய்திறவாமல் இருந்திருக்கிறார். தமது முதுமைக் காலத்தில் இதற்காக வருந்தி ராமானுஜர் வைபவம் பற்றி நேர்மையான ஆராய்ச்சிசெய்து அதற்காக சாகித்ய அகாடமி பரிசும் பெற்றார் என்பது பலர் அறிந்த உண்மை.

http://acharya.org

R. தேவராஜன். ஈரோடு—1

59. 6—10—91 குமுதம் இதழில் கீதையும், திரௌபதியைத் துகிலுரிந்த செய்தியும் மஹாபாரதத்தில் இடைச்செருகல் என்று ஓர் ஆராய்ச்சி வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கு சமாதானம் எழுதவேண்டுகிறேன்.

மஹாபாரதம் நூற்றுக்கணக்கான பதிப்புகள் நம் நாட்டில் வெளியாகியிருக்கின்றன. நம்மிடமே பல பதிப்புகள் உள்ளன. அவற்றில் இவை இரண்டும் உள்ளன. இடைச்செருகல் என்று குறிப்பிடப்படவில்லை. பெரும்பாலான பதிப்புகளில் இல்லாதவற்றையே இடைச்செருகல் என்று சொல்லலாமேயொழிய, தனக்குப் பிடிக்காதவற்றையெல்லாம் இடைச் செருகல் என்று சொல்லத் தொடங்கினால் எந்த நூலிலும் எதுவும் உண்மையாகத் தேறாது. ஆத்திகர்கள் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தைப்பற்றி நாத்திகரும், வடமொழியறிவு இல்லாதவருமான கி. வீரமணி அவர்களிடம் "குமுதம்" கருத்து கேட்டதே தவறு. திரௌபதியைத் துகிலுரிந்ததைப்பற்றிக் கேள்வி கேட்டால் கீதையும் இடைச்செருகலே என்று கூறி அதற்கு ஒருவரை ஆதாரமாகக் காட்டுகிறார். "அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று எதையும் நம்பிவிடக் கூடாது" என்ற கொள்கையுடைய இவருக்கு கீதை இடைச்செருகல் என்று ஒருவர் சொல்வது மட்டும் எப்படி ஆதாரமாகும்? "கீதை பெரும்பாலான பதிப்புகளில் இல்லை; அதை எவரும் நெடுங்காலமாகக் கையாண்டதில்லை" என்று நிரூபித்தாலன்றோ அது இடைச் செருகல் என்று தேறும். நேர்மாறாக மஹாபாரதத்தின் எல்லாப்பதிப்புகளிலும் கீதை காணப்படுகிறது. சுமார் 1300 வருடங்களுக்கு முற்பட்ட ஆதிசங்கரர் காலத்திலிருந்து கீதைக்கு எழுதப்பட்ட உரைகள் பல பலவாகும். ஸ்ரீ வேதாந்ததேசிகர் தம்முடைய "தாத்பர்யசந்த்ரிகை"யில் ஆதிசங்கரர் காலத்துக்கு முன்னமே கீதைக்கு "பிசாச பாஷ்யம்" முதலான பல பாஷ்யங்கள் இருப்பதாக எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆயிரம்வருடங்களுக்கு மேலாக கீதையை மேற்கோளாகக் காட்டிய நூல்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன. கி. வீரமணி இவ்விரண்டு

http://acharya.org

தவிர மஹாபாரதத்தில் உள்ள மற்றவை இடைச்செருகல் அல்ல என்று ஒப்புக்கொள்கிருரா என்று தெரியவேண்டும். ஆகவே "குமுதம்" தன் பிரதிகள் அதிக அளவில் விற்பனை யாக வேண்டும் என்பதற்காகவே இத்தகைய வீண் சர்ச்சை களை வெளியிடுகிறது என்று விளங்குகிறது.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

60. அரசு அமைக்கப்போகும் வேதாகம சாஸ்திரக் கல்லூரியில் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்போவதாகவும், இது எல்லா ஆலயங் களிலும் அர்ச்சகர்களாக வழிவகுக்கும் என்றும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இது நியாயமா? இது நடக்கக் கூடியதா?

இது நியாயமுமல்ல; நடக்கக்கூடியதுமல்ல. ஸுதர்சனம் 527 ல் இதுபற்றி நாம் எழுதியுள்ள தலையங்கம் இந்த சதகத் திற்கு அனுபந்தமாக இணைக்கப்படுகிறது.

N. வேங்கடபதி, சென்னை—20.

61. பெரிய திருமொழி 9-4-5ல் "புல்லாணி எம்பெரு மான் பொய் கேட்டிருந்தேனே" என்று பரகால நாயகி அருளிச்செய்கிருள். சக்கரவர்த்தித் திருமகன் புல்லாணியில் உறைபவன். அவனுடைய வார்த்தைகள் அனைத்தும் உண்மையே என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டுள் ளது. ஆகையால் இது எப்படிப் பொருந்தும்?

புல்லாணியில் ஜகந்நாதப்பெருமானும் உறைகிருர். அவர் பரகாலநாயகியோடு வந்து கலந்து 'உன்னைப்பிரியேன், பிரியில் தரியேன்' என்று பொய்சொல்லிவிட்டுப் பிரிந்து, பரகாலநாய கியைத் துடிக்கவைக்கிருர். அதனால் எழுந்தது இப்பாசுரம். பரகால நாயகியோடு சக்ரவர்த்தித்திருமகன் உருவத்திலேயே வந்து கலந்தான் என்று கொள்ளவேண்டிய அவசியமில்லை. பொய் சொல்லுவதில்லை என்னும் நியமம் ராமாவதாரத்தி லுள்ளது போல் கிருஷ்ணவதாரத்தில் இல்லை. "ஏலாப்பொய்க ளுரைப்பவன்" அன்றே அவன். "பரகாலநாயகியின் நாயகன் கிருஷ்ணவதாரத்தை ஒத்திருப்பவனேயொழிய ராமாவ தாரத்தை ஒத்திருப்பவன் அல்லன்" என்று கொள்ளலாம்.

http://acharya.org

T. ரங்கராமானுஜய்யங்கார், பள்ளத்தூர். மற்றும்பலர்.

62. மதுரை தினமலர் **30-10-91** இதழ் பக்கம் **4ல்** "புத்தகமதிப்புரை" என்னும் தலைப்பில் "கம்பன் உணர்த்தும் பரம் பொருள் நிலை" என்னும் முரு. பழ. இரத்தினம் செட்டியாரின் நூல் பாராட்டப்பட்டுள்ளது. அந்த மதிப்புரை யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் அதில் குறிக்கப்படவில்லை. திரு இரத்தினம் செட்டியாரே எழுதி சிபார்சின் பேரில் வெளியிடச்செய்திருக்கலாமோ என நினைக்கிறேன். **10-10-91** குமுதம் பு(து)த்தகம் பகுதியிலும் இப்புத்தகம் குறிக்கப்பட்டு "பயனுள்ள ஆராய்ச்சி" என்னும் ஒரு வரி விமர்சனம் எழுதப்பட்டுள்ளது. ஸுதர்சனப்பிரயோகம்போலும், ராமபாணம்போலும் அமைந்துள்ள தேவரீருடைய கேள்விகளுக்குப் பதிலிறுக்காமல் இத்தகைய விமர்சனங்கள் வெளியிடச் செய்பவர்களுடைய கருத்தை அம்பலப்படுத்த வேண்டுகிறோம்.

நம்நாட்டில் ஆழ்வார்கள் கம்பன் சமயக்கருத்துக்களைப் பற்றிய கட்டுரைகளிலும் நூல்களிலும் இந்த நூற்றாண்டில் ஒரு வரலாற்றுப் பின்னணி உள்ளது. ராஜாஜி போன்ற அரசியல்வாதிகளும், பி. ஸ்ரீ. போன்ற இலக்கியவாதிகளும், கல்கி, விகடன், கலைமகள், மித்திரன், தினமணி போன்ற பொதுஜனப்பத்திரிகைகளில் "நாடு சுதந்திரம் அடைவதற்குத் தடையாக மதவேற்றுமைகள் அமைந்துள்ளன" என்று கருதி, கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக "எம்மதமும் சம்மதம்" என்கிற பிரசாரத்தை மிகவலிமையாகச் செய்யத் தொடங்கினர். 1948 ல் ஸுதர்சனம் தொடங்கியபின் முற்கூறியவர்களின் கருத்துக்கு மறுப்புத்தெரிவிக்கும் வகையில் இந்த சமரசவாதத்தின் பொய்ம்மை விடாமல் எடுத்துக் கூறப்பட்டுவருகிறது. உண்மையில் இந்த சமரசவாதத்தின் பெயரில் முற்கூறியவர்கள் வைணவ விரோதப்பிரசாரத்தையே செய்துவருகிறார்கள். நமதுமறுப்பைக் கண்டபின் திரு. ராஜாஜி ஒருவர்தான் தமது தவறை ஒப்புக்கொண்டு போலிச்சமரசவாதக்கட்டுரைகள் எழுதுவதை நிறுத்தினார். வைணவ அறிஞர்கள் திவ்யப்ரபந்த வ்யாக்யான ரஹஸ்யநூல்களிலும் ஸ்ரீபாஷ்யம் முதலான வடமொழி நூல்களிலும் போதுபோக்கி வந்தனர். கம்பராமாயணம் பெரும்பாலும் சைவர்களாலேயே

வளர்க்கப்பட்டு வந்தமையால் "கம்பனை எப்படியாவது சைவனாக்கிவிட வேண்டும்; முடியாவிட்டால் சமரசவாதியாகவாவது ஆக்கிவிடவேண்டும்" என்னும் எண்ணத்தில் சைவர்களையும் சமரசவாதிகளையும் மிகுதியாகக்கொண்ட பொதுஜனப் பத்திரிகைகளிலும், கம்பன் கழகங்களிலும், மற்ற பொது மேடைகளிலும் கடந்த பலவருடங்களாகப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தான் திரு ம. பொ. சி. தன்னுடைய பத்திரிகையான செங்கோலில் கட்டுரைகளாகவும் பிறகு நூலாகவும் வெளியிட்டு, கம்பனைச் சைவனாகச் சித்திரிக்க முயன்றார். "சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்" என்னும் நமது நூலில் இந்த வாதம் தலைதூக்க முடியாதபடி கண்டிக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் முரு. பழ. இரத்தினம் செட்டியார் "கம்பன் வைணவன் தான்; ஆனால் மும்மூர்த்திகளும் சேர்ந்ததொரு மொத்த உருவம் தான் அவனுடைய கருத்துப்படி பரம்பொருள்" என்னும் புதிய வாதத்தைக் கிளப்பி, நமக்குக் கடிதங்கள் எழுதினார். இதன் பொருந்தாமையைப் பலவாறு விளக்கி நாம் மறுப்பு எழுதினோம். நம்முடைய மறுப்புகள் எதற்கும் பதில் எழுதாமல் தம்முடைய வாதங்களையே திருப்பி எழுதி, புதுக்கோட்டை கம்பன் கழக மலரில் 1986 ஜூலையில் ஒரு கட்டுரை எழுதினார். சிறிது நாட்களாவது இக்கட்டுரை உயிர் வாழவேண்டும் என்ற கருத்தினால் அக்கட்டுரையின் பிரதியை நமக்கு அனுப்பவில்லை. நாலுமாதங்கள் கழித்து - ரங்கராமானுஜய்யங்கார் ஸ்வாமி மூலம் அதை அறிந்து ஸுதர்சனர் பதில் 10 வது சதகம் 13வது கேள்வியின் பதிலில் சுமார் 10 பக்கங்கள் எழுதி, செட்டியாரின் வாதங்களைத் தலையெடுக்க முடியாதபடி கண்டித்தோம். அதற்கு மேல் செட்டியார் நமக்கு ஏழு பக்கங்கள் கொண்ட கட்டுரையை அனுப்பி ஷை 10 வது சதகம் 20 வது கேள்வியில் தக்கபதிலைப் பெற்றார். அப்பதிலின் இறுதியில் "அடுத்தவருடம் கம்பன் கழக மலரிலேயே 13வது கேள்வியின் பதிலையும் அதற்கு உமது பதிலையும் அச்சிடச்செய்தால் உமது விதண்டாவாதம் கம்பன் கழகக்காரர்களுக்கு வெட்டவெளிச்சமாகிவிடும். அப்படி வெளியிட்டால் மறக்காமல் எனக்கு ஒரு பிரதி அனுப்பவும்" என்று எழுதினோம். அதற்குமேல் செட்டியார் நம்மை ஒரு கேள்வி கேட்டு, இதற்கு ஸுதர்சனர் பதிலில் பதிலளிக்கவேண்டும் என்று

http://acharya.org

கேட்டிருந்தார். 21வது கேள்வியாக அதைவெளியிட்டுத்தக்க பதிலும் இறுத்திருந்தோம். இதற்குமேல் 1987 காரைக்குடி கம்பன் கழக மலரில் நம்முடைய விலாசத்தையும் கொடுக்காமல், நம்முடைய மறுப்புக்களை அரைகுறையாக எடுத்து பழைய விதண்டாவாதங்களையே புதிய சொற்களில் எழுதினர். நமது மறுப்புகள் எதற்கும் பதிலளிக்கவில்லை. வழக்கம்போல் இக்கட்டுரையின் பிரதியையும் நமக்கு அனுப்பவில்லை. இதற்கு 33-வது கேள்விபதிலில் நம்மால் மறுப்புரைக்கப்பெற்றது. இந்நிலையில்தான் சென்னை கம்பன் கழகத்தைக் கொண்டு தமது பழைய விதண்டாவாதங்களையே சற்று விரிவாக எழுதி இந்த நூலை வெளியிட்டார். ஆழ்வார்களுடைய ஆயிரக்கணக்கான பாட்டுக்களுக்கு முரணாகச் சிலபாட்டுக்களுக்கும், கம்பனுடைய ஆயிரக்கணக்கான பாட்டுகளுக்குமுரணாகச்சிலபாட்டுகளுக்கும் அவப்பொருள் கூறி. "மும்மூர்த்திகளும் இணைந்த நாலாவது மூர்த்தியே பரம்பொருள்" என்னும் தமது கற்பனையை ஆழ்வார்கள் மீதும், கம்பன் மீதும் இந்நூலில் ஏறிடுகிறார். இந்த நூலையும் வழக்கம்போல் நமக்கு அனுப்பவில்லை. நாம் அவரது வாதங்களுக்கு மறுப்பு எழுதியிருப்பதையும், நமதுபெயர் விலாசங்களையும் இந்நூலிலும் குறிப்பிடவில்லை. இப்படிநேர்மைசிறிதும் இல்லாமல் சங்ககாலத்திலிருந்து உறுதியான அடிப்படையில் அமைந்துநிற்கும்வைணவ சித்தாந்தத்தையே மாற்றிவிடலாம் என்று மனக்கோட்டை கட்டிவரும் இவரிடம் நியாயமான வாதங்களை எதிர்பார்க்க முடியாதாகையால், நாம் 11 வது சதகம் 56 வது கேள்வியின் பதிலில் கல்விக்கடல் திரு கோபாலய்யர் (பாண்டிச்சேரி) அவர்களைக் கொண்டு (12 பக்கங்கள் கொண்ட) இவரது நூல் பற்றிய ஒரு மதிப்பீட்டையும் வெளியிட்டு, கம்பன்கழகத்தைக் குறித்து 18 கேள்விகளும் கேட்டு அவற்றுக்குப் பதிலுரைக்க வேண்டிய பொறுப்பு கம்பன் கழகத்தாருக்கு உண்டு என்று உணர்த்தியிருந்தோம். இக்கேள்விகளை வெளியிட்டாலே (பதிலுரைப்பது இருக்கட்டும்) செட்டியாரின் வாதங்களின் பொய்ம்மை அனைவருக்கும் விளங்கிவிடும். ஆகையால் கம்பன் கழகத்தார் அச்செயலில் இறங்கத்துணியவில்லை. முரு. பழ. இரத்தினம் செட்டியார் தம்மைப் பாராட்டியும் நம்மை நிந்தித்தும் சில கடிதங்களைத் தம் நண்பர்களைவிட்டு எழுதச்செய்தார். சென்றமாதம் வெளிவந்த 57 வது கேள்வி-பதிலில் இத்தகைய கடிதங்களால்

http://acharya.org

எதையும் சாதித்து விடமுடியாது என்பதைச் செட்டியாருக்கும் அவரது நண்பர்களுக்கும் உணர்த்தினோம். அதற்கு மேல்தான் தமக்கு வேண்டியவர்களைக் கொண்டு நீண்ட நாட்களாகக் கம்பனைச் சமரசவாதியாக்க முயன்று தோல்விகண்டு வரும் பத்திரிகைகளில் தமது நூலுக்கு மதிப்புரை எழுதச் செய்திருக்கிறார். இந்தமதிப்புரை எழுதியவர்கள் நமது மறுப்புரைகளையும், திரு. கோபாலய்யர் மதிப்பீட்டையும், நமது கேள்விகளையும் காணாதவர்கள். ஏற்கனவே கம்பனைச் சமரசவாதியென முடிவுகட்டிக் கொண்டு எழுதுபவர்கள். நேர்மையிருந்தால் செட்டியார் அவர்கள் நமது கேள்விகளை இத்தகைய பத்திரிகையொன்றில் அச்சிடச்செய்து, அவைகளுக்கு பதிலுரைத்து, தமது கொள்கைகளை நிலைநாட்டிக் கொள்ளலாமே. அது இயலாவிட்டால், கம்பனையும், ஆழ்வார்களையும் நன்கறிந்த ஒரு புலவரைக்கொண்டு கம்பன் கழகத்தின் ஆதரவோடு நமது கேள்விகளுக்கு விடையளித்து ஒரு நூல் வெளியிடலாமே. கம்பன் கழகத்திற்குப் பண பலம் ஆள்பலம் முதலிய எல்லா பலங்களும் உள்ளனவே. நேர்மையான இச்செயலைச் செய்வதைவிட்டு, கடிதங்கள் எழுதச் செய்வது, பத்திரிகைகளில் விமரிசனம் எழுதச் செய்வது முதலான காரியங்களைச் செட்டியார் செய்வது நமது கேள்விகளை அச்சிட்டாலே தமது நூலின் பொய்ம்மை அனைவருக்கும் விளங்கிவிடும் என்னும் பயத்தாலேயே என்பது வெளிப்படை.

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்யர். ஸ்ரீரங்கம்.

63. இவ்வருட "கலைமகள்" தீபாவளி மலரில் கிருபானந்தவாரியார் 'சிவநெறி' என்னும் கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அத்வைதம் முதலான மதங்களைக் கண்டிக்கும் சில வாதங்களை எழுதியிருக்கிறார். "பாஞ்சராத்ரிகள் சொல்லும் பொருளும் போல் பே(ா)தா பேதம் என்பர்; சொல்லும் பொருளும் வேறு பொருளேயாதலால் இவர்கூற்றும் பொருந்துமாறில்லை" என்று பாஞ்சராத்ரிகளைக் கண்டிக்கிறார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

பாஞ்சராத்ரிகள் "உடலும் உயிருமாக உலகமும் பிரம்மமும் அமைந்துள்ளனவாகையால் பிரம்மம் ஒன்று எனக்கூறும் வேதவாக்யங்களும் பொருந்தி விடுகின்றன.

http://acharya.org

உடலான உலகம் உயிரான பிரம்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகையால் இவை வேறு என்று கூறும் வேத வாக்யங்களும் பொருந்திவிடுகின்றன" என்றே கூறுகிறார்கள். "சொல்லும் பொருளும் போல் பேதாபேதம்" என்று கூறுவதில்லை. "ஸ்ரீதேவியும் நாராயணனும் சொல்லும் பொருளும் போல் இணைந்துநிற்கிறார்கள்" என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் பராசரமஹரிஷி அருளினார். "அர்த்தோ₂ விஷ்ணுரியம் வாணீ" என்றது காண்க. இதைத்தழுவி, காளிதாஸன் ரகுவம்சத்தின் மங்கள ஶ்லோகத்தில் "வாக₃ர்த்தா₂விவ ஸம்ப்ருக்தௌ — பார்வதீபரமேஶ்வரௌ" [சொல்லும் பொருளும் போல் இணைந்திருப்பவர்கள் பார்வதியும் சிவனும்] என்று கூறினான். உலகமும் பிரம்மமும் சொல்லும் பொருளும் போல் இணைந்து நிற்கின்றன என்று எவரும் கூறுவதில்லை. பரஞ்சராத்ர மதத்தை அறியாமலேயே வாரியார் அதைக்கண்டிக்கப் புகுந்தது பெரிய ஸாஹஸச் செயலாகும். இக்கட்டுரையிலேயே "த₃ாரித்₃ரிய து₃க்க₂த₃ஹநாய" என்னும் ஶ்லோகப் பகுதிக்கு "தரித்திரமாகி துக்கத்தை தஹனம் செய்கின்றவன்" என்று பொருள் எழுதுவதிலிருந்து வாரியாருக்கு வடமொழியறிவு இல்லை என்று விளங்குகிறது. "ஏழ்மையையும், துன்பத்தையும் எரிப்பவன்" என்பதே இதன் பொருள் என்பது சிறிது வடமொழியறிவு உள்ளவர்க்கும் விளங்கும். கட்டுரையின் தொடக்கத்தில் இறைவன் என்ற சொல்லுக்குப் பொருள் எழுதும் போது "எல்லாம் அவனிடத்தில் இருக்க அவன் அவைகளுக்கு உறைவிடமாக இருக்கின்றான்" என்று எழுதியிருப்பது தமிழில் வல்லின இடையின வேற்றுமைகளை அறியாமல் எழுதுவதைக் காட்டும். "அரசனுக்குப் பெண்பால் அரசி. அதுபோல் அரனுக்குப் பெண்பால் அரி; அவனுக்குப் பெண்பால் அவள்; அதேபோல் பெருமானுக்குப் பெண்பால் பெருமாள்" என்று முன்பொருமுறை பேசி, தமது 'தமிழறிவை' (!) வாரியார் வெளிப்படுத்திக் கொண்டது ஸுதர்சனத்தில் வெளிவந்துள்ளது. 'கி. வா. ஜ' காலத்தில் இலக்கியத்தில் தரமுள்ளது என்று பெயர் பெற்ற "கலைமகள்" தற்போது இவ்வளவு தரம்தாழ்ந்துவிட்டது வருந்தத்தக்கது.

S. வேங்கடம், சமயபுரம்.

64. 24-11-91 'கல்கி'யில் காமகோடிப் பெரியவர் அருள் வாக்கில் "ஒரே தெய்வத்தை இஷ்டமூர்த்தியாகக் கொண்டு வழிபடுவதே சித்த ஒருமைப்பாட்டுக்கு உதவு

http://acharya.org

வதாகத் தோன்றலாம். இதில் நியாயம் உண்டு; இதனால் இன்னொரு மூர்த்தியைத் தாழ்வாக எண்ணக்கூடாது...நம் தெய்வமேதான் மற்ற தெய்வங்களாகவும் உள்ளது என்று நினைத்து விட்டால்...அவை நம் தெய்வத்தைவிடத் தாழ்ந்தது என்ற எண்ணம் வரவே வராது. சமயச் சண்டைகளும் உண்டாகாது'' என்று தம்கருத்தை விளக்கி எழுதியுள்ளார். இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

''ஒரே பரம்பொருள் எல்லாதெய்வங்களாக மட்டுமல்ல; ஆத்மாக்களாகவும், எல்லா அசேதனப்பொருளாகவும் நிற்கிறது'' என்று நமது சாஸ்திரங்கள் முழங்குகின்றன. அதற்குக் காரணத்தையும், ''ஸ ஆத்மா அங்க₃ாந்யந்யா தே₃வதா:'' [அப்பரம்பொருளே ஆத்மா; மற்ற தெய்வங்கள் அதன் அவயவங்கள்] என்றும், ''யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்'' [அப்பரமனுக்கு உலகனைத்தும் சரீரம்.] ''ஸர்வம் க₂ல்வித₃ம் ப்₃ரஹ்ம தஜ்ஜலாந்'' [எல்லாப் பொருள்களுக்கும் உத்பத்தி லயகாரணமாயிருப்பதாலும், அனைத்தையும் அந்தர்யாமியாயிருந்து ரக்ஷிக்கையாலும் எல்லாம் பரம்பொருள்] என்றும் வேதங்கள் தெளிவாக முழங்கின. ''தேவர்களுக்கெல்லாம் மேலான தேவன் ஒருவன் உளன்; அவனே பிரமனைப் படைத்தவன்; அவனையே மோக்ஷத்திற்காக ஶரணடைய வேண்டும்'' என்று ஶ்வேதாஶ்வதரம் முழங்குகிறது; ''ஜக₃த் காரணப் பொருளே தியானிக்கத்தக்கது; மற்றவர்களைத் தியானிக்கலாகாது'' என்று அதர்வசிகை விதித்தது. ஆதி சங்கரரும் தமது பாஷ்யங்களில் இப்படியே முழங்கினார். இந்த வாக்யங்களுக்குப் பொருளை நிர்ணயிப்பது எப்படிச் சண்டையாகும்? ஜக₃த்காரணவிசாரமன்றோ இது. இதை ஆதிசங்கரரும் செய்திருக்கிறாரே; அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் வேதாந்தக் கருத்துக்களை ஒன்றாக்கமுடியுமா? இவற்றுக்கெல்லாம் பீடாதி₄பதி பதில் எழுதினால், ''எல்லா மதங்களையும் ஒன்றாக்கிவிடமுடியாது; சகிப்புத்தன்மையுடன் 'கல்கி' போன்ற பொதுமேடைகளில் இவற்றைக் கிளப்பாமல் அவரவர் மதத்தை உறுதியாகப் பின்பற்றிநிற்பதே ஒற்றுமைக்கும், சாந்திக்கும் வழி'' என்பதை அவரே உணர்வார்; இதைச் செய்வாரா?

http://acharya.org

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்யர், ஸ்ரீரங்கம். (65...69 கேள்விகள்)

65 கலைமகள் செப்டம்பர் 91 இதழில் "சங்கர விஜயம்–சங்கரர் தொடங்கிய வழிபாடு" என்ற கட்டுரையில், "ஆசார்யரவர்களுக்குப் பிறகு தோன்றிய ராமானுஜர், மத்வர், க்ருஷ்ண சைதன்யர் போன்ற மகான்களும் புதிய தத்துவங்களைப் போதித்து, புதிய மதங்களை நிறுவினார்கள். இராமாநுஜர் தோன்றிய பிறகும் அத்வைதம் மறையவில்லை.. வேத மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டது நம் மதம். இராமாநுஜரும், மத்வாசார்யரும் இதிலுள்ள நாராயணன் தொடர்பான வைபவங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீகண்டாசாரியர் சைவ சம்பந்தமான விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டார். இப்படிப் பலர் தமக்கு வேண்டிய பகுதிகளை மட்டும் எடுத்து விளக்கினார்கள். ஆனால் நம் ஆசார்யர் வேதம் முழுவதையும் எடுத்துக் கொண்டார். பூர்ணத்தில் எந்தப் பகுதியைத் தனியாக எடுத்துக் காட்ட முடியும்? எல்லாம் ஒன்றே என்று பிரமாணமாகக் கொண்டவர் நம் ஆசார்யர். இதுதான் அத்வைதத்தின் அடிப்படைக் கருத்து.... 'விஶ்வாதி₄கோ ருத்₃ரோ மஹர்ஷி:' [சுவேதாச்வதர உபநிஷத்]... அந்தத்திருவருளை, ஞானத்தை வழங்குபவர் சிவபெருமான். மங்கள வடிவினன். அவரே பரப்ரம்மம். எல்லாம் அவரே. அவர் அடங்காத வேறு பொருள் இல்லை.... உலக சிருஷ்டியின் போதும் இருந்தது அத்வைதம்,... 'சகல வேதமும், ஸ்ம்ருதிகளும், சகல மூர்த்திகளும் எனக்குச் சம்மதமே. மற்ற மதங்களில் உள்ள விஷயங்களும் அத்வைதத்தில் உள்ளன' என்று கூறி, ஆங்காங்கு சாஸ்திரச் சர்ச்சை செய்து அத்வைதத்தை நிலைநாட்டினார்கள். ஒரு சில விஷயங்களை அதிலிருந்து எடுத்துக் கொண்டு சொல்பவை தாம் மற்ற சித்தாந்தங்கள். சாதாரண மக்களின் நன்மையைக் கருதி ஆசாரியரவர்கள் ஆறு மதங்களை உண்டாக்கினார். ஷண்மதஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். காணபத்யம், சாக்தம், கௌமாரம்,

ல॰—20

சௌரம், சைவம், வைஷ்ணவம் என்பவை அவை. சிலர் இவற்றில் ஒன்றுக்கொன்று உயர்ந்தது, தாழ்ந்தது என்று சொல்லிக் கொள்கிறார்கள். சிவானந்தலஹரீ, ஸௌந்தர்ய லஹரீ போன்ற துதிகளில் த்வைதம், விசிஷ்டாத்வைதம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன'' என்று கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து விமர்சிக்க வேண்டுகிறேன்.

1. ராமானுஜர் புதிய மதத்தை நிறுவினார் என்று கூறுவது முழுப்பொய். அத்வைதமதம் உலக சிருஷ்டியின் போதும் இருந்தது என்பதும் அத்தகையதே. எல்லாம் ஒன்றே என்னும் வாக்யம் சாஸ்திரங்களில் காணப்படுவதே. அதற்குப் பொருள் கொள்வதில் அத்வைதத்திற்கும் விசிஷ்டாத்வைதத் திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. "வெறும் அறிவு மாத்திர மான ப்ரஹ்மம் ஒன்றே மெய். இந்த ப்ரஹ்மத்திற்கு நல்ல குணம் கூடக் கிடையாது. காணும் உலகனைத்தும் பொய்'' என்பது அத்வைதிகள் கொள்ளும் பொருள். "எல்லாக் கல்யாண குணங்களும் நிரம்பிய ஸ்ரீமந்நாராயணனே பரப்ரஹ்மம். மெய்யான கணக்கற்ற சேதநாசேதனங்கள் அடங்கிய உலகம் அவனுக்கு சரீரமாக அவனோடு ஒன்றியிருக்கை யாலே 'எல்லாம் ஒன்றே' என்றும் கூறலாம்.'' என்பது விசிஷ் டாத்வைதிகள் கொள்ளும் பொருள். "உலகமெல்லாம் பொய். ப்ரஹ்மத்திற்கு நல்ல குணம் கூடக் கிடையாது'' என்னும் அத்வைதத்தின் தனிக்கொள்கையை ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களோ, சங்கரருக்கு முற்பட்ட தென்மொழி வடமொழிக் காவியங்களோ எங்குமே ஆதரிக்கவில்லை. இதிலிருந்து மாயாவாதம் என்னும் அத்வைதம் பண்டைக் காலத்தில் சான்றோர்களால் ஆதரிக்கப்படவில்லை என்று விளங்குகிறது. ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலும் வியாஸர், வால்மீகி, பராசரர் முதலான மஹரிஷிகளாலும் ப்ரஹ்மம் பல நற்குணங்களை உடையதென்றும், 'ஜீவாத்மாக்களும், பரமாத்மாவும், அசேதனப் பொருள்களும் வெவ்வேறே' என்றும், 'சேதநாசேதனங்கள் அடங்கிய உலகம் ப்ரஹ்மத்துக்குச் சரீரம்' என்றும் பல இடங்களில் கூறப் பட்டுள்ளது. பண்டைக் காலக் கவிஞர்களும் இக்கொள்கை களையே வலியுறுத்துகிறார்கள். இவ்விஷயங்கள் [illegible] விஷயம்

http://acharya.org

முதலான பூர்வாசாரிய க்ரந்தங்கள் தொடங்கி, பரமார்த்த பூஷணம், விசிஷ்டாத்வைதவிஜயம், விஷ்ணுசித்த விஜயம், சங்ககாலத் தமிழர் சமயம் முதலான இந்த நூற்றாண்டி லெழுந்த பல க்ரந்தங்கள் வரையில் நூற்றுக்கணக்கான நூல்களால் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆகையால் பீடாதி பதியின் பேச்சு பொருளற்ற பொய்யே ஆகும். "ராமானுஜர் தோன்றிய பின்பும் அத்வைதம் மறையவில்லை" என்கிறார். இன்று அத்வைதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள் பவர்கள் எவரும் "உலகம் பொய், நானும் ப்₃ரஹ்மமும் ஒன்றே" என்னும் கொள்கையின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பீடாதிபதியைப் போன்ற அத்வைதிகள் சமயத்திற்குத் தக்கபடி சைவர் களாகவும், சாக்தர்களாகவும் அரசியல் ஆதாயங்களையும் விளம்பரங்களையும் தேடுபவர்களாகவும் வாழ்ந்துகொண்டு மாயாவாதமாகிற அத்வைதத்திற்கு மரண அடி கொடுத்து வருகிறார்கள். இத்தகையவர்கள் அத்வைதம் மறையவில்லை என்று சொல்லுவதைப் பார்த்து விலவறச்சிரிக்கவேண்டி யுள்ளது.

2. "சங்கரர் வேதம் முழுவதையும் எடுத்துக்கொண்டார். இராமானுஜர் முதலியவர்கள் தங்களுக்கு வேண்டிய பகுதி களை மட்டும் எடுத்துக்கொண்டார்கள்" என்று எழுதியிருப் பதும் முழுவதும் தவறானதும் உண்மைக்குப் புறம்பானது மாகும். உண்மையில் சங்கரரே ப்₃ரஹ்மத்திற்கும் உலகத் திற்கும் அபேதத்தைக் கூறும் ஒருசில வேத₃வாக்யங் களைக் கொண்டு, இவற்றுக்கு பே₄த₃த்தைக் கூறும் பல்லா யிரக்கணக்கான வேத₃வாக்யங்களைத் தள்ளினார். ஸ்ரீராமா னுஜரோ இவ்விரண்டு வேதவாக்யங்களையும் பொருந்தவிடு பவையாய், உலகிற்கும் ப்₃ரஹ்மத்திற்கும் சரீர சரீரித் தன்மையை முழங்குபவையான வேதவாக்யங்களைக்கொண்டு எல்லா வேதவாக்யங்களுக்கும் பொருத்தமான பொருளைக் காட்டினார். தேவதாவிஷயத்திலும் "ஸ ஆத்மா அங்க₃ாந்யந்யா தே₃வதா:" [தைத்திரீய உபநிஷத்] [பரமாத்மாவே தே₃வதைகளுக்கெல்லாம் ஆத்மா. மற்ற தெய்வங்கள் அவ

http://acharya.org

னுடைய அவயவங்களே] "தமீஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம் தம் தேவதாநாம் பரமம் ச தைவதம்" [ச்வேதாச்வதர உபநிஷத்] [ஈஸ்வரர்களுக்கெல்லாம் மேலான பெரிய ஈஸ்வரனும், தேவதைகளுக்கெல்லாம் மேலான பெரிய தேவதையாயிருப்பவன் பரமாத்மா], "நாராயண பரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: | நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:||"[தைத்திரீய நாராயணவல்லி] [நாராயணனே பரப்ரஹ்மம், பரமாத்மா, பரஞ்சோதி, பரதத்வம்] "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:" [மஹோபநிஷத்] [நாராயணன் ஒருவனே ஆதிகாலத்தில் இருந்தான். பிரமனும் இல்லை; சிவனும் இல்லை] முதலான பல வேதவாக்யங்கள் நாராயணன் ஒருவனே பரதேவதை என்றும், சிவன் பிரமன் முதலானவர்கள் அவனுக்கு அடங்கிய சிறு தெய்வங்களே என்றும் முழங்கியிருக்கின்றன. முற்கூறிய கிரந்தங்களில் பல்லாயிரக்கணக்கான சாஸ்திரவாக்கியங்களை எடுத்துக் காட்டி இது நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. "சங்கரரும் வைணவமும்" எனும் நமது நூலிலும், ஸுதர்சனர் பதில் - பல கேள்விகளுக்கு பதில்களிலும் ஆதிசங்கரரும் தமது ப்ரஸ்தானத்ரய-ஸஹஸ்ரநாம பாஷ்யங்களில் நாராயணன் ஒருவனே மோக்ஷம் அளிக்கவல்ல பரம்பொருள் என்றும், மற்ற தெய்வங்கள் அற்பபலன்களையளிக்கவல்ல சிறுதெய்வங்களே என்றும் முழங்கியிருப்பதை நாம் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் எந்த பதிலையும் சொல்லாமல், சங்கரர் ஆறு மதங்களை ஸ்தாபித்தார் என்றும், எல்லா மூர்த்திகளும் சம்மதம் என்றார் என்றும் மனம்போனபடி எழுதி, ஆதிசங்கரர் காலத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் வரை எவராலும் கையாளப்படாதவையாய், அவருடைய பாஷ்யங்களுக்கு முரண்பட்டவையாய், இதிலிருந்தே அவருக்கு மிகப்பிற்காலத்தில் பாடப்பெற்று அவர் பேரில் ஏறிடப்பட்டவை என்று விளங்குகின்றவையான சிவானந்தலஹரி, ஸௌந்தர்ய லஹரி முதலான நூல்களை அதற்குப் பிரமாணமாகக் காட்டுவது மிகவும் அப்ராமாணிகமான செயலாகும். பிரமனைப் படைத்த பரம்பொருளை ருத்ரசப்தத்தால் உபநிஷத் சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டி 'சிவனே பரப்ரம்மம்' என்று பேசுகிறார் பீடாதிபதி. "நாராயணபரம்ப்ரஹ்ம "[தை-நா]"நாராயணாத்

ப்₃ரஹ்மா ஜாயதே" [நாராயணோபநிஷத்] என்று நாராயண ஶப்₃த₃த்தால் உபநிஷத்து பிரமனைப் படைத்த ப்₃ரஹ்மத்தைச் சொல்லியிருப்பதற்கும், சிவன், சம்பு முதலான நாமங்கள் நாராயணனின் நாமங்களே எனக்காட்டும் நாராயணவல்லி வாக்யங்களுக்கும், இதிஹாஸபுராணங்களும், சங்க நூல்களும் காளிதாஸன் முதலான வடமொழிக் கவிஞர்களும் நாராயணனே தன் உந்தித்தாமரையில் பிரமனைப்படைத்தான் எனப்பேசுவதற்கும், ருத்₃ரன் முதலான பரமாத்மநாமங்கள் ப்ரஜாபதியால் தன் பிள்ளையான ருத்₃ரனுக்குப் பிறக்கும் போது பாபம் நீங்குவதற்காக இடப்பெற்றவை என்று முழங்கும் சதபத₂ப்₃ராஹ்மண வாக்யங்களுக்கும் முரணாக இப்படிப் பேசுவது பீடாதி₄பதியின் நேர்மையின்மையையே காட்டுகிறது. இலக்கணப்படி சிவாதி₃ நாமங்களை நாராயண பரமாகக் கொள்ள இடமுண்டு என்பதையும், நாராயண நாமத்தை சிவபரமாகக் கொள்வதற்கு, "பூர்வபத₃ாத் ஸம்ஜ்ஞாயாமக₃:" என்னும் பாணினிஸூத்ரத்தின்படி நாராயண ஶப்₃த₃த்திலுள்ள ண கரம் தடையாயுள்ளது என்பதையும் அப்பயதீ₃க்ஷிதராலேயே மறுக்க முடியவில்லையே!

66. செப்டம்பர் 91 கலைமகளில் ஷை கட்டுரையில் "சிவ ரஹஸ்யம்" என்ற நூல் உள்ளது என்றும், அது லக்ஷம் கிரந்தங்கள் கொண்ட இதிஹாஸம் என்றும், அது இன்ன மும் அச்சிடப்படவில்லை என்றும், அறுபத்துமூன்று நாயன்மார்கள் சரித்திரமும், ஹரதத்தாசாரியர் சரித்திரமும் அதில் உள்ளது என்றும், அதில் 9 வது அம்சத்தில் 16 வது அத்தியாயம் முழுவதிலும் ஆதிசங்கரரின் சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது என்றும் எழுதி, பல கதைகளைக் காமகோடிப் பெரியவர் எழுதியிருக்கிறார். எவரும் இதுவரை கேள்விப்படாத இத்தகைய இதிஹாஸம் உண்டா என்பதை விளக்கவேண்டுகிறேன்.

ராமாயணம், மஹாபாரதம் ஆகிய இரண்டும் நம்நாட்டில் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக, வேதத்தை ஒப்புக் கொள்ளும் அனைவராலும், வேதத்தை விளக்கும் உபப்₃ரும் ஹணமான இதிஹாஸங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்

http://acharya.org

ளன; எல்லா இலக்கியங்களிலும் தழுவப்பட்டுள்ளன; எல்லா மதாசார்யர்களாலும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. சிலநூற்றுண்டுகளுக்கு முன்புஇருந்த அப்பையதீக்ஷிதர் காலம் வரையில் எவருமே சிவரஹஸ்யம் என்று ஒருநூல் உண்டு என்று எழுதியதில்லை. இதிலிருந்தே இந்த நூல் மிகச் சமீப காலத்தில் வடமொழியறிந்த ஒருவரால் கற்பனை செய்து எழுதப்பட்டது என்று விளங்குகிறது. சேக்கிழாருடைய பெரியபுராணத்திலுள்ள நாயன்மார்கள் சரித்திரங்கள் அனைத்தும் இதில் வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயிரம் வருடங்களுக்குள் இருந்த ஹரதத்தாசாரியர் சரித்திரமும் ஏழாவது நூற்றுண்டுக்குப்பின் தோன்றிய ஆதிசங்கரர், நாயன்மார்கள் சரித்திரமும் இதில் காணப் படுவதால் இது அப்பையதீக்ஷிதர் காலத்துக்குப் பிறகு சைவ ராக மாறிவிட்ட ஒரு அத்வைதியால் எழுதப்பட்டது என்று விளங்குகிறது. ஒருசில நூற்றுண்டுகளுக்குள் சிருங்கேரி மடத்திலிருந்து பிரிந்துவந்த ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டது என்று பல ஆதாரங்களைக்கொண்டு பலநூல்களில் சிருங்கேரி பக்தர்களால் நிலைநாட்டப்பட்டிருக்கும் காமகோடிமடத்தின் கற்பனையான 'ஐந்து மடங்களில் ஐந்து லிங்கக்கற்பனை' இதில் காணப்படுவதாலும், காமகோடிப்பெரியவரிடமே இந்த நூலின் சுவடிகள் இருப்பதாலும் காமகோடிமடத்தைச்சேர்ந்த ஒருவரே இந்த சிவரஹஸ்ய நூலை சமீபகாலத்தில் காமகோடிமடம் உண்டான பிறகு எழுதியிருக்கவேண்டும் என்று தெளிவாகத் தேறுகிறது.

67. அக்டோபர் 91 கலைமகளில் சங்கர விஜயக் கட்டுரையில் - பிரம்மாண்டபுராணத்தின் ஒரு பிரிவான மார்க்கண்டேய ஸம்ஹிதையில் மூன்ருவது அத்தியாயத்தில் ஆதிசங்கரர் சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது என்றும், அதில் கடைசி ஸ்லோகத்தில் ஐந்து லிங்கங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது என்றும், காஞ்சி காமகோடியில் ஆதிசங்கரர் யோகலிங்கத்தை ஸ்தாபித்தார் என்று கூறப்பட்டிருக்கிறது என்றும் பீடாதிபதி எழுதியிருக்கிருர். இது உண்மையா?

http://acharya.org

சென்ற கேள்விக்கு பதிலில் சொல்லப்பட்ட காரணங்களிலிருந்தே இந்த ஶ்லோகங்களும் காமகோடி மடத்தைச் சேர்ந்த ஒருவர் கற்பனை செய்ததாகவே இருக்கவேண்டும். நாட்டில் உலவிவரும் ஸ்தல புராணங்களில் பெரும்பாலானவை பிரம்மாண்டபுராணத்தில் உள்ளவை என்றே காணப்படுகிறது. ஆனால் பிரம்மாண்டபுராணத்தின் அச்சுப்புத்தகத்தில் இவை காணப்படுவதில்லை. அத்தகைய பிரம்மாண்டப் புளுகுகளில் ஒன்றே இது என்பதில் ஐயமில்லை. இது நிற்க. ஆதிசங்கரரைப் பற்றிய குறிப்பு பாத்மபுராணத்தின் ஆறுவது கண்டத்தில் 263 வது அத்தியாயத்தில் காணப்படுகிறது. இப் புராணம் பூனு ஆனந்தாஶ்ரமத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் இறுதியிலுள்ள ஶ்லோகங்கள் பின்வருமாறு.—

"ருத்₃ர உவாச—

மாயாவாத₃மஸச்சா₂ஸ்த்ரம் ப்ரச்ச₂ந்நம் பௌ₃த்₃த₄முச்யதே |

மயைவ கதி₂தம் தே₃வி கலௌ ப்₃ராஹ்மணரூபிணா ||

அபார்த்த₂ம் ஶ்ருதிவாக்யாநாம் த₃ர்ஶயந் லோககர்₃ஹிதம் |

கர்மஸ்வரூபத்யாஜ்யத்வமத்ர வை ப்ரதிபாத்₃யதே ||

ஸர்வகர்ம பரிப்₄ரஷ்டம் வைத₄ர்ம்யத்வம் தது₃ச்யதே |

பரேஶஜீவயோரைக்யம் மயா து ப்ரதிபாத்₃யதே ||

ப்₃ரஹ்மணோऽஸ்ய ஸ்வயம் ரூபம் நிர்கு₃ணம் வக்ஷ்யதே மயா |

ஸர்வஸ்ய ஜக₃தோऽப்யஸ்ய மோஹநார்த்த₂ம் கலௌ யுகே₃ ||

வேதா₃ர்த்த₂வந்மஹாஶாஸ்த்ரம் மாயயா யத₃வைதி₃கம் |

மயைவ ரக்ஷ்யதே தே₃வி ஜக₃தாம் நாஶகாரணாத் ||"

http://acharya.org

[“மாயாவாத3ம் என்னும் தீய ஶாஸ்த்ரம் மறைந்து நிற்கும் பௌ3த்3த4மதம் எனப்படுகிறது. கலியுக3த்தில் அந்தணவுருக்கொண்ட என்னாலேயே அது சொல்லப்படுகிறது. வேதவாக்யங்களுக்கு அனைவரும் இகழத்தக்க அவப்பொருள்களை அந்த மாயாவாத3ம் காட்டும். அந்த மதத்தில் கர்மத்திற்கு ஸ்வரூபத்யாக3மே சொல்லப்படும். அதில் எல்லாக் கர்மங்களினின்றும் நீங்கிய ஸந்யாஸாஶ்ரமம் சொல்லப்படும். அதில் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் என்னால் ஸ்வரூபைக்யம் கூறப்படுகிறது. ப்3ரஹ்மத்திற்கு நிர்கு3ணஸ்வரூபமும் என்னால் சொல்லப்படுகிறது. கலியுக3த்தில் தீயவர்கள் அனைவரும் மயங்குவதற்காக அவைதி3கமான இந்தப்பெரியஶாஸ்த்ரம் வேதா3ர்த்த2ம்போலே என்னால் வஞ்சனையால் அவர்களை அழிப்பதற்காக ரக்ஷிக்கப்படுகிறது” என்று சிவன் கூறினார்] என்று சங்கரர் உலகத்தை மயக்குவதற்காகவே மாயாவாத3த்தைப் பரப்பினார் என்றும், அந்த மதத்திற்கு “ப்ரச்ச2ந்ந (மறைந்து நிற்கும்) பௌ3த்3த4ம்” என்ற பெயர் உண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீராமானுஜர் ஸ்ரீப4ாஷ்யத்திலும் வேதாந்த தேசிகர் சததூஷணி முதலானக்ரந்தங்களிலும் இந்தப்பாத்3மபுராணவசனங்களைத் திருவுள்ளத்தில்கொண்டே அத்3வைதத்தை ப்ரச்ச2ன்ன பௌ3த்3த4ம் என்று வழங்கியிருக்கிறார்கள். இந்தக்கட்டுரையிலேயே காமகோடி பீடாதிபதியும் “ப்ரச்சன்ன பௌத்தர் என்பது அத்வைதிகளைக் குறிக்கும்.” என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்படி நெடுங்காலமாகப் பலரால் ஆதரிக்கப்பட்டிருக்கும் இந்தப் பாத்மபுராண சரித்திரத்தைக் காமகோடி பீடாதிபதி ஒப்புக்கொள்கிறாரா என்பது தெரியவேண்டும். இதை ப்ரக்ஷிப்தம் (இடைச்செருகல்) என்பாராகில், இதுவரை அச்சிலேயே வராத சிவரஹஸ்யமும் மார்க்கண்டே3ய ஸம்ஹிதையும் கற்பனையும் ப்ரக்ஷிப்தமுமாகும் என்பது சொல்லாமலே விளங்கும். ‘நடமாடும் தெய்வம்’ என்று அரசியல்வாதிகளாலும், பிரபல பத்திரிகைகளாலும் விளம்பரப்படுத்தப்படும் ஓர்பீடாதி4பதி இப்படிக் கற்பிதமான ப்ரமாணங்களை ஆத4ாரமாகக்காட்டுவதும், அதைப் பிரபலமான பத்திரிகைகள் இடைவிடாமல் பிரசுரம் செய்வதும் நம் நாட்டைப் பிடித்த சாபக்கேடு.

http://acharya.org

68. அக்டோபர் 91 கலைமகள் சங்கரவிஜயக் கட்டுரையில் "நம்முடைய வைதிகமார்க்க$_3$த்தில் விஷ்ணு ஆராதனமும் சிவ ஆராதனமும் உண்டு. தந்திர மார்க்கத்தில் வைஷ்ணவத்தை மட்டுமே ராமாநுஜர் எடுத்துக் கொண்டார்" என்று கூறப்பட்டுள்ளதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீராமானுஜர் எல்லா வேதவாக்யங்களுக்கும் பொருந்தும்படியான பொருளை நிர்ணயித்து விசிஷ்டாத்வைதத்தை நிலைநாட்டினர். சங்கரர் ஒருசில அபே$_4$த$_3$ வாக்யங்களைமட்டும் கொண்டு பல்லாயிரக்கணக்கான பே$_4$த$_3$ வாக்யங்களைப் பொருளற்றதாக்கி வேதத்திற்கு அவப்பொருள் கண்டார் என்பதே உண்மை. அத்வைதியான ஸ்ரீஹர்ஷர் சிறுகுழந்தையாயிருக்கும்போதே வாமாசார முறைப்படி தன் தாயின் சவத்தின் மீதிருந்து சிந்தாமணி மந்திரத்தை ஜபம் செய்து மந்த்ரஸித்$_3$தி$_4$பெற்றார் என்னும் வரலாற்றைப் பீடாதிபதியே இக்கட்டுரையில் எழுதியிருக்கிறார். இன்றும் அத்வைதிகளில் சிலர் சாக்த தந்த்ரத்தில் வாமாசாரமுறைப்படி நிர்வாண ஸ்த்ரீபூஜை முதலான அருவருக்கத்தக்க செயல்களைப்புரிந்து இவ்வுலகப்பலன்களைப் பெறுகிறார்கள் என்பது உலகறிந்தது. இத்தகைய வாமாசாரம் எதுவும் இல்லாததான பாஞ்சராத்ரமே பரமவைதிகம் என்று ஆகம ப்ராமாண்யம், ஸ்ரீப$_4$ாஷ்யம் முதலானவற்றில் நிலைநாட்டப் பட்டுள்ளது. "ஒருவனே தேவன்" என்று முழங்கும் வேதவாக்யங்களைக் கைவிட்டு, சிவன், சக்தி முதலான சிறுதெய்வங்களைப்பற்றி நின்று ஶைவஶாக்ததந்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள தாந்த்ரிக முறைகளை அனுஷ்டி$_2$த்து அற்பபலன்களைப் பெறும் தங்களுடைய தாழ்வை மறைத்து, பிறர்மேல்தாழ்வை ஏறிடுகிறார் பீடாதி$_4$பதி.

69. நவம்பர் 91 கலைமகளில் "சடகோபர் அந்தாதிபாடிய வைணவரான கம்பர் 'அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவென' என்று தொடங்கும் சுந்தரகாண்டக் கடவுள் வாழ்த்துப்பாடலில் 'உலகம் பொய்' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்று காமகோடி பீடாதிபதி எழுதுவது உண்மையா?

http://acharya.org

இது அப்பாடலுக்கு அவப்பொருளே என்பதையும், கம்பன் உலகனைத்தும் மெய் என்றே பல பாடல்களில் கூறியிருக்கிறான் என்பதையும் ஸுதர்சனர் பதில் முதல் சதகத்தில் 50 வது கேள்வியின் பதிலில் விரிவாக நிரூபித்திருக்கிறோம். அங்கே கண்டுகொள்க.

T. கோவிந்தய்யங்கார், ஸ்ரீ வில்லிபுத்தூர் மற்றும் பலர்.

70. டிசம்பர் 91 கலைமகளில் "சங்கரவிஜயம்—யோக$_3$ லிங்கம்" கட்டுரையில் "சுவாமி என்றால் சுப்பிரமணிய சுவாமிக்குத்தான் பெயர். மற்ற தேவதைகள் இவருடைய பெயரைத்தான் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்; "தேவஸேனாபதி: சூர: ஸ்வாமீ கஜமுகாநுஜ:"(அமரகோசம்) ......நல்ல ஆசாரத்துக்கு, ப்ராஹ்மண்யத்துக்கு ஆதாரமானவர் என்ற கருத்தில் ஸுப்ரஹ்மண்யர் என்று சொல்லுகிறார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. அமரகோசத்தில் இந்த ஶ்லோகம் காணப்படவில்லை. உண்மையை வெளிப்படுத்த வேண்டுகிறேன்.

ஸ்வாமி என்னும் பெயர் பல்லாயிரக்கணக்கான ப்ரமாணங்களில் தலைவர்கள் அனைவருக்கும் பொதுவான பெயராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிகண்டுக்களிலும் அவ்வண்ணமேயுள்ளது. "பதிம் விஶ்வஸ்ய நாராயணம்" என்று வேதத்திலும், பல்லாயிரக்கணக்கான இதிஹாஸ புராண வாக்யங்களிலும் நாராயணனே 'விஶ்வபதி' என்றும், ஸ்வாமி என்றும், லோகஸ்வாமி என்றும் வழங்கப்படுகிறான். வேதத்திலோ, பழைய இதிஹாஸபுராணங்களிலோ முருகன் ஸ்வாமி என்றோ ஸுப்$_3$ரஹ்மண்யன் என்றோ குறிக்கப்படவில்லை. 'தகப்பன்சாமி' என்னும் கதை ஏற்பட்டபிறகு முருகனுக்குப் பிற்காலத்தில் 'சுவாமி' என்னும் பெயர் அவனுடைய பக்தர்களிடம் வழங்குகிறது. "ப்$_3$ரஹ்மண்யோ தே$_3$வகீபுத்ர:" என்று உபநிஷத்திலும், பாத்மபுராணம் முதலான ஸாத்விக புராணங்களிலும் பிராம்மணர்களால் ஆராதிக்கத்தக்கவன் விஷ்ணுவே என்று முழங்கியிருப்பதைக் கண்டு பொறாத சைவர்களும், ஸ்மார்த்தர்களும் பிற்காலத்தில் 'ஸுப்$_3$ரஹ்மண்யன்' என்னும் பெயரை முருகனுக்கு வைத்துக்கொண்டார்கள். இப்படித்திருமாலுடைய நாமங்களே இவர்களால் முருகனுக்குக் கடன் வாங்கப்பட்டது என்பது

http://acharya.org

தெளிவாக விளங்கும். அமரத்தில் உள்ளதாகப் பீடாதிபதி எடுத்துள்ள ஶ்லோகம் நம்மிடம் உள்ள எந்த அமரகோசப் பதிப்பிலும் இல்லை. பல அமரகோசவ்யாக்₂யாநங்களைப் பரி சோதித்து ஜயபுரஸம்ஸ்க்ருதப் பாடசாலை ஆசிரியரான சிவதத் தசர்மா என்பவரால் வ்யாக்₂யாஸுதை₄ என்னும் வ்யாக்₂யா நத்துடன் அச்சிடப்பட்ட அமரகோசப் பதிப்பு நம்மிடம் உள்ளது. அதில் முதல் காண்ட₃த்தில் முதலாவதான ஸ்வர்க்க₃வர்க்க₃த்தில் 39, 40 ஶ்லோகங்களில் கந்தனின் நாமங்கள் எடுக்கப்பட்டுள்ளன: அவையாவன:-

கார்த்திகேயோ மஹாஸேந: ஶரஜந்மா ஷடா₃நந: |
பார்வதீநந்த₃ந: ஸ்கந்த₃: ஸேநாநீ ரக்₃நிபூ₄ர் கு₃ஹ:||
ப₃ாஹுலேயஸ் தாரகஜித்₃ விஶாக₂: ஶிகி₂வாஹந: |
ஷாண்மாதுர: ஶக்தித₄ர: குமார: க்ரௌஞ்சதா₃ரண:||

[1. கார்த்திகேயன் 2. மஹாஸேநன் 3. ஶரஜந்மா 4. ஷடா₃நநன் 5. பார்வதீநந்த₃னன் 6. ஸ்கந்தன் 7. ஸேநாநீ 8. அக்₃நீபூ₄: 9. கு₃ஹன் 10. ப₃ாஹுலேயன் 11. தாரகஜித் 12. விசாக₂ன் 13. ஶிகி₂வாஹனன் 14. ஷாண் மாதுரன் 15. ஶக்தித₄ரன் 16. குமாரன் 17. க்ரௌஞ்ச தா₃ரணன்] என்று பதினேழு பெயர்கள் கந்தனுக்குக் காட்டப் பட்டுள்ளன. "ஸப்தத₃ஶ கார்த்திகேயஸ்ய" என்று வ்யாக்₂ யாநத்திலும் 'கார்த்திகேயனுடைய நாமங்கள் பதினேழு' என்று கணக்கிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே பீடா தி₄பதி எடுத்துள்ள ஶ்லோகம் கல்பிதமானது என்றே விளங்குகிறது. "மோக்ஷமிச்சே₂த் ஜநார்த்த₃நாத்" என்று ப்ரஸித்₃த₄மான ஶ்லோகப் பகுதியை "ஜ்ஞாநத₃ாதா மஹேஶ்வர:" என்று மாற்றுவதும், இல்லாதஶ்லோகத்தை அமரகோசத்தில் இருப்பதாக எழுதுவதும், கற்பிதமான சிவரஹஸ்யம், மார்க்கண்டே₃ய ஸம்ஹிதை முதலான நூல்களை ப்ரமாணமாக எடுப்பதும் நேர்மையுள்ளவர்கள் செய்யக்கூடிய காரியமா என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்கவேண்டும். இக்கட்டுரையில் பீடாதிபதி ஸ்வாமிபுஷ்கரிணி, குமாரதாரை, பாலாஜி முதலான பெயர்களைக் கொண்டு பல விதண்டாவாதங்களைச் செய்கிறார்.

http://acharya.org

இவற்றுக்கெல்லாம் நமது ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்தில் 64 வது கேள்வியின் பதிலில் விரிவாக பதிலுரைக்கப்பட்டுள்ளது. அதில் கண்டுகொள்க.

(குவாலியர்) ஸத்யமூர்த்தி அய்யங்கார் ஸ்வாமி, சென்னை-78.

71. பொய்யான விஷயங்களையே திருப்பித்திருப்பிப் பிரசாரம் செய்யும் பொய்யர்களுக்கு பதில் எழுதுவதில் ஸுதர்சனத்தின் பக்கங்களும், தேவரீருடைய பொன்னான நேரமும் வீணாகிறதே; இதைத் தவிர்க்கக்கூடாதா?

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகவே ஒற்றுமை என்னும் போர்வையில் வைஷ்ணவத்தைத் திரித்துக் கூறுவதும் அருளிச்செயல், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு அவப்பொருள் கூறுவதும், பொது ஜனப்பத்திரிகைகளில் ராஜாஜி, பி. ஸ்ரீ., காமகோடி பீடாதிபதி, வாரியார் முதலான பிரமுகர்களால் இடைவிடாமல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் வைஷ்ணவர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு விடாமல் இருப்பதற்காகவே எந்தையாரால் நமது பத்திரிகை தோற்றுவிக்கப்பட்டு, அதன் மங்கள ஶ்லோகத்தில் "ப்ரதிபக்ஷநிராஸகம்" என்று வைஷ்ணவத்தை அழிக்கப் பார்க்கும் எதிரிகளின் வாதங்களைத் தள்ளுவதும் பத்திரிகையின் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது. வைஷ்ணவத்தை அழியச்செய்யும் முயற்சிகள் வைஷ்ணவ விரோதிகளால் இன்றுவரை பொதுஜனப்பத்திரிகைகளில் செய்யப்படுகின்றது. நம்மவர்கள் அவை உண்மையோ என மயங்கிவிடாமல் இருப்பதற்காக, நாம் அவற்றுக்குப் பதிலுரைக்க வேண்டியிருக்கிறது. இடைவிடாமல் பொய்ப் பிரசாரம் செய்பவர்களைத் திருத்துவது நமது நோக்கமல்ல. வைஷ்ணவர்கள் வழிதவறிச் செல்லாமல் இருக்கச் செய்வதே நமதுநோக்கம். அந்தநோக்கத்தில் நாம் பெருவெற்றி பெற்றிருக்கிறோம் என்று அன்பர் பலர் நமக்குத் தெரிவித்துவருகிறார்கள். ஆனந்தவிகடன் போன்ற பல பத்திரிகைகளில் பொய்ப் பிரசாரம் நிறுத்தப்பட்டிருப்பதும் நமக்குப் பெருவெற்றியாகும். ஆகையால் நமது மறுப்புரைகள் வீணானவையல்ல.

http://acharya.org

K. சௌந்தரராஜன், பம்பாய்-20.

72. 9—2—92. கல்கியில் காமகோடி பீடாதிபதியின் 'அருள் வாக்கு' என்ற தலைப்பில் அடிமுடிதேடிய கதை சொல்லப்பட்டுள்ளது. அதே கல்கியில் பக்கம் 50 ல் மஹாமகத்தைப் பற்றிய கட்டுரையிலும் ஸ்தலபுராணக் கதை வெளியிடப்பட்டு "ராமன் இந்தக் குளத்தில் குளித்ததாலும், சிவலிங்கத்தைப் பூஜித்ததாலும்தான் ராவணனை வெல்ல முடிந்தது" என்று கூறப்பட்டுள்ளது. இவற்றுக்குத் தக்க பதிலிறுக்க வேண்டுகிறேன்.

மஹாமகக்கதை மிகவும் அபத்தமானது என்பதை மாசிமாத ஸுதர்சனத்தில் தலையங்கமான "மஹாமக விபத்து" என்னும் கட்டுரையில் விவரமாக விளக்கியிருக்கிறோம். அது இந்த சதகத்தில் அநுபந்தமாக இணைக்கப் பட்டுள்ளது. வேதங்களிலும், ராமாயண மஹாபாரதங் களிலும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் பாகவதம் போன்ற ப்ரஸித் தமான ஸாத்விக புராணங்களிலும், நாயன்மார்கள் காலத் திற்கு (கி. பி. 7 ம் நூற்றாண்டுக்கு) முற்பட்ட தமிழ், வடமொழி இலக்கியங்களிலும் — திருமாலைத் தாழ்த்துவதற்காகவே ஏற்பட்ட அடிமுடிதேடிய கதை முதலானவையும் ஆங்காங்கு திருமாலைத் தாழ்த்துவதற்காகவே கற்பிக்கப்பட்ட தல புராணக்கதைகளும் ஆதரிக்கப்படாததிலிருந்தே இவை பிற் காலக் கற்பனைகள் என்பது விளங்கும். இதைப்பத்து சதகங்களிலும் பல கேள்விகளின் பதில்களில் தெளிவு படுத்தியிருக்கிறோம். ஆயினும் கல்கி, கலைமகள் போன்ற சில பத்திரிகைகளில் லஜ்ஜையில்லாமல் அறிவுள்ளவர்கள் கைகொட்டிச் சிரிக்கவேண்டிய இத்தகைய பொய்க்கதைகளைத் திருப்பித்திருப்பி எழுதிவருகிறார்கள். வாதத்திற்கு மருந்துண்டு. பிடிவாதத்திற்கு மருந்தில்லை. ஆகையால் இத்தகைய கதைகள் பத்திரிகைகளில் வெளிவரும்போது அது குறித்து நமக்கு எழுதாமல் சம்பந்தப்பட்ட பத்திரிகை களுக்கே நேரடியாகக் கண்டனம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

R. மணவாளன் M.A.M.Ed., தமிழாசிரியர், திருவெறும்பூர்

73. இங்குள்ள தமிழாசிரியர் ஒருவர் ஒரு திருமண அழைப்பிதழில் "மத்தளங் கொட்ட" என்னும் ஆண்டாள்

http://acharya.org

பாசுரத்தை அச்சிடச்செய்திருந்தார். இதன் இரண்டாவது அடி "முத்துடைதாமம் முழு நிலா பந்தர் கீழ்" என்று அச்சிடப்பட்டிருந்தது. "இப்படிப்பாடல் இல்லையே" என்று அவரைக் கேட்டதற்கு அந்தப் பாடமே மோனைக்குப் பொருந்தும் என்று பிடிவாதம் பிடிக்கிறார். இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

எந்த திவ்ய ப்ரபந்தப்பதிப்பிலும் "முழுநிலா" என்னும் பாடம் இல்லை. திவ்யப்ரபந்தப் பாடல்களில் ஒவ்வொரு அடியிலும் எதுகை நியமம் உண்டு. ஆனால் ஒவ்வொரு அடியிலும் மோனை இருக்க வேண்டும் என்ற நியமம் இல்லை. 'மத்தளங்கொட்ட" என்ற முதலடியிலேயே மோனை இல்லையே. மற்றும் பல திவ்யப்ரபந்தப் பாடல்களிலும் இது போல் மோனையில்லாமல் இருப்பதைக் காணலாம். பல திருக்குறள்களிலும் மோனை இல்லை. உதாரணம் "கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் குறளைக் காணலாம். இக்குறளில் இவர் மாற்றம் செய்யத்துணிவாரா? மோனைக்காக மாற்றத் துணிந்தால் இலக்கியங்களெல்லாம் சிதைந்து போகும். மேலும், திவ்யப்ரபந்தங்கள் சுமார் ஆயிரம் வருடங்களாக எழுந்த வியாக்கியானங்களால் நன்கு பாதுகாக்கப் பட்டவை. அவற்றை மனம் போனபடி மாற்றுவது அடாத செயலே.

Dr. எம்பார் V. ரங்காசாரியர், சீர்காழி.
K. ரவிகுலராமன், பாண்டி.

74. 3—11—92 "கல்கி"யில் "ஸ்ரீ வேங்கடேச சுப்ர பாத மஹிமை" என்ற கட்டுரையில் ஸ்ரீ உ. வே. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி வேங்கடேச ஸுப்ரபாதத்தை இயற்றிய ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா வேதாந்த தேசிகரின் குமாரரான வரதாசாரியரின் சிஷ்யர் என்றும், மணவாள மாமுனிகளின் தொடர்பும் பெற்றவர் என்றும், திருநாங்கூர்தான் இவர் அவதரித்த இடம் என்றும் எழுதியிருக்கிறார். இது சரியா?

பிரதிவாதி பயங்கரம் அண்ணா திருநாங்கூரில் அவதரித்தவர் என்று கூறுவது சரியல்ல. அவர் காஞ்சீபுரத்தில் அவதரித்ததாகவே அவரைப்பற்றிய நூல்கள் கூறுகின்றன. 'ஹஸ்திகிரிநாதரண்ணா' என்னும் அவர் திருநாமமும்

http://acharya.org

இதையே வலியுறுத்துகிறது. அவர் 74 ஸிம்ஹாஸனாதிபதிகளில் ஒருவரான முடும்பை நம்பி வம்சத்தில் அவதரித்தவர். தமது திருத்தகப்பனாரிடம் அவருக்கு ஸமாச்ரயணம் என்றும், ஸ்ரீவேதாந்த தேசிகர் குமாரரான வரதாசார்யரிடம் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் செய்தாரென்றும், மணவாள மாமுனிகளிடம் அவர் பகவத்விஷய ரஹஸ்யாதி$_3$ க்ரந்தங்கள் பயின்றார் என்றும் அவருடைய வம்சத்தவர்கள் கூறிவருகிறார்கள். அவருடைய வம்சத்தில் இன்றுள்ள பல கிளைகளைச் சேர்ந்தவர்களனைவரும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவருடைய தனியனைப்பற்றி ஒரு அழகான சரித்திரம் உண்டு. அவர் வேதாந்த தேசிககுமாரரிடம் ஸ்ரீ பாஷ்யகாலக்ஷேபம் கேட்டு "பிரதிவாதி பயங்கரர்" என்னும் விருது பெற்ற பின்பு மணவாள மாமுனிகளுடைய பெருமைகளைக் கேள்விப்பட்டு அவரை ஆஶ்ரயித்து பகவத்விஷய ரஹஸ்யாதிகளைப் பயின்றார் என்றும், அவருடைய தனியனில் "வேத$_3$ாந்த தே$_3$ஶிககடாக்ஷ விவ்ருத்$_3$த$_4$ போ$_3$த$_4$ம்" [வேதாந்ததேசிகருடைய கடாக்ஷத்தாலே அறிவுவளரப் பெற்றவர்] என்னும் முதலடியை மணவாள மாமுனிகளே அநுக்ரஹித்தார் என்றும், "காந்தோபயந்த்ரு யமிந: கருணைக பாத்ரம்" [மணவாள மாமுனிகளின் கருணைக்கு ஒரே பாத்திரமாயிருப்பவர்] என்னும் இரண்டாவது அடியை அண்ணாவாமே அநுசந்தித்தார் என்றும், "வத்ஸாந்வவாயம் அநவத்$_3$யகு$_3$ணைருபேதம் ப$_4$க்த்யா ப$_4$ஜாமி பரவாதி$_3$ ப$_4$யங்கரார்யம் ||" [ஸ்ரீவத்ஸகோத்ரத்தில் உதித்தவராய், குற்றமற்ற குணமுடையவரான ப்ரதிவாதி ப$_4$யங்கராசாரியரை பக்தியுடன் ஆஶ்ரயிக்கிறேன்.] என்னும் பின்னிரண்டு அடிகளை மணவாள மாமுனிகளின் மற்ற சிஷ்யர்கள் அருளினர் என்றும் அவரைப்பற்றிய நூல்களில் காணப்படுகிறது. இதிலிருந்து அவர் மாமுனிகளின் ஸம்பந்தத்தையே மிகப்பெரிதாக மதித்தார் என்று விளங்குகிறது. ஸுப்ரபா$_4$தத்தில் அடங்கிய ப்ரபத்தியிலும், மங்களத்திலும் "ஸௌம்யோபயந்த்ரு முநிநா மம த$_3$ர்ஶிதௌ தே" "ஸ்ரீமத் ஸுந்த$_3$ரஜாமாத்ரு முநி மாநஸ வாஸிநே" என்று மணவாள மாமுனிகளின் ஸம்பந்தத்தையே தமக்குச் சொல்லிக் கொண்டிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. பல

http://acharya.org

வாலாற்று நூல்களில் அவர் மணவாள மாமுனிகளால் நியமிக்கப் பெற்ற அஷ்டதிக் கஜங்களில் ஒருவர் என்று காணப்படுவது இதை ஐயந்திரிபற நிரூபிக்கிறது. ஸுப்ரபாதத்தில் உள்ள "ஸ்ரீம ஶ்ரியா க4டிகயா த்வது3பாய பா4வே, ப்ராப்யே த்வயி ஸ்வயமுபேயதயா ஸ்பு2ரந்த்யா நித்யாஶ்ரிதாய" என்னும் ஶ்லோகப் பகுதியிலே "எம்பெருமான் உபாயமாகும் போது பிராட்டி புருஷகாரமாகிறாள். அவன் ப்ராப்யமாகும் போது தானும் ப்ராப்யமாக விளங்குகிறாள்" என்று பெரியவாச்சான் பிள்ளை தொடங்கி மாமுனிகள் ஈறாகவுள்ள தென்னாசார்யர்களின் திருவுள்ளத்தைப் பின்பற்றி, பிராட்டிக்கு உபாயத்வத்தைத் தவிர்த்திருப்பதிலிருந்து இவர் மாமுனிகளின் திருவுள்ளத்தையே பின்பற்றியவர் என்று இந்தக் கிரந்தத்திலிருந்தே அகச்சான்றாக விளங்குகிறது.

K. A. பார்த்தசாரதி. சென்னை - 44.

75. 29—2—92 "ஹிந்து" பத்திரிகை கடைசி பக்கக் கட்டுரையில் மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரி "ஸ்ரீராம பிரான் சிவனுடைய அம்சம் என்பதை 'ஸ்ரீராமாயண தாத்பர்ய ஸாரஸங்க்ரஹம்' என்ற நூலில் ஸ்ரீராமாயணத்தைக் கொண்டே அப்பைய தீக்ஷிதர் நிரூபித்திருக்கிறார்" என்று சொற்பொழிவில் கூறியதாகக் காணப்படுகிறது. இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

அப்பைய தீக்ஷிதர் தம் நூல்களில் முன்னுக்குப் பின் முரணான பல விதண்டா வாதங்களை எழுதியிருக்கிறார். அவைகளில் இதுவும் ஒன்று. வால்மீகி தம் ராமாயணத்தில் அவதாரகட்டம் தொடங்கி, ஸ்ரீராமன் தன்னுலகம் புகும் வரையில் நூற்றுக்கணக்கான இடங்களில் "அவன் விஷ்ணுவின் அவதாரம்" என ஐயந்திரிபறக் கூறியிருக்கிறார். இதைமாற்றி அவன் மற்றொரு தெய்வத்தின் அம்சம் என்று வால்மீகி கூறியிருப்பதாக எழுதுவது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதை ஒக்கும். பிரபல எழுத்தாளரான கா. ஸ்ரீ. ஸ்ரீனிவாஸாசாரியர் (கா. ஸ்ரீ. ஸ்ரீ) ஸ்வாமியின் துணையோடு நாம் விஷ்ணுசித்த விஜயத்தின் அடுத்த பாகமான ஸ்ரீராமாயண நிர்ணயத்தை விரைவில் ஸுதர்சனத்தில் தொடங்கவிருக்கிறோம். அதில் அப்பைய தீக்ஷிதரின் வாதங்கள் அடியறுக்கப்படும்.

http://acharya.org

G. முத்துசாமி பாகவதர், நல்லூர் (பெருமத்தூர்).

76. ஈடு 1—3—6 பாசுரவியாக்கியானத்தில் "லிங்கத்துக்கு உத்கர்ஷம் தோற்றும்படியாய் இருப்பதொரு ப்ரபந்தம் பண்ணித்தரவேணும் என்பாரைப் போலே" என்று அருளிச் செய்யப்பட்டுள்ளது. ஆசார்ய ஹ்ருதயம் 222 ம் ஸூத்ரவ்யாக்யானத்திலும் இப்படி உள்ளது. இதை விளக்க வேண்டுகிறேன்.

"இலிங்கத்திட்ட புராணத்தீரும்" [திருவாய் 4—10—5] என்னும் பாசுரத்தில் நம்மாழ்வாரே இவ்விஷயத்தை உணர்த்தியிருக்கிறார். அங்கு வ்யாக்யானங்களில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. சுருக்கமாக இங்கு விளக்குகிறோம். "லிங்கத்தின் பெருமையைக் கூறும்" என்று ஒருவன் கேட்க, ஸூத பௌராணிகர் லிங்கத்துக்கு இல்லாத பெருமைகளையெல்லாம் ஏறிட்டுச் சொன்ன புராணமே இலிங்கபுராணம். அப்படியல்லாமல் "உலகிற்குக் காரணம் யார்" என்று மைத்ரேயர் பொதுவாகக் கேட்க, வேதத்திலும் புகழப்பட்ட பராசரமஹரிஷி "விஷ்ணுவே ஜகத் காரணம்" என்று நிர்ணயித்துச் சொன்ன புராணமாகையாலே விஷ்ணு புராணமே ஆதரிக்கத்தக்கது என்றும், "எருமையை யானையாகக் கவிபாடு" என்றும், "புளிச்சக் கண்ணனைப் புண்டரீகாக்ஷனாகக் கவிபாடு" என்றும் ஒருவன் கேட்க, அதற்குத் தக்கபடி ஏறிட்டுப் பாடிய கவிகள் போன்றவை இலிங்க புராணம் முதலானவை என்றும் கேள்வி பதில்களிலிருந்தே நடுநிலையாளருக்கு விளங்கும் என்பது இந்த வ்யாக்யான ஸ்ரீஸூக்திகளின் கருத்து.

T. நாச்சியார், ஸ்ரீவில்லிபுத்தூர்.

77. *'மஹா மக விபத்து' என்னும் தலைப்பில் தங்களால் எழுதப்பட்ட தலையங்கத்தினால் எழுந்த சில சந்தேகங்களைக் கேள்விகளாக அளிக்கிறேன். சந்தேகம் தீர்த்தருளவேணும்.

(1) ஸ்தலபுராணங்கள் எல்லாமே மதாசார்யர்கள் காலத்திற்குப் பிற்பட்டவையா? ஆங்காங்கு விஷ்ணு கோயில்களில் பிரம்மோத்ஸவம் நிறைவடையும்போது ஸ்தல புராணம் படிப்பதும் அதைக்கேட்டு ஜனங்கள் மகிழ்வதும் தவறா?

* இத்தலையங்கத்தை அனுபந்தத்தில் காணலாம்.

http://acharya.org

(2) நதிகள் க்ஷேத்ரங்களுக்குப் பாவத்தைப் போக்கி மோக்ஷம் கொடுக்கத்தக்க சக்தியே கிடையாது என்று சொல்லிவிட முடியுமா?

இக்கேள்விகளுக்கு முறையே பதிலளிக்கிறேன்:-

(1) ஒரு சில ஸ்தல புராணங்கள் ஆழ்வார்களாலும் ஆதரிக்கப்பட்டுள்ளன. "இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்" [திருப்பள்ளியெழுச்சி-5] "அரங்கமென்பர் நான்முகத்தயன் பணிந்த கோயிலே" [திருச்சந்த-51] முதலான சில இடங்கள் காணலாம். ஆனால் பெரும்பாலான திவ்ய தேசங்களுக்கு உள்ள ஸ்தல புராணப் பெருமைகளை ஆழ்வார்கள் பாடவில்லை. ஆசார்யர்களும் கோயில், பெருமாள் கோயில் போன்ற ஒரு சில ஸ்தலங்களின் புராணங்களையே ஆதரித்திருக்கிறார்கள். பொதுவாக வேதாந்திகள் அனைவரும் வேதத்தையே முக்ய ப்ரமாணமாகக் கொண்டார்கள். அதற்கு விளக்கம் செய்வதற்கே இதிஹாஸ புராணங்களை எடுத்துக் கொண்டார்கள். மனிதனால இயற்றப்பட்ட எந்த நூலும் ப்$_4$ரமம் (மயக்கம்), ப்ரமாத$_3$ம் (மறதி), விப்ரலிப்ஸை (வஞ்சிப்பதில் விருப்பம்) முதலான தோ$_3$ஷங்களுக்கு இலக்காகக் கூடுமாகையால், எந்த ஸ்ம்ருதியும் ச்ருதியாகிய வேதத்திற்கு முரண்படாமலிருந்தால்தான் ப்ரமாணம் என்று பூர்வமீமாம்ஸையில் விரோதா$_4$தி$_4$கரணமும் ப்$_3$ரஹ்மஸூத்ரத்தில் ஸ்ம்ருத்யதி$_4$கரணமும் நிர்ணயித்தன. ஈச்வரனே செய்ததாயிருந்தாலும், புத்தாவதாரத்திற்போலே அசுரர்களை வஞ்சிப்பதற்குச் செய்ததாயிருக்கலாமாகையாலே 'விப்ரலிப்ஸை' என்னும் தோஷத்திற்கு இலக்காகக் கூடுமாகையால், வேதாந்திகள் வேதத்தை 'அபௌருஷேயம்' (எவராலும் இயற்றப்படாதது) என்று ஒப்புக்கொண்டு அதற்கே ஸ்வத: ப்ராமாண்யம் [இயல்வான ப்ரமாணத்தன்மை] உண்டு என்றும், மனிதனால் இயற்றப்பட்ட ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் ஆகிய எதற்கும் இப்பெருமை இல்லை என்றும் கொண்டார்கள். வேதத்தின் பூர்வப$_4$ாக$_3$த்தை விளக்குவதற்கு ஸ்ம்ருதிகள் ப்ரமாணமானாலும், வேதத்திற்கு முரண்பட்டதாகையாலே 'கபிலஸ்ம்ருதி' முதலான சில ஸ்ம்ருதிகள் ப்ரமாணமல்ல என்று நிர்ணயித்தார்கள். வேதத்திற்கு உத்தரப$_4$ாக$_3$மான உபனிஷத்துக்களை விளக்கும் இதிஹாஸ புராணங்களிலும் சான்றோர்களால் மிகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் ஆகிய இதிஹாஸங்

http://acharya.org

களுக்கு உள்ள பெருமையைப் புராணங்களுக்கு ஒப்புக்கொள்ள வில்லை. அப்புராணங்களிலும் நடுநிலை நிற்பதாய், சான்றோர்கள் அனைவராலும் ஏற்கப்பட்டதாய், வேதத்தை ஒட்டிப் பேசுவதான விஷ்ணுபுராணம் முதலான ஸாத்விக புராணங் களுக்கு உள்ள பெருமையை 'இலிங்கத்திட்டபுராணம்' முதலான தாமஸ புராணங்களுக்கு ஒப்புக்கொள்ளவில்லை. இப்படி யிருக்கும்போது ஒவ்வொரு க்ஷேத்ரத்திற்குப் பெருமையைக் கூறுவதற்காகவே ஏற்பட்ட ஸ்தல புராணங்களுக்கு மிகவும் குறைவான ப்ராமாண்யமே உண்டு என்பதை நடுநிலை யாளர்கள் உணரலாம். ஒரு சில ஸ்தல புராணங்கள் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் காலத்திலும் இருந்திருக்கலாம். அதனாலேயே அவற்றைக் கோயில்களில் ப்₃ரஹ்மோத்ஸவ காலததில் பெருமாள் திருமுன்பே படிக்கும் வழக்கமும் ஏற்பட் டிருக்கலாம். இதைப்பார்த்துவிட்டு சைவர்கள் ஆயிரக்கணக் கான ஸ்தல புராணங்களை ஊருக்கு ஊர் கற்பித்துவிட்டனர். மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர் (உ. வே. சுவாமிநாதய்யரின் ஆசிரியர்) தமிழிலும் ஏராளமான சிவ ஸ்தலங் களுக்கு ஸ்தலபுராணங்களைத் தாமேபாடிவிட்டார். இந்நிலையில் ஸ்தலபுராணங்களை அபி₄மானத்தாலே அந்தந்தஊர்க்காரர்கள் ஆதரிக்கலாமே யொழிய அவற்றைக் கொண்டு சாஸ்திர நிர்ண யம் செய்ய முடியாது. எல்லா ஸ்த₂ல புராணங்களையும் ஆதரிப் பதாக இருந்தால் "ஸ்ரீராமபிரான் தன்னுடைய பாவங்கள் போவ தற்காகப் பல ஊர்களில் லிங்கபிரதிஷ்டை செய்தான்" என்று சைவர்கள் எழுதிவைத்திருக்கும் (வேதத்திற்கு முரண்பட்ட) பல அபத்தக்கதைகளையும் ஆதரிக்கவேண்டிவரும். ஆகையால், வேதத்திற்கு முரண்படாதவையாய், நீண்ட நாட்களாக திவ்ய தேசங்களில் பழக்கத்திலிருப்பவையான ஸ்த₂லபுராணங்களை மட்டுமே ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்று தேறுகிறது.

(2) நதிகளுக்கும், க்ஷேத்ரங்களுக்கும் பாபத்தைப் போக்கும் ஶக்தியுண்டு என்று ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் பல விடங்களில் அருளிச்செய்யப்பட்டுள்ளது. ஆனால், "க்ஷேத்ர தீர்த் தங்களாகிறஇவையெல்லாம் ஜ்ஞாநத்திற்கு விரோதியான பாபங் களைப்போக்கி, காலக்ரமத்தில் பரமாத்மஜ்ஞாநத்தைவிளைக்கக

யால் பரம்பரயா மோக்ஷ காரணம் ஆகின்றன" என்றே முற் கூறிய ஆழ்வார் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்குக் கருத்துரைக்க வேண்டும். இல்லாவிடில் க்ஷேத்ர தீர்த்தங்களில் வாழும் விலங்குகளும், மீன்கள் முதலானவையும் அதுகாரணமாக உடனே மோக்ஷமடைய வேண்டிவரும். மேலும், இப்படிக் கொள்ளாவிடில் 'ஜ்ஞானத்தாலே மோக்ஷம்' என்று எல்லா வேதாந்திகளும் இசைந்தது பொருளற்றதாகிவிடும். குறிப்பாக நம்முடைய தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் அந்த ஜ்ஞானமும் எம்பெருமானருளாலே விளைவதாகையாலே அதற்கும் இயல்வான மோக்ஷோபாயத்வம் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. "அருளோடு கூடிய எம்பெருமானே மோக்ஷோபாயம்; சேதனனுடைய ப்ரவ்ருத்தி எதுவுமே மோக்ஷோபாயமல்ல". என்பது நம்முடைய ஆசார்யர்களின் தேர்ந்த முடிவு. நாம் நம்முடைய தலையங்கத்தில் குறிப்பாக வலியுறுத்தியது "பெரிய மதத் தலைவர்கள் தங்களுடைய ஆசார்யர்களனைவரும் 'ஜ்ஞானத்தாலேயே மோக்ஷம்' என்று முழங்கியிருப்பதை மறந்து, அறிவுக்குப் பொருந்காத ஸ்தல புராணக்கதையை ஆதாரமாகக் கொண்டு லக்ஷக்கணக்கான ஜனங்களை ஒரு சிறிய இடத்தில் கூடும்படி செய்ததன் மூலம் விபத்துக்கு தார்மிகப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்" என்பதே.

S. வேங்கடம், சமயபுரம்.

78. கும்பகோணம் மகாமகத்தின் போது மகாமகக் குளத்தில் நீராடிவிட்டு வந்ததாகச் சில வைஷ்ணவர்கள் பெருமை பேசுகிறார்கள். இது சரியா?

சிவன் கோயில் தீர்த்தவாரி நடந்த அந்தக்குளத்தில் நீராடுவது வைஷ்ணவ தர்மத்திற்குச் சிறிதும் பொருந்தாது. திருக்குடந்தையிலுள்ள விஷ்ணு கோயில்களுக்கெல்லாம் காவேரியில் தீர்த்தவாரியும், சிவன் கோவில்களுக்கெல்லாம் இந்தக் குளத்தில் தீர்த்தவாரியும் நடந்துள்ளது உண்மையாயிருக்க, இந்தக் குளத்தில் நீராடுபவர்களுக்கு வைஷ்ணவத்வம் ஸித்திக்குமா என்பதை அவரவர்கள் சிந்திக்கவேண்டும்.

http://acharya.org

S. திருவேங்கடாசாரியர், ஸ்ரீரங்கம்.

79. பொள்ளாச்சி தொழிலதிபர் திரு நா. மகாலிங்கம் அவர்களுடைய தொழில் நிறுவனங்களின் சார்பில் வெளிவரும் "செய்திமடல்" பிப்ரவரி' 92 இதழில் Dr. நா.மகாலிங்கம் அவர்கள் ஒரு சிவன் கோவில் விழாவில் ஆற்றிய சிறப்புரையில், "நீண்ட நெடுங்காலமாக சைவ சமயம் இந்தியா முழுவதுமே வியாபித்துக் கிடந்த மிகப்பழமையான சமயம். அது இந்தியாவையும் தாண்டிப் பரவிய சமயமாகும். தென்னமெரிக்கக் காடுகளில் சிதிலமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிவன்கோவில்கள் சில இச்செய்திக்கு ஆதாரமாகக் கிடைத்துள்ளன. சைவசமயத்துக்கு அடுத்த பழமையான சமயம் வைணவம்" என்றும், "72 சமயப்பிரிவுகளை அறுவகைச் சமயமாகச் சுருக்கியவர் பகவத்பாதர் ஆதிசங்கரர்தான்.இவ்வாறு ஆறுபிரிவுகளாகச் சுருக்கிய பிறகு அவற்றை மேலும் குறுக்கி சைவம்—வைணவம் என்ற இரு பிரிவுகளாக மட்டுமே அமையும்படியும் அவர் செய்து அருளிஞர்....ஆதிசங்கரரின காலத்தை 8-வது நூற்ருண்டு (1200 ஆண்டுகளுக்கு முன்பு) என்கிருர்கள். அப்படியாஞல் இதற்கும் சற்று முன்புதான் 6-வது 7-வது நூற்ருண்டுகளில் தேவார மூவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் தோன்றி சைவசமயத்துக்கு சமணத்தால் ஏற்பட இருந்த ஆபத்துக்களை நீக்கிக் காத்தனர் என்பது சரித்திரத்தை ஆய்வதன் மூலம் நமக்குத் தெரிகின்ற தகவலாகும். சங்கரரின் காலத்தை 1200 ஆண்டுகளுக்கு முன் என்று நிர்ணயித்தால், 1400 ஆண்டுகளுக்கு முன்பே தேவார மூவர்கள் தோன்றி சைவத்தைக் காப்பாற்றிவிட்டார்களே...... தேவார மூவர் அவதரித்து சைவசமயத்தைக் காப்பாற்றி விட்டபிறகு, சங்கரர் அவதரித்து சைவத்தைப் பாதுகாப்பதற்கு என்ன இருக்கிறது என்று சிந்திக்கவேண்டியுள்ளது .... 2500 ஆண்டுகளுக்கு முன்பே அவர் அவதரித்திருக்க வேண்டும்;

ஸ•—24

http://acharya.org

அதாவது கி. மு. 509-ம் ஆண்டே தவிர, கி. பி. 800 என்று இருக்கமுடியாது” என்று உரையாற்றியதாக வெளிவந்திருப்பதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

தொழிலதிபருக்கு வேதசாஸ்திரங்களிலும், சங்க நூல்களிலும் சங்கரரின் பாஷ்யங்களிலும் இருக்கும் விஷயங்களை எடுத்துச் சொல்லுவார் யாருமில்லாமையாலேயே அவர் இப்படி உரையாற்றியுள்ளார் என்பதை நடுநிலை நின்று ஆதாரங்காட்டி நிரூபிப்போம். (1) முதலில் சைவத்திற்குப் பிறகே வைணவம் என்று எழுதியிருப்பதை ஆராய்வோம். இந்துமதம் என்று இன்று வழங்கப்படும் வைதிகமதத்திற்கு முதற் பிரமாணமும் முக்கியப் பிரமாணமும் வேதமேயாகும். இந்த வேதங்களில் விஷ்ணு, ருத்₃ரன், இந்த்₃ரன் முதலான நூற்றுக்கணக்கான தேவர்களைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவர்களில் விஷ்ணு, ருத்₃ரன் ஆகியஇருவர்க்கும் ஆயிரக் கணக்கானவருடங்களாகக் கோயில்கள் இருந்ததும், உலகம் முழுவதும் அவை பரவிக்கிடப்பதும் பலசான்றுகளைக்கொண்டு சரித்திர ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து விஷ்ணு, சிவன் முதலான தெய்வங்களின் வழிபாட்டைத் தன்னுட்கொண்ட வைதிகமதம் அக்காலத்தில் உலகெங்கும் பரவியிருந்ததென்று தேறுமேயொழிய, இன்றுள்ளபடி சைவமோ, வைணவமோ பாரதநாட்டிலோ, உலகெங்குமோ அநாதிகாலமாகப் பரவியிருந்தது என்றுதேறுது; சைவம் வைதிகசமயமா, வைணவம் வைதிகசமயமா? எது முற்பட்டது? முதலான கேள்விகளுக்கும் இதிலிருந்து விடைகிடைக்காது. நமது மதத்திற்கு அடிப்படையான வேதவேதாந்தங்களையும், அவற்றை விளக்கவந்த ஸ்மிருதிகள் இதிஹாஸபுராணங்களையும், பண்டையிலக்கியங்களையும் நடுநிலைநின்று ஆராய்வதன் மூலமே இவ்விஷயங்களை நாம் நிர்ணயிக்கமுடியும்; அப்படிப்பார்க்கும்போது யஜுர்வேத ஸம்ஹிதை [5-5] “விஷ்ணுவே தேவர்களுக்குள் தனக்கு மேலில்லாத பெரியவன்; அக்னியே தேவர்களுள் மிகத்தாழ்ந்தவன்” என்று முழங்குகிறது. தைத்திரீய

http://acharya.org

நாராயணவல்லி "நாராயணனே பரப்ரஹ்மம், பரதத்வம், பரஞ்சோதி, பரமாத்மா" என முழங்குகிறது. இத்தகைய ஆயிரக்கணக்கான வேதவாக்யங்களைக் காட்டியும், உருத்திரன் நாராயணனால் படைத்து ரக்ஷித்து ஸம்ஹரிக்கப் படுபவன் என்று முழங்கியிருக்கும் பல வேத வாக்கியங்களைக் காட்டியும் நாம் "விஷ்ணு சித்த விஜயம்" என்னும் [ஆயிரம் பக்கங்களுக்கு மேலே கொண்ட] நூலில் நிலைநாட்டியுள்ளோம். சங்கநூல்களான பரிபாடல் முதலானவற்றில் சங்ககாலச்சான்றோர்கள் 'திருமாலே வேதங்களில் அனைவரையும் படைத்து அளித்து அழிக்கும் முழுமுதல்வனாக முழங்கப்படுகிறான்; சிவன் முதலான அனைவரும் அவனால் படைத்து அளித்து அழிக்கப் படும் ஜீவர்களே" என்று கூறியிருப்பதையும் நமது 'சங்க காலத் தமிழர் சமயம்" "சாதிமத ஆராய்ச்சி" முதலான நூல்களில் நிலைநாட்டியிருக்கிறோம். ஆதிசங்கரரும் தமது ஸூத்ரபாஷ்யத்தில், சைவாகமங்களில் காட்டப்பெற்ற சைவசமயத்தையும், பாஞ்சராத்ராகமத்தில் காட்டப்பெற்ற வைணவசமயத்தையும் கண்டித்திருப்பதிலிருந்தும், "உலகம் பொய்; ஜீவன் ப்ரஹ்மமே" என்னும் அத்வைதமதத்தையே அவர் கூறியிருப்பதிலிருந்தும் அவர் சைவத்தையோ, வைணவத்தையோ, சௌரம், சாக்தம் முதலானவற்றையோ நிலைநாட்டியிருக்கமுடியாது என்பதையும், அவர் தமது பாஷ்யங்களில் நாராயணனையே ஸகுணப்ரஹ்மமாகக் கொண்டிருக்கையால் அவர் சைவராயிருக்க இடமேயில்லை என்பதையும் நமது "சங்கரரும் வைணவமும்" எனும் நூலில் எதிரிட்டவர்களும் வாய்திறக்கமுடியாதபடி நிலைநாட்டியுள்ளோம். ஆகையால், சங்ககாலத்தில் திருமாலைத்தவிர வேறு எந்த தெய்வத்தையும் முழுமுதல்வனாகக் காட்டாததிலிருந்தும், திருமாலைத் தாழ்த்தியும், சிவனை உயர்த்தியும் பிற்காலத்தில் புனையப்பெற்ற நூற்றுக்கணக்கான புராணக் கதைகளில் ஒன்றுகூடச் சங்கநூல்களில் எடுக்கப்படாததிலிருந்தும் வைணவ சமயமே சங்ககாலத்தில் வைதிக சமயமாகக் கொள்ளப்பட்ட தொன்மையான சமயம் என்றும், சைவாகமங்கள், சைவ புராணங்கள் முதலானவற்றைக் கொண்டு

http://acharya.org

சிவனைப் பரம் பொருளாகக்கொண்ட சைவசமயம் பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதென்றும் கையிலங்குகனியாக விளங்குகிறது; நிற்க.

(2) சங்கரரின் காலம் 2500 வருடங்களுக்கு முன் என்னும் கூற்று ஆதிசங்கரர் பாரததேசத்தின் நான்கு திசைகளில் ஸ்தாபித்ததாகக் கூறப்படும் சிருங்கேரி முதலான நான்கு மடங்களாலும், சரித்திர ஆராய்ச்சியாளர் எவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அனைவரும் அவர் தோன்றியது கி.பி. 800க்குப் பிறகு என்றே கொள்கின்றார்கள். அந்த நான்கு மடத்தாராலும் மிகப்பிற்காலத்தில் ஏற்பட்டது என்று நூல்களில் நிலைநாட்டப்பட்ட காமகோடிமடம் ஒன்றே இக் கொள்கையை ஆதரிக்கிறது. சங்கநூல்களிலோ, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலோ, சிலப்பதிகாரம் முதலான பழைய நூல்களிலோ, சங்கரரின் மாயாவாதம் பற்றிய எக் குறிப்பும் காணப்படாததிலிருந்தே சங்கரர் தோன்றியது இவற்றுக்குப் பிறகே என்று எளிதில் நிர்ணயிக்கலாம். "தேவார முவர்கள் சமணத்தை அடியோடு அழித்துவிட்டதால் சங்கரர் அவர்களுக்குப் பின் தோன்றியிருக்க முடியாது" என்னும் வாதம் பசையற்றது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் சமணம், பௌத்தம் முதலான மதங்களைக் கண்டித்தபிறகும் அந்த மதங்கள் தமிழ்நாட்டில் நிலவியிருந்தன என்பதை அவர்கள் காலத்திற்குப் பிற்பட்ட நன்னூல் முதலான நூல்களிலிருந்தே உணரலாம். தேவார மூவருக்குப் பிற்பட்ட மாணிக்கவாசகர் போற்றித்திரு அகவலில் "மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்த" என்று தம் காலத்தில் மாயாவாதம் மிகப் பரவியிருந்தது என்று கூறுவதிலிருந்தும், இப்படி எட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட எந்தநூலிலும் காணப்படாததிலிருந்தும் ஆதிசங்கரரின் காலம் எட்டாம் நூற்றாண்டிற்கு முன் இருக்க முடியாது எனத் தெளிவாக விளங்குகிறது. இது பற்றித் தொழிலதிபர் நடுநிலைநின்று ஆராய்வார் என எதிர்பார்க்கிறோம்.

http://acharya.org

V. நாராயணன், L.I.C, ஸ்ரீரங்கம் R.ராஜகோபாலன், காட்டேரி

80. 27-6-92 தினமணி சுடர் இதழில் "வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் சுவீரா ஜெயஸ்வால் எழுதிய புத்தகத்தின் மதிப்புரை வெளி வந்துள்ளது. அதில் நம்முடைய விஷ்ணு, சிவன் முத லான சமயக்கடவுளரைப் பற்றி மேல்நாட்டு ஆராய்ச்சி யாளர்களின் கருத்துக்கள் பல கொடுக்கப்பட்டுள்ளன. மதிப்புரையின் முடிவில், மதிப்புரை எழுதியவர் "இந்த நூலைப் படித்து முடித்ததும் இந்தியாவில் 'சிவமதம்' என்று ஏதுவும் எஞ்சியுள்ளதா என்ற அடிப்படைச் சந்தேகமே வந்துவிட்டது. பேராசிரியர் ஸு வீரா ஜெயஸ்வா லுக்கு இணையாகச் சமயச் சார்பு இல்லாமல் 'சைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஸம்ஸ்க்ருத மூலநூல்களிலிருந்து ஒன்று எழுதப்படும் வரை வைணவமே கொடிகட்டிப்பறக்கும்" என்று எழுதியுள்ளார். இவற்றை விமர்சனம் செய்யும்படி வேண்டுகிறேன்.

சுவீரா ஜெயஸ்வால் என்பவர் 'மாக்ஸ்முல்லர்' முதலான மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் எழுதியதை ஆதாரமாகக் கொண்டு டாக்டர்பட்டம் பெறுவதற்காக இந்த நூலை எழுதி யுள்ளார். மாக்ஸ்முல்லர் முதலானவர்கள் நம் நாட்டிலுள்ள மக்களுக்கு நம்முடைய வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையில்லா மல் செய்து, அவர்களைக் கிறிஸ்துவர்களாக மதமாற்றம்செய்து விட வேண்டும் என்னும் நோக்கத்துடன் பல ஆராய்ச்சி நூல் களை எழுதியிருக்கிறார்கள் என்னும் விஷயத்தை நமது நண்ப ரும், தார்வார் கலைக்கல்லூரி ஆங்கிலத்துறைத் தலைவருமான பேராசிரியர் ஸ்ரீ K. S. நாராயணாசார்யஸ்வாமி ஆங்கிலத்தில் பல சான்றுகளைக்காட்டி, பல விரிவான நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். ஆனால் அந்த 'மாக்ஸ்முல்லர்' முதலான வர்கள் கற்பனைசெய்து எழுதிய 'ஆரியதிராவிட இனப் பிரிவு' "ஸூர்யன் தான் விஷ்ணு" "அக்னிதான் ருத்ரன்" முதலான கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றின் அடிப் படையில் ஆராய்ச்சிக்கட்டுரைகள் எழுதினால் தான் டாக்டர் பட்டம் பெறமுடியும் என்னும் வருந்தத்தக்க நிலை நம்நாட்டில் நிலவுகிறது. ஜெயஸ்வால் என்பவர் பட்டம் பெறுவதற்காக எழுதிய இந்த நூலில் "நாராயணன் வேதகாலத்திற்குப்

http://acharya.org

முற்பட்ட வைதீகமல்லாத பழங்குடித்தெய்வம். விஷ்ணுவும் கூட வேதத்தின் முக்கியக் கடவுள் இல்லை. சொல்லப்போனால் நாராயணன்—விஷ்ணு—கிருஷ்ணன் எல்லோருமே வேதத்திற்கு அன்னியமானவர்கள். ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் விஷ்ணு இந்திரனின் ஏவலாளனாகவும், தாழ்ந்தவனாகவும் தோன்றுகிறார். எனினும் மஹாபாரதத்திலும் புராணங்களிலும் இந்திரன் நிலை தாழ்ந்து போனான். நாராயணரும் விஷ்ணுவும் ஒன்றாகியது விஷ்ணுவின் மதிப்பை மேலும் வளர்த்தது. பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள பாகவதரூபம் அல்லது விராட புருஷரூபம் அனுகீதையில் வைணவரூபமாக மாறிவிடுகிறது. விஷ்ணுவழிபாட்டினரைக் குறிக்கும் 'வைஷ்ணவ' என்ற சொல் முதன்முதலாக மஹாபாரதத்தின் பிற்பகுதியில் காணப்படுகிறது. ஸ்ரீ வேறு லக்ஷ்மீ வேறு. வைதிகம், வைதிக மறுப்பு, பழங்குடிப் பண்பாடு ஆகியவற்றை உண்டு செரித்து, பிராமணீயம் பெற்ற எழுச்சி பௌராணிக வைணவமாகப் பரிணமித்தது. பழங்குடித் தெய்வங்களை எல்லாம் விஷ்ணுவின் அம்சங்களாக ஒன்றுபடுத்திக் காட்டிய புராணக் கதைகள் நிஜமாகவே பழங்குடிப் போர்களுக்குப் பின் தோன்றிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தத் துவங்கியுள்ளன'' முதலான கருத்துக்களை மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களைத் தழுவியும், தம்முடைய ஊகங்களைக்கொண்டும் கூறியிருக்கிறார். ''நாராயணன் வேத காலத்திற்கும் முற்பட்ட வைதிகமல்லாத பழங்குடித் தெய்வம்'' என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. சுக்ல யஜுர்வேதத்தைச் சேர்ந்த ஶதபதப்ராஹ்மணம் 13ம் காண்டம் ஆறுவது அத்தியாயம் முதல் ப்ராஹ்மணத்தின் தொடக்கத்தில் ''புருஷோ ஹவை நாராயணோऽகாமயத-அதிதிஷ்டேயம் ஸர்வாணி பூ₄தானி'' [எல்லா பூ₄தங்களையும் நான் விசேஷித்து த₄ரிக்கக்கடவேன் என்று புருஷனாகிற நாராயணன் ஸங்கல்பித்தார்] என்று தொடங்கும் வாக்யத்திலிருந்து நாராயணன் வேதங்களில் முழங்கப்படும் பரம்பொருளே என்று தெளிவாக விளங்குகிறது. நாராயணன் என்று பரம்பொருள் குறிக்கப்படுவது மாத்திரமல்ல; 'விஷ்ணு' என்றும் இப்பரம்பொருள் ரிக் வேத விஷ்ணுஸூக்தங்களில் பல இடங்களில் முழங்கப்பட்டு, அவனுக்குப் பரம்பொருளுக்கு உள்ள பெருமைகள் எல்லாம் கூறப்பட்டன. ஸாயணரும் தம்முடைய பா₄ஷ்யத்தில் அப்படியே உரையிட்டார்;

http://acharya.org

நம்முடைய விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்களில் இவ்விஷயங்களைக் காணலாம். ரிக் வேதத்தில் முதல் மண்டலம் 22வது அத்தியாயம் 164 வது, ஸூக்தம் "அஸ்ய வாமஸ்ய" என்னும் மந்திரத்துடன் தொடங்குகிறது. இந்த ஸூக்தத்தில் "விஷ்ணோஸ் திஷ்டந்தி" என்று 36 வது மந்திரத்திலும், "க்ருஷ்ணம் நியாநம்" என்று 47 வது மந்திரத்திலும் படிக்கப்படுவதிலிருந்து நாராயணன் விஷ்ணு கிருஷ்ணன் எல்லோரும் வேதத்திற்கு அன்னியமானவர்கள் என்னும் கூற்று அபத்தமானது என்று தேறுகிறது. ஶங்கரர் ராமாநுஜர் முதலானோர் கையாண்ட உபநிஷத்துக்களிலும் இந்த ஶப்தங்கள் பரம்பொருளைக்குறித்து முழங்கப்படுகின்றன. ரிக் வேதத்தில் குறிக்கப்படும் விஷ்ணு கஶ்யபருக்கும் அதிதிக்கும் பிள்ளையாகவும், இந்திரனுக்குத் தம்பியாகவும் தோன்றிய உபேந்திரன் ஆவான். அதனால் அவன் சில மந்திரங்களில் இந்திரனுக்கு அடங்கியவனைத் தோன்றிய போதிலும், அவனே பரம்பொருள் என்னும் விஷயம் ரிக்வேத விஷ்ணு ஸூக்தங்களில் பல இடங்களில் முழங்கப் படுவதை ஸாயண பாஷ்யத்தைக்கொண்டும் நம்முடைய வ்யாக்யானத்தைக்கொண்டும் தெளிவாக அறியலாம். நாராயணனும் விஷ்ணுவும் ஒரே பரம்பொருளாகவே வேதத்தில் படிக்கப்படுகிறார்கள் என்பது இவற்றிலிருந்து விளங்குகிறது. ஆகையால், இவர்கள் பிற்காலத்தில் ஒன்றாக்கப்பட்டார்கள் என்று கூறுவது அபத்தக்கற்பனையே. "அஹல்யாயை ஜார" [அஹல்யையைக் கற்பழித்தவனே!] என்று யஜுர் வேதத்திலேயே [யஜுர்வேதம்—ஆரண்யகம் 1-12-57]இந்திரன் அஹல்யையைக் கற்பழித்த தாழ்ந்த தெய்வமாகவே பேசப்படுகையாலும், உபநிஷத்துக்களில் பல இடங்களில் இந்திரனின் தாழ்வு பேசப்பட்டிருக்கையாலும் "மஹாபாரதத்திலும் புராணத்திலும் தான் இந்திரன் நிலை தாழ்ந்து போனான்" என்று எழுதுவதும் பொருந்தாது. பகவத்கீதையில் சொல்லப்பட்டது விஷ்ணுவின் அவதாரமான கண்ணன்காட்டிய வைஷ்ணவரூபமே. இதை பாகவதரூபம் அல்லது விராடபுருஷரூபம் என்று எழுதுவதும் அனுகீதையில் இது வைஷ்ணவ ரூபமாக்கப்பட்டது என்று எழுதுவதும் அறிவாளிகளால் நகைக்கத்தக்கது. "விஷ்ணுவழிபாட்டினரைக் குறிக்கும் 'வைஷ்ணவ' என்ற சொல் முதன் முதல் மஹாபாரதத்தின் பிற்பகுதியில் காணப்படுகிறது." என்ற கூற்றும் வேதங்களை ஆராயாததால் விளைந்

தது. சத பத ப்ராஹ்மணம் 5ம் காண்டம் இரண்டாவது ப்ரபாடகம் நாலாவது ப்ராஹ்மணத்தில் த்ரிஷம்யுக்தாதி யாகத்தைச்சொல்லும் போது "வைஷ்ணவா: புருஷா:" என்று வேதம் இரண்டிடத்தில் ஓதிற்று. "விஷ்ணோ: அவதாரஸ்வீகாரேண மநுஷ்ய ஸம்பந்தாத் மநுஷ்யா: ஸர்வே வைஷ்ணவா: விஷ்ணு வதிஷ்டிதா இத்யர்த்த:" [விஷ்ணுவானவர் அவதரித்து எல்லா மனிதர்களுடன் உறவு கொள்ளுகையாலே, மனிதர்கள் அனைவரும் வைஷ்ணவரே. அதாவது விஷ்ணுவினால் அதிஷ்டிக்கப்பட்டவர்களே என்று பொருள்] என்று ஸாயணர் பாஷ்யமிட்டார். இப்படிப் பல இடங்கள் உண்டு. ஸ்ரீதேவியைப்பற்றி நாம் தெரிந்துகொள்வது வேதங்களில் உள்ள ஸ்ரீ ஸூக்த மந்த்ரங்களில் இருந்தே. அதில் அந்த தேவியைக்குறித்தே "ஸ்ரீ:" "லக்ஷ்மீ:" என்னும் இரண்டு திருநாமங்களும் படிக்கப்பட்டிருக்கையால் "ஸ்ரீவேறு லக்ஷ்மி வேறு" என்று எழுதுவதும் அபத்தமே. முற்கூறியவற்றிலிருந்து விஷ்ணுவாகிற நாராயணன் வேதத்தில் பரம்பொருளாக முழங்கப்பட்டவனே யல்லாமல் வேதத்திற்குப்புறம்பான பழங்குடித்தெய்வம் அல்ல என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். ஆகையால், அத்தகைய பழங்குடித் தெய்வத்தைக் கற்பிப்பதும், பழங்குடிப்போர்களைக் கற்பிப்பதும் ஆகாசக் கோட்டையே என்று விளங்கும். இந்த நூலை விமர்சித்தவரும், மேல்நாட்டவர்களின் கற்பனைகளையும் ஊகங்களையும் கிளிப்பிள்ளைபோல் திருப்பித்திருப்பி எழுதியிருக்கிறார். இது போன்ற பல வாதங்களை அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாசாரியார் தம்நூலில் எழுதினார். அவை அனைத்தும் நம்மாலும் மற்றும் பல வைணவச்சான்றோர்களாலும் ஆதாரங்காட்டி "அக்னிஹோத்ரியும் வைணவமும்" என்னும் நூலில் கண்டிக்கப்பட்டன. [இந்நூல் விலை ரூ. 4—00 நம்மிடம் இப்போதும் கிடைக்கும்] இந்த விமரிசனத்தில் "இந்தியாவில் சிவமதம் என்று ஏதுவும் எஞ்சியுள்ளதா" என்று தொடங்கி "வைணவமே கொடிகட்டிப் பறக்கும்" என்பதீருக எழுதியுள்ளதே ஸாரமான வாக்யம் ஆகும். நம்முடைய விஷ்ணுசித்தவிஜயம், சங்ககாலத்தமிழர் சமயம், ஸ்ரீவைஷ்ணவமத விஜயம் முதலான நூல்களைப் படித்தவர்களால் இவ்விஷயம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். அவற்றுக்கு ஆதாரம் காட்டி மறுப்பு எழுதக்கூட இன்றுவரை எவருக்கும் துணிவில்லாமல் இருக்கும் நிலையில், வைணவம் கொடிகட்டிப் பறக்கும் என்பது மிகைமொழியன்று.

http://acharya.org

பேராசிரியர் Dr. S. லக்ஷ்மீநாராயணன், தென்காசி.

81. Dr. V. வரதாச்சாரி அவர்கள் "TWo Great Acharyas Vedantha Desika and Manavala Mamunigal" என்னும் தலைப்பில் எழுதிய ஆங்கிலப் புத்தகத்தில் உபய ஸம்ப்ரதாய வேற்றுமைகளைப்பற்றி எழுதும்போது "சில தென்கலையார் பித்ருக்களுக்கு ஶ்ராத்$_3$த$_4$ம் செய்யவேண்டியதில்லை" என்னும் கொள்கை உள்ளவர்கள் என்று எழுதியுள்ளார். இதில் உண்மை உள்ளதா?

வேதஶாஸ்த்ரங்களை ஒப்புக்கொள்ளும் வைதிகர்களாய் இருக்கும் எந்தத் தென்கலையாருக்கும் இப்படிக்கொள்கை கிடையாது. சோம்பலாலும் நாஸ்திகபுத்தியாலும் பித்ரு ஶ்ராத்$_3$த$_4$த்தை விடுபவர்களும் க்ஷயாஶ்ராத்$_3$த$_4$ம் செய்துவிட்டதாகக் காரணம் கூறிப் பித்ரு ஶ்ராத்$_3$த$_4$த்தை விடுபவர்களும் உபய ஸம்ப்ரதாயத்திலும் சிலர் இருக்கிறார்கள்.

S. வேங்கடம், சமயபுரம்.

82. 8—8—92 தினமலர் 11-ம் பக்கத்தில் "சங்ககாலச் சமயம்-புதிய ஒளி" என்ற தலைப்பில் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் எழுதிய கட்டுரையில் "சங்க காலக் காசுகளில் திரிசூலமும் மழுவும் சக்கரமும் திகழ்வதால் சங்ககாலத்தில் சைவசமயமும் திருமால்சமயமும் சமுதாயத்தில் பெரும் பங்கு வகித்தன என்பதை உணரலாம்" என்று எழுதியிருக்கிறார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

"சங்ககாலத் தமிழ் மக்கள் சமயத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. சமயக்குறிப்புகள் பாடல்களில் வருமாயின் அவை காலத்தால் பிற்பட்டவை" என்று நுனிப்புல் மேயும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவதை மறுப்பதற்கே இக்கட்டுரையை இரா. நாகசாமி அவர்கள் எழுதியுள்ளார். ஆனால் அவ்வாறு எழுதும்போது காசுகளில் சிவ சின்னமும் திருமால் சின்னமும் இருப்பதை மாத்திரம்கொண்டு சைவ சமயமும் வைணவ சமயமும் சங்ககாலத்தில் இருந்ததாக முடிவுகட்டுவது சரியான ஆராய்ச்சி ஆகாது. சிவசின்னங்களும் சக்கரமும் காசுகளில் இருப்பதால் சிவ வழிபாடும் திருமால் வழிபாடும் சங்ககாலத்தில் இருந்ததாகவே தேறும்; சிவனைப் பரம்பொருளாகக்

http://acharya.org

கொண்ட சைவசமயமும் திருமாலைப் பரம்பொருளாகக்கொண்ட வைணவ சமயமும் இருந்ததாகத் தேருது.

சங்ககாலத்தில் எந்தச் சமயம் இருந்தது என்பதை நிர்ணயிப்பதற்கு, தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்கநூல்களில் தெய்வங்களைப்பற்றி வந்திருக்கும் குறிப்புகளை நடுநிலை நின்று ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்தால் திருமால் ஒருவனுக்கே 'எல்லா உலகங்களையும், தேவர்கள் முதலான ஜீவர்களையும் படைத்தளித்து அழிக்கும் உலக முதற்காரணமாய் இருப்பவன்' என்னும் பெருமையும், 'மோக்ஷமளிக்க வல்லவன்' என்னும் பெருமையும், 'வேதங்களில் முழுமுதல்வனுகப் போற்றப்படுபவன்' என்னும் பெருமையும் முழங்கப்பட்டிருப்பதும், மற்ற எந்தவொரு தெய்வத்திற்கும் இத்தகைய பெருமைகள் சொல்லப்படவில்லை என்பதும், சிவன் முதலான தெய்வங்கள் திருமாலால் படைத்து அளித்து அழிக்கப்படும் ஜீவர்களாகவே சொல்லப்பட்டுள்ளார்கள் என்பதும் தெளிவாக விளங்குகிறது. இதிலிருந்து திருமாலைப் பரம்பொருளாகக்கொண்ட வைணவ சமயமே சங்ககாலத் தமிழர் சமயம் என்பதும், சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவ சமயம் சங்ககாலத்தில் இல்லை என்பதும் நடுநிலை நின்று ஆராய்பவர்களுக்குத் தெளிவாக விளங்குகிறது. இதை நம்முடைய "சங்ககாலத் தமிழர் சமயம்" "சாதி மத ஆராய்ச்சி" முதலான நூல்களில் விரிவாக விளக்கியிருக்கிறோம். சைவர்களின் விரோதம் ஏற்படும் என்னும் காரணத்தால் நம்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இந்த உண்மையைக் கண்டுகொள்வதில்லை.

பேராசிரியர் R. ராஜகோபாலாச்சாரி, காரைக்கால்.

83. கூத்தூரில் 31-7-92 அன்று புதிய பள்ளிவாசல் திறப்பு விழா சந்தர்ப்பத்தில் வெளியிடப்பட்ட ஒரு சிறப்பு மலரில், "மற்ற வேதங்களில் பெருமானுர் (ஸல்) அவர்களைப் பற்றிய முன் அறிவிப்பு" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதில் இந்துமதம், சீக்கியமதத்திலிருந்து சில மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன. நமது வேத உபநிஷத புராணங்கள் பற்றிய பகுதியைமட்டும் இத்துடன் எழுதி அனுப்பியுள்ளேன். உண்மையை வெளிப்படுத்த வேண்டுகிறேன்.

http://acharya.org

(1) அல்லோபநிஷத் (2) ருக்வேதம் (3) பவிஷ்யபுராணம் ஆகிய மூன்று ப்ரமாணங்கள் அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. "அல்லோபநிஷத்" என்னும் 'உபநிஷத்' 1933ம் வருடத்தில் அடையார் புஸ்தகாலயத்தாரால் "அப்ரகாஶிதா உபநிஷத:" (இதுவரையில் வெளிவராத உபநிஷத்துக்கள்) என்னும் தலைப்பில் வெளியிடப் பெற்ற புத்தகத்தில் "சாக்த உபநிஷத்துக்கள்" என்னும் பிரிவில் முதலாவதாக (பக்கம் 392-393ல்) அச்சிடப்பட்டுள்ளது. இது பண்டைச் சான்றோர்கள் எவராலும் கையாளப்படாமையால் கற்பிதமானதாகவே கொள்ளத்தக்கது. இதிலும் இவர்கள் எடுத்திருக்கும் மந்திரம் இல்லை. ருக்வேதத்தில் (மந்திரம் 8-சூத்திரம் 28) இருக்கும் மந்திரத்தின் பொருளாக ஒரு வாக்கியமும் இவர்களால் எடுக்கப்பட்டுள்ளது. ருக்வேதத்தில் மண்டலம் அல்லது அஷ்டகம் என்னும் பிரிவுகளும் அதற்குள் ஸூக்தங்கள் மந்திரங்கள் என்னும் உட்பிரிவுகளும் உண்டேயொழிய மந்திரம் சூத்திரம் என்னும் பிரிவு கிடையாது. இதிலிருந்து இந்த மேற்கோள்கள் கட்டுரையாளரின் கற்பனையில் எழுந்தவையே என விளங்குகிறது. பவிஷ்யபுராணத்திலுள்ளதாகக் கொடுக்கப்படும் இரு சுலோகங்களுக்கும் பவிஷ்யபுராணத்தில் காணப்படாத பாகம், சுலோகம், சூத்திரம் என்று ஆகரம் கொடுக்கப்படுவதால் இவையும் இத்தகையவே என விளங்கும். பவிஷ்ய புராணத்தில் உள்ளதாக இவர்கள் எடுக்கும் சுலோகத்தில் "மஹமத் ஒரு மிலேச்சன். பாலைவனத்திலுள்ளவர்களுக்குத் தலைவன். அவனைச் சேர்ந்தவர்கள் தலையில் குடுமியற்றவர்களாய் தாடி வைத்திருப்பார்கள். உரத்த குரலில் அழைப்பார்கள். எதையும் சாப்பிடுவார்கள்" என்றே சொல்லப்படுவதால் இதில் இஸ்லாமியர்களுக்கோ, இஸ்லாத்திற்கோ எந்தப் பெருமையும் சித்திக்கவில்லை. சிறுமையே விளங்குகிறது.

P. M. மோஹன்ராம், பரமக்குடி.

84. காஞ்சீபுரத்தில் சிவன் கோவில்களுக்குள் உள்ள திவ்யதேச எம்பெருமான்களான நிலாத்திங்கள் துண்டப் பெருமாளையும், கள்வரையும் ஏன் சேவிக்கக்கூடாது?

நடராஜர் கோவிலுக்குள் அகப்பட்டுக்கொண்டவராய் இருந்த போதிலும் திவ்யதேசத்தெம்பெருமானை தில்லை திருச்சித்ரகூடத்து கோவிந்தராஜர் வைகாநஸ ஆகமப்படி ஸ்ரீ வைஷ்ணவர்களால் ஆராதிக்கப்படுவதால் அவரை அங்கு சென்று

http://acharya.org

ஸேவிக்கிறோம். நிலாத்திங்கள் துண்டப்பெருமாளும் கள்வரும் சைவாகமம் மட்டுமே அறிந்த சைவர்களால் ஆராதிக்கப்படுவதால் அவர்களை ஸேவிப்பதில்லை.

A ஜகந்நாத ஸ்ரீஸாநுதாஸன், டெங்கனிக்கோட்டை.

85. திருப்பதி வேங்கடாசலபதியைப்பற்றியதொரு நோட்டீஸ் ஸமீபகாலத்தில் தபாலில் வந்தது. அந்த நோட்டீஸை உடனடியாக 30 காபிகள் எடுத்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பவேண்டுமென்றும், அப்போது நன்மைகள் ஏற்படும் என்றும், அப்படி அனுப்பாவிடில் மிகவும் கேடுகள் விளையும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நோட்டீஸ் வந்தால் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ன செய்வது என்று விளக்கவேண்டுகிறேன்.

இப்படிப்பட்டநோட்டீஸ் நமக்குச்சிலசமயம் வந்திருக்கிறது. அதை நாம் பொருட்படுத்துவதில்லை. "நம்முடைய முயற்சியோ பிறரோ நமக்குத் தஞ்சமல்ல; எம்பெருமானுடைய அருளே நமக்குத் தஞ்சம்" என்னும் மிக உயர்ந்தகொள்கையை உடைய நாம் ஒரு அநாமதேயக் கடிதத்தைக் கண்டு பயந்து அதைப் பிரதியெடுத்து அனுப்புவதால் நமக்கு நன்மை விளையும் என்று நினைப்பதற்கும், அப்படி அனுப்பாததால் தீமைவிளையும் என்று நினைப்பதற்கும் இடமேயில்லை. ஆகவே இத்தகைய கடிதங்களை உபேக்ஷிப்பதே நல்லது.

R. சேஷாத்ரி, ஹைதராபாத்.

86. சில ஊர்களில் தசாவதாரத்தில் பலராமர் அல்லது பரசுராமரைவிட்டு புத்தரை ஒரு அவதாரமாகச் சேர்க்கிறார்கள். இது பொருந்துமா?

சில புராணங்களிலும், சில காவியங்களிலும் இப்படிக் கணக்கிடுவது உண்டு. "கள்ள வேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும்" [திருவாய். 5-10-4] என்று புத்தரை அசுரரை மயக்குவதற்காக எம்பெருமான் எடுத்த மோஹநவதாரமாக நம்மாழ்வாரும் அருளியிருக்கிறார். அக்காரணத்தாலேயே ஆழ்வார்கள் புத்தரை தசாவதாரத்தில் சேர்ப்பதில்லை. "மீனோடு ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த் தானாய், பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான் தன்னை" [பெரியதிரு 8-8-10] என்று திருமங்கையாழ்வார் தசாவதாரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

http://acharya.org

திருவெள்ளறை அம்மாள், ஸ்ரீதிருவேங்கடாசார்யஸ்வாமி, ஸ்ரீரங்கம்'

87. 20-9-92 கல்கியில் காமகோடிப் பெரியவர் தம் அருள்வாக்கில் "அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு" என்னும் பாமரமொழியை எடுத்துக் கொண்டு, அதில் இரண்டாவது வாக்யத்தில் "றி" யை "ரி" யாக மாற்றி "அரி யாதவன் வாயிலே மண்ணு" என்றும், "றி" யை மாற்றுமலே "அறி. யாதவன் வாயிலே மண்ணு" என்றும் கொண்டு, "மண்ணைத் தின்று லோகத்தை வாயில்காட்டியதாலே அரி ஸகுணப்ரம்மம்" என்றும், "இன்னொருவனுகிய சிவன் நிர்குணப்ரம்மம்" என்றும் எழுதியிருக்கிறுர். "லோகவ்யவஹாரத்தை நடத்தும் ஸகுணமே ஹரி; லோகவ்யவஹாரம் அடிபட்டுப்போன நிர்குணம் தான் சிவன்" என்றும் எழுதியுள்ளார். அத்வைத வேதாந் தத்தோடு இந்த விளக்கம் பொருந்துமா?

அத்வைத வேதாந்தத்தோடு எந்தவித சம்பந்தமும் கூறமுடியாத சிறுபிள்ளைப்பேச்சாகவே இது காணப்படு கிறது. அத்வைத வேதாந்தத்தின்படி 'நிர்கு₃ணப்ரஹ்மம்' எனப்படுவது நிர்விசேஷ சிந் மாத்ர ப்₃ரஹ்மம். வெறும் அறிவு மாத்திரமான அந்த ப்₃ரஹ்மம் ஒன்றே உண்மை. மற்றது அனைத்தும் பொய் என்பது அத்வைதிகளின் கொள்கை. அறி பவனுகவோ, அறியப்படுவதாகவோ இல்லாமல் அறிவுமாத்திர மான அந்த சிந்மாத்ர ப்₃ரஹ்மம் நிர்விஶேஷமானது என்றும் அத்வைதிகள் கூறுகிறுர்கள். அதாவது—'ஸஜாதீயபே₄த₃ம், விஜாதீயபே₄த₃ம், ஸ்வக₃தபே₄த₃ம் என்னும் மூன்று வகையான பே₄த₃ங்களும் அற்றது அந்தப்₃ரஹ்மம்' என்று உரைக் கிறுர்கள். மனிதர் முதலான ஒரே ஜாதியைச் சேர்ந்தவர் களுக்குள் உள்ள பே₄த₃ம் ஸஜாதீயபே₄த₃ம் எனப்படும். தேவர், மனிதர், விலங்கு, தாவரம் போன்ற வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குள் உள்ள பே₄த₃ம் விஜாதீயபே₄த₃ம் எனப்படும். ஒரு மனிதனை எடுத்துக்கொண்டால் அவனுக் குள்ளேயே கை, கால், வாய், கண் போன்ற பல அவயவ பே₄த₃ங்கள் இருக்கின்றன. ஒருமரத்தை எடுத்துக்கொண்டால்

http://acharya.org

அதற்குள்ளேயே இலை, காய், பழம், வேர், கிளை போன்ற பல அவயவ பே₄த₃ங்கள் இருக்கின்றன. இப்படி ஒரு வஸ்துக் குள்ளேயே இருக்கும் பே₄த₃ங்கள் ஸ்வக₃த பே₄த₃ங்கள் எனப்படுகின்றன. அறிவாகிற நிர்க்கு₃ண ப்₃ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு ஜாதியைச சேர்ந்த ஒருவஸ்து கிடையாதா கையாலே, அந்த ப்₃ரஹ்மம் விஜாதீயபே₄த₃ம் அற்றது; அந்த நிர்க்கு₃ண ப்₃ரஹ்மத்தைப் போன்ற மற்றொரு பொருள் கிடை யாதாகையாலே, அது ஸஜாதீய பே₄த₃மும் அற்றது. அந்த நிர்க்கு₃ணப்₃ரஹ்மத்திற்கு அவயவங்களோ, கல்யாண கு₃ணங் களோ கூடக் கிடையாதாகையாலே அது ஸ்வக₃த பே₄த₃மும் அற்றது. இது ஆதிசங்கரர் தொடங்கி இன்றளவும் பல அத்வைதாசார்யர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அத்வைதக் கொள்கை. இது விஷயத்தில் அத்வைதமறிந்த அத்வைத வித்வான்களிடையே கருத்து வேற்றுமையே கிடையாது. இப் படியிருக்கும்போது, சிவனை நிர்க்கு₃ணப்₃ரஹ்மம் என்று எந்த ஆதாரத்தில் காமகோடி பீடாதி₄பதி சொல்லுகிறார் என்று விளங்கவில்லை. சிவன் நம்முடைய உபநிஷத்துக்களிலும், இதி ஹாஸபுராணங்களிலும் காணப்படும் ஒரு தேவதை. அவ னுக்கு மனிதர்கள் முதலான வேறுஜாதியைச் சேர்ந்தவர்களைக் காட்டிலும் வேறுபாடு உண்டாகையாலே விஜாதீயபே₄த₃ம் உண்டு. இந்திரன், வருணன் முதலான மற்ற தே₃வர்களைக் காட்டிலும் வேறுபாடு உண்டாகையாலும், பத்நியாகிற பார்வதி, பிள்ளையாகிற முருகன், வாஹனமாகிற ரிஷப₄ம் முதலான தே₃வதைகளைக் காட்டிலும் வேறுபாடு உண்டாகையாலும் ஸஜாதீயபே₄த₃மும் சிவனுக்கு உண்டு. சிவனுக்குத் தலையில் கங்கை, மூன்று கண்கள், உடலில் எலும்புமாலை சுடலைப்பொடி பாம்பு முதலான பூஷணங்கள் உண்டாகையாலும், அஸுர ராக்ஷஸர்கள் தன்னைக் குறித்துத் தவம் செய்தவுடன் உச்சி குளிர்ந்துபோய், அவர்கள் எந்த வரத்தை விரும்பினாலும், 'அது உலகுக்கு நன்மையா தீமையா' என்று கூட ஆராயாமல் அதை அளிக்கும் இரக்ககுணம் முதலான குணங்கள் உண் டாகையாலும் சிவனுக்கு ஸ்வக₃த பே₄த₃மும் உண்டு. இப்படி எல்லாவித₄மான பேதங்களும் இருக்கும்போது, ' 'சிவன் தான் நிர்க்குண ப்ரம்மம்' என்று ஒருவர் எழுதுவது "அத்₃வைதம்"

http://acharya.org

"நிர்க்குணப்ரஹ்மம்" என்றால் என்ன என்பதே இவருக்குத் தெரியாது என்பதைக் காட்டுகிறது. "லோகவ்யவஹாரம் அடிபட்டுப்போன நிர்குணம் தான் சிவன்" என்று கூறு வதற்கு எந்த அடிப்படையும் இல்லையே. ஸம்ஹாரத்தைச் செய் பவனாகவும், பார்வதிக்குப் பதியாகவும், பூதப்ரேத பிசாச கணங்களுக்குத் தலைவனாகவும், அஸுர ராக்ஷஸர்களுக்கு வா மளிப்பவனாகவும், ஸ்கந்தனாகிற புத்ரனைப் பெற்றவனாகவும் இப் படி மேலும் பல வகைகளில் லோகவ்யவஹாரங்களில் ஈடு படுபவனாகவுமன்றோ உபநிஷத்துக்களும், இதிஹாஸ புராணங் களும் சிவனைப்பற்றிப் பேசுகின்றன. 'தான் எதைச் சொன் னாலும் கண்மூடித்தனமாக அதை நம்புவதற்கு ஒருபெருங் கூட்டம் காத்திருக்கிறது' என்ற தைரியத்தில் பீடாதிபதி இப்படிப் பேசினாலும், இத்தகைய அபத்தக் கருத்தைக் கல்கி பத்திரிகை எப்படி வெளியிடுகிறது என்று நமக்கு விளங்க வில்லை. அரசியல்வாதிகளுக்கு ஓயாமல் நேர்மையைப் பிரசாரம் செய்யும் 'கல்கி' மதத்துறையில் இப்படிப்பட்ட நேர்மை சிறிது மற்ற பொய்க்கருத்துக்களை விடாமல் பிரசாரம் செய்வது நல்லோர்களால் அருவருக்கத்தக்கதேயாகும்.

S வேங்கடம், சமயபுரம்.

88. ஸுதர்சனம் 1991 செப்டம்பர் [526] இதழில் தாங்கள் சென்னைக் கம்பன்கழகத்தைக் குறித்து 18 கேள் விகள் வெளியிட்டீர்களே. அவற்றுக்குச் சென்னைக் கம்பன் கழகமாவது அல்லது தமிழ் நாட்டில் இருக்கும் வேறு ஏதா வது கம்பன்கழகமாவது பதில் உரைத்ததா? சென்னைக் கம் பன்கழகம் வெளியிட்ட "கம்பன் உணர்த்தும் பரம் பொருள் நிலை" என்னும் நூலை எழுதிய முரு. பழ இரத்தினம் செட்டி யாராவது ஏதாவது பதில் எழுதினாரா?

கம்பன் கழகத்தைக் குறித்த நம்முடைய கேள்விகள் சென் னைக் கம்பன் கழகத்திற்கு மாத்திரமல்லாமல் சென்னைக் கம் பன்கழகத்தலைவர் திரு மு.மு. இஸ்மாயில்அவர்களுக்கும், தமிழ் நாட்டிலுள்ள மற்றும்பல கம்பன் கழகங்களுக்கும், செட்டியாரு க்கும் அனுப்பப்பட்டன. ஒருவருடத்திற்குமேலாகியும் கம்பன் கழகங்களைச் சேர்ந்த எவருமோ, சென்னைக்கம்பன்கழகத்தலைவ

http://acharya.org

ரான திரு மு. மு. இஸ்மாயில் அவர்களோ, நம்முடைய கேள்வி களுக்குக் காரணமான கம்பன் கழக வெளியீடான "கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை" என்னும் நூலை எழுதிய திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியாரோ அக்கேள்விகளில் ஒன்றுக்குக்கூட பதில் எழுத முன்வரவில்லை; முரு. பழ. இரத்தினம் செட்டியாரின் அபூர்வக்கற்பனைக் கருத் துக்களை முதன் முதலில் புதுக்கோட்டைக்கம்பன் கழகம் 1986ம் வருட மலரில் வெளியிட்டது. அதற்கு நம்முடைய ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்தில் 13வது கேள்வியின் பதிலில் நாம் சுமார் பத்து பக்கம் பதில் எழுதியிருக்கிறோம். அந்த சதகத்தி லேயே 20, 21 கேள்விகளின் பதிலிலும் செட்டியாரின் வாதங் களுக்கு சுமார் நாலுபக்கம் பதில் எழுதியிருக்கிறோம். மறுபடி யும் அந்தசதகம் 33 வது கேள்வியின் பதிலில் 1987காரைக்குடி கம்பன் கழகமலரில் செட்டியார் எழுதிய கட்டுரைக்கு இரண்டு பக்கம் பதில் எழுதி, "அடுத்த வருடம் கம்பன் கழக மலரிலேயே எமது மறுப்பையும் உமது பதிலையும் அச்சிடச் செய்தால் உமது விதண்டாவாதம் கம்பன் கழகக்காரர்களுக்கே வெட்டவெளிச் சமாகிவிடும்" என்று சவாலும் (Challenge) விட்டிருந்தோம். இந்தச்சவாலை ஏற்பதற்குச் செட்டியாருக்கு இன்றுவரை துணி வில்லை. இதற்குப்பின்பே செட்டியார் சென்னைக் கம்பன் கழ கத்தைக் கொண்டு ஒரு நூல் வெளியிட்டதும், நாம் அதுபற்றிச் சென்னைக் கம்பன் கழகத்தைக் குறித்துச் சில கேள்விகள் வெளியிட்டதும் நடந்தது. இன்றுவரை அக்கேள்விகளை அச் சிட்டு பதிலுரைக்கச் செட்டியாருக்குத் துணிவில்லை. இது நிற்க; முதன் முதலில் செட்டியாரின் கட்டுரையை 1986 மலரில் வெளியிட்ட புதுக்கோட்டைக் கம்பன் கழகச் செயலர் புலவர் திரு தி. சு. மலையப்பன் அவர்கள் 1992 கம்பன் மணி மல ருக்கு நம்மிடம் ஒரு கட்டுரை கேட்டார். நாமும் "கம்பனின் கடவுட் கொள்கை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பி, கம்பன் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந் தத்தையே உறுதியாகப் பின்பற்றியவன் என்று பல கம்ப ராமாயணப் பாடல்களைக் காட்டி நிலைநாட்டி, செட்டியாரின் கருத்துகளுக்குக் கம்பன் பாடல்களில் இடமில்லை என்றும்

http://acharya.org

விளக்கியிருந்தோம். இக்கட்டுரை 1992 புதுக்கோட்டைக் கம்பன் மணிமலரில் 7 பக்கங்களில் வெளியிடப் பெற்றது. புதுக்கோட்டைக் கம்பன் கழகத்தினரையும், அதன் செயலரான புலவர் தி. சு. மலையப்பன் அவர்களையும் இந்தநேர்மை குறித்துப் பாராட்டுகிறேம். ஆனுல், இந்த மலரிலேயே திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியாரின் (இரண்டு பக்கம் கொண்ட) ஒரு சிறு கட்டுரை வெளியிடப் பட்டிருக்கிறது. நம்முடைய ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்தின் 13, 20, 21, 33 கேள்விகளின் பதில்களில் மறுக்கப்பட்ட விஷயங்களையே திருப்பி எழுதிவிட்டு, நாம் அக் கருத்துக்களுக்கு ஏற்ற பதில் அளிக்கவில்லை என்று ஒரு பொய்யையும் கூறுகிருர் செட்டியார். உண்மை நேர்மை முதலானவற்றுக்குச் செட்டியார் சிறிதாவது மதிப்பளிப்பவராயிருந்தால் நாம் கம்பன் கழக வெளியீடான இவரது நூலைக்குறித்துக் கேட்டிருக்கும் பதினெட்டு கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு அவற்றுக்குப் பதிலளிக்கட்டும். செட்டியார் இதைச் செய்ய முன்வரவில்லை என்ருல் அவரது வாதங்கள் கவைக்குதவாத விதண்டா வாதங்களே என்று தமிழ் கூறும் நல்லுலகம் முடிவுகட்டும். இச்சிறுகட்டுரையில் நம்மாழ்வாரின் "ஏருளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும் கூருளும் தனியுடம்பன்" என்னும் பாட்டை ஆதாரமாகக் காட்டி, "மும்மூர்த்தியும் சேர்ந்தது பரம்பொருள் என்பது ஆழ்வார் கருத்து" என்று கதைக்கிருர் செட்டியார். "அப்படியாஞல் திருமகளும் சேர்ந்தது பரம்பொருள் என்று கூறவேண்டிவருமே" என்னும் ஒருகேள்விக்காவது இவரால் பதில் கூறமுடியுமா? இவரா ராமபாணம் போன்றதும், ஸுதர்சனப்ரயோகம் போன்றதுமான நமது 18 கேள்விகளுக்கும் பதில் உரைக்கப்போகிருர்? [புதுக்கோட்டைக்கம்பன் கழகமலரில் வெளிவந்த நமது கட்டுரை இவ்விதழிலிருந்து தொடர்ந்து அச்சிடப்படுகிறது. ஸுதர்சனர் பதில் பதிஞேராவது சதகத்திற்கு அனுபந்தமாக இது இணைக்கப்படும்].

ஸ்ரீமதி ரமா ஸ்ரீநிவாஸன், பங்களூர்.

89. "உத்கீதப்ரணவத்தை ப்ரத₂மத்திலே மாருடி" [ஆசார்யஹ்ருத₃யம் 52] என்று நம்மாழ்வாருக்குச்

http://acharya.org

சொல்லப்பட்ட நியமம் ஏன் திருப்பாணாழ்வாருக்கு இல்லை? நம்மாழ்வார் மாருடியதன் காரணம் என்ன? பெண்களும், மூவர்ணத்தவரல்லாதவரும் திருமந்த்ரத்தில் ப்ரணவத்தை எப்படி அநுஸந்திப்பது?

சாந்தோக்யஸமமான திருவாய்மொழியில் சாந்தோக்யத்தில் எடுக்கப்பட்ட 'உத்' என்னும் திருநாமம், முதல் கடையெழுத்துக்களாக வரவேண்டும். மூவர்ணத்தவர்களாலேயே ஸ்வரத்துடன் ஸம்ஹிதாகாரத்தில் அனுஸந்திக்கத்தக்கதாகையாலே, நம்மாழ்வார் திருவாய்மொழி முதற் பாட்டின் முதல் மூன்று அடிகளின் முதல் எழுத்தாகவும், திருப்பாணாழ்வார் அமலனாதிபிரானில் முதல் மூன்று பாட்டுக்களின் முதல் எழுத்தாகவும் ப்ரணவத்தைப் பிரித்து எடுத்தனர். திருவாய்மொழியின் முதல் எழுத்தாக உகாரத்தை அமைப்பதற்காக நம்மாழ்வார் ப்ரணவத்தை மாருடினார். சாந்தோக்யஸமமல்லாமையாலே திருப்பாணாழ்வார் அப்படி மாருடவில்லை. ப்ரணவத்தை ஸ்வரத்துடன் அனுஸந்திப்பது மூவர்ணத்தவர்களுக்கேயுரியதாகையாலே, ஸ்வரமில்லாத ப்ரணவத்தோடு கூடிய திருமந்த்ரத்தை அனைவரும் அனுஸந்திக்கலாம் என்பது தென்னாசார்யஸம்ப்ரதாயம்.

S. முரளி, அந்தணல்லூர்.

90. **"எறும்பியப்பா—என்னும் தேவராஜாசார்யர் அருளிச்செய்த ஸமயாசாரபத்திரிகை" என்னும் தலைப்புடன் கூடிய ஒரு புத்தகம் "1981 ல் போந்தவாக்கம் ராஜகோபாலாசார்யர் (பொன்னேரி) வெளியிட்டது" என்னும் குறிப்புடன் கூடியது சிலரால் விநியோகிக்கப்படுகிறது. தங்களுக்கு இதை அனுப்பியிருக்கிறேன். தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தாபிஷ்டாநுஷ்டானத்திற்கு முரணான பல விஷயங்கள் இதில் காணப்படுகின்றன. இது எறும்பியப்பா அருளியதா?**

"ஸ்ரீபாஷ்யகாரர் அருளிய ஒன்பது நூல்களையும் விட்டுவிட வேண்டும்" முதலான அபத்தப்பேச்சுக்கள் நிறைந்த இந்நூல் மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான எறும்பியப்பா அருளியதாயிருக்க இடமேயில்லை. சமீபகாலத்திலிருந்த விஷமியொருவரால் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தை இழிவுபடுத்துவதற்காகக் கற்பிக்கப்பட்ட நூலேயிது என்பதை இதை ஒரு முறை படித்தால் எவரும் உணரலாம். இதைக் குப்பையாகக் கருதிக் காற்கடைக்கொள்ளவும்.

http://acharya.org

T. A. பாஷ்யர், சென்னை-1, மற்றும் பலர்.

91. 27-9-92 ஞாயிறு இரவு 7–37க்கு சென்னை தொலைக் காட்சி நிலையம் ஒளிபரப்பிய உலக சுற்றுலா நாளை முன்னிட்ட காஞ்சீபுரம் பற்றிய நிகழ்ச்சியில் காமாட்சிஅம்மனையும் காஞ்சி சங்கரமடத்தையும் காமகோடிமடாதிபதிகளான ஜயேந்திரர், விஜயேந்திரர் பேச்சுக்களையும் விரிவாகக் காட்டிவிட்டு, சிறிதுநேரம் வரதராஜப்பெருமாள் ஸந்நிதி பற்றியும் ஒளிபரப்பினார்கள். ஜயேந்திரர் பேசும்போது பிரம்மோற்சவ சமயத்தில் வரதராஜர் காமாட்சியை வலம் வருவதாகவும், அதனால் சக்தியே முதற்கடவுள் என்றும் பொருள்படக் கூறினார். இதுபற்றி சென்னைத் தொலைக் காட்சி நிலையத்திற்கு நான் எழுதியுள்ள கடிதத்தின் பிரதியைத் தங்களுக்கு இத்துடன் அனுப்பியுள்ளேன். அதற்கு இன்றுவரை தொலைக்காட்சி நிலையத்திலிருந்து யாதொரு பதிலுமில்லை. இதுபற்றி ஸுதர்சனர் பதிலில் விமர்சிக்க வேண்டுகிறேன்.

நம்நாட்டில் தொலைக்காட்சி, வானொலி, மற்றும் பொது ஜனப் பத்திரிகைகள் முதலான மக்கள் தொடர்பு சாதனங்கள் அனைத்திலும் பெரும்பான்மையாக இருப்பவர்கள் காமகோடி சிஷ்யர்களும் அபிமானிகளுமேயாவர். அதனால் அவையனைத்திலும் அவர்களுக்கே சமய நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நம்நாடு பெயரளவிலேயே மதச்சார்பற்ற நாடாக இருக்கிறது. நடைமுறையில் காமகோடிமடாதிபதிகளே நாட்டுக்கே ஆசார்யர்கள்போலே முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தப்படுகிறார்கள். "அவர்கள் பேசுவது வைஷ்ணவர்களுடைய மனத்தைப் புண்படுத்துவதாக உள்ளதே" என்பதையும் இந்தப் பொதுஜனத் தொடர்பு சாதனங்கள் கவனிப்பதேயில்லை. இந்த அநீதி நீண்டநாட்களாக வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பொதுஜனப் பத்திரிகைகளிலும் நடைபெற்றுவருகிறது. நாமும் அவ்வப்போது இதனை எடுத்துக்காட்டி வருகிறோம். ஆனால் அவர்கள் இதைக் கண்டு கொள்வதே இல்லை. காஞ்சி எனும் பெயருக்குக் கார

http://acharya.org

ணத்தைக் கூறும் பிரமாணம் "க இதி ப்ரஹ்மணோ நாம தேந தத்ராஞ்சிதோ ஹரி: | தஸ்மாத் காஞ்சீ(இ)தி விக்யாதா புரீ புண்ய விவர்த்தினீ ||" ["க: என்பது பிரமனின் பெயர். அப்பிரமனால் அவ்விடத்தில் ஹரியானவன் ஆராதிக்கப்பட்டதால் அவ்வூர் "காஞ்சீ" என்று பெயர்பெற்று, புண்யங்களை வளர்க்கின்றது]என்பது. ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் முதலியவற்றில் வேதாந்ததேசிகர் முதலான பூர்வாசார்யர்களால் காஞ்சியின் பெருமை இவ்வாறே சொல்லப்பட்டுள்ளது. சங்கநூல்களில் காஞ்சியில திருவெஃகாவில் உள்ள திருமால் கோவில் சிறப்பாக விவரிக்கப் பட்டுள்ளது. சங்ககாலத்தில் அங்கு சிவனுக்கோ அல்லது சக்திக்கோ ஒருகோயில் இருந்ததாகக்காட்டும் சங்கநூல் குறிப்புகளே இல்லை. ஆகையால் ஏகாம்(ப)ரேச்வரர்கோயில்காமாட்சி அம்மன் கோயில் முதலான கோயில்கள் மிகப்பிற்காலத்தில் எழுந்தவை என்பதுதெளிவு. ஊருக்குப் பெயர் வருவதற்கே காரணமாய்,பிரமனின் ஆராதனத்திற்கு உரியவரானவர் வரதராஜப்பெருமாள். ராஜவீதி அவருடைய வீதியாகவே ஆதிகாலத்தில் இருந்தது. அதில் உற்சவகாலங்களில் அவர் நீண்ட நெடுங்காலமாக வலம் வந்து கொண்டிருக்கிறார். காஞ்சி கருடஸேவைக்குள்ள பெருமை அவ்வூரிலுள்ள மற்ற எந்தக் கோயிலிலும் உள்ள எந்த விழாவிற்கும் இல்லாததிலிருந்தே இந்தக்கருடஸேவை விழா மிகவும் தொன்மையானது என்று விளங்கும். காஞ்சி வரதராஜப்பெருமாள் ஊர்வலம் வரும் அவருடைய ராஜவீதிக்கு நடுவில் பிற்காலத்தில் பலகோயில்கள் ஏற்பட்டு விட்டன. காமாட்சியம்மன் கோயிலைப்பற்றி மிகப்பழைய தமிழ் அல்லது வடமொழி இலக்கியங்களில் எந்தக் குறிப்பும் இல்லாமையால் அது ஆயிரம் வருஷங்களுக்குள் ஏற்பட்டதாகவே இருக்கவேண்டும் என்பது தெளிவு. வேத முதல்வனாய், இதிஹாஸ புராணங்களாலும் பண்டைத்தமிழ் வடமொழிச் சான்றோர்கள் பலராலும் பாராட்டப்படும் முழுமுதற்கடவுளாக விளங்குகின்றவன் வரதராஜன். சங்கநூல்களில் சக்தி என்னும் பெண்தெய்வம் "காடுகாள்" என்று பெயர்பெற்றது. 'சுடுகாட்டைக் காப்பவள்' என்று அதற்குப் பொருள். இன்றும் தமிழ்நாடு முழுவதிலும் கிராமங்களுக்கு வெளியில் சுடுகாட்டுக்கு அருகிலேயே பிடாரி கோயில்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இத்தகைய கோயில் ஒன்றை வரதராஜப் பெருமாளின் ராஜவீதியின் நடுவில் பிற்காலத்தில்

http://acharya.org

கட்டிவிட்டதால் பெருமாள் அந்ததெய்வத்தை வலம் வருவதாக ஆகிவிடுமா? இந்த நியாயப்படி பார்த்தால் ராஜவீதிகளின் நடுவே வீடுகள் கட்டி வசிப்பவர்கள், அவற்றிலுள்ள மாடு கன்றுகள் மற்றமிருகங்கள் அனைவரையுமே பெருமாள் வலம் வருகிறார் என்றல்லவா ஆகிவிடும். அந்தக் காமாட்சியின் உற்சவகாலங்களில் அந்த தெய்வம் வலம் வரும் வீதிகளுக்கிடையில் பலகோயில்களும் பலவீடுகளும் அமைந்திருக்கின்றனவே, அக்கோயில்களைக் காமாட்சி வலம் வருகிறாள் என்று ஒருவர் பேசினால் தொலைக்காட்சி நிலையத்தார் அதை ஒளி பரப்புவார்களா? இவை எதையும் ஆராயாமல் ஜயேந்திரர் தம் மனம் போனபடி பேசியதும், அதைத் தொலைக்காட்சி அப்படியே ஒளிபரப்பியதும் மிகவும் அருவருக்கத்தக்கது, கண்டிக்கத்தக்கது. இனியாவது அரசின் ஆதரவுபெற்ற மக்கள் தொடர்பு சாதனங்களில் இருப்பவர்கள் அரசு மதச் சார்பற்றது என்பதை நினைவில்கொண்டு பிறர் மனம் புண்படும்படியாக, மதச்சார்பை வெளிப்படையாகக் காட்டும் இத்தகைய தவறான விளம்பரங்களைச் செய்யாமல் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

திருவெள்ளறை அம்மாள் கீழத்திருமாளிகை திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

92. நவராத்ரியையொட்டி திருச்சி வானொலியில் 'மதுகைடபவதம்' என்கிற இசைச்சொற்பொழிவு ஓர் அம்மையாரால் நிகழ்த்தப்பெற்றது. அதில் "மஹாவிஷ்ணுவின் யோகநித்ரையாகிற அம்பிகையே மதுகைடபர்களின் வதத்திற்குக் காரணமானாள்" என்றும், "இதுபற்றியகதை சிலபுராணங்களில் உள்ளது" என்றும் பேசப்பட்டது. இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் முதலான பல்லாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இதிஹாஸங்களிலும் ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட கவிகளின் காவியங்களிலும் திருமாலே "மதுசூதனன்" என்றும், "கைடப₄ாரி" என்றும் நூற்றுக்கணக்கான இடங்களில் போற்றப்படுகிறார். கீதையிலேயே அர்ஜுனன் கண்ணனை மது₄ஸூத₃ன ஶப்₃த₃த்தாலே பலவிடங்களில் விளித்திருப்பதைக் காணலாம். இது போலே மற்ற எந்த தெய்வத்திற்கும் மதுவை அழித்த பெருமையை ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட காவியங்களோ அல்லது இதிஹாஸங்களோ கூறியதில்லை. திருக்கோஷ்டியூர் திருமெய்யம் முதலான பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னே ஏற்பட்ட கோயில்களின் கருவறைகளில் மதுகைடபர்களை

http://acharya.org

எம்பெருமான் நிரஸித்துப் வரலாறு சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளது. இப்படி சக்தி கோயில்களில் எங்கும் கிடையாது. இதிலிருந்தே எம்பெருமானுடைய பெருமையை சக்திக்கு ஆக்கவேண்டுமென்று எண்ணம் கொண்ட சிலரால் சில நூற்றாண்டுகளுக்கு முன் தேவீபாகவதமும், சில தாமஸ புராணங்களில் தேவீமாஹாத்ம்யங்களும் புனையப்பெற்றுள்ளன என விளங்குகிறது. இவற்றை ப்ராமாணிகர்கள் கட்டுக்கதைகளாகவே கொள்ளவேண்டும்.

திருவெள்ளறை மேலத்திருமாளிகை S. ஸௌம்யநாராயணன், ஸ்ரீரங்கம்.

93. பொதுவாகப் பழைய தமிழிலக்கியங்களிலும், குறிப்பாக திவ்யப்ரபந்தங்களிலும் "அப்பா" என்னும் பதம் விளியில் மாத்திரம் வருகிறது. மற்றவேற்றுமைகளில் வருவதில்லை. "அம்மா" என்னும் தாயைக்குறிக்கும் பதம் மற்ற இலக்கியங்களில் விளியிலும் வருவதில்லை. திவ்யப்ரபந்தங்களில் மட்டும் "அரங்கத்தம்மா" என்றும் "வித்துவக்கோட்டம்மா" என்றும் விளியில் மாத்திரம் வருகிறது. மற்றவேற்றுமைகளில் வருவதில்லை. காரணம் என்ன?

"அப்பன்" என்னும் பதத்தின் விளியே 'அப்பா' என்பது. "அப்பா" என்றோ "அம்மா" என்றோ பழைய தமிழிலக்கியங்களிலும், திவ்யப்ரபந்தங்களிலும் முதல் வேற்றுமையில் வழக்கு இல்லை. விளிதவிர்ந்த மற்ற வேற்றுமைகளிலும் இல்லை. 'அமமை', 'அம்மன்' 'அம்மனை' 'அன்னை', 'தாய்' என்னும் வழக்குகளே தாயைக் குறிப்பவையாகக் காணப்படுகின்றன. அம்மன் என்பதின் விளி 'அம்மனே' என்றே வரும்; 'அம்மை' என்பதின் விளி 'அம்மையே' என்றே வரும்; 'அம்மனை' என்பதின் விளி 'அம்மனாய்' என்றே வரும். இவை எதுவும் 'அம்மா' என்று பழைய இலக்கியங்களில் வருவதில்லை. இவற்றை ஆராயும்போது "அரங்கத்தம்மா" என்றும் "வித்துவக்கோட்டம்மா" என்றும் திவ்யப்ரபந்தங்களில் வழங்கும் பதங்கள் 'அரங்கத்தம்மான்!' "வித்துவக்கோட்டம்மான்" என்றே இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவ்விடங்களின் வ்யாக்யானங்களில் 'அம்மா(ன்)' என்ற பதத்திற்கு 'ஸ்வாமி' என்று பொருளுரைத்திருப்பதும் இக்கருத்தை வலியுறுத்துகிறது. இதுகுறித்துத் தமிழறிஞர்கள் ஆராயவேண்டும்.

http://acharya.org

கி. ஜகந்நாதன், சென்னை-38, திருவாலி S. ஸ்ரீநிவாஸன்-சென்னை-91

94. 24-10-92 அன்று இரவு சென்னைத் தொலைக்காட்சியில் தீபாவளிப் பண்டிகையைப் பற்றி ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரி குறிப்பிடுகையில் "நரகாசுரனை வதம் செய்ததற்காகக் கொண்டாடப்படும் நாள் தீபாவளி என்னும் கதைக்கு எனக்குத் தெரிந்து ஆதாரம் ஒன்றுமில்லை. உண்மையில் தேவியின் பெருமையைத்தான் தீபாவளி குறிப்பிடுகிறது. சிவனும் பார்வதியும் கூடியிருக்கும் நாள்தான் ஐப்பசி மாத நரகசதுர்த்தசி. அதுதான் சிவராத்ரி" என்று உரையாற்றினார். இது பற்றிய உண்மையை விளக்க வேண்டுகிறேன்.

"தீபாவளி நரகாசுரவதத்தைக் குறித்துக் கொண்டாடப்படுவது என்னும் கதைக்கு எனக்குத் தெரிந்து ஆதாரம் இல்லை" என்று சொன்ன சாஸ்திரி ஓர் ஆதாரமும் காட்டாமல் தீபாவளி சக்திக்காகக் கொண்டாடப் படுவது என்று கூறியதும் அதைத் தொலைக்காட்சி ஒளிபரப்பியதும் விந்தையானது; கண்ணன் நரகாசுரனையும் அவனுடைய தளபதியான முரனையும் கொன்றான் என்பதற்குப் புராணங்களில் பல ஆதாரங்கள் உண்டு. இதிஹாஸபுராணங்களில் "நரகாந்தகன்" என்றும், "முராரி" என்றும் இதனாலேயே கண்ணன் அழைக்கப்படுகிறான். "நரகநாசனை" [பெரியாழ் திரு 4-4-4] "நாரணன் நரகாந்தகன்" [பெரு திரு 3-3] "நரகனைத் தொலைத்த கரதலத்தமைதி" [பெரிய திரு 10-9-4] என்று ஆழ்வார்களும் இவ்விஷயத்தை அருளிச்செய்தார்கள். உண்மையில் நரகாசுரவதத்திற்காகவே தீபாவளி கொண்டாடப்படுகிறது என்பதற்கு ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஒன்றான ஸ்ரீப்ரஶ்ந ஸம்ஹிதையில் 44 வது அத்யாயத்தில் 24வது ஶ்லோகத்திலிருந்து பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது—

அபரம் தே₃வி வக்ஷ்யாமி ஹ்யுத்ஸவம் புஷ்டிகாமத₃ம்।
ஸ்வர்க்க₃த₃ம் சாபி ஸர்வேஷாம் வைஷ்ணவாநாம் ச முக்தித₃ம்॥

பூ₄மிபுத்ர: புரா தே₃வி நரகோ நாம தா₃நவ:।
தேநேமா ஹிம்ஸிதா: பூர்வம் மாம் ப்ரஜா: ஶரணம் யயு:।
ததோऽஹமஹநம் தே₃வி நரகம் தா₃நவாதி₄பம்।
ஸ து தி₃வ்யம் வபு: ப்ராப்ய மாஞ்ச ஸ்துத்வா வசோऽப்₃ரவீத்॥

http://acharya.org

புண்யஶ்லோக ஹரே விஷ்ணோ கமலாஸநபூர்வஜ |
த்வாம் ப்ரார்த்த$_2$யே நமஸ்க்ருத்ய ப$_4$க்தப்ரிய ஹிதங்கர ||
த்வயா ஹதோऽஹம் ஸந்துஷ்டோ தா$_3$நவாநாம்
ஸுதுர்லப$_4$ம் |
த்வத் ப்ரஸாதா$_3$த் ஸ்வர்க்க$_3$வாஸம் வஸிஷ்யாமி நஸம்ஶய: ||
பரந்து பா$_3$தி$_4$தா: பூர்வம் மோத$_3$ந்தாம் ஸகலா: ப்ரஜா: |
மந்நாம்நா ஹ்யுத்ஸவம் குர்யு: ஆலயேஷு க்$_3$ருஹேஷு ச ||
அப்$_4$யஞ்ஜநஸ்நாநதா$_3$நம் நூதநாம்பா$_3$ரதா$_4$ரணம் |
குர்யுர் தே$_3$வாய ப$_4$க்ஷ்யாதி$_3$ கு$_3$டா$_3$ந்நாதி$_3$ சதுர்வித$_4$ம் ||
நிவேத$_3$யேயுரித்யேவம் ஸம்ப்ரார்த்$_2$ய ஸ்வர்க$_3$மப்$_4$யகா$_3$த் |
ததோ தே$_3$வாந் மாநுஷாம்ஶ்ச ததா$_3$ஶாஸம் ஜநோத்$_3$ப$_4$வே ||

[லக்ஷ்மீ தேவியே! புஷ்டியையும் விருப்பத்தையும் கொடுக்கக் கூடியதாய், அனைவருக்கும் ஸ்வர்க்கத்தையும் கொடுக்கக்கூடியதாய் வைஷ்ணவர்களுக்கு மோக்ஷத்தையே கொடுக்கக்கூடியதான மற்றொரு உத்ஸவத்தைப் பற்றிக் கூறுகிறேன், கேட்பாயாக. முன்னொரு காலத்தில் பூ$_4$மியின் புத்திரனான நரகன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் மக்களை மிகவும் துன்புறுத்தினன். அவர்கள் என்னை ஶரணமடைந்தனர்; அதற்குப் பின் நான் அஸுரர் தலைவனான நரகனைக் கொன்றேன். அவன் தி$_3$வ்யமான ஶரீரத்தை அடைந்தவனாய் என்னைத் துதித்துப் பின்வருமாறு கூறினன்:— "நல்லோர்களால் துதிக்கப்பட்டவனே! பாபங்களைப்போக்கும் ஹரியே! எங்கும் வியாபித்த விஷ்ணுவே! பிரமனுக்கும் முன்னால் இருந்தவனே! அடியார்களுக்கு இனியவனே! எல்லோருக்கும் நன்மை செய்பவனே! உன்னை வணங்கிப் பின்வருமாறு வேண்டுகிறேன்—உன்னால் கொல்லப்பட்ட நான் அஸுரர்களுக்குக் கிடைப்பதற்கரிதான ஸ்வர்க்க$_3$த்தில் உன் அருளாலே ஆனந்தத்தோடு வாழப்போகிறேன் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், என்னால் இதுவரையில் துன்புறுத்தப்பட்ட எல்லா ஜனங்களும் ஆனந்தப்படவேண்டும். என் பெயராலே ஆலயங்களிலும் வீடுகளிலும் உத்ஸவத்தைக் கொண்டாடவேண்டும். எண்ணெய் தேய்த்து ஸ்நானமும் தா$_3$னமும் செய்து, புதிய வஸ்த்ரங்களை உடுத்து, பரமபுருஷனான உனக்குப் பணியாரங்கள் சர்க்கரைப்பொங்கல் முதலான நால் வகைப்பட்ட அன்னங்களையும் ஸமர்ப்பிக்க வேண்டும்" என்று என்னை வேண்டிக்கொண்டு ஸ்வர்க்க$_3$த்திற்குச் சென்றான். அதனாலே நான் தேவர்களையும் மனிதர்களையும் அவ்வண்ணமே செய்யும்படி கட்டளையிட்டேன்] என்று தொடங்கி ஐப்பசிமாதம்

http://acharya.org

க்ருஷ்ணபக்ஷசதுர்தசியில் சந்திரோதயத்தின்போது ஆலயங்களில் தீபாவளி உத்ஸவம் கொண்டாடும் முறை விவரிக்கப் பட்டுள்ளது. இந்த இதழைச் சென்னைத் தொலைக்காட்சிக்கும், ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரிகளுக்கும் அனுப்பியிருக்கிறோம்.

S. வேங்கடம், சமயபுரம்.

95. தினமலர்-வாரமலர் 8-10-92 இதழில் 'ஞானானந்தம்' என்னும் தலைப்புள்ள ஆன்மீகப் பகுதியில் "(பீஷ்மரைப்போலே) உத்தராயணத்தில், சுக்லபக்ஷத்தில், பகல் வேளையில் இறப்பவர்களுக்குத்தான் மோக்ஷம் என்றும் மற்றவர்களுக்குக் கிடையாது என்றும் கீதையில் சொல்லப் பட்டுள்ளதாக எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மையா?

இது சரியல்ல. உபநிஷத்₃ வாக்யங்களில் காணப்படும் அர்ச்சிராதி₃க₃தியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் ப்₃ரஹ்ம ஸூத்ரங்களிலும், அவற்றை விவரிக்கும் பா₄ஷ்யங்களிலும், கீதையில் அர்ச்சிராதி₃க₃தியை விவரிக்கும் [8—23, 24] ஶ்லோகங்களின் பா₄ஷ்யங்களிலும் ப்₃ரஹ்மத்தைப் பற்றிய அறிவுடையவன் த₃க்ஷிணாயநத்திலோ, க்ருஷ்ண பக்ஷத்திலோ, இரவிலோ இறந்தாலும் அவனுக்கு மோக்ஷம் உண்டு என்றும், அர்ச்சிராதி₃க₃தியை விவரிக்கும் வாக்யங்களில் பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் என்னும் பதங்கள் மார்க்கத்தைக் குறிக்கின்றனவேயொழிய, காலத்தைக் குறிக்கவில்லை என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஞானபூமி, தினமணி, தினமலர் முதலான பத்திரிகைகளில் ஆன்மிக விஷயங்களைப்பற்றி எழுதுகிறவர்கள் உபநிஷத்து ப்₃ரஹ்மஸூத்ரம் கீதை முதலானவற்றை பா₄ஷ்யங்களைக் கொண்டு படிக்காதவர்கள். பிறர் எழுதி வைத்த மொழிபெயர்ப்புகளைப் பார்த்து விட்டோ, தம்மனம் போன படியோ எழுதுகிறவர்கள். பீ₄ஷ்மர் தம்முடைய ஸ்வபத₃த்தை அடைவதற்காகவே உத்தராயணத்தை எதிர் பார்த்தாரேயொழிய மோக்ஷத்தை அடைவதற்காக அல்ல என்று ப்₃ரஹ்மஸூத்ர பா₄ஷ்யங்களில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

S. முரளி, அந்தணல்லூர்.

96. 1-10-92 ஆனந்தவிகடனில் பிரபல எழுத்தாளரான 'சுஜாதா' தமது பதரியாத்திரையைப் பற்றிக் கட்டுரை எழுதியிருக்கிறார். அதில்-பதரிநாராயணர் விக்ரஹம் "புத்தவிக்ரஹமோ" என்னும் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார். இக்கட்டுரையைப்பற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

http://acharya.org

நம் நாட்டில் பதரிகாச்ரமம் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக ஒரு வைஷ்ணவயாத்திரைத் தலமாக விளங்கி வருகிறது. ஆராய்ச்சியாளர்களாலும் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படும் பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இதைப் பாடியிருப்பதிலிருந்தே அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இது வைஷ்ணவத்தலமாக விளங்குவது தெரியும். இவர் கட்டுரையிலேயே 'இந்தக் கோயில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து பௌத்த ஆதிக்கத்திலிருந்தது" என்று சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்தே வைஷ்ணவஸ்தலத்தை பௌத்தர்கள் எட்டாம் நூற்றாண்டில் ஆக்ரமித்தார்கள் என்று விளங்கும். அவர்கள் நாராயணனுடைய விக்ரஹத்தைக் கங்கையில் போட்டு விட்டார்களென்றும் அதை (எட்டாம் நூற்றாண்டிலிருந்த) ஆதிசங்கரர் மறுபடி எடுத்துப் பிரதிஷ்டை செய்தாரென்றும் அந்தக் கோயிலிலுள்ள கேரளப்பூஜாரிகள் செவிவழிச் செய்தியாகக் கூறுகிறார்கள். உண்மை இவ்வாறு இருக்கும் போது, ஸ்ரீரங்கத்தில் குவளக்குடி சிங்கமய்யங்கார்ஸ்வாமியின் பரம்பரையில் வந்தவராகவும், நமது நண்பரும், ஸுதர்சனத்திற்கு நீண்டநாள் சந்தாதாராக இருந்தவருமான ஸ்ரீநிவாஸராகவன் ஸ்வாமியின் குமாரராகவுமுள்ள இந்தப் பிரபல எழுத்தாளர் "நாராயணன்" என்று எழுதிவிட்டு அடைப்புக்குறியில் (புத்தர்?) எனக் கேள்விக்குறியுடன் எழுதுவது நியாயத்துக்குப் புறம்பானது. ஒரு முஸ்லிம் மசூதியைப்பற்றியோ அல்லது கிறிஸ்துவர்களின் மாதா கோவிலைப்பற்றியோ இவர் இப்படி எழுதுவாரா? எழுதினாலும் விகடன் அதை அப்படியே வெளியிடுமா? "இந்து' மதம் என்னும் நாதியற்ற மதத்தைச் சேர்ந்த எந்த ஸ்தாபனத்தைப் பற்றியும் எவர் வேண்டுமானாலும் எதுவேண்டுமானாலும் எழுதலாம் என்ற நிலையையே இது காட்டுகிறது. தேவப்பிரயாகையைத் திருமங்கையாழ்வார் பாடியிருப்பதாக இவர்கூறியிருப்பது தவறு, "கண்டம் என்னும் கடிநகர்" என்று பெயர் பெற்ற அந்தத்தலத்தைப் பெரியாழ்வார் ஒருவரே பாடியிருக்கிறார். 'பிரிதி" என்று திருமங்கையாழ்வார் பாடியிருக்கும் தலம் 'ஜோஷிமட்" அல்ல, பதரிக்கும் வடக்கே மானஸஸரோவரக் கரையிலே அமைந்ததே அத்தலம் என்பதைப் பலகாரணங்களைக்காட்டி நம்முடைய பதரி யாத்திரைக்கட்டுரையில் விளக்கியிருப்பதை அன்பர்கள் அறிவர். நம்முடைய இரண்டு திவ்யப்ரபந்தப் பதிப்புகளிலும் திருப்பிரிதிப்பதிகத்தின் கீழே இந்த விஷயத்தை அடிக்குறிப்பில் காட்டியிருக்கிறோம்.

http://acharya.org

K. ஸ்ரீரங்கராஜன், திருச்சி.

97. 22—11—92 "ராணி" பத்திரிகையின் அல்லி பதிலில் "இரணியன் அரக்கனா?" என்னும் கேள்விக்கு, "இல்லை; தமிழ் மன்னன்; சிறந்த சிவபக்தன். வைஷ்ணவத்தை ஏற்றுக்கொள்ளாததால் கொல்லப்பட்டான். இராமராவணப் போரும், வைஷ்ணவ சைவப்போர்தானே!" என்று பதில் எழுதப்பட்டிருப்பதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

இரணியன், ராவணன் முதலானோர் பிரமனிடமும், சிவனிடமும் வரம்பெற்று உலகை நலிந்தனர் என்றே இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. அவர்களைச் சிறந்த சிவபக்தர்கள் என்று கூறுவது சிவனுக்கும் பெருமையல்ல. சைவத்திற்கும் பெருமையல்ல. ஹிரண்யன் "ஹிரண்யாய நம:" என்று அனைவரையும் சொல்லும்படி நிர்பந்தப்படுத்தினானேயொழிய சிவபஞ்சாக்ஷரத்தை ஓதும்படி கட்டாயப்படுத்தவில்லை; அவனை எப்படிச் சிறந்த சிவபக்தன் என்பது? ஹிரண்யனைச் சிறந்த சிவபக்தன் என்று கூறுவதும், பிறன்மனை நயந்த பெரும்பாவம் செய்ததனால் விளைந்த இராமராவணப்போரை சைவ வைணவப்போர் என்பதும், எழுதுபவரும், வெளியிடும் பத்திரிகையும் ஹிரண்யராவண மனப்பான்மையுள்ளவர்கள் என்பதையே காட்டுகின்றன.

திருவெள்ளறை அம்மான் ஸ்ரீ திருவேங்கடாசார்யஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

98. 'சிவன்தான் நிர்க்குணப்ரம்மம்' என்னும் பீடாதிபதியின் அபத்தப்பேச்சை வெளியிட்ட 'கல்கி', 87 வது கேள்வியின் பதிலில் அதற்குத் தங்கள் மறுப்பிற்கு எந்த பதிலையும் கூறாமல், 13-12-92 இதழில் "ஒன்றான பிரம்மத்தைப் பலவான பிரபஞ்சமாகக் காட்டுகிற அந்த மாயாசக்தியைத்தான் அம்பாள் என்று சொல்லுகிறோம்" என்றும், 'உண்மையில் நாமும் பிரம்மத்தைத் தவிர வேறு இல்லை. ஆனால் வேறாக நினைக்கிறோம். இதற்குக்காரணம் பிரம்ம சக்தியான அம்பாளின் மாயைதான். இப்படி நம்மை மாயையில் போட்டு எடுப்பது அவளுடைய லீலை......

http://acharya.org

அவளே இந்த மாயை முழுவதையும் நீக்கி நமக்கு பிரம்ம ஞானத்தை அனுக்கிரகம் செய்வாள்...மாயாசக்தியாக இருக்கிற அம்பாளே தான் ஞானம்பிகையாகவந்து நமக்கு மோக்ஷத்தை அனுக்கிரகம் செய்பவளும் ஆவாள்'' என்றும் பீடாதிபதியின் முன்னுக்குப்பின் முரணான பேச்சை வெளியிட்டிருக்கிறது. 20—12—92 இதழில், "அந்தப் பரதேவதையே சங்கீததேவதை ... வீணையைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிறாள். ஸரஸ்வதி நல்ல வெளுப்பு, இவளோ கறுப்பு'' என்னும்பேச்சையும் வெளியிட்டிருக்கிறது. இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

முன்னுக்குப்பின் முரணான இதற்கு விமர்சனமே தேவையில்லை. "ப்ராஹ்மத்தை மறைக்கும் மாயையை 'ஸத்' என்றோ 'அஸத்' என்றோ கூறமுடியாது. அது ஸதஸதநிர்வசநீயம் என்றே அத்வைதிகள் சங்கரர் காலம் தொடங்கி இது நாள் வரையில் கூறிவருகிறார்கள். ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களிலும் இக்கொள்கையே விரிவாகக்கண்டிக்கப் பட்டுள்ளது. இக்கண்டனங்களுக்கு நேர்மையுடன் பதிலுரைக்க முடியாதாகையால், காமகோடி பீடாதிபதி "அம்பாளே மாயை'' முதலான முரண்பட்ட பேச்சுக்களைப் பேசிப் பாமரஜனங்களை ஏமாற்றப்பார்க்கிறார் என விளங்குகிறது. அத்வைத வித்வான்களைக் கொண்டு "சிவன்தான் நிர்க்குணப்ரம்மம், அம்பாள்தான் மாயை'' முதலான இந்தப் பேச்சுக்கள் பழைய அத்வைத வேதாந்தநூலகளில உள்ளன என்று 'கல்கி' நிரூபித்து விட்டால், நாம் ஸுதர்சனர் பதில் எழுதுவதையே நிறுத்திவிடுகிறோம். இதைச்செய்ய இயலாவிடில் 'கல்கி' பீடாதிபதியின் இத்தகைய ஆதாரமற்ற பேச்சுக்களை வெளியிடுவதை நிறுத்த வேண்டும். இதையும் செய்யாவிடில் "மதத்துறையில் பொய்களைப்பரப்பும் பத்திரிகை கல்கி'' என்று முடிவு செய்து நல்லோர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமலிருப்பது தக்கது.

P. A. ஸ்ரீநிவாஸாசாரியர், மேலக்கொட்டையூர், கும்பகோணம் மற்றும் பலர்.

99. 15—11—92, 1—12—92 "துக்ளக்'' பத்திரிகையிதழ்களில் அதன் ஆசிரியர் "சோ'' எழுதும் "எங்கே பிராம்மணன்'' என்னும் தொடர்கதையில், இதிஹாஸ புரா

http://acharya.org

ணங்களிலும், ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை நூல்களிலுமுள்ள பல வரலாறுகளை எடுத்துக்காட்டி, "ராமன், கிருஷ்ணன் முதலான அவதாரபுருஷர்களும், ராமானுஜர், பெரியநம்பி முதலான ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களும் பிறப்பில் உயர்வுதாழ்வே கிடையாது என்று காட்டியிருக்கிறார்கள்" என்று எழுதிவருகிறார். அவரைத் தெளிவிக்க வேண்டுகிறோம்.

இதிஹாஸ புராண நூல்களையும், ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் நூல்களையும், குருபரம்பரை நூல்களையும் சரியாகப் படிக்காததாலேயே, தனக்கு வேண்டியதை மட்டுமே எடுத்துக் கொண்டு, வேண்டாதவற்றைக் கைவிட்டு "சோ" இப்படிக் கதை எழுதுகிறார். உண்மைநிலையை ஆதாரத்தோடு விளக்குகிறோம். பறவையான ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரம் செய்த ஸ்ரீராமன் வர்ணாச்ரம தர்மத்திற்கு முரணான காரியத்தைச் செய்த சம்புகனைக் கொன்றான் என்றும், வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்தான் என்றும் ஸ்ரீராமாயணத்தில் வருகிறது. இடையர்களோடு கலந்து பழகி, விதுரர் வீட்டில் விருந்துண்ட கண்ணனே கீதையில், "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்" [கீதை 4–13] [நான்கு வர்ணங்களும், என்னால் (ஸ்ருஷ்டிகாலத்தில்) படைக்கப்பட்டவை] என்று கூறி, அர்ஜுனன் தன் க்ஷத்ரியவர்ணத்திற்குரிய தர்மமான யுத்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறான். திருக்கச்சிநம்பி, பிள்ளையுறங்கா வில்லிதாஸர் முதலானோரிடம் வர்ணாச்ரமதர்மத்திற்கு முரணாக நடந்து கொண்டது போல் தோற்றமளிக்கும் ஸ்ரீராமானுஜரும் தம் கிரந்தங்களில் பலவிடங்களில் வர்ணாச்ரமாசாரங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றே வலியுறுத்துகிறார். மேலெழத் தோன்றும் இம்முரண்பாட்டை எப்படி நீக்குவது? என்னும் கேள்வி எழுகிறது. ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்கள் வர்ணாச்ரமவிதிகள் "Rule" என்று ஆங்கிலத்திலும், "உத்ஸர்க்கம்" என்று ஸம்ஸ்க்ருதத்திலும் சொல்லப்படும் விதியாகவும், ஸ்ரீமந்நாராயணனையே எல்லாமாகக் கொண்ட வைஷ்ணவர்களைப் பற்றிய சாஸ்த்ரங்கள் "Exception" என்று ஆங்கிலத்திலும்,

http://acharya.org

"அபவாதம்" என்று ஸம்ஸ்க்ருதத்திலும் சொல்லப்படும் விதி விலக்காகவும் அமைந்துள்ளன என்று கொண்டு இம் முரண்பாட்டை நீக்கியுள்ளனர். தன்னையே எல்லாமாகக் கொண்ட ஜடாயு. விபீஷணன், அனுமன், சபரி, குஹன் போன்றவர்களிடம் நடந்துகொண்டது போல் ராவணன் முதலானோரிடம் ராமன் நடந்து கொள்ளவில்லையே. தன்னையே எல்லாமாகக்கொண்ட ஆயர்கள், விதுரர் முதலானோரிடம் நடந்து கொண்டது போல் கண்ணன் துரியோதனன் முதலானோரிடம் நடந்து கொள்ளவில்லையே. பெரிய நம்பி ஸ்ரீராமானுஜர் முதலான ஆசார்யர்களும், திருக்கச்சி நம்பி, பிள்ளையுறங்காவில்லிதாஸர், மாறனேர் நம்பி முதலானோரிடம் நடந்து கொண்டது போல் அனைவரிடமும் நடந்து கொள்ளவில்லையே. "திருமாலையே எல்லாமாகக் கொண்டவர்களுக்கு, அவர்கள் பிறந்திருக்கும் ஜாதியையிட்டு வரும் தாழ்வு அழிந்துவிடுகிறது; அவர்கள் "தொண்டக்குலம்" என்னும் உயர்ந்த ஜாதியில் சேர்ந்தவர்களாகையாலே கௌரவிக்கத்தக்கவர்கள்" என்னும் விதிவிலக்கைக் கொண்டு விதியையே அழிக்கப்பார்க்கிறார் "சோ". "Exception does not destroy the rule but only proves it" [விதிவிலக்கு விதியை அழிப்பதில்லை; விதியை நிலைநாட்டவே செய்கிறது.] என்பதை வழக்கறிஞரான "சோ" வுக்கு நினைவுறுத்துகிறோம். இதை அவருக்கு அனுப்புகிறோம். இதை "துக்ளக்"கில் வெளியிடும் நேர்மை அவருக்கு வருமா?

ஆனந்தன் சென்னை-90

100. அயோத்தி ராமர் கோயில் பிரச்சினையில் ஸ்ரீவைஷ்ணவரின் நிலை என்ன?

"எந்நிலையிலும் சகிப்புத்தன்மையே கைக்கொள்ளத்தக்கதேயொழிய, வன்முறை கைக்கொள்ளத்தக்கதல்ல" என்பதே ஸாத்விகர்களான வைஷ்ணவர்கள் கொள்ளவேண்டிய நிலையாகும். இதை ஸுதர்சனம் 541 இதழில் "சகிப்புத்தன்மையா வன்முறையா?" என்னும் தலையங்கத்தில் விளக்கியிருக்கிறோம். இந்த சதகத்தின் அனுபந்தமாகவும் இணைத்திருக்கிறோம்.

"ஸுதர்சனர் பதில்" பதினோராவது சதகம் நிறைவுற்றது.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 43] [ஒளி - 2

வேதாந்த சர்ச்சை

நம் நாட்டில் வேதாந்தக் கொள்கைகள் த்$_3$வைதம், அத்$_3$வைதம், விசிஷ்டாத்$_3$வைதம் என்று மூன்று வகையாகப் பிரிந்துள்ளன. பூர்வாசார்யர்கள் காலத்தில் வாதம் செய்து ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை மனம்மாற்றித் தங்கள் பிரிவுக்குக் கொண்டு வருவதும் நடந்துள்ளது. இந்த நூற்றாண்டில் அந்தமுறை மிகவும் குறைந்து விட்டது. க்$_3$ரந்த$_2$ ரூபமான வேதாந்த சர்ச்சைகளே நடந்து வருகின்றன. இந்நிலையில் பொதுமக்கள் உண்மையை உணர்ந்து கொள்வதற்காக உடுப்பியில் பாலிமார் மடத்தின் தலைவரான 'ஸ்ரீவித்யா மான்ய தீர்த்தஸ்வாமி' என்னும் மாத்$_4$வ மடாதிபதி 27-12-89 ஹிந்து பத்திரிகையில் புதுமையான முறையில் ஓர் வேதாந்த ஸதஸ்ஸைப் பின்வருமாறு நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இந்தஸதஸ் 1990 ஜனவரி 27க்கும் பிப்ரவரி9க்குமிடையில் மத்$_4$வநவமியின்போது உடுப்பியில் நடைபெறும். இப்பொழுது உள்ள பிரபல சங்கரமடங்கள் ஐந்தில் ஒரு மடாதிபதியிடமிருந்து "தலைசிறந்த அத்வைத வித்வான்" என்னும் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற ஒருவர் 15-1-90க்குள் ரிஜிஸ்டர் தபாலில் பாலிமார் மடாதிபதிக்கு அத்தாட்சிப்பத்திரத்துடன் ஸதஸ்ஸில் கலந்து கொள்ளத் தமதுஸம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும். அத்$_3$வைதக்$_3$ரந்த$_2$ங்களான அத்$_3$வைதஸித்$_3$தி$_4$, ப்$_3$ரஹ்மநந்தி, ஸங்க்ஷேப சாரீரகம் ஆகிய நூல்களில் "நிர்க்குண ப்$_3$ரஹ்மம் ஒன்றே உண்மை, உலகம் பொய், ஜீவாத்மாவும் ப்$_3$ரஹ்மமும் ஒன்றே" என்னும்கொள்கைகளை நிரூபிப்பதற்காகச் சொல்லியிருக்கும் வாதங்கள் த்$_3$வைதவித்$_3$வான்களால் மறுக்கப்படும். ஸதஸ்ஸிற்கு வரும் தலைசிறந்த அத்வைதவித்வான் தன் வாதங்களால் அந்த நூல்களிலுள்ள கொள்கைகளை நிலைநாட்டவேண்டும். இருதரப்பினரும் தங்கள் வாதங்களை எழுத்தில் வடித்த பின்

http://acharya.org

அந்த வாதங்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பொது ஜனங்கள் அறிந்து கொள்வதற்காக வெளியிடப்படும், வாதத்தில் கலந்து கொள்ளும் தலைசிறந்த அத்வைத வித்வானுக்கு அத்தாட்சிப் பத்திரத்துடன் ஸதஸ்ஸுக்கு வந்தவுடன் ஐம்பதாயிரம் ரூபாயும் சால்வையும் பரிசாக அளிக்கப்படும் விதிகளின்படி வாதம் முடிந்ததும் மேலும் ஐம்பதாயிரம் ரூபாய் அவருக்குப் பரிசளிக்கப்படும். வெற்றி தோல்விகளைக் கருத்தில் கொள்ளாமல் நட்புறவுடன் வாதம் நடத்தப்படும்.

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

இதில் கண்டபடி இந்த வாதம் நடந்து முடிந்தால் உண்மை உலகுக்குத் தெரியவரும். தலைசிறந்த அத்வைத வித்வான் எவரும் முன்வராது போனாலும், அத்வைதக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கு இன்று எவருமில்லை என்று தேறும். ஸதஸ் நடந்து முடிவு ஏற்பட்டால், அதுபற்றிப் பின்னர் எழுதுவோம்.

மார்கழிக்கேட்டை அனுபவம்

சுக்ல-ஹு மார்கழிக்கேட்டை (26—12-89) அன்று, மார்கழிக் கேட்டையில் திருவவதரித்த தொண்டரடிப்பொடியாழ்வார் அவதாரஸ்தலத்தில் சாற்றுமுறைகோஷ்டியிலும், அன்று அவதரித்த பெரியநம்பிகள் திருநாடலங்கரித்த இடமாகக்கூறப்படும் (ஐயம் பேட்டைக்கு அருகில்) திருவரசில் நடந்த விழாவிலும் கலந்து கொள்ளும் பேறுபெற்றோம். திருமண்டங்குடிக்கு ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமியும், ஸ்ரீரங்கம் திருமலை அய்யங்கார் ஸ்வாமி, சித்ரகூடம் A. V. ரங்காசார்ய ஸ்வாமி, புத்தூர் லக்ஷ்மீநாராயணய்யங்கார் ஸ்வாமி முதலான ஸ்வாமிகள், சில அத்யாக ஸ்வாமிகள், திருநாங்கூர் அனந்தகிருஷ்ணமாசார்ய ஸ்வாமி (சின்னகிட்டு) ஆகியவர்களும் திருக்குடந்தையிலிருந்து சில பாகவதர்களும் வந்திருந்து சாற்றுமுறை கோஷ்டியில் கலந்து கொண்டார்கள்; திருமண்டங்குடியில் ஆழ்வார் ஸன்னிதி மிகவும் ஜீர்ணமாயிருப்பதை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியது அவச்யம் என்று அனைவராலும் உணரப்பட்டது; விரைவில் அதற்குரிய முயற்சிகள் தொடங்குமென்று நம்புகிறோம். பெரிய நம்பிகள் க்ருமிகண்டனால் துன்புற்று, கோயிலுக்கு எழுந்தருளும் வழியில் ஐயம்பேட்டைக்கருகில் பரமபதமடைந்தார் என்று கூறு கிறார்கள். அங்குள்ள பெருமாள் கோயிலில் திருவரசும் நம்பி ஸன் னிதியும் அமைந்துள்ளன. அங்கு பிரதி வருடம் மார்கழிக்கேட்டை யில் அந்த ஸன்னிதியை நிர்வஹிக்கும் பட்டுசாலிய சமூகத்தினர் பெரிய விழாவாகக் கொண்டாடுகின்றனர். அன்று மாலை அங்கு 'பெரியநம்பி வைபவம்' பற்றி உபந்யஸிக்கும் பேறு பெற்றோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-44] [ஒளி-10

சென்னை 'கம்பன் கழக'த்தைக் குறித்துச் சில கேள்விகள்

[S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், 'ஸுதர்சனம்' ஆசிரியர்]
3 B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17]

நம் பாரதநாட்டில் இந்துக்கள் என்று இப்போது வழங்கப்பட்டு வரும் மக்கள் கூட்டத்தில், கடவுட்கொள்கையையிட்டு 'சைவம்' 'வைணவம்' ஆகிய மதங்களையும், வேதாந்தக் கொள்கையையிட்டு ''அத்3வைதம்'', ''த்3வைதம்'' ''விசிஷ்டாத்3வைதம்'' என்று மூவகைப்பட்டுள்ள வேதாந்தக்கருத்துக்களையும், மற்றும் பல கருத்துக்களையும் பின்பற்றிநிற்கும் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் ஒற்றுமையாக வாழ என்ன வழி என்பது ஒரு முக்கியமான பிரச்னையாகும். இந்துக்களில் அடங்கியுள்ள சைவர், வைணவர் முதலானோர் ஒருவரையொருவர் ஆக்ரமிக்காமல் பரஸ்பரசகிப்புத்தன்மையுடன் பொதுமேடைகளில் மதசர்ச்சைகளைக் கிளப்பாமல், அவரவர் மேடைகளில் அவரவர் மதங்களை உறுதியுடன்பிரசாரம் செய்து கொண்டு வாழ்வதே இவர்களிடையே ஒற்றுமைக்கு வழி என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். ''ஹிந்துக்கள்'' ''இஸ்லாமியர்கள்'' ''கிறிஸ்தவர்கள்'' முதலான மதத்தைச்சேர்ந்தவர்களிடையே கூட இதுவே ஒற்றுமைக்கு உண்மையான வழியாகும்.

http://acharya.org

இந்த சகிப்புத்தன்மைக் கொள்கை ஆயிரம் வருடங்களாகவே நமது சைவசகோதரர்களால் வைணவர்களைக் குறித்துப் பின்பற்றப்படவில்லை. தில்லை கோவிந்தராஜப்பெருமாள் கோயில் சைவச்சோழனால் இடிக்கப்பட்டு, மூலமூர்த்தி கடலில் எறியப்பட்டது சைவர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். மதுரையில் சங்ககாலத்தில் இருந்த 'குளவாய் அமர்ந்தான் நகர்' என்னும் திருமால் கோயில் இப்போது இல்லை. சங்ககாலத்தில் இல்லாத மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயில் அக்கோயில் இருந்த இடத்திலேயே அக்கோயிலை இடித்தபின் ஆயிரம் வருடங்களுக்கு முன்னமே கட்டப்பட்டுள்ளது என்பது வெளிப்படையான உண்மை. 'குற்றாலம் கோயில்' 'திருவண்ணாமலைக் கோயில்' ஆகியவை ஒரு காலத்தில் விஷ்ணுகோயிலாய் இருந்து சிவன் கோயில்களாக மாற்றப்பட்டவை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தென்காசியில் இப்போதுள்ள காசிவிசுவநாதர்கோயில் வளாகத்தில் ஒரு பெரிய விஷ்ணுகோயில் இருந்திருக்கிறது என்பதை ஆராய்ச்சி செய்து நூல் எழுதி, நமது நண்பர் தென்காசிப்பேராசிரியர் ஸ்ரீமான் லக்ஷ்மி நாராயணன் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். சமீபகாலத்தில் அழகர் மலையில் இரவோடிரவாக 'பழமுதிர்சோலை' என்று முருகன் கோயில் கட்டப்பட்டதும், நீண்ட வழக்குக்குப்பிறகு வைணவர்கள் பெருந்தன்மையுடன் 'பழமுதிர்சோலை' என்னும் பெயரை நீக்கினால் போதும் என்று ஒப்புக்கொண்டு ஆக்ரமிப்பு முருகன் கோயிலை இடிக்கவேண்டாமென்று இசைந்து சமாதானமாகப்போனதும், அதற்குப் பின்னும் சைவர்கள் அழகர் மலையில் பல ஆக்ரமிப்புகளைச்செய்து அதனால் பல வழக்குகள் நடந்துவருவதும் நாம் கண்கூடாகக்காணும் உண்மை. தில்லைகோவிந்தராஜப் பெருமாள் கோயிலைச் சோழன் இடித்ததை நியாயப்படுத்தி இப்போதும் சைவர்கள் பொது ஜனப்பத்திரிகைகளில் பல நெடுங்கதைகள் எழுதி வருவதையும் கண்டுவருகிறோம். இத்துடன், இந்தப்பொது

http://acharya.org

ஜனப்பத்திரிகைகள் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகவே வைணவத்தை த்திரித்துக்கூறியும், திவ்யப்ரபந்தங்களுக்கு அவப் பொருள் கூறியும், விஷ்ணுவையும் ஸ்ரீராமானுஜர் முதலான பூர்வாசார்யர்களையும் இழித்துரைத்தும் வெளியிடும் கட்டுரைகளுக்கு அளவேயில்லை என்பது நமது ஸுதர்சனர் பதில்களில் பல நூற்றுக்கணக்கான கேள்விகளில் வெட்டவெளிச்சமாகிறது.

நம் நாட்டில் இஸ்லாம், கிறிஸ்தவம், சைவம் முதலான ஆத்திக மதங்களை மற்றொரு ஆத்திகன் பொதுஜனப் பத்திரிகைகளிலோ பொது ஸ்தாபனங்கள் மூலமோ பொது மேடைகளிலோ திரித்துக் கூறவோ, அம்மதநூல்களுக்கு அவப்பொருள் உரைக்கவோ துணியமாட்டான். ஆனால், வைணவத்தைத் திரித்துக்கூறியும் வைணவநூல்களுக்கு அவப்பொருள் கூறியும் பொதுஜனப் பத்திரிகைகளிலும் பொது ஸ்தாபனங்கள் மூலமும், பொதுமேடைகளிலும் பேசவும் எழுதவும் செய்பவர்களின் பட்டியல், காமகோடி பீடாதிபதி, வாரியார், (கலைமகள் ஆசிரியர்) கி. வா. ஜகந்நாதன், ராஜாஜி, ம. பொ. சி. என்று நீண்டுகொண்டேபோகிறது. இவர்களில்திரு ராஜாஜி ஒருவர்தான் நம் பதிலைப்பெற்றபின் தமதுதவறைஉணர்ந்து கடிதம் எழுதினார். மற்றவர்கள்நமது ஸுதர்சனர் பதில்களிலும், நூல்களிலும் தக்கபதில்களைப் பெற்றும், அவற்றுக்குப் பதில் உரைக்க இயலாமல் மேலும் மேலும் இவ்விழிசெயலையே தொடர்ந்து செய்துவருகிறார்கள்.

திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் என்பவர் இவர்களில் ஒருவர். இவர் சைவர்களால் ''சித்தாந்த வித்தகர்'' என்று பாராட்டப்பெற்றவர். வைணவநூல்களில் ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களை மாத்திரம் மேலெழுப்படித்த இவர், அவற்றுக்கு மூலமான ஶ்ருதிஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களிலோ, பாஞ்சராத்ர வைகாநஸ ஆகமங்களிலோ, அவற்றை விளக்கும் வடமொழிநூல்களான ஸ்ரீபாஷ்யம் முதலானவற்றிலோ, மணிப்ரவாள நூல்களான வ்யாக்யான ரஹஸ்ய நூல்களிலோ சிறிதும் பழக்கமில்லாதவர். [உண்மையில் அவற்றில் த்வேஷமுள்ளவர் என்பது-

http://acharya.org

சைவப்பெரும்புலவர்களும், நடுநிலைநிற்கும் சான்றோர்களு மான உ. வே. சாமிநாதய்யர், தியாகராஜ செட்டியார் முத லானவர்களால் மனமாரப் பாராட்டப் பெற்ற வைணவா சாரியர்களைத் தமது' நூலில் மனம்போனபடி நிந்தித்திருப்ப திலிருந்து விளங்குகிறது.] இத்தகைய இவர், சைவத்தில் நாயன்மார்கள் காலம்வரையில் இல்லாதிருந்து பிற்காலத் தில் இறக்குமதி செய்யப்பட்ட மும்மூர்த்திகளுக்கு மேற் பட்ட துரீய சிவ வாதத்தில் பழகியதோஷத்தாலே, "வைண வத்திலும் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட நாலாவது மூர்த்தியான பரம்பொருள் உண்டு. அம்மூர்த்தியிடம் மும் மூர்த்திகளின் உருவமும் உண்டு" என்னும் விலவறச் சிரிக்கத்தக்க வாதத்தைச் சில வருடங்களாகச் சொல்லிக் கொண்டு, அதைக்கடிதம் மூலமாகவும், புதுக்கோட்டை கம்பன் கழக மலரிலும், காரைக்குடி கம்பன் கழக மலரிலும் கட்டுரைகளாக எழுதியும் நமது ஸுதர்சனர் பதில் பத் தாவது சதகம் 13, 20, 21, 33 பதில்களில் தினவடங்க பதில் உரைக்கப்பெற்று நின்றார். பொய்யைத் திருப்பித் திருப்பிப் பிரசாரம் செய்தால் அது உண்மையாகிவிடும் என்னும் மனமயக்கத்தாலே, நமது பதில்களுக்கு எந்த பதிலும் உரைக்காமல் தமது விதண்டாவாதங்களையே சற்று விரிவாக எழுதி, ஆழ்வார்களுடைய ஆயிரக்கணக் கான பாட்டுக்களுக்கு முரணாகச் சிலபாட்டுக்களுக்கு அவப் பொருள் கூறியும், கம்பனுடைய ஆயிரக்கணக்கான பாட்டுக் களுக்கு முரணாகச் சில பாட்டுக்களுக்கு அவப்பொருள் கூறியும், ஆழ்வார்கள் மீதும் கம்பன் மீதும் மும் மூர்த்தியுருவங்களையும் ஒருருவில் கொண்ட நாலாவது மூர்த்தியொன்றே பரம்பொருள் என்னும் தமது கற் பனையை ஏறிட முயலும் "கம்பன் உணர்த்தும் பரம் பொருள் நிலை" என்னும் நூலை எழுதி, அதை சென்னை கம்பன் கழகத்தின் மூலம் வெளியிட்டிருக்கிறார். ஏ. வி. எம். அறக்கட்டளை நிறுவனத்தாரால் வெளியிடப்பெற்ற இந்நூல் "வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-600017" என்னும் விலாஸத்தில் ரூ. 15-00 விலையில் கிடைக்கும். இதில் முக்கியமான பகுதிகள் இவ்

http://acharya.org

விதழில் வெளியாகியுள்ள ஸுதர்சனர் பதில் பதினோராவது சதகம் 56-வது கேள்வியில் தரப்பெற்று கல்விக்கடல் திரு தி. வே. கோபாலய்யர் அவர்களால் மதிப்பீடு செய்யப் பெற்றுள்ளன. அதைக் கண்டபின்பு அன்பர்கள் நமது கேள்விகளைப் படித்தல்நலம். நிற்க. நம்முடைய மறுப்புகளில் சிலவற்றுக்கு நமது பெயரையோ விலாஸத்தையோ குறிப் பிடாமல் இந்நூலில் பதில் எழுத முற்பட்டுள்ள இவர் வழக்கம்போல் நமக்கு இந்நூலை அனுப்பவில்லை. விதண் டாவாதமல்லது எழுதத்தெரியாதவராய், நேர்மை சிறிது மில்லாதவரான இவரிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது வீணானது; ஆயினும், இந்நூலைச் சென்னை கம்பன் கழகம் வெளியிட்டுப் பிரசாரம் செய்வதால், இந்நூலின் பொய்ம் மையை அவர்களுக்கு அறிவிப்பதற்காகப் பின்வரும் கேள்விகளை அவர்களைக்குறித்துக் கேட்கிறேன். சென்னை கம்பன் கழகத்தலைவரும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் இக்கேள்விகளுக்கு நடு நிலை நின்று பதில் இறுப்பாரானால், இவ்வெளியீட்டின் பொய்ம்மை அனைவருக்கும் தெற்றென விளங்கும். அவரோ அல்லது வேறு யாரேனுமோ இக்கேள்விகளுக்கு பதிலை கம்பன்கழக வெளியீடாகவே வெளியிடலாம். வெளியிட்டு அனுப்பினால் அப்பதில்களை ஆராய்ந்து நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடுவேன்.

கேள்விகள்

1. உங்கள் வெளியீட்டில் பரநிலைத் திருமால் வேறு, வியூக நிலையிலுள்ள பாற்கடற்பெருமான் வேறு என்று உள்ளது. புருஷஸூக்தம் "த்ரிபாத் ஊர்த்,வ உதைத் புருஷ:, பாதோ3S ஸ்யேஹா Sப4வாத்புந:" [புருஷஸூக்தம் 1-4] [பரமபத3த்தில் உள்ள பரமபுருஷன் மூன்று வியூகங்களை உடையவனாகி ஸங் கல்பித்தான்; அவனுடைய ஒரு வியூகம் (அநிருத்தன்) (பாற் கடற் பெருமானாக) இவ்வுலகில் அவதரித்தான்] என்று பர நிலைப்பெருமானையும், பாற்கடற்பெருமானையும் ஒருவனாகவே பேசுகிறது. "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மது4ராம் புரீம்" [ஹரி வம்சம் 113-62] [பரமபத3த்தில் ஸ்ரீதேவியோடு கூடியவனா யிருக்கும் இந்த நாராயணனே, திருப்பாற்கடலுக்கு வந்து சேர்ந்து, அங்கிருந்து மது4ராபுரிக்குக் கண்ணனாய்வந்தான்]

http://acharya.org

முதலான நூற்றுக்கணக்கான இதிஹாஸ புராணவாக்யங்களிலும் இது வலியுறுத்தப்படுகிறது. ஆண்டாள் இதையே திருப்பாவை முதல் பாட்டில் ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று பரநிலையைக்கூறி, இரண்டாம் பாட்டில் ''பாற்கடலில் பையத்துயின்ற பரமனடிபாடி'' என்று அவனே வியூகநிலையில் திருப்பாற்கடற் பெருமானாக அவதரித்திருக்கிறான் என்றும், ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்று மூன்றும் பாட்டிலும் ''மாயனை மன்னு வடமதுரைமைந்தனை'' என்று ஐந்தாம் பாட்டிலும் மற்றும் பல பாடல்களிலும் அவனே த்ரிவிக்கிரமன் கண்ணன் இராமன் முதலான அவதாரங்களை எடுத்தான் என்றும், ''வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்'' என்று ஆறும் பாடலில் அவனே அந்தர்யாமி நிலையில் யோகிகளின் உள்ளத்தில் உறைகிறான் என்றும், ''புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம்'' என்று அப்பாடலிலேயே அர்ச்சைநிலையிலிருப்பவனும் அவனே என்றும் தெளிவாகக் காட்டினாள் (ஆண்டாள்). ''விண்மீதிருப்பாய்! மலைமேல்நிற்பாய்! கடல்சேர்ப்பாய்! மண்மீதுழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்'' [திருவாய் 6-9-5] என்று நம்மாழ்வாரும் இவ்வைந்து நிலைகளிலுமிருப்பவன் ஒருவனே எனக்காட்டினார். சங்ககாலச்சான்றோர்களும், ஆழ்வார்களும், கம்பனும் இப்படிப் பாடியிருக்கும் மற்றும் பல இடங்களை, கல்விக்கடல் கோபாலய்யர் உங்கள் வெளியீட்டின் மதிப்பீட்டில் காட்டியுள்ளார். விஷ்ணுசித்த விஜயத்திலும், நமது திவ்யப்ரபந்த வியாக்யானங்களிலும், சங்ககாலத்தமிழர் சமயத்திலும், சாதிமத ஆராய்ச்சியிலும் ஆயிரக்கணக்கான பக்கங்களில் மற்றும் பல ப்ரமாணங்களைக் காட்டியிருக்கிறோம். இதுபோல் ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிலும், சங்கநூல்களிலும், அருளிச்செயல்களிலும், கம்பராமாயணத்திலும் பரநிலைப்பெருமான் வேறு, வியூகநிலைப்பெருமான் வேறு என்று தெளிவாகக் கூறியிருக்கும் இடங்களை உங்களால் காட்டமுடியுமா?

2. பரநிலைப் பெருமானும், வியூகநிலைப் பெருமானும் வேறு என்கிறது வெளியீடு. அவர்களுடைய ஆத்மா வெவ்வேறா? சரீரம் மாத்திரம் வெவ்வேறா?

http://archive.org

சரீரம்மாத்திரம் வேறு என்றால் அதை வைணவம் இசைகிறது. ஆத்மா வெவ்வேறு என்றால் இருவருக்கும் திருமகள் ஒருத்தியே மனைவி என்பது எப்படிப் பொருந்தும்?

3. பரநிலைத் திருமால், வியூகநிலைத் திருமால், நான்முகன், சிவன் ஆகியவர்களின் ஆத்மாக்கள் ஒன்றா? வெவ்வேறா? திருமாலுக்குப் பிரமருத்திரர்களைக்காட்டிலும் பரத்துவத்தை வெளியீடு இசைவதால் ஒன்று என்ன முடியாது. வெவ்வேறு என்றால் மூன்று ஆத்மாக்கள் எப்படி நாலாவது ஆத்மாவோடு ஒன்றாக இணையமுடியும்?

4. "என்திருமார்பன் தன்னை என் மலைமகள் கூறன் தன்னை என்றும் என் நாமகளை அகம்பால் கொண்ட நான்முகனை" [திருவாய் 7—6—7] என்று நம்மாழ்வார் கூறுவதால் மூன்றுருவம் சேர்ந்தவரே பரநிலைப்பெருமான் என்கிறது வெளியீடு. அப்பாட்டிலேயே "நின்ற சசிபதியை" என்று இந்திரனையும் ஒன்றாகக் கூறுவதால் இந்திரனும் சேர்ந்ததே அவ்வுரு என்று கூறலாமா? "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய் அயனாய்" [திருவாய் 6—9—1] முதலான பல பாடல்கள் சிவன் அயனோடு. நீர், நிலன் முதலானவற்றையும் பரநிலைத் திருமாலாகக் கூறுவதால் பரநிலைத் திருமால் நீர் நிலன் முதலான எல்லாம் சேர்ந்ததொரு பிண்டமே என்று கூறலாமா?

5. "ஸர்வம் க₂ல்வித₃ம் ப்₃ரஹ்ம தஜ்ஜலாந்" [சா₂ந்தோ₃க்யம் 3-14-1] [இவ்வுலகனைத்தும் ப்₃ரஹ்மமே; அந்த ப்₃ரஹ்மத்திடமே இவ்வுலகம் தோன்றி ஒடுங்குவதாலும், அந்த ப்₃ரஹ்மத்தாலேயே அந்தர்யாமியாயிருந்து ரக்ஷிக்கப் படுவதாலும்.] என்று வேத₃வாக்யமும், "அந்யஶ்ச ராஜந் ஸ பர: தத₂ாந்ய: பஞ்சவிம்ஶக: | தத்ஸ்த₂த்வாத₃நுபஶ்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத₄வ: ||" [பரமாத்மா வேறானவனே; இருபத்தைந்தாம் தத்துவமான ஜீவன்வேறானவனே; பரமன் ஜீவனிடம் உள் நுழைந்து நிற்பதால் இருவரையும் நல்லோர்கள் ஒருவராகவே காண்கிறார்கள்] என்று மஹாபா₄ரத வாக்யமும், "ஸர்வம் ஸமாப்நோஷி ததோ ऽஸி ஸர்வ:" [கீ₃தை 11-40] [நீ எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறாய்; ஆகையால் எல்லாமாகிறாய்] என்று கீ₃தா வாக்யமும்,

http://acharya.org

''அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்'' [பரிபாடல் 3] என்று சங்கப்பாடலும் கூறுவதையொட்டி, சேதநாசேதனப் பொருள்கள் அனைத்திலும் திருமால் ஆத்மாவாய் வியாபித்திருப்பது காரணமாக அவன் எல்லாமாகச் சொல்லப்படுகிருன் என்று எளிதாகக் கூறலாயிருக்க, மும்மூர்த்திகளை ஒன்ருகக் கூறுவதை மாத்திரம் எடுத்துக் கொண்டு மும்மூர்த்திகளும் சேர்ந்ததொன்றே பரம்பொருள் என்று கற்பிப்பது எப்படிப் பொருந்தும்?

6. ''முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே முதலாகும் மூன்றுக்கும் என்பர்'' [பெரிய திருவந்தாதி72] என்று மும்மூர்த்திகளும் சமமான முதல்வர் என்று கூறும் திரிமூர்த்தி சாம்யவாதத்தையும், மூன்றுக்கும் மேலான நான்காவது மூர்த்தியைப் பரம்பொருளாகச் சொல்லும் வாதத்தையும் எடுத்து, ''முதல்வா ! நிகரிலகு காருருவா ! நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின் பூ'' என்று பிரமனையும், அவன் மூலமாகச் சிவன் முதலான எல்லா உலகையும் படைத்த உந்தித்தாமரை திருமாலிடமிருப்பதால் இவ்வாதங்கள் அடிபட்டுப் போகின்றன என்று நம்மாழ்வார் தெளிவாகக் கூறியிருக்கிருர். ''முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர்வண்ணன்'' [முதல் திருவ 15] என்று பொய்கையாழ்வார் மும்மூர்த்திகளே உலகைப்படைப்பது முதலான செயல்களைச் செய்வதனுல் முதல்வராவார் என்றும், அம்மூவருள்ளும் பிரமருத்திரர்களைப் படைத்த திருமாலே முழுமுதல்வன் என்றும் தெளிவாகக் கூறியிருக்கிருர். ''போதுதங்கு நான்முகன் மகன் அவன் மகன் சொலில் மாதுதங்கு கூறன் ஏறதூர்தி என்று வேதநூல் ஓதுகின்றதுண்மை அல்லதில்லை மற்றுரைக்கிலே'' [திருச்சந்த 72] என்று திருமழிசையாழ்வார், ''பிரமருத்திரர்களுக்குக் காரணமானவன் திருமாலே என்று வேதநூல்கள் கூறுவதே உண்மை, மற்றதெல்லாம் பொய்'' என்று அடித்துக் கூறுகிருர். இப்படியிருக்க, மூன்று மூர்த்திக்கு மேற்பட்டதொன்றே பரம்பொருள் என்பது ஆழ்வார்கள் கருத்து என்று உங்கள் வெளியீடு எழுதுவது வெறும் விதண்டாவாதமல்லவா?

http://acharya.org

7. "குழற்கோவலர் மடப்பாவையும், மண்மகளும் திருவும், நிழற்போல்வனர் கண்டு நிற்குங்கொல் மீளுங் கொல் தண்ணந்துழாய் அழற்போல் அடும் சக்கரத் தண்ணல் விண்ணோர் தொழக்கடவும் தழற்போற் சினத்த அப்புள்" [திருவிருத்தம் 3] என்று நம்மாழ்வார் நித்ய ஸூரிகளின் நாயகனை பரமபதநாதன் ஸ்ரீபூமிநீளாதேவி களோடு கூடியவன் என்றும், துழாய்மாலை தரித்தவன் என்றும், சக்கரம் தரித்தவன் என்றும், கருடவாஹனன் என்றும் தெளிவாகக் கூறுகிருர். இப்படிப் பலபாடல்கள் உண்டு. உம் வெளியீடு கூறுவதுபோல் அவன் மும் மூர்த்திகளின் உருவங்களையும் ஒன்ருகக்கொண்டவனுகவும், அந்தந்த தேவியர்களையும் அந்தந்த உருவங்களில் உடையனுகவுமிருந்தால், அப்பரமபதநாதனை ஸரஸ்வதீ பார்வதீ தேவிகளோடு கூடியவன் என்றும், கொன்றை முதலிய மலர்களை அணிந்தவன் என்றும், சூலம், கரகம் ஆகியவற்றை உடையவன் என்றும், ரிஷபத்தையும், அன்னத்தையும் வாஹனமாகக் கொண்டவன் என்றும் ஆழ்வார்கள் வர்ணித்திருக்க வேண்டுமே. அப்படி ஓரிட மாவது உங்களால் காட்டமுடியுமா? "அங்குயர் முக்கட் பிரான் பிரமபெருமானவன் நீ" [திருவாய் 7—6—4] என்று சொல்லியிருக்கிருரே எனில், அடுத்த அடியில் "வெங்கதிர் வச்சிரக்கை இந்திரன் முதலாத் தெய்வம் நீ" என்று கூறுகையால், எல்லா தெய்வமும் சேர்ந்த உருவமே பரமபதநாதன் என்று கூறுவீர்களா?

8. நம்மாழ்வார் திருவாய்மொழியின் முதல் பதிகத் திலேயே "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று பரம் பொருளைக் காட்டும் பிரமாணம் வேதமே என்கிருர். "மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே" [திருவாய் 3-1-10] முதலான பல இடங்களில் இதை வலியுறுத்துகிருர். "வேதநூல் ஓதுகின்றதுண்மை அல்ல தில்லை" [திருச்சந்த 72] என்று திருமழிசையாழ்வாரும், "வேதங்களும், அதை விளக்கவந்த இதிஹாஸ புராணங் களும் ஓதுவதே உண்மை; மற்றதெல்லாம் பொய்" என்று

http://acharya.org

அடித்துக் கூறுகிறார். கம்பனும் தன் காவியத்தைத் தொடங்கும்போதே "வேதம் என்பன ஒன்றோ மெய்ந் நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர்'' என்று தான் வேதத்தைப் பின்பற்றியவனே எனக் காட்டுகிறான். "வேதங்களறைகின்ற உலகெங்கும் விரிந்தன உன்பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ'' முதலான பலவிடங்களில் காவியம் முழுவதிலும் இதை வலியுறுத்துகிறான். ''மூவரானவர் தம்மிலும் முந்திய நாவினோர் உரையின்படி யான் தமிழ்ப்பாவினால் இது உணர்த்திய பண்பரோ'' ''வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்'' என்னும் பாடல்களில் தான் வான்மீகி ராமாயணத்தைப் பின்பற்றியவனே என்று காட்டுகிறான். இவ்வாழ்வார்களும், கம்பனும், ஶ்ருதி, ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள் ஆகியவற்றுக்கு முரணாக மும்மூர்த்திகளும் சேர்ந்த ஒருவனையே பரம்பொருளாகக்கொண்டனர் என்று உங்கள் வெளியீடு கூறுவது பெரிய மோசடியல்லவா?

9. ''ஏருருவில் மூவருமே என்ன நின்ற இமையவர்'' [திருநெடு 2] என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தை ''ஓருருவில் மூவருமே என்ன நின்ற'' என்று மாற்றி, அதைத் தம் அத்வைதக்கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டினார் செட்டியார். நமது பத்தாவது சதகம் 13—வது கேள்வியின் ஸுதர்சனர் பதிலில், இப்படித் திருத்துவது மோனைக்கு முரண் என்று நாம் காட்டியவுடன், ''அது அச்சுப்பிழை'' என்று பல்டியடித்தார். இப்போது ''ஏருருவில் மூவருமே'' என்றதையே தமக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். உண்மையில் மூன்று உருவங்களையும் கொண்ட ஒருவன் பரம்பொருளாகில் ''மூவருமே என்ன நின்ற'' என்றும், ''மூவராகிய ஒருவனை'' [பெரிய திரு 3-1-10] என்றும், 'மூவராகிய மூர்த்தியை'' [திருவாய் 3-6-2] என்றும் பன்மையாக வழங்காமல் ''மூவன்'' என்று ஒருமையாகவல்லவோ ஆழ்வார்கள் வழங்கியிருக்கவேண்டும். அப்படிப் பாடாததிலிருந்தே ஆழ்வார்கள் மும்மூர்த்திகளையும் வெவ்வேறு ஆத்மாக்களாகக்கருதினர் என்றும், ''தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனி முதலை'' [திருவாய் 8-8-4] என்று ஆழ்வார் அருளியபடியே திருமால் பரமபதநாதனின் நேர் அவதாரம்

http://acharya.org

என்றும், சிவனும், பிரமனும்— நீர், நிலன்முதலானவற்றைப் போல் நாராயணனை விட்டுப்பிரியாத உடலாயிருக்கையாலேயே "சிவனும், பிரமனும்" "நீராய் நிலனாய்...சிவனாய் அயனாய்" [ஷை 6-9-1] "அயனே அரனே" [ஷை 10-10-11] "நான்முகனே முக்கண்ணப்பா" [ஷை 10-10-1] முதலான இடங்களில் திருமாலோடு ஒரே வேற்றுமையில் படிக்கப் படுகிறார்கள் என்றும் தெளிவாக விளங்கவில்லையா?

10. "மூவனாய்" "மூவனை மூர்த்தியை" "மூவன் காண்" என்று அப்பர் ஒருமையில் பரம்பொருளைப் பாடியிருப்பதால் அவர் மும்மூர்த்திகளையும் ஒருருவில்கொண்ட பரசிவத்தையே பரம்பொருளாகக்கொண்டார் என்று செட்டியார் இசைவாரா? அவர் இசைந்தாலும் சைவ உலகம் இசையுமா? இப்படி "மூவன்" என்று அப்பர் ஒருமையிலும், "மூவராய முதல்வர்" "மூவருமாகி" என்று சம்பந்தர் பன்மையிலும் சிவனைப் பாடுவதற்கு என்ன பொருள் கொள்கிறீர்கள்? அப்பொருளைப்போலவே ஆழ்வார்கள் "மூவர்" என்று திருமாலைப் பாடுவதற்கும் என் பொருள் கொள்ளக் கூடாது?

11. முதற்பத்து மூன்றும் திருவாய்மொழியில் "உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து அரி அயன் அரன் என்னுமிவரை" என்றும், "ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னும் இவரை ஒன்றநும் மனத்துவைத்து உள்ளி" என்றும் மும்மூர்த்திகளையும் தனித்தனியாக எடுத்து அவர்களுடையஸ்வரூபஸ்வபாவங்களை சாஸ்திரங்களைக்கொண்டு நடுநிலைநின்று ஆராயவேண்டுமென்றும், "மணப்பட்டது ஒன்றே இறைஞ்சுமின்" "நும் இருபசை அறுத்து நன்றென நலம் செய்வது அவனிடை" என்னும் பகுதியால் அப்படி நடுநிலைநின்று ஆராய்ந்தால் இருவரிடம் பசை அறுந்துவிடும் என்றும், எஞ்சிய ஒரு மூர்த்தியையே வணங்க வேண்டும் என்றும் கூறி, அடுத்த பாட்டில் அப்படித் தேறும் மூர்த்தியை "திருவுடையடிகள்" என்று ஆழ்வார் தெளிவாகக் காட்டியிருக்க, இப்பாடல்கள் அனைத்துக்கும் பதவுரை கூட எழுதாமல் இவற்றால் மும்மூர்த்திகளும் ஒன்றாகச்சேர்ந்த பரந்தாமனே பரம்பொருள் எனத் தேறுவதாக உமது வெளியீடு கூறுவது எப்படிப்பொருந்தும்?

http://acharya.org

12. ''மூலமும் நடுவும்'' என்று தொடங்கும் பாடலில் ''சூலமும் திகிரி சங்கும் கரகமும் துரந்து'' என்றிருப்பதைக் கொண்டு, பரந்தாமன் மும்மூர்த்திகளின் ஆயுதங்களேயும் தரித்திருக்கிருன் என்று கற்பிக்கிறது உங்கள் வெளியீடு. அப்பாட்டிலேயே ''ஆலம், மலர், வெள்ளிப்பொருப்பு ஆகிய இடங்களேயும் விட்டு அயோத்திவந்தான் பரம்பொருள்'' என்று கூறியிருப்பதால், பரந்தாமன் பரமபதத்தில் ஆலிலே, (திருமாலின்) உந்தித்தாமரை, கயிலாயம் ஆகிய அனேத்தின் மீதும் அமர்ந்திருக்கிருன் என்று கொள்ள வேண்டி வருகிறதே. இது விலவறச் சிரிக்கத்தக்கதல்லவா?

13. ''முளரி மேல் வைகுவான்'' என்னும் பாட்டில் ''மும்மூர்த்திகளும் சேர்ந்தால் இராமனுக்கு ஒப்பாவரே யன்றித் தனித்தனியே ஒப்பாகமாட்டார்கள்'' என்று சுக்கிரீவன் கூறியதிலிருந்து மும்மூர்த்திகளும் சேர்ந்ததே பரம்பொருள் என்பது கம்பனின் கருத்து என்று உங்கள் வெளியீடு கூறுகிறது. பரமாத்மாவுக்கு உவமை கூறும் வால்மீகி முதலான ரிஷிகளும், ஆழ்வார்களும், கம்பன் முதலான கவிகளும் — பல தேவர்களேயும், பல ஜடப் பொருள்களேயும்கூட அவனுக்கு ஒவ்வொரு விஷயத்தில் உவமையாகக் கூறுகிருர்கள். உதாரணமாக வால்மீகி தம் ஸ்ரீராமாயணத்தில் ''விஷ்ணு இராமனுக்கு வீர்யகுணத் திலேயே ஒப்பாவார். நீர்மை, எளிமை முதலான பற்பல குணங்கள் விஷயத்தில் ஒப்பாக மாட்டார்'' என பாலகாண் டத்தின் தொடக்கத்திலேயே முழங்கியிருக்கிருர். இராம னுடைய குணங்களுக்கு ஓரிடத்தில் உவமை காண மாட்டாமல் பலவிடங்களில் ஒப்புத்தேடி ''பொறுமையில் பூமியை ஒப்பான். அறிவில் பிருஹஸ்பதியை ஒப்பான். வீர்யத்தில் இந்திரனே ஒப்பான்; (இல்லேயில்லே) யமனும் இந்திரனும் சேர்ந்தால்தான் அவனுக்கு ஒப்பாவார்கள்; உறுதியில் மலேயை ஒப்பான்'' என்றெல்லாம் அயோத்யா காண்டத்தின் தொடக்கத்தில் வாய்வெருவியுள்ளார். இதனுல் ''இவ்வளவு தேவர்களும், ஜடப்பொருள்களும் சேர்ந்ததொரு கூட்டாகவே பரந்தாமன் எழுந்தருளி யிருக்கிருன்'' என்பதே வால்மீகியின் கருத்து என்று கூறிவிட முடியுமா? இப்படியெல்லாம் ஞானிகள் பரமபுருஷனுக்குப் பல பல பொருள்களே உவமையாகக் கூறுவது ''உண்மையில் எப்பொருளும் அவனுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாது'' என்னும் கருத்தை உடையதேயாகும் என்பதை நம்மாழ்வார்

http://acharya.org

தாமே தாமரை, பொன் முதலான பல பொருள்களைப் பரமாத்மாவுக்குப் பலவிடங்களில் உவமையாகக் கூறிவிட்டு "கட்டுரைக்கில்" [திருவாய் 3-1-2] என்னும் பாடலில் எதுவுமே அவனுக்கு உவமையாகாது என்று கூறுவதன் மூலம் விளக்குகிறார். தெளிவான இந்த விளக்கத்தை, ஸுதர்சனர் பதிலில் (10-21) நாம் காட்டிய பின்பும் உங்கள் வெளியீடு ஏன் அதற்கு பதில் அளிக்கவில்லை?

14. "திருமாலும் இராமனுக்கு ஒப்பாக மாட்டான் என்று பல பாடல்களில் கம்பன் கூறியதிலிருந்து மும்மூர்த்திகளிலும் மேம்பட்ட பரந்தாமனின் அவதாரமே இராமன் என விளங்குகிறது" என்று கூறுகிறது உங்கள் வெளியீடு. "ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந:" [யஜுர்வேதம் அஷ்டகம் 3-6-8-9] [அப்பரமபுருஷன் பிறந்தபின்பே பெருமை பெறுகிறான்] என்று வடமொழி வேதத்திலும், "பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்" [திருவாய் 1-3-2] என்று தமிழ் வேதமான திருவாய் மொழியிலும் கூறியிருப்பதை அடியொற்றி அவதார மூர்த்திக்குள்ள குணச்சிறப்பை யொட்டி மூலமூர்த்தியும் இவனுக்கு ஒப்பாகமாட்டான் என்று கொள்ளும் எளிய வழியிருக்கும்போது எதற்காக மூர்த்தி பேதத்தைக் கற்பிக்கவேண்டும்?

15. கல்விக்கடல் திரு கோபாலய்யர் அவர்கள் தமது மதிப்பீட்டில், உங்கள் வெளியீட்டில் பல முரண்பாடுகளைக் காட்டி, "மூலம் வந்து உதவிய மூவர்க்கு" "சீலமும் தருமமும்" "புறத்து நாம் ஒரு பொருள்" "முளரிமேல் வைகுவான்" "சிவனோ அல்லன்" "மூலமும் நடுவும்" "மூன்று கவடாய்" முதலான பாடல்களுக்கு மற்ற பல பாடல்களோடு முரண்படாதபடி பொருள்காட்டியிருக்கிறார். அப்படியிருக்க இவற்றைக்கொண்டு, எங்கும் காணப்படாத மும்மூர்த்தியும் சேர்ந்த பரந்தாமனை உங்கள் வெளியீடு கற்பிப்பது அடாத செயலல்லவா?

16. முதலாழ்வார் பாசுரங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டு அவற்றிலிருந்து மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட

http://acharya.org

தொரு பரம்பொருளை ஆழ்வார்கள் கருதினார்கள் என்று கூறுகிறது உங்கள் வெளியீடு. "முதலாவார் மூவரே" முதலான அவர்களது பல பாடல்களுக்கு முரணாயிருப்பதால் அப்பொருள் பொருந்தாது எனக்காட்டி, அப்பாடல்களுக்கு உண்மைப் பொருளை எனது முதல் மூன்று திருவந்தாதிகளின் உரையில் நிரூபித்திருக்கிறேன். இதை உங்களால் மறுக்க முடியுமா? "சங்க காலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்" என்ற எனது நூலிலும் கம்பன் நாலாவதொன்றைப் பரம் பொருளாகக் கருதியவனல்லன் என்பதைப் பல கம்பராமா யணப் பாடல்களைக் கொண்டு நிலைநாட்டியுள்ளேன். இதை உங்களால் மறுக்க முடியுமா?

17. ஆழ்வார்களும், கம்பனும் மும்மூர்த்திகளுக்கு மேற்பட்ட நாலாவது மூர்த்தியைப் பரம்பொருளாகக் கூறி யிருந்தால், அப்பரம்பொருளுக்குத் தமிழ்நாட்டில் கோயில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டுமே. அப்படியில்லாததி லிருந்தே இது முரு. பழ. இரத்தினம் செட்டியாரின் கற்பனைக்கோட்டையே என விளங்கவில்லையா?

18. ஒரு சைவர் தமக்குள்ள வைணவ வெறுப்பாலே, வைணவர்கள் வேதமாகக் கொண்டாடும் திவ்ய ப்ரபந்தங் களுக்குத் தாறுமாறுகப் பொருள்கூறும் நூலை வெளியிட் டிருக்கிறீர்கள். இப்படி ஒரு சைவரல்லாதவர் மனம் போனபடி தேவாரதிருவாசகங்களுக்குப் பொருளுரைக்கும் நூலையோ, ஒரு கிறிஸ்தவரல்லாதவர் மனம்போனபடி பைபிளுக்குப் பொருளுரைக்கும் நூலையோ, ஒரு முஸ்லி மல்லாதவர் மனம்போனபடி குரானுக்குப் பொருளுரைக்கும் நூலையோ வெளியிட முன்வருவீர்களா?

முடிவுரை.

சென்னை கம்பன் கழகத்திலுள்ள எவருக்காவது மனச் சான்று என்று ஒன்று இருந்தால் இப்பதினெட்டு கேள்வி களுக்கும் பதில் எழுதி வெளியிடட்டும். அப்படிச் செய்யாமல் இக்கேள்விகளைக் கண்டுகொள்ளாததுபோல் மௌன மாயிருந்தால், அவர்களது வெளியீடு நடுநிலையாளர்களால் குப்பையென மதிக்கப்பெற்றுக் காற்கடைக்கொள்ளப்படும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-44] [ஒளி 11

வேதஆகமக் கல்லூரியும் அர்ச்சகர்களும்

[ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகேட், "ஸுதர்சனம்' ஆசிரியர் 3B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.]

நமது தமிழக அரசு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்றைத் தொடங்கப் போவதாகவும், அதில் ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகித இட ஒதுக்கீடு செய்யப் போவதாகவும், "இக்கல்லூரியில் பயிற்சி பெறுபவர்கள் தான் அர்ச்சகர்கள் ஆக முடியும்" என்று விதி ஏற்படுத்தப் போவதாகவும், இது ஆதிதிராவிடர்கள் கோயில் அர்ச்சகர்கள் ஆக வழிவகுக்கும் என்றும் நம் மாநில முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார். இது பற்றிய நமது கருத்துக்களை இத்தலையங்கத்தின் வாயிலாகத் தெரிவிக்கின்றோம்.

நமது வேத ஆகம சாஸ்திரங்கள் பல வகைப்பட்டவை. நம் சமயத்திற்கு மூலப்பிரமாணமான ரிக் யஜுஸ் ஸாம அதர்வண வேதங்கள் வடமொழியில் அமைந்தவை. ஒவ்வொரு வேதத்திற்கும் பல சாகைகள் (கிளைகள்) உண்டு. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஸ்வரங்கள் உண்டு. ஸ்வரத்துடன் ஒரு வேதத்தின் ஒரு சாகையை ஓதுவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு மேல் ஆகும். உபநயனம் செய்விக்கப்பட்ட அந்தணர்களுக்கே இந்த வேதங்களை ஓதுவிப்பதற்கும், ஓதுவதற்கும் தகுதி உண்டு என்று அந்த வேதங்களே விதிக்கின்றன. வேதங்களை விளக்கவந்த ஆகமங்களும், தர்ம சாஸ்திரங்களும், இதிஹாஸ புராணங்களும் இதை உறுதிப் படுத்துகின்றன

http://acharya.org

நமது சங்கநூல்களும் வேதங்களை ஓதுவிப்பதையும், ஓதுவதையும் அந்தணர்களே செய்து வந்தார்கள் என்று முழங்குகின்றன. "அந்தணர் அருமறை" என்று பரி பாடலில் பல இடங்களில் வருவதைக் காணலாம். ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்திலும், இன்றளவும் உள்ள பிற்காலத்திலும் அந்தணர்களே உபநயனம் செய்யப்பெற்ற அந்தணர்களுக்கு வேதத்தை ஓதுவித்து வருகிறார்கள் என்பது இலக்கியங்களாலும், பிரத்யக்ஷத் தாலும் காணக்கிடக்கின்றது. திருமால் கோயில்களுக்கு இவ்வேதங்களோடு பாஞ்சராத்ரம், வைகானஸம் என்னும் இரு ஆகமங்களும் அடிப்படையாக உள்ளன. பாஞ்சராத் ரத்தில் சுமார் நூறுஸம்ஹிதைகள் உள்ளன. வைகானஸத் திலும் பல ஸம்ஹிதைகள் உள்ளன. இவ்விருவகைப் பட்ட ஆகமங்களும் வடமொழியிலேயே அமைந்துள்ளன. இவற்றில் புருஷஸூக்தம் முதலான வேதமந்திரங்களைக் கொண்டே திருமாலுக்குத் திருவாராதனம் செய்யவேண்டும் என்றும், வேதங்களை ஓதி ஓதுவிக்கும் தகுதி உடைய அந்தணர்களே அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் என்றும் விதிக்கப்படுகின்றது. இத்திருமால் கோயில்களில் மிருகங்களை பலியிடுவதை ஆகமங்கள் அனுமதிப்பதில்லை.

சங்ககாலத்தில் முருகனுக்கும், காளிக்கும் கோயில்கள் இருந்ததென்றும், அவற்றில் மிருக பலியும் அனுமதிக்கப் பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில காளி கோயில்களில் நரபலியும் இருந்தது என்று வரலாறு கூறுகிறது. சங்ககாலத்திற்குப் பிற்காலத்தில் சைவ ஆகமங்களும், சாக்த ஆகமங்களும் தோன்றி சிவன் கோயில்களும், காளி கோயில்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விதித்தன. சைவாகமத்தில் காபாலிகம், காளாமுகம் முதலிய பல பிரிவுகளில் மிருக பலியும், நரபலியும் அந்தந்தக் கோயில்களில் நடைபெற வழி வகுத்துள்ளன. நம்மாழ்வாரும் திருமால் கோயில் தவிர்ந்த மற்ற கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் உண்டு என்பதை "கொல்வன முதலா அல்லன முயலும் இனைய செய்கை" [திருவாசிரியம்—6] "கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்" [திருவாய்மொழி 4-6-3] "அங்கோராடும் கள்ளும் பராய்" [திருவாய்மொழி 4-6-7] என்னும் பாசுரங்களில் தெரிவித்துள்ளார். பிற்காலத்தில் சிவன் கோயில்களில் அருவருக்கத்தக்க உயிர்ப்பலிகள் நிறுத்தப்பட்ட போதிலும், காளி கோயில்களில் அவை

http://acharya.org

இன்றளவும் தொடர்வதைக் காண்கிறோம். பழங்காலத்தில் வேதத்திற்குப் புறம்பான கொள்கைகளைக் கொண்டிருந்த சைவ மதம் பிற்காலத்தில் வேதத்தையும் பிரமாணமாக ஏற்றுக்கொண்டது. அதனால் சிவன் கோயில்களிலும் வேத மோதிய அந்தணர்கள் குருக்கள்களாக வரும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால் இன்றும் பல முருகன் பிள்ளையார் காளி கோயில்களில் வேதமந்திரங்களைக் கொண்டு பூஜை செய்யும் பழக்கம் இல்லை என்பதையும், அவற்றில் அந்தணர் அல்லாதாரே பூஜாரிகளாக இருப்பதையும் காண்கிறோம்.

இந்நிலையில் திருமால் கோயில்களிலும், சிவன் கோயில்களிலும் உபநயனம் செய்விக்கப்பட்ட அந்தணர்களே வேதமந்திரங்களைக் கொண்டு பூஜை செய்யும் அர்ச்சகர்களாக இருப்பதை மாற்றுவதற்கு நமது அரசியல் சட்டத்தின் படி அரசுக்கு அதிகாரம் கிடையாது. Dr அம்பேத்கார் போன்ற அரிஜனத்தலைவரும் சேர்ந்தகுழுவினரால் அமைக்கப்பட்ட அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள மதசுதந்திரமாகிற அடிப்படை உரிமைக்கு இது முரணானதாகும். ஆகையால் கோயில் களில் இட ஒதுக்கீடு என்பதைத் திருமால் கோயில்களிலும் சிவன் கோயில்களிலும் செய்வதற்கு அரசுக்கு உரிமை கிடையாது. ஏற்கனவே அந்தணர் அல்லாதார் பூஜை செய்யும் கோயில்களில் வேண்டுமானால் இட ஒதுக்கீடு செய்து கொள்ளட்டும்.

வேத ஆகமக்கல்லூரியில் இட ஒதுக்கீடு பற்றி ஆராய்வோம். வேதம் ஓதுவதற்கு அனாதிகாலமாகத் தகுதி பெற்றிருக்கும் அந்தணர்களுக்கு வேதம் ஓதுவிப்பதற்கான பாடசாலைகள் நம் நாடு சுதந்திரம் அடையும் வரை ஏராளமாக இருந்தன. பிறகு அந்தணர்கள் வேதம் ஓதும் தொழிலை விட்டு வேறு வேலைகள் தேடி ஓடிப்போன காரணத்தால் பல பாடசாலைகள் நிறுத்தப்பட்டு விட்டன. சுதந்திரத்திற்குப் பின் வந்த அரசுகளால் தமிழ் நாட்டில் வடமொழி பள்ளிப்பாடத் திட்டத்திலிருந்து அடியோடு நீக்கப்பட்டு விட்டது. அதனால் வடமொழி அறிந்த அந்தணர்கள் மிகவும் குறைந்து விட்டனர். வேதத்தை ஸ்வரத்தோடு ஓதுகின்றவர்களும் மிகவும் குறைந்து விட்டனர். சிவவிஷ்ணு கோயில்களில் அர்ச்சகர்களாக இருக்கும் அந்தணர்கள் மட்டும் ஓரளவுக்கு வேதமந்திரங்களைக் கற்றுப் பூஜைசெய்து வருகின்றனர். இந்நிலையில் வேதம் ஓதும் பழக்கமே இல்லாத ஆதிதிரா

http://acharya.org

விடர்களுக்கு வேதாகமக் கல்லூரியில் இட ஒதுக்கீடு செய்வதால் என்னபயன் விளையும்? அவர்களுக்கு யார் உபநயனம் செய்வது? அவர்களால் ஸ்வரத்துடன் வேதத்தை ஓதமுடியுமா? உபநயனம் செய்விக்கப் பெறாதவர்கள் வேதத்தை ஓதுவதாலும் ஸ்வரம் தப்பிவேதத்தை ஓதுவதாலும் நம்நாட்டுக்குப் பல தீங்குகள் விளையுமென்று வேத சாஸ்திரங்கள் முழங்குகின்றன. வேதசாஸ்திரங்களை மொழி பெயர்த்து ஆலயங்களில் பயன் படுத்துவதும் அவற்றின் அடிப்படைக்கு முரணாகும். இத்தகைய அநீதியான செயலை அரசு செய்வது நியாயமாகுமா? கோயில்களை அழிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் நாத்திகர்களான திராவிடக்கழகத்தினரால் தூண்டப்பட்டு அரசு இதைச்செய்வது அடாதசெயல் அல்லவா?

கேரள மாநிலத்தில் இத்தகைய முயற்சி ஒன்று செய்யப்பட்டது. அந்தணர்கள் அல்லாதவர்கள் கோயில்பூஜை முறைகளில் பயிற்சிகொடுக்கப்பட்டனர். சில கோயில் களில் அர்ச்சகராகவும் நியமிக்கப்பட்டனர் இதன் விளைவாக அந்தக்கோயில்களுக்கு பக்த ஜனங்கள் சேவிக்க வருவது அடியோடு நின்றுவிட்டது. நியமிக்கப்பட்ட அர்ச்சகர்கள் கோயில் சாவியை அதிகாரிகளிடம் கொடுத்து விட்டுப் போய்விட்டார்கள். இந்த நிலை தமிழ் நாட்டுக்கும் வரவேண்டுமா? மதச்சார்பற்ற அரசு மதசம்பந்தமுள்ள கோயிலில் நடைமுறைகளில் குறுக்கிடுவது மிகவும் முறை யற்றதாகும். இதை உணர்ந்து நமது முதல்வர் பயனற்றதும், பலதீங்குகளை விளைக்கக் கூடியதுமான இச் செயலில் நாத்திகர்களைத் திருப்தி படுத்துவதற்காக ஈடுபடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

''எவரை வேண்டுமானாலும் சிவ, விஷ்ணு கோயில் களில் அர்ச்சகர்களாக நியமிக்கலாம்'' என்ற அரசின் கொள்கையைப் பொது ஜனங்கள் ஏற்கிறார்களா என்று பொதுஜன வாக்கெடுப்பு (Referendum) எடுத்தால் பெரும் பாலான மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீ ரங்கநாதபாதுகா, ராமானுஜ வாணி, கீதாசார்யன், யதிராஜபாதுகா, மற்றும்சைவசமயப் பத்திரிகைகள் இதுபற்றி அரசுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-45] [ஒளி-3

மஹாமக விபத்து

சமீபத்தில் (18—2—92) அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற மஹாமக (மாமாங்க) விழாவில் சுமார் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள் கூட்டப்பட்டு, அதனால் ஏற்பட்ட நெருக்கடியினால் விளைந்த விபத்தில் சுமார் 50 பேர் மரணமடைந்ததும், நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்ததும், நூற்றுக்கணக்கான குழந்தைகள் காணாமற் போனதும், லக்ஷக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள் பறி கொடுக்கப்பட்டதும் அனைவரும் மிகவும் வருந்தத் தக்கவையாகும். மத்திய, மாநில அரசுகள் விபத்தில் மரணமடைந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் ஈட்டுத்தொகை கொடுத்திருப்பது ஆறுதலளிக்கிறது. ஒரு குளத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் குளித்தால் எல்லாப் பாவங்களும் போய் மோக்ஷம் கிட்டி விடும் என்று நாடு முழுவதும் பெருமளவில் விளம்பரப் படுத்தப்பட்டதால் இந்த துரதிருஷ்ட சம்பவம் நேர்ந்திருக்கிறது. மதத்துறைப் பத்திரிகை என்னும் முறையில் இந்தப் பிரசாரத்திற்கு சாஸ்திர ரீதியான ஆதாரம் உண்டா என்று இத்தலையங்கத்தில் ஆராய வேண்டியது அவசியமாகிறது.

நம்முடைய நாட்டில் 'இந்து' மதம் என்ற தொகுப்பில் அடங்கிய மதங்கள் அனைத்துமே வேதத்தைப் பிரமாண மாகக் கொண்டவை; அந்த வேதத்தின் பொருளை விளக்கு

http://acharya.org

வதற்கு இதிஹாஸ புராணங்களையும் சங்கரர், ராமாநுஜர், மத்வர் முதலான மதாசார்யர்கள் துணை கொண்டனர். இவர்களில் யாரும் ஸ்தல புராணங்களை ஆதாரமாகக் காட்டியதில்லை. இதிலிருந்தே இந்த மதாசார்யர்களின் காலத்திற்குப் பிறகே இந்த ஸ்தல புராணங்கள் கல்பிக்கப் பட்டவை என்று விளங்குகிறது. இந்த மதாசார்யர்களில் எவரும் தம்முடைய பாஷ்யங்களிலும் மற்ற க்ரந்தங்களிலும் கங்கை முதலான புண்ய நதிகளிலோ அல்லது வேறு புண்ய தீர்த்தங்களிலோ முழுகுவதால் எல்லாப் பாபங்களும் தொலையும் என்றோ, மோக்ஷம் கிடைக்கும் என்றோ கூற வில்லை. நேர்மாருக "ஜ்ஞாநாத் மோக்ஷ:" [ஞாநத்தாலேயே மோக்ஷமடையலாம்] என்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். அந்த ஜ்ஞாநம் எத்தகையது என்பதில் இவர்களிடையே கருத்து வேற்றுமை இருந்த போதிலும், அனைவருமே ஆத்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தாலேயே மோக்ஷத்தை அடையலாம் என்று ஒப்புக்கொண்டிருக் கிருர்களே யொழிய நீராடுவது முதலான சடங்குகளால் மோக்ஷம் என்று எவரும் சொல்லவில்லை. மதாசார்யர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதும், "மனுசொன்ன தெல்லாம் மருந்தாகும்" என்று வேதத்தாலும் புகழப் பட்டதுமான மநுஸ்ம்ருதியில்,

"யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி₃ ஸ்தி₂த:
தேந சேத் அவிவாத₃ஸ்தே மா க₃ங்கா₃ம் மா குரூந்க₃ம ||"
[மநு 8-92]

[அனைவரையும் நியமிப்பவனுய், ஸூர்யமண்ட₃லத்தில் இருப்பவனுய், பேரழகுடையவனுய், ஹ்ருத₃யத்தில் எழுந் தருளியிருக்கும் பரமாத்மாவோடு உனக்கு விவாதம் இல்லை யாகில் நீ கங்கை முதலான புண்யநதிகளிலும் நீராட வேண்டாம், குருக்ஷேத்ரம் முதலான புண்யக்ஷேத்ரங் களுக்கும் செல்ல வேண்டாம்.] என்று முழங்கப்பட்ட திலிருந்து பரமாத்ம ஜ்ஞாநமும், பரமாத்ம பாரதந்த்ரியமும் இல்லாதவர்களுக்கே புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநமும்

http://acharya.org

புண்யக்ஷேத்ராடனமும் அந்த ஜ்ஞாந பாரதந்த்ரியங்களைக் காலக்ரமத்தில் விளைப்பதற்காக விதிக்கப்பட்டிருக்கின்றன என்று விளங்கும். ஜ்ஞாநிகள் கங்கை காவிரி முதலான புண்யதீர்த்தங்களில் நீராடுவது, இவை பரமாத்மாவின் ஸம்பந்தம் பெற்றவையாகையாலே ஸ்வயம் ப்ரயோ ஜனமாய் இருப்பவை என்னும் கருத்தாலேயே ஒழிய "இவற்றில் நீராடுவதால் பாபம் தொலையும், மோக்ஷம் கிடைக்கும்" என்னும் கருத்தால் அல்ல.

ஶாஸ்த்ரநிலை இப்படியிருக்கும்போது, அறிவுக்குப் பொருந்தாத ஒரு ஸ்தலபுராணக்கதையை மடாதிபதிகளும் பத்திரிகைகளும் தொலைக்காட்சி, வானொலி முதலானவை யும் மாதக்கணக்காக நாடுமுழுவதும் பிரசாரம் செய்து லக்ஷக்கணக்கான பாமர மக்களை ஒருநாளில் ஒரு குறிப் பிட்ட நேரத்தில் ஒருகுளத்தில் குளிப்பதற்காகக் கூட்டியது மிகவும் தவறான செயலாகும். 'எல்லாப் பொருள்களும் அழிந்து கிடந்தன' என்று வேத ஶாஸ்த்ரங்களில் வர்ணிக்கப்படும் பிரளயகாலத்தில் ஒரு அமுதக்குடம் உடைக்கப்பட்டதாகவும் அது கும்ப கோணத்தில் இரண்டு குளங்களில் தேங்கியதாகவும் கூறுவது அறிவிற்குப் பொருந்துமா? பூலோகமே அழிந்து கிடந்த போது அதிலுள்ள கும்பகோணம் எப்படித்தனியாக இருக்க முடியும்? பெரிய மடாதிபதி களும் பொது ஜனப்பத்திரிகைகளும் தொலைக் காட்சி யும் வானொலியும் இந்த அபத்தக் கதையைப் பிரசாரம் செய்து ஒன்றுமறியாத பாமரமக்களை லக்ஷக்கணக்கில் இங்கு கூடும்படிசெய்து இந்த விபத்து ஏற்படுவதற்குக் காரணமாகிவிட்டார்கள். பாமரமக்கள் நிறைந்த பத்திரிகை களும் வானொலி, தொலைக்காட்சியும் இவ்வாறு பிரசாரம் செய்தாலும், மதத்தலைவர்களாகச் சொல்லிக் கொள்ளும் மடாதிபதிகள் பலர் இதில் கலந்து கொண்டது நமக்கு வியப்பை அளிக்கிறது. இந்த விபத்திற்கு யார் பொறுப்பு என்னும் சர்ச்சை எழுந்துள்ளது. ஒரு சிறிய நகரத்தில் சில ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குளத்தில்,

http://acharya.org

குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் நீராடினால் பாவம் தொலையும், மோக்ஷம் கிட்டும் என்று பிரசாரம் செய்து ஜனங்களைக் கூட்டி, தாங்களும் அதில் நேரடியாகக் கலந்து கொண்ட மடாதிபதிகளும், மதத்தலைவர்களுமே இதற்கு தார்மிகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது தெளிவு. இதை உணர்ந்து இனி வரும் இத்தகைய விழாக்களிலாவது இவர்கள் இம்மாதிரியான செயலைச்செய்யாமலிருப்பார்கள் என்றும், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி முதலானவை இத்தகைய தேவையில்லாத பிரசாரங்களை மேற்கொள்ள மாட்டார்களென்றும் நம்புகிறோம்.

திருமலை ஒலி நாடாக்கள்

திருமலை திருப்பதி தேவஸ்தான ஆழ்வார் திவ்ய ப்ரபந்தச் செயல் திட்டம் மூலமாக ஒன்பது ஆழ்வார்களும் ஆண்டாளும் திருவேங்கடவன் விஷயமாக அருளிய 206 பாசுரங்கள், திருமலை அனந்தாண் பிள்ளை திருவம்சத்தவரும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாகத் திருமலை திருப்பதியில் அருளிச்செயல் கைங்கர்யம் செய்து வருபவருமான ஸ்ரீமான் உபயவேதாந்த வித்வான் சிரோமணி தி. அ. கோபாலாசார்ய ஸ்வாமி வாயிலாக நான்கு ஒலிநாடாக்களில் (audio Casettes) (C-45-1; C-60-3) பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் திருமலையில் காலைமாலை தோமாலை சேவைகளில் நடைபெறும் ஏழு ஆழ்வார்கள் மற்றும் ஆண்டாள் அருளிய பாசுரங்களும் அந்த ஸ்வாமி மூலம் ஆறு ஒலிநாடாக்களில் (C-45-2; C-60-4) பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை 1992 ஜனவரி 29-ம் தேதி அன்று தொடங்கிய தேசீய வேத சாஸ்த்ர ஆகமக் கருத்தரங்கு விழாவில் திருமலை பெரியகோயில் கேள்வி அப்பன் கோவிந்த ராமாநுஜ பெரிய ஜீயர் ஸ்வாமி வெளியிட இந்தியத்துணை ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டார்.

நான்கு ஒலிநாடாக்கள் அடங்கிய திருவேங்கடவன் ஆழ்வார் பாசுரங்கள் ஒரு செட்	Rs. 80/-
ஆறு ஒலிநாடாக்கள் அடங்கிய திருமலையில்- நித்யாநுஸந்தானம் ஒரு செட்	Rs. 120/

கிடைக்குமிடம்:- The Editor, Sales wing Dept T. T. D. Tirupati 517501.

http://acharya.org

கம்பனின் கடவுட்கொள்கை

[புதுக்கோட்டை கம்பன் கழக (1992) மணிமலரில் வெளிவந்த கட்டுரை.]

ஸுதர்சனர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருச்சி

கம்பராமாயணத்தை நடுநிலை நின்று ஆராய்ந்து பார்த்தால், கம்பன் "பரம பதத்தில் ஸ்ரீ பூமிதேவிகளுடன் எழுந்தருளியிருக்கும் நாராயணனுகிற பரம்பொருளே இராமனுக அவதரித்தான். மற்ற தெய்வங்கள் அனைவரும் அந்த நாராயணனுகிற திருமாலாலே படைப்புக் காலத்தில் படைக்கப்பெற்று, பிரளய காலத்தில் அழிக்கப்பெற்று, இடைக்காலத்தில் காப்பாற்றப்படும் ஜீவர்களே" என்று கூறும் வைஷ்ணவ மதத்தையே உறுதியாகப் பின்பற்றினவன் என்று விளங்கும். 'மும்மூர்த்திகளும் சமமானவரே, ஒன்றுனவரே, மும்மூர்த்திகளுக்கும் மேலானதொன்று பரம்பொருள்" என்னும் வாதங்கள் கம்பனுல் ஆதரிக்கப்படவில்லை என்றும் விளங்கும். சில முக்கியமான கம்பராமாயணப் பாடல்களைக் காட்டி இக்கட்டுரையில் இவ்விஷயத்தை விளக்குவோம்.

பால காண்டத்தின் தொடக்கத்தில் மூன்று கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன. முதல் பாடலில் "உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் தேவனே முழு முதல்வன். அவன் ஒருவனையே தஞ்சமாகப் பற்றியவர்கள் நாங்கள்" என்று கூறிவிட்டு. இரண்டாவது பாடலில் "எண்ணிய மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர்" என்று ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில் முறையே மற்ற இரண்டு குணங்களையுடைய பிரமனையும் சிவனையுங்காட்டிலும் முதல் குணமான ஸத்வகுணத்தையுடைய திருமாலே முதல்வன் என்று அறுதியிட்டு,

" ஆதியந்தம் அரி என யாவையும்
ஓதினுர் அலகில்லன உள்ளன
வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையன்
பாதமல்லது பற்றிலர் பற்றிலார் "

(முதலிலும் முடிவிலும் 'ஹரி: ஓம்" என்று ஓதும் அளவற்ற வேதங்களை ஓதிய பற்றற்றவர்கள் உண்மை நெறியாகவும் அடையத்தக்கவனுகவுமுள்ள அந்த ஹரியின் பாதங்களைத் தவிர வேறு எதையும் பற்ற மாட்டார்கள்) என்று இந்த

http://acharya.org

முழுமுதல்வன் ஹரியே என்று நிலைநாட்டுகிறான். வேதங்களைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் வைதிகர்கள் 'ஹரி: ஓம்'' என்று ஓதுகிறார்களேயொழிய "ஹர: ஓம்'' என்று ஓதுவதில்லை. முதல் பாடலில் 'அன்னவர்க்கே' என்னும் ஏகாரத்தாலும், மூன்றாம் பாடலில் "முற்குணத்தவரே முதலோர்'' என்னும் ஏகாரத்தாலும், இரண்டாம் பாடலில் "பாதமல்லது பற்றிலர்'' என்னும் எதிர்மறையாலும் "திருமால் ஒருவனைத் தவிர மற்ற இரு மூர்த்திகளையும் ஞானிகள் பற்றமாட்டார்கள் தானும் பற்றவில்லை'' எனக் கம்பன் தெளிவாகக் காட்டுகிறான். இதிலிருந்தே கம்பன் மும்மூர்த்திகளையும் ஒன்று என்றோ, ஒத்தவர் என்றோ, மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட ஒன்று பரம்பொருள் என்றோ கருதியவனல்லன் என்று தெளிவாக விளங்கும்.

திருவவதாரப் படலத்தில் "படுபொருள் உணர்ந்த அப், பரமன் யாம் இனி அடுகிலம் என மறுத்து அவரோடேகினான்'' [7] என்று சிவன் 'தன்னால் இராவணாதியரை அழிக்க இயலாது' என்று தேவர்களைப் பிரமனிடம் கூட்டிச் சென்றதாகவும், "நான்முகக்கடவுளை அடிதொழுது அமரர் கண்டகர் இடிநிகர் வினையமது இயம்பினரோ'' என்று[9] நான்முகனைச் சிவன் அடிவணங்கி முறையிட்டதாகவும் கூறுகையால், "நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்'' [நான்முகன் திருவந்தாதி 1] என்னும் வைணவ சித்தாந்தக் கொள்கையையே கம்பன் பின்பற்றியவன் என்று தேறுகிறது. "எழுந்தனர் கறைமிடற்றிறையும், தாமரைச் செழுந்தவிசுகந்த அத்தேவும் சென்றெதிர் விழுந்தனர் அடிமிசை விண்ணுளோரொடும் தொழுந்தொறும் தொழுந்தொறும் களிதுளங்குவார்'' (14) என்னும் பாடலில் திருமால் கருடன் மேல் எழுந்தருளியதும் சிவனும் பிரமனும் மற்ற தேவர்களும் திருமாலைப் பலகால் அடியினில் வீழ்ந்து தொழுதனர் என்றும், அடுத்த பாடலில் "சூடினர் முறை முறை துளவத்தாள் மலர்''(15) என்று "திருமாலின் திருவடிகளில் உள்ள துளவமாலையை அவர்கள் தலையில் சூடினர்'' என்றும் சொல்லுவதும் இதையே வலியுறுத்துகிறது. கம்பன் "பரகதி உணர்ந்தவர்க்குஉதவுபண்ணவன்'' (12)

http://acharya.org

"அருள் தரு கமலக்கண்ணன்" (29) என்று திருமாலை மோட்சம் அளிப்பவனாகவும், "பொருள் தரும் இருவர்" (29) என்று பிரமனையும் சிவனையும் அர்த்த புருஷார்த்தத்தையே அளிக்க வல்லவரா கவும் பாடியிருப்பதும் "முப்பரம்பொருளிற்குள் முதல்வன்" (137) என்று இப்படலத்திலும், சூடிமணிப் படலத்திலும் (69) பறைசாற்றியிருப்பதும் இதை மேலும் உறுதிப்படுத்துகிறது. பாலகாண்டத்தில் இவ்வாறு பல பாடல்கள் உள்ளன.

அடுத்து அயோத்தியா காண்டத்தில் சில பாடல்களைக் காண்போம். மந்திரப்படலத்தில் கோசலை அரங்கநாதனை அடைந்து 'இராமனுக்கு அருளவேண்டும்' என்று பிரார்த்தித் ததைக் கூறும்போது "மேவிமென் மலராள் நிலமாதெனும் தேவிமாரொடும் தேவர்கள் யாவர்க்கும் ஆவியும் அறிவும் முதலாயவன்" (93) என்று 'பிரமன் சிவன் முதலான எல்லாத் தேவர்களுக்கும் ஸ்ரீ பூமிநாயகனான அத்திருமாலே உயிராகவும் அறிவு கொடுத்தவனாகவும் இருப்பவன்' என்று பாடியது திரு மாலின் பரத்துவத்தைத் தெளிவாகக்காட்டுகிறது. அடுத்த பாடலில் "உலகு யாவையும் மண் வயிற்றில் அடக்கிய மாய னைத் தன் வயிற்றில் அடக்கும் தவத்தினள்" (94) என்று கோசலையைக் கூறும்போது திருமால் பிரளய காலத்தில் உல கனைத்தையும் தன் வயிற்றில் அடக்கினவன் என்று குறிப் பிட்டது இதை வலியுறுத்துகிறது. கங்கைப் படலத்தில் "பங்கயத்தவன் பண்டு தன் பாதத்தின் அங்கையில் தரு கங்கையில் ஆடினான்" (16) என்னும் பாடலில் 'பிரமன் திரி விக்ரமனான திருமாலின் திருவடிகளை விளக்கிய நீரே கங்கை நதியானது' என்னும் வரலாற்றை உணர்த்தி, அடுத்துள்ள தோர் பாடலில் "கங்கைவார் சடைக்கற்றையன்" (18) என்று அந்தகங்கையையே சிவன் தன் தலையில் தரித்துநிற்கிறான் என்று கூறியதிலிருந்து 'திருமாலின் திருவடியை விளக்கிய பிரமனை யும், அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தலையிலே தரித்த சிவனை யும் கம்பன் பரம்பொருளாகக் கருதியிருக்க முடியாது. திரு மால் ஒருவனையே பரம்பொருளாக அறுதியிட்டிருக்க முடியும்" என்று தெளிவாகத் தேறுகிறது. பள்ளியடைப்படலத்தில் பரதன் சபதத்தில், ராமனுக்குத் தான் தீங்கிழைத்திருந்தால் "தழைத்த தண் துளவினோன் தலைவன் அல்லன் என்று

அழைத்தவன்'' (99) அடையும் தீக்கதிக்குச் செல்வதாக சபதம் செய்ததாகப் பாடுவதிலிருந்து கம்பன் பரமனைவிஷ்ணுவன் என்றும், 'அரியதிகன்' என்று உரைப்போர் அறிவிலோர்; அவர்களுக்குப் பரகதி சென்றடைய முடியாது'' என்று கிஷ்கிந்தா காண்டத்தில் "அரனதிகன்'' என்ற பாடலில் கருதியிருக்க முடியாது என்றும் நடுநிலையாளருக்கு நன்கு விளங்கும். இதனை மேலே விளக்குவோம். கிளைகண்டு நீங்கு படலத்தில் "புண்டரீகத் தனி முதற்கும் போக்கரு விண்டுவின் உலகிடை விளங்கினனரோ'' (11) என்று உந்தித்தாமரையில் பிறந்த முதல்வனான பிரமனுக்கும் விஷ்ணுலோகம் அடைதற்கரியது என்று பாடியிருப்பதிலிருந்து 'மும்மூர்த்திகளும் சேர்ந்த பரமனே பரமபதத்தில் பரம்பொருளாக விளங்குகிறான் எனக் கம்பன் கருதியிருக்கவே முடியாது' என்று விளங்குகிறது.

ஆரணிய காண்டத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலில் பின்னிரண்டு அடிகளிலும் "வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கறிவரோ'' என்று "விரிஞ்சன் எனப்படும் பிரமன் ... லான அனைவரும் அறியமாட்டாத ஆதிதேவன்'' ... பிரமனையும் படைத்த திருமாலைக் குறிக்கையாலே, மும்மூர்த்திகளும் ஒன்று என்றோ, ஒத்தவர் என்றோ, அல்லது மும்மூர்த்திகளும் சேர்ந்த கலவையான ஒரு தத்துவம் பரம்பொருள் என்றோ கம்பன் கருதியிருக்க இடமேயில்லை என்று விளங்குகிறது. முதல் படலமான விராதன் வதைப்படலத்தில் விராதன் துதியில் 'திருமாலே பரம் பொருள்' என்பதைக் கம்பன் பல பாடல்களில் காட்டுகிறான்; அவற்றுள் ஒரு முக்கியமான பாடல்: "மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள், உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறையுண்டோ, வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாருமுளரையா'' [59] என்பது; "பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே, கபால நன்மோக்கத்துக் கண்டு கொண்மின்'' [திருவாய்மொழி 4-10-4] என்னும் நம்மாழ்வார் திருவாக்கை அடியொற்றி "சிவனுக்கும் பிச்சை அளித்து ரக்ஷித்த திருமாலே பரம்பொருள்'' என்று கம்பன் இப்பாட்டில் நிலைநாட்டுகிறான்.

http://acharya.org

சரபங்கர் பிறப்பு நீங்கிய படலத்தில் உள்ள இந்திரன் துதியில் திருமாலே மற்ற தேவர்களைக் காட்டிலும் மேலான பரம்பொருள் என்று பல பாடல்களில் காட்டப்படுகிறது. அத்துதியின் கடைசிப்பாடலில் "வல்லை வரம்பு இல்லாத மாய வினை தன்னால் மயங்கினரோடு எய்தி மதிமயங்கி மேல் நாள் 'அல்லை இறைவன் நீ ஆதி' எனப் பேதுற்று அல மருவேம். முன்னை அறப்பயன் உண்டாக 'எல்லைவலயங்கள் நின்னுழை' என்று அந்நாள் எரியோனைத் தீண்டி எழுவர் என நின்ற தொல்லை முதல் முனிவர் சூளுற்ற போதே தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ? எந்தாய்!" என்று "எல்லாத் தேவர்களுக்கும் தலைவன் நீயே ஆவாயா அல்லவா என்று மயங்கும் நாங்கள் தெளியும்படியாக சப்தரிஷிகள் அக்னி சாக்ஷியாக 'திருமாலே அனைத்துல குக்கும் தலைவன்' என்று சத்தியம் செய்தபோதே 'பரம் பொருள் யார்' என்ற ஐயம் உன்னால் தொலைக்கப்பட்ட தல்லவோ?" என்று முழங்குவதன் மூலம் திருமாலே பரம்பொருள் என்று நிலைநாட்டினான் கம்பன். கிட்கிந்தா பா... டத்தில் நாடவிட்ட படலத்தில்,

> "அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்று
> உரைக்கும் அறிவிலோர்க்குப்
> பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்" [24]

என்னும் பாடலில் 'அரன் அதிகன்' என்றும், 'அரி அதிகன்' என்றும் (முறையே) சொல்லும் சைவர்களும் வைணவர் களும் அறிவில்லாதவர்கள் என்றும், அவர்களுக்குப் பர கதியை அடைவது அரிது என்றும் கம்பன் கூறுவதால் அவன் ஒரு சமரசவாதியே என்கிறார்கள் சிலர். இப்பொருள் கம்பராமாயணத்தில் உள்ள பல பாடல்களோடு பொருந்தா மல் இருக்கிறது. இப்படிப் பொருள் கொண்டால் கம்பன் தன்னைத்தானே அறிவில்லாதவன் என்றும், தனக்குப் பரகதி கிடையாது என்றும் கூறுவதாகத் தேறும். "வையத்தார் வானத்தார் மழுவாளிக்கு அன்றளித்த ஐயத் தால் சிறிதையும் தெளிந்தாரும் உளர் ஐயா" என்று கூறும் விராதனும், "எழுவரென நின்ற தொல்லை முதன் முனிவர் சூளுற்ற போதே தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ எ...

http://acharya.org

தாய்'' என்று கூறிய இந்திரனும், அரனைக் காட்டிலும் அரி அதிகன் என்று கூறியதாகக் கம்பனால் குறிக்கப் பெறும் மற்றும் பலரும் அறிவில்லாதவர் என்றும், அவர்களுக்குப் பரகதி கிடையாது என்றும், கொள்ள வேண்டிவரும். மேலும் அரனுக்கு எந்த அடைமொழியையும் இடாமல் அரிக்கு 'உலகளந்த' என்னும் அடைமொழியை இட்டிருப்பதும் பயனற்றதாகி விடும். ஆதலால் முதலில் குறிப்பிடப்பட்ட பொருள் இப்பாடலுக்குப் பொருந்தாது என்றும், வேறு வகையாகவே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும் என்றும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். எப்படிப் பொருள் கொள்வது? எனில், இரண்டு வகையாகக் கொள்ளலாம்.

1) "அரன் அதிகன், உலகளந்த அரியும் அதிகன்'' என்று கூறும் அறிவில்லாதவர்களுக்கு என்று உம்மையைச் சேர்த்துக் கொண்டு, 'உலகுக்குக் காரணமாக இரண்டு பரம் பொருள்கள் எப்படியிருக்க முடியும்? என்று கூட ஆராயாத அறிவிலிகளுக்கு' என்று கொள்ளலாம்.

2) "அரன் அதிகன்? உலகளந்த அரி அதிகன்? என்று உரைக்கும் அறிவிலோர்க்கு'' என்று இரண்டு கேள்விக் குறிகள் தொக்கு நிற்பதாகக் கொண்டு 'அரன் தான் பரம்பொருளோ? உலகளந்த அரிதான் பரம்பொருளோ?'' என்று ஐயப்பட்டுக் கொண்டேயிருக்கும் அறிவிலிகளுக்குப் பரகதியடைவது அரிது என்று கம்பன் கூறுவதாகவும் கொள்ளலாம். 'சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர் ஐயா' என்னும் விராதன் வாக்குக்கும், "அல்லை இறைவன் நீ ஆதி எனப்பேதுற்று அலமருவேம்'' என்னும் இந்திரன் துதிக்கும் இப்பொருள் மிகப் பொருந்தியிருக்கும்.* உயுத்த காண்டத்தில் நாகபாசப் படலத்தில்

"வாழிய வேதம் நான்கும் மனு முதல் வந்த நூலும்
வேள்வியும் மெய்யும் தெய்வ வேதியர் விழையும் ஆகும்
ஆழி அம் கமலக்கையான் ஆதி அம்பரமன் என்றூ
ஏழையர் உள்ளம் என்ன இருண்டன திசைகள்
எல்லாம்.'' [179]

* 'அரனே அதிகன்' என்று உரைக்கும் அறிவிலோர்க்கும், 'உலகளந்த அரியே அதிகன்' என்று உரைக்கும் அறிவிலோர்க்கும் பரகதி இல்லை என்று ஏகாரத்தையும், இரு உம்மைகளையும் சேர்த்துக் கொண்டு இரு வாக்கியங்களாக்கிப் பொருள் கொள்வதைக் காட்டிலும், ஒரு உம்மையையோ, இருகேள்விக்குறிகளையோ சேர்த்துக் கொண்டு ஒரே வாக்கியமாகக்கொண்டு பொருளுரைப்பது சிறந்தது.

http://acharya.org

[வாழ்வு பெற்றுள்ள வேதங்கள் நான்கும், மனுநீதி முத லாக வந்துள்ள தரும சாத்திரங்களும், வேள்வியும், சத்தியமும், தெய்வத் தன்மையுடைய அந்தணர் விரும்பும் பேறுமாக இருக் கின்ற சக்கரமேந்திய அழகிய தாமரை மலர் போன்ற யுடைய திருமாலே பரம்பொருள் என்று ஏற்றுக் கொ அறிவிலாதார் மனம் இருண்டுள்ளது போலத் திசைகள் எ லாம் இருண்டு போயின] என்னும் பாடலோடு சேர்த்துப் பார்க் கும் போது 'அரியே பரம்பொருள்' என்று உரைப்பவர் அறி விலாதார்; அவர்களுக்குப் பரகதியில்லை என்று கம்பன் கருதி யிருக்கவே இடமில்லை என்று தெளிவாக விளங்குகிறது.

சுந்தரகாண்டம் பிணி வீட்டு படலத்தில் 'மூலமும் நடு வும்' என்று தொடங்கும் 80வது பாடலைக் காட்டி இராமன் மும் மூர்த்திகளின் அவதாரம் என்று சிலர் கூறுவதை ஆராய் வோம். இராமன் யார் என்பதை இராவணனுக்கு அனுமன் விளக்கும் பாடல்களில் இது ஒன்று. இதற்கு முந்திய பாடல்—

"காரணம் கேட்டியாயின் கடையிலா மறையின்
கண்ணும்
ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னான்
போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொது நின்று
முதலே என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க
வந்தான்" [79]

என்பது. இப்பாடலில் கஜேந்திரன் பொதுவாக 'ஆதிமூலமே' என்ற போது அவனைக் காக்க வந்த திருமாலே இப்போது அமரரைக் காப்பதற்காக இராமனாக வந்திருக்கிறான் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கம்பன் தன் இராமாயணத் தில் திருவவதாரப் படலம் தொடங்கிப் பல இடங்களில் 'ஆதி மூலமே' என்றழைத்த கஜேந்திரனை வந்து காத்த திருமாலே பரம்பொருள் என்றும், அவனே இராமனாக அவதரித்திருக் கிறான் என்றும் காட்டியுள்ளான். இப்பாட்டிற்கு மேல் பின் வருமாறு ஒரு கேள்வி எழுகிறது. "மும்மூர்த்திகளும் முத்தொ ழில்களில் ஒவ்வொன்றைச் செய்வதாகப் பிரசித்தியிருக்கும்

http://acharya.org

போது, காத்தல் தொழில் ஒன்றை மட்டும் செய்யும் திருமாலை மட்டும் எப்படிப் பரம்பொருளாகக் கூற முடியும்?" என்பது ...ள்வி. இதற்கு ஆழ்வார்கள் முதலான வைணவ வேதாந் ...கூறும் விடையாவது:—

"திருமாலே முத்தொழிலையும் செய்கின்றான்; தானே பிரமனைப் படைத்து அவனை உடலாகக் கொண்டு அவனுக்குள்ளே யிருந்து படைப்புத் தொழிலைச் செய்கிறான். அதுபோலவே உருத்திரனை உடலாகக் கொண்டு அவனுக்குள்ளேயிருந்து பிரமனால் படைக்கப்பட்ட உலகனைத்தையும் அழிக்கிறான். அதற்குப்பின் அப்பிரமனையும் அந்த உருத்திரனையும் தன் வயிற்றினுள் அடக்கி இறுதியான ஸம்ஹாரத் (அழிப்புத்) தொழிலையும் செய்கிறான். ஆகையால் முத்தொழிலையும் செய்பவன் திருமாலே. படைப்புத் தொழிலையும் அழிப்புத் தொழிலையும் ஓரளவுக்குச் செய்யும் பிரமனும் உருத்திரனும் அவனது உடலாயிருந்து கொண்டு அவனால் தூண்டப் பெற்றே அவற்றைச் செய்கின்றனர்" என்பது. இவ்விடையையே அடுத்ததான

"மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி
*சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்" [60]

என்னும் பாடலில் கூறுவதன் மூலம் கம்பன் தான் ஆழ்வார்களைப் போலவே விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தைச் சார்ந்தவன் என்று மிகத்தெளிவாகக் காட்டுகிறான்.

---

*இந்த ஆயுதங்களையும், இருப்பிடங்களையும் எந்தப் போது முறையே எடுக்காமல் மாற்றிமாற்றி எடுத்திருப்பதும், விஷ்ணுவின் ஆயுதங்கள் இரண்டையும் மற்றவர்களின் ஆயுதங்கள் ஒவ்வொன்றையும் எடுத்திருப்பதும், விஷ்ணுவின் இருப்பிடத்திற்கு 'தொல்லை' [ஆதிகாலத்திலிருந்து] என்ற அடைமொழியிட்டிருப்பதும் விஷ்ணுவே தலைவன் என்பதையும், "எல்லாமே அவனுடைய ஆயுதங்களும் இருப்பிடமும் ஆகும்" என்பதையும் உணர்த்துகிறது.

http://acharya.org
http://acharya.org